Acc. No. 24021
Q22 4|3

Koviloor Digital Library

# ஸ்ரீ க்ருஷ்ணகர்ணாம்ருதம்

॥ श्रीकृष्णकर्णामृतम् ॥

Koviloor Digital Library

N. SUBBIAH
4/3
Plot No: 5 SHASTHA ILLAM
BHARATHINAGAR
PUTHUR
TIRUCHIRAPALLI - 620 017

# ஸ்ரீக்ருஷ்ண கர்ணாம்ருதம்

KOVILOOR ANDAVAR
A. No. 24021
LIBRARY. KOVILOOR

Koviloor Digital Library

Koviloor Digital Library

# ஸ்ரீக்ருஷ்ண கர்ணாம்ருதம்

## ॥ श्रीकृष्णकर्णामृतम् ॥

உரையாசிரியர் :
“அண்ணா”

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்
மயிலாப்பூர் :: சென்னை-4

Koviloor Digital Library

வெளியிடுபவர் :
© தலைவர்
ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்,
மயிலாப்பூர், சென்னை 600 004.

உரிமைப் பதிவு பெற்றது
மூன்றாம் பதிப்பு
III-3M 3C-9-92
ISBN 81-7120-572-0

அச்சிட்டவர் :
ஸ்ரீ ராமகிருஷ்ண மடம் அச்சகம்
மயிலாப்பூர், சென்னை 600 004.

Koviloor Digital Library

# முகவுரை

ஸ்ரீ க்ருஷ்ணகர்ணாம்ருதம் எனும் நூலை ஆக்கியவர் பெயர் பில்வமங்களர். அவர் சுகப்பிரம்மத்தைப் போல் கிருஷ்ண லீலையை ஆழ்ந்தனுபவித்து வர்ணித்தவராதலால் லீலாசுகர் எனச் சிறப்புப் பெயர் பெற்றார். கேரள நாட்டில் பருருக்கருகில் பிறந்தவர். அவருடைய காலம் கி. பி. 1220 முதல் 1300 வரை. அவருடைய வாழ்க்கை வரலாறு நாடகமாக கிரீஷ் சந்திரகோஷ் என்பவரால் வங்காளத்தில் சென்ற நூற்றாண்டில் எழுதி நடிக்கப்பட்டது. அதைத் தழுவிச் சமீப காலத்தில் சென்னை ஸ்ரீராமகிருஷ்ண மாணவரில்லத்தின் காரியதரிசியாயிருந்த ஸ்ரீ ராமானுஜாசாரியார் லீலாசுகர் நாடகத்தைத் தமிழில் எழுதித் தென்னாட்டில் நடித்துக் காட்டினார்.

லீலாசுகர் ஆதியில் சிந்தாமணி என்ற வேசியிடம் ஆசை வைத்திருந்தார். அவள் ஒரு நாள் இவரை நோக்கி, 'என்னிடம் வைத்த ஆசையில் ஆயிரத்திலொரு பங்கு பகவானிடத்தில் வைத்தால் பிழைத்துப் போகலாமே' என்று கூறினாள். அதிலிருந்து இவருடைய வாழ்க்கையில் திருப்பம் ஏற்பட்டுப் பாவியா யிருந்தவர் பரம பக்தரானார். சிந்தாமணியின் சிந்தையிலிருந்து தன்னைத் தடுத்தாட் கொண்ட பகவானை வணங்கும் முறையில் 'சிந்தாமணிர் ஜயதி' என்று இந்நூலை ஆரம்பிக்கிறார்.

லீலாசுகர் வியாகரணம், நாடகம், அலங்கார சாஸ்திரம் முதலியவற்றில் வல்லவர். பத்மபாதர் ஏற்படுத்தியதாகக் கூறப்படும் மடம் ஒன்று தெக்கோல மடம் என்ற பெயரில் திருச்சூரில் உளதென்றும் லீலாசுகர் பின்னாட்களில் அம் மடத்தின் மூலம் ஸந்யாஸ ஆசிரமம் பெற்றார் என்றும் இவரைப் பற்றிய வரலாறு கூறுகிறது. ஸ்ரீசைதன்ய மஹாப்பிரபு தென்னாட்டிற்கு யாத்திரை வந்தபொழுது திருவனந்தபுரத்திலிருந்து ஸ்ரீ கிருஷ்ண கர்ணாம்ருதத்தின் பிரதி ஒன்றைத் தன்னுடன் கொண்டுபோய் அதற்கு உரை எழுதியுள்ளார்.

இந்நூலில் மூன்று ஆச்வாஸங்கள் அல்லது பகுதிகள் உள்ளன: முதல் ஆச்வாஸம் 110 சுலோகம், இரண்டாவது 109, மூன்றாவது 109, ஆக 328 சுலோகங்கள். கர்ணாம்ருதம் என்றால் செவியமுதம். முதல்

Koviloor Digital Library

ஆச்வாஸத்தின் இறுதிச் சுலோகத்தில் இச்சொல வருகிறது. 'லீலாசுகேன ரசிதம் தவ தேவ க்ருஷ்ண கர்ணாம்ருதம் வஹது கல்ப சதாந்தரேபி'—லீலாசுகரால் செய்யப்பட்ட கர்ணாம்ருதம் என்ற இந்த நூல் நூறு கல்ப காலத்திற்கப்பாலும் செவிக்கு அமுதம்போல் இனிமையை அளிப்பதாக விளங்கட்டும்.'

*லீலாசுகர்* இந்நூலில் பெரும்பாலும் ஸ்ரீ கிருஷ்ணனுடைய கோகுல லீலையையும் பிருந்தாவன லீலையையுமே வர்ணிக்கிறார். பாரதப் போர் நடத்தியவனாகவோ துவாரகா நாயகனாகவோ வர்ணிப்பது வெகு குறைவு. அர்ஜுனனுக்குத் தேரோட்டுபவராயிருந்ததை மட்டும் பின்வருமாறு சித்திரிக்கிறார். 'பாண்டவன் தேர்க் குதிரைகளைத் தனது நகங்களால் தினவு தீரச் சொரிந்துவிட்டுத் தன் கையிலெடுத்த நீரால் நாள்தோறும் குளிப்பாட்டித் திறந்த உடம்புடனும், கசை செருக்கப் பெற்ற தலைப்பாகையுடனும், பற்களில் கடித்துக் கொண்ட கடிவாளத்துடனும் விளங்கியவனான கிருஷ்ணன் நம்மைக் காப்பற்றட்டும்' (2·47). கண்ணன் எல்லார்க்கும் எல்லாமாகியவன். சாணூரன் முதலிய மல்லர்களுக்கு மலை போன்ற வீரனாகவும், பொதுஜனங்களுக்குக் குழந்தையாகவும், பெண்களுக்கு மன்மதனாகவும், கோபர்களுக்கு நண்பனாகவும், இந்திரனுக்கு ஸர்வேசுவரனாகவும், கம்ஸனுக்கு யமனாகவும், யோகிகளுக்கு தியானத்திற்குரிய திவ்ய மூர்த்தியாகவும் விளங்கினான் (2·102). கோபியர்களின் எல்லையிலாத அன்பைக் காட்டுவதற்கு உதாரணமாகத் தயிர் முதலியவற்றை விற்க விரும்பித் தெருவில் சென்ற ஒரு இடைப்பெண் கிருஷ்ணனிடத்தில் முழு மனதையும் எப்பொழுதும் வைத்தவளானதால் 'தயிரோ, பாலோ' என்று கூவாமல் 'கோவிந்தா, தாமோதரா, மாதவா' என்று கூவியதாய் வர்ணிக்கிறார். இன்னொரு பெண் கூறுகிறாள்: 'உன்னுடைய பலத்தால் என்னுடைய கையை உதறிவிட்டுப் போய்விட்டாய். என்னுடைய இருதயத்திலிருந்து போய்விடு பார்க்கலாம். அப்பொழுது உன் ஆண்மையை மதிப்பேன்' *(3·96)*. லீலாசுகர் கண்ணனைத் தான் கனவிலும் நனவிலும் கண்டனுபவித்ததைப் பல விடங்களில் விளக்குகிறார். 'மின்னல் கொடி சூழ்ந்த கார்மேகம் போல் கரிய திருமேனியில் மஞ்சட் பட்டாடை துலங்கவும், மயிலிறகு தலையில் பிரகாசிக்கவும், கழுத்தில் இளந்துளசி மாலை விளங்கவும் கம்பீரமான கைகளுடன் கிருஷ்ணன் என்னைக் கனவில் வந்து தழுவிக்

Koviloor Digital Library

கொண்டான்' (2·7). மரண சமயத்திலும் அவன் தன் முன் காட்சி யளிக்க வேண்டிக் கொள்ளுகிறார். 'மாற்றி வைத்த பாதங்களை உடையவனும், மயில்தோகை சூடியவனும், சாய்ந்த முகத்தில் குறுக்காக வைக்கப்பெற்ற குழலின் துவாரங்களை உடையவனும் பரஞ்ஜோதி வடிவினனுமான கிருஷ்ணன் என்னுடைய பிராணன் வெளிக் கிளம்பும் பொழுது என் முன் காட்சியளிக்கட்டும்' (2 22). எத்தனை பாஷ்யங்களைப் படித்தாலும் விளங்காத உபநிஷதர்த்தம் கிருஷ்ண லீலைகளைச் சிந்தித்தால் விளங்கும் என்கிறார். 'வேதங் களாகிய வனங்களில் வெகுவாகச் சஞ்சரித்துக் களைப்புற்றிருப்பவா களே! சிறந்த இவ்வுபதேசத்தை ஆதரியுங்கள். கோபியர்களின் வீட்டில் உரலில் உபநிஷதர்த்தம் கட்டி வைத்திருப்பதைக் காணுங்கள்' (2·28). கண்ணன் அன்பிற்கெளியவன் என்பதைக் கூறுமிடத்து, 'வேதங்கள் அனைத்தின் சிரத்திலும் கொண்டாடப்படும் பரஞ்ஜோதி வடிவான பரம புருஷனின் திருவடித் தாமரை இடைச்சேரியில் ஈரச் சாணியினல் வெகுவாய்ப் பூசப்பட்டுள்ளது. அதை நான் பெரிதும் போற்றுகிறேன்' என்கிறார்.

லீலாசுகர் பரம்பரையாகச் சைவ குடும்பத்தைச் சேர்ந்தவர். அவர் கூறுகிறார்: 'நாங்கள் சைவர்கள், அதில் சிறிதும் சந்தேக மில்லை. மிகுதியும் சிவ பஞ்சாக்ஷரீ ஜபத்தில் ஊக்கங்கொண்டவர்கள். அப்படி இருந்தபோதிலும் என்னுடைய சித்தம் காயாம்பூ வண்ணனும் சிரித்த முகத்தினனும் யசோதையின் குமாரனுமான கிருஷ்ணனை நினைத்துக் கொண்டே இருக்கிறது' (2·24). மேலும் உபாஸகர்கள் கண்ணனை கோபால ஸுந்தரீ என வழிபடுவதுண்டு. அவர்கள் கைக் கொள்ளும் மந்திரத்தில் பதினெட்டு எழுத்துள்ள ராஜகோபால மந்திர மும் பதினைந்து எழுத்துள்ள ஸ்ரீ வித்யா மந்திரமும் ஸம்மேளன மாக்கப்படுகிறது. 'கதாசில்லலிதேசானீ பும் ருபா க்ருஷ்ண விக்ரஹா' என்பதற்கிணங்க லலிதா பரமேசுவரியே கிருஷ்ண ருபத்தில் தோன்று கிறாள். கரும்பு வில், புஷ்ப பாணம், சக்ரம், சங்கு, பாசம், அங்குசம், புல்லாங்குழல் ஆகியவற்றைக் கைகளில் ஏந்திச் சிவப்பு வர்ணத்துடன் பிரகாசிக்கும் இந்த கோபால ஸுந்தரியின் தியானம் 3·104-ல் லீலா சுகரால் கூறப்பட்டுளது. இதனால அவர் 'அந்த: சாக்தோ பஹி: சைவோ வ்யவஹாரேஷு வைஷ்ணவ:' உள்ளே சாக்தர், வெளியே சைவர், வியவகாரத்தில் வைஷ்ணவர் என்ற ஸமரஸக் கொள்கையை ஆதரித்து

Koviloor Digital Library

அனுஷ்டிப்பவர் என்பது தெளிவாகிறது. ஆதிகாலத்தில் ஸ்ரீ சங்கராசாரியார் போதித்த மார்க்கமும் நமது காலத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் காட்டிய வழியும் இதுவேயாம்.

பழைய நூலாகிய ஸ்ரீ கிருஷ்ணகர்ணாமிருதத்தின் இப்புதுப் பதிப்பில் ஸம்ஸ்கிருதப் பயிற்சி அதிகமில்லாதவர்களுக்கும் அது பயன்படும் பொருட்டு நாகரத்தில் மூலத்துடன் தமிழில் மூலமும் பதவுரையும் குறிப்புரையும் கொடுக்கப்பட்டுள்ளன.

நூலைப் பரிசீலித்து அச்சில் பிழை திருத்தம் செய்து கொடுத்து உதவிய பிரம்மஸ்ரீ வழுத்தூர் ராஜகோபால சர்மா அவர்களுக்கும் அழகாக அச்சிட்டுத் தந்த அச்சுக்கூடத்தாருக்கும் இதைப் பயன் படுத்தும் அன்பர்களுக்கும் என் நன்றி உரித்தாகும்.

ஸ்ரீராமகிருஷ்ணமாணவரில்லம்
மயிலாப்பூர், சென்னை-4.
கீலகஷு, ஆடிமீ 31உ
கோகுலாஷ்டமி
15-8-1968.

"அண்ணா"
உரையாசிரியர்.

Koviloor Digital Library

॥ श्रीः ॥

# ॥ श्रीकृष्णकर्णामृतम् ॥

॥ प्रथमाश्वासः ॥

चिन्तामणि-र्जयति सोमगिरि-र्गुरुर्मे
शिक्षागुरुश्च भगवान् शिखिपिञ्छमौलिः ।
यत्पादकल्पतरु-पल्लवशेखरेषु
लीलास्वयंवररसं लभते जयश्रीः ॥ १-१ ॥

# ஸ்ரீ க்ருஷ்ணகர்ணாம்ருதம்

ப்ரதமாச்வாஸ:

சிந்தாமணிர்-ஜயதி ஸோமகிரிர்-குருர்-மே
சிக்ஷாகுருச்ச பகவான் சிகிபிஞ்ச-மௌலி: ।
யத்பாத-கல்பதரு-பல்லவசேகரேஷு
லீலாஸ்வயம்வரரஸம் லபதே ஜயஸ்ரீ: ॥ 1.1 ॥

## முதல் ஆச்வாஸம்

## 1.1. குருவணக்கம்

1. 1. (சிந்தாமணி:) நினைத்ததை யெல்லா மளிக்கும் ரத்னம் போன்றவரும் (ஸோமகிரி:) ஸோமகிரி எனப் பெயர்பெற்றவருமான (மே) எனது (குரு:) குருவானவர் (ஜயதி) ஜயசீலராய் விளங்குகிறார். (சிக்ஷா குரு: ச) மேலும் என்னைச் சிக்ஷித்து ஆட்கொண்டவரும் (சிகிபிஞ்சமௌளி:) மயில் பீலியைத் தலையிலணிந்தவருமான (பகவான்) ஸ்ரீ கிருஷ்ணபகவான்—(ஜயதி) ஜயசீலராய் விளங்குகிறார்.—(யத்-பாத-கல்பதருபல்லவ-சேக

Koviloor Digital Library

ரேஷு) கற்பக விருக்ஷத்தின் தளிர்போன்ற அவருடைய திருவடிகளைச் சிரசி லணிந்தவர்களிடத்தில் (ஜயஸ்ரீ:) ஜயலக்ஷ்மியானவள் தானாகவே வந்து (லீலா-ஸ்வயம்வர-ரஸம்) விளையாட்டாக ஸ்வயம்வரத்தில் தலைவனைத் தேடி மாலையிடும் இன்பத்தை (லபதே) அடைகிறாள்.

**சிந்தாமணி**:—ஸ்ரீ கிருஷ்ணகர்ணாமிருதம் எனும் இந்நூலை இயற்றிய லீலாசுகர் ஆதியில் சிந்தாமணி என்ற வேசியிடம் ஆசை வைத்திருந்தார். அவளே ஒரு நாள் இவருடைய நடத்தையை வெறுத்து, 'என்னிடம் வைத்த ஆசையில் ஆயிரத்தி லொரு பகுதி பகவானிடத்தில் வைத்தால் பிழைத்துப் போகலாமே' என்று கூறினாள். அதிலிருந்து இவருடைய வாழ்க்கையில் திருப்பம் ஏற்பட்டுப் பாவியா யிருந்தவர் பரமபக்தரானார். சிந்தாமணியின் சிந்தையிலிருந்து தன்னைத் தடுத்தாட்கொண்ட பகவானையும் குருவையும் வணங்கும் முறையில் மறைமுகமாகச் சிந்தாமணி எனப் பெயர்கொண்ட பெண்ணை முதல் குருவாய் வாழ்த்தியதாக இங்கே குறிப்பு உளது. (யைரேவ பதனம் த்ரவ்யை: ஸித்திஸ்-தைரேவ சோதிதா) எவ் வெப் பொருள்களால் வீழ்ச்சி ஏற்படுகிறதோ அவ்வப் பொருளாலேயே ஏற்றமும் காணலாம் என்ற முதியோர் வாக்கு இங்கு உண்மையாகிறது. சிந்தாமணியால் கீழ்நிலை யடைந்தவர் சிந்தாமணியாலேயே உயர்வெய்தி யவரானார்.

**ஸோமகிரி**:—இவர் லீலா சுகருக்குக் கிருஷ்ணமந்திரத்தை உபதேசித்த குரு.

**ஜயஸ்ரீ**:—௧. (யத்ர யோகேச்வர: க்ருஷ்ணோ யத்ர பார்த்தோ தனுர்த்தர: । தத்ர ஸ்ரீர்-விஜயோ பூதிர்-த்ருவா நீதிர் மதிர்மம ॥) யோகேசுவரனாகிய கிருஷ்ணன் எங்கே இருக்கிறானோ, (அவனுடைய திருவுள்ளப்படிச் செயல் புரியச் சித்தமான ஜீவாத்மாவின் பிரதிநிதியாக) வில்லாளியான அர்ஜுனன் எங்கே இருக்கிறானோ அங்கே மங்களமும் வெற்றியும் பெருமையும் நிச்சயமான நீதியும் தாமாகவே வந்து அமைவனவாம். —கீ. 18. 78.

Koviloor Digital Library



## 1.2. எல்லோர்க்கும் எல்லாவற்றையுமளிக்கும் ஒரு பரதத்துவம் குழந்தை வடிவில் உள்ளது

अस्ति स्वस्तरुणी-कराग्र-विगलत्कल्प-प्रसूनाप्लुतं
वस्तु-प्रस्तुत-वेणुनाद-लहरी-निर्वाण-निर्व्याकुलम् ।
स्रस्त-स्रस्त-निरुद्ध-नीवि-विलसद्गोपी-सहस्रावृतं
हस्त-न्यस्त-नतापवर्ग-मखिलोदारं किशोराकृति ॥ १.२ ॥

அஸ்தி ஸ்வஸ்தருணீ-கராக்ர-
விகலத்கல்ப-ப்ரஸூநாப்லுதம்
வஸ்து-ப்ரஸ்துத-வேணுநாத-
லஹரீ-நிர்வாண-நிர்வ்யாகுலம் ।
ஸ்ரஸ்த-ஸ்ரஸ்த-நிருத்த-
நீவி-விலஸத்-கோபீ-ஸஹஸ்ராவ்ருதம்
ஹஸ்த-ந்யஸ்த-நதாபவர்க-
மகிலோதாரம் கிசோராக்ருதி ॥ 1.2 ॥

1. 2. (ஸ்வஸ்தருணீ-) ஸ்வர்க்கவாசிகளான தேவஸ்திரீகளுடைய (கர-அக்ர-விகலத்) கைநுனிகளிலிருந்து நழுவின (கல்ப-ப்ரஸூன-ஆப்லுதம்) கல்பகப்பூக்களினுல் அர்ச்சிக்கப் பெற்றதும், (ப்ரஸ்துத-வேணுநாத-லஹரீ-) புகழ்பெற்ற வேணுகானத்தின் பெருக்கால் (நிர்வாண-நிர்வ்யாகுலம்) மெய்மறந்து அசைவற்றிருப்பதும், (ஸ்ரஸ்த-ஸ்ரஸ்த) நழுவநழுவ (நிருத்த-நீவி) பிடித்துக் கொள்ளப்பட்ட சேலை முடிகளோடு (விலஸத் கோபீ-ஸஹஸ்ர-ஆவ்ருதம்) விளங்கும் ஆயிரக்கணக்கான இடைப் பெண்களால் சூழப்பட்டதும், (ஹஸ்த-ந்யஸ்த-நத-அபவர்க்கம்) கையில் மோக்ஷத்தை வணங்கியவர்களுக்காக வைத்திருப்பதும், (அகில-உதாரம்) எல்லோர்க்கும் எல்லாவற்றையுமளிப்பதும், (கிசோர-ஆக்ருதி) சிறுபிள்ளை வடிவுகொண்டதும் ஆன (வஸ்து) ஒரு தத்துவம் (அஸ்தி) உளது.

Koviloor Digital Library


அஸ்தி :—ஓ. (அஸ்தீத்யேவோபலப்தஸ்ய தத்வபாவ: ப்ரஸீததி) பரமாத்ம வஸ்து உண்டு (அதைக் கண்டனுபவிக்கக் கூடும்) என்ற நம்பிக்கை யுடையவனுக்கு உண்மை நிலை தானே விளங்கும்.

—கட. உப. 5. 6. 13

ஹஸ்த-ந்யஸ்த-நத-அபவர்க்கம்:-தன்னை அடைந்தவர்க்கு உயர் வற உயர்நலமாகிய மோக்ஷத்தை யளிக்க பகவான் சித்தமா யிருக்கிறான். மோக்ஷத்தில் நாட்டமில்லாதவர்களுக்கு அர்த்தம் காமம் ஆகியவற்றை அவர்கள் விருப்பப்படி அளிக்கிறான்.

## 13. கண்ணழகு படைத்த கண்ணன்

चातुर्यैकनिधानसीम-चपलाऽपाङ्गच्छटा-मन्दरं
लावण्यामृतवीचि-लालितदृशं लक्ष्मीकटाक्षादृतम् ।
कालिन्दी-पुलिनाङ्गण-प्रणयिनं कामावताराङ्कुरं
बालं नीलममी वयं मधुरिम-स्वाराज्य-माराध्नुमः ॥ १.३ ॥

சாதுர்யைக-நிதானஸீம-சபலாऽபாங்கச்சடா-மந்தரம்
லாவண்யாம்ருத-வீசி-லாலிதத்ருசம் லக்ஷ்மீகடாக்ஷா
த்ருதம் ।
காளிந்தீ-புலினாங்கண-ப்ரணயினம் காமாவதாராங்குரம்
பாலம் நீலமமீ வயம் மதுரிம-ஸ்வாராஜ்ய-மாராத்னும: ॥

1. 3. (சாதுர்ய-) திறமைக்கு (ஏக நிதான) முக்கியமான உறைவிடமாயும் (ஸீம-) அதற்கு எல்லைநிலமாயும் (சபல-) துள்ளி விளையாடுவதாயும் உள்ள (அபாங்க) கடைக்கண் பார்வையின் (சடா-) தொடர்ச்சிக்கு (மந்தரம்) மூலஸ்தானமாகியவனும்; (லாவண்ய) அழகின் (அம்ருதவீசி) அமுதம் போன்ற அலைகளால் (லாலித-) லாலனம் செய்யப்பட்ட (த்ருசம்) பார்வையுடையவனும்; (லக்ஷ்மீ-கடாக்ஷ-ஆத்ருதம்) லக்ஷ்மியின் கடைக்கண் பார்வையில் ஆதரிக்கப்பட்டவனும்; (காளிந்தீ-புளின-அங்கண-) யமுனாநதியின் மணல் பிரதேசங்களில் (ப்ரணயினம்) விருப்ப முடையவனும்; (காமாவதார-அங்குரம்) மன்மதன் முளைத்தெழு

Koviloor Digital Library

மிடமும், (மதுரிம-ஸ்வாராஜ்யம்) இனிமை தனியரசு புரியுமிடமாகி யவனும் (நீலம்) நீலவண்ணம் படைத்தவனுமான (பாலம்) பால கிருஷ்ணனை (அமீ வயம்) இப்படி பாக்கிய சாலிகளான நாங்கள் (ஆராத்னுமஃ) ஆராதிக்கின்றோம்.

தனது திறமையாலும், கடைக்கண் பார்வையாலும், திருமேனி யழகாலும், இனிய குணத்தாலும், செல்வத்தாலும் கண்ணன் உலக மக்களைத் தன்னிடம் கவர்ந்து கொள்ளும் இயல்புடையவன். அவதார நோக்கம் அதுவேயாம்.

## 1.4. குழலூதும் ஜோதிவடிவம்

वर्होत्तंस-विलासि-कुन्तलभरं माधुर्यमग्नाननं
प्रोन्मील-न्नवयौवनं प्रविलसद्वेणु-प्रणादामृतम् ।
आपीनस्तन-कुड्मलाभिरभितो गोपीभिराराधितं
ज्योतिश्चेतसि नश्चकास्ति जगता-मेकाभिरामाद्भुतम् ॥१.४॥

பர்ஹோத்தம்ஸ-விலாஸி-குந்தலபரம் மாதுர்ய-மக்னனனம்
ப்ரோன்மீலந்-நவயௌவனம் ப்ரவிலஸத்-வேணு-
ப்ரணுதாம்ருதம் ।
ஆபீனஸ்தன-குட்மலாபிரபிதோ கோபீபிராராதிதம்
ஜ்யோதிச்-சேதஸி நச்-சகாஸ்தி ஜகதா-மேகாபிராமாத்புதம் ॥

1. 4. (பர்ஹ-உத்தம்ஸ) மயிலின் இறகை அணிந்து (விலாஸி-குந்தலபாரம்) அழகுடன் விளங்கும் மயிர்முடி யுடையதும், (மாதுர்ய-மக்ன-ஆனனம்) இன்பத்தில் மூழ்கியிருக்கும் முகத்தை யுடையதும், (ப்ரோன்மீலத்-நவயௌவனம்) வளர்ச்சியடைகின்ற புதிய யௌவனத்தை யுடையதும் (ப்ரவிலஸத்-வேணு-ப்ரணாத-அம்ருதம்) புல்லாங்குழலிலிருந்து எழும் நாதத்துடன் விளங்குவதும், (ஆபீனஸ்தனகுட்மலாபிஃ-கோபீபிஃ) திரண்ட மொக்குகள் போன்ற நகில்களையுடைய கோபிகளால் (அபிதஃ) நாற்புறமும் (ஆராதிதம்) ஆராதிக்கப்பட்டதும், (ஜகதாம்) உலகனைத்திற்கும் (ஏக-அபிராம-அத்புதம்) நிகரற்ற வடிவழகால் அற்புதமாய் விளங்

Kovilpor Digital Library

குவதுமான (ஜ்யோதிः) ஒரு ஜோதி (நः) எங்களுடைய (சேதஸி) உள்ளத்தில் (சகாஸ்தி) பிரகாசிக்கிறது.

ஜ்யோதி.—ஒ. (அந்தः சரீரே ஜ்யோதிர்-மயோ ஹி சுப்ரோ யம் பச்யந்தி யதயः க்ஷீணதோஷாः) உடலுக்குள் உள்ளத்தில் உறைவதாய் ஜோதிர்மயமாய்ப் பரிசுத்தமாய் விளங்கும் ஆத்மப் பொருளைச் சித்த மலம் நீங்கிய யோகிகள் காண்கிறார்கள். —மு: உப. 3. 1. 5

## 1.5. விஷய விஷத்திலிருந்து மீட்கும் முகவழகு

मधुरतर-स्मितामृत-विमुग्ध-मुखाम्बुरुहं
मदशिखि-पिञ्छलाञ्छित-मनोज्ञ-कचप्रचयम् ।
विषय-विषामिषग्रसन-गृध्नुषि चेतसि मे
विपुलविलोचनं किमपि धाम चकास्ति चिरम् ॥ १५ ॥

மதுரதர-ஸ்மிதாம்ருத-விமுக்த-முகாம்புருஹம்
மதசிகி-பிஞ்சலாஞ்சித-மனோஜ்ஞ-கசப்ரசயம் ।
விஷய-விஷாமிஷக்ரஸன-க்ருத்னுஷி சேதஸி மே
விபுல-விலோசனம் கிமபி தாம சகாஸ்தி சிரம் ॥ 1.5 ॥

1. 5. (மதுரதர-ஸ்மித-அம்ருத-) இனிமை மிக்க புன் சிரிப்பாகிய அமுதத்தால் (விமுக்த-) அழகிய (முக-அம்புருஹம்) தாமரைபோன்ற முகமும், (மத-சிகி-பிஞ்ச-லாஞ்சித) கொழுத்த மயில் இறகால் அலங்கரிக்கப்பெற்ற (மனோஜ்ஞ-கசப்ரசயம்) மனதிற்கினிதாய் விளங்கும் திருமுடியுடையதும், (விபுல-விலோசனம்) பரந்த கண்களுடையதும் (கிம் அபி தாம) இன்னதென்று விளக்கமுடியாததுமான ஒரு தேஜோரூபம் (விஷய-விஷ-ஆமிஷ-) விஷம்போன்ற உலகவிஷயமாகிய மாமிசத்தை (க்ரஸன-க்ருத்னுஷி) விழுங்குவதற்குப் பேராவல் கொண்டிருந்த (மே) என்னுடைய (சேதஸி) மனத்தில் (சிரம்) நீடித்து (சகாஸ்தி) பிரகாசிக்கிறது.

விஷயவிஷம் :—ஒ. (முக்தி-மிச்சஸி சேத் ததோ விஷயம் விஷவத் த்யஜ । ப்ரஹ்மசர்ய-மஹிம்ஸாஞ் ச ஸத்யம் பீயூஷவத் பஜ ॥

Koviloor Digital Library



முக்தியை நீ விரும்பினால் விஷய சுகத்தை விஷம்போல் ஒதுக்கிவிடு. பிரம்மசரியத்தையும் அஹிம்ஸையையும் அமுதத்தைப்போல் கைக்கொள்.

## 1.6. மனதில் மலரும் முகாரவிந்தம்

मुकुलायमान-नयनाम्बुजं विभो-
र्मुरलीनिनाद-मकरन्दनिर्भरम् ।
मुकुरायमाण-मृदुगण्डमण्डलं
मुखपङ्कजं मनसि मे विजृम्भताम् ॥ १.६ ॥

முகுலாயமான-நயனாம்புஜம் விபோர்-
முரலீ-நிநாத-மகரந்த-நிர்ப்பரம் ।
முகுராயமாண-ம்ருது-கண்டமண்டலம்
முகபங்கஜம் மனஸி மே விஜ்ரும்பதாம் ॥ 1.6 ॥

1. 6. (முகுலாயமான-நயனாம்புஜம்) தாமரை மொட்டுப் போன்ற கண்ணும், (முகுராயமாண-ம்ருது-கண்ட-மண்டலம்) கண்ணாடிபோல் வழவழப்பும், மென்மையும் உடைய கன்னப் பிரதேசமும், (முரலீ-நிநாத மகரந்த-நிர்ப்பரம்) வேணுகானமாகிற தேன் நிறைந்த (முகபங்கஜம்) முகாரவிந்தமும் (மே மனஸி) என் மனதில் (விஜ்ரும்பதாம்) மலரட்டும்.

## 1.7. ஆனந்தானுபவத்தின் அணுவளவேனும் வாக்கில் விளங்கட்டும்

कमनीय-किशोर-मुग्ध-मूर्तेः
कलवेणु-क्वणिताद्दृताननेन्दोः ।
मम वाचि विजृंभतां मुरारे-
र्मधुरिम्णः कणिकापि कापि कापि ॥ १.७ ॥

Koviloor Digital Library

கமனிய-கிசோர-முக்த-மூர்த்தேঃ
கலவேணுக்வணிதாத்ருதானனேந்தோঃ ।
மம வாசி விஜ்ரும்பதாம் முராரேர்-
மதுரிம்ணঃ கணிகாபி காபி காபி ॥ 1.7 ॥

1. 7. (கமனீய-) உள்ளத்தைக்கவரும் (கிசோர-) குழந்தை வடிவுகொண்ட (முக்தமூர்த்தேঃ) அழகிய திருமேனியுடையவனும் (கல-வேணு-க்வணித-) இனிய குழலோசையால் (ஆத்ருத-) பூரிப் படைந்த (ஆனன-இந்தோঃ) சந்திரனைப் போன்ற முகத்தை யுடையவனும் ஆன (முராரேঃ) கண்ணபிரானுடைய (மதுரிம்ணঃ) ஆனந்தானுபவத்தின் (கா அபி கா அபி) எதோ ஒரு துளியாயினும் (கணிகா அபி) அணுவளவாயினும் (மம) என்னுடைய (வாசி) வாக்கில் (விஜிரும்பதாம்) விளங்கட்டும்.

## 1.8. எனது சொல்லுக்கு உயிராகிய கண்ணன் வெல்க

मदशिखण्डि-शिखण्ड-विभूषणं
मदनमन्थर-मुग्ध-मुखाम्बुजम् ।
व्रजवधू-नयनाञ्चल-वञ्चितं
विजयतां मम वाङ्मय-जीवितम् ॥ १.८ ॥

மதசிகண்டி-சிகண்ட-விபூஷணம்
மதன-மந்தர-முக்த-முகாம்புஜம் ।
வ்ரஜவதூ-நயனாஞ்சல-வஞ்சிதம்
விஜயதாம் மம வாங்மய-ஜீவிதம் ॥ 1.8 ॥

1. 8. (மத-சிகண்டி-) கொழுத்தமயிலின் (சிகண்ட-விபூஷணம்) இறகை பூஷணமாய்க் கொண்டவனும், (மதன-மந்தர) மன்மதனை வெல்லும் (முக்த-முக-அம்புஜம்) அழகுவாய்ந்த தாமரைபோன்ற முகத்தையுடையவனும், (வ்ரஜ-வதூ-) இடைப் பெண்களின் (நயனாஞ்சல-வஞ்சிதம்) கடைக்கண் பார்வையால் வஞ்சிக்கப்பட்டவனும், (மம) என்னுடைய (வாங்மய-) சொல்

Koviloor Digital Library



வடிவான நூலுக்கு (ஜீவிதம்) உயிராகியவனும் (விஜயதாம்) வெற்றியுடன் விளங்கட்டும்.

வாங்மயஜீவிதம் :—ஒ. (யோऽந்தஃ ப்ரவிச்ய மம வாசமிமாம் ப்ரஸுப்தாம் ஸஞ்ஜீவயத்யகிலசக்திதரः ஸ்வதாம்னு। அன்யாம்ச்ச ஹஸ்தசரண-ச்ரவண-த்வாகாதீன் ப்ராணுன் நமோ பகவதே புருஷாய துப்யம் ॥)—எல்லாச் சக்திகளையும் தரிக்கின்ற எந்த பகவான் தனது மகிமையால் என்னுள் புகுந்து உறங்கிக்கொண்டிருந்த இந்த எனது வாக்கையும் மற்றும் கை, கால், காது, மெய் முதலிய இந்திரியங்களையும், பிராணசக்திகளையும் உயிர்ப்பிக்கின்ருரோ அந்த பகவானும் பரம புருஷருமான உமக்கு நமஸ்காரம்.

—துருவ ஸ்தோத்ரம் : பாகவதம் 4. 9. 6

ஒ. 'அவனருளாலே அவன் தாள் வணங்கி'—திருவாசகம்.

## 1.9. குழலூதுங் கண்ணன்

**पल्लवारुण-पाणिपङ्कज-सङ्गिवेणु-रवाकुलं**
**फुल्लपाटल-पाटलीपरिवादि-पादसरोरुहम् ।**
**उल्लसन्मधुराधर-द्युति-मञ्जरी-सरसाननं**
**वल्लवी-कुचकुम्भकुङ्कुम-पङ्किलं प्रभुमाश्रये ॥ १.९ ॥**

பல்லவாருண-பாணிபங்கஜ-ஸங்கிவேணு-ரவாகுலம்
புல்லபாடல-பாடலீபரிவாதி-பாதஸரோருஹம் ।
உல்லஸன்-மதுராதர-த்யுதி-மஞ்ஜரீ-ஸரஸானனம்
வல்லவீ-குசகும்பகுங்கும-பங்கிலம் ப்ரபுமாச்ரயே ॥

1. 9. (பல்லவ-அருண-) இளந்தளிர்போல் சிவந்ததும் (பாணி-பங்கஜ-) தாமரைபோன்றதுமான கையில் (ஸங்கி-) சேர்ந்திருக்கிற (வேணு-ரவ-) குழலின் ஓசையால் (ஆகுலம்) மகிழ்ச்சி பொங்குபவனும், (புல்ல-பாடல-) மலர்ந்தும் சிவந்துமிருக்கிற (பாடலீ-) பாதிரிப்பூவை (பரிவாதி-) அவமதிக்கும் (பாத-ஸரோருஹம்) பாத கமலங்களை யுடையவனும், (உல்லஸந்-மதுர-)

Koviloor Digital Library

அழகியதும் இனியதுமான (அதர-) கீழுதட்டின் (த்யுதி மஞ்ஜரீ) காந்திக்குவியலால் (ஸரஸ-ஆனனம்) சோபை மிக்க முகத்தை யுடையவனும், (வல்லவீ-) இடைப் பெண்களின் (குச-கும்ப-குங்கும-) கலசம்போன்ற ஈகில்களில் படிந்த குங்குமத்தினல் (பங்கிலம்) பூசப் பெற்றவனும் ஆகிய (ப்ரபும்) உலகநாயகனை (ஆச்ரயே) தொழுகிறேன்.

## 1.10. கோபிகளின் மனதைக் கவர்ந்த கண்ணன்

अपाङ्गरेखाभि-रभंगुराभि-
रनङ्गलीला-रसरञ्जिताभिः ।
अनुक्षणं वल्लवसुन्दरीभि-
रभ्यर्च्यमानं विभुमाश्रयामः ॥ १ १० ॥

அபாங்கரேகாபி-ரபங்குராபி-
ரனங்கலீலா-ரஸரஞ்ஜிதாபிஃ ।
அனுக்ஷணம் வல்லவஸுந்தரீபி-
ரப்யர்ச்யமானம் விபுமாச்ரயாமஃ ॥ 1.10 ॥

1. 10. (அனங்கலீலா-ரஸ) காமவிளையாட்டின்பம் (ரஞ்ஜிதாபிஃ) விளங்குவதும் (அபங்குராபிஃ) தடைபடாததுமான (அபாங்க-ரேகாபிஃ) கடைக்கண் வரிசைகளால் (அனுக்ஷணம்) விநாடிதோறும் (வல்லவ-ஸுந்தரீபிஃ) கோபஸ்திரீகளால் (அப்யர்ச்யமானம்) பூஜிக்கப்பெற்ற (விபும்) ஸர்வவியாபகனை கிருஷ்ணனை (ஆச்ரயாமஃ) நாம் சரணடைவோம்.

## 1.11. இடைப்பெண்களுக்கு உயிர்ஸ்தானம் போன்ற கிருஷ்ணன்

हृदये मम हृद्यविभ्रमाणां
हृदयं हर्षविशाल-लोलनेत्रम् ।

Koviloor Digital Library



तरुणं व्रजबालसुन्दरीणां
तरलं किञ्चन धाम सन्निधत्ताम् ॥ १.११ ॥

ஹ்ருதயே மம ஹ்ருத்ய-விப்ரமாணும்
ஹ்ருதயம் ஹர்ஷவிசால-லோல-நேத்ரம் ।
தருணம் வ்ரஜபாலஸுந்தரீணும்
தரலம் கிஞ்சன தாம ஸங்நிதத்தாம் ॥ 1.11 ॥

1. 11. (ஹ்ருத்ய-விப்ரமாணும்) உள்ளத்திற்குகந்த செயல்களையுடைய (வ்ரஜ-பால-ஸுந்தரீணும்) இடைச்சேரிப் பெண்ணழகிகளுக்கு (ஹ்ருதயம்) உயிர்ஸ்தானம் போன்றதும், (ஹர்ஷ-விசால-லோல-நேத்ரம்) மகிழ்ச்சியினுல் அகன்று சலிக்கும் கண்களையுடையதும் (தருணம்) இளமைப் பருவத்திலுள்ளதும் (தரலம்) பளபளப்பான காந்தியுடையதும் (கிஞ்சன) வர்ணிக்கமுடியாததுமாகிய (தாம) வடிவம் (மம) என்னுடைய (ஹ்ருதயே) இருதயத்தில் (ஸங்நிதத்தாம்) நிலை பெற்று நிற்கட்டும்.

## 1.12 திருவடிக் காட்சியின்பம்

निखिल-भुवन-लक्ष्मी-नित्य-लीलास्पदाभ्यां
कमलविपिनवीथी-गर्वसर्वङ्कषाभ्याम् ।
प्रणम-दभयदान-प्रौढिगाढोद्धताभ्यां
किमपि वहतु चेतः कृष्णपादाम्बुजाभ्याम् ॥ १.१२ ॥

நிகில-புவன-லக்ஷ்மீ-நித்ய-லீலாஸ்பதாப்யாம்
கமல-விபின-வீதீ-கர்வ-ஸர்வங்கஷாப்யாம் ।
ப்ரணம-தபயதான-ப்ரௌடி-காடோத்ததாப்யாம்
கிமபி வஹது சேதஃ க்ருஷ்ணபாதாம்புஜாப்யாம் ॥

1. 12. (நிகில-புவன-லக்ஷ்மீ-) உலகனைத்திலுமுள்ள அழகு (நித்ய-லீலா-ஆஸ்பதாப்யாம்) நீங்காது விளையாடு மிடமாயும், (கமல-விபின-வீதி-) கூட்டங்கூட்டமாய் வரிசை வரிசையாய்

Koviloor Digital Library

நிற்கும் தாமரைப் பூக்களின் (கர்வ-ஸர்வங்கஷாப்யாம்) கர்வத்தை முழுவதும் போக்குவதாயும், (ப்ரணமத்-) சரணடைந்தவர்களுக்கு (அபயதான-ப்ரௌடி) அபயதானம் செய்யும் காம்பீர்யத்தால் (காட-) மிகவும் (உத்ததாப்யாம்) உயர்ந்ததாயும் விளங்கும் (க்ருஷ்ண-பாதாம்புஜாப்யாம்) கிருஷ்ணனுடைய திருவடிகளில் (சேதஃ) என் சித்தம் (கிம் அபி) 'இன்னதென்று விவரிக்கமுடியாத ஒரு இன்பத்தை (வஹது) அடையட்டும்.

**அபயதானம் :—** ஒ: (ஸர்வதர்மான் பரித்யஜ்ய மா மேகம் சரணம் வ்ரஜ। அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மா சுசஃ ॥) மற்றெல்லா தருமங்களையும் விட்டொழித்து என்னை ஒருவனையே சரண் புகுவாய்: நான் உன்னை எல்லாப் பாவங்களினின்றும் விடுவிப்பேன் வருந்தாதே. —கீ. 18. 66.

## 1.13. ஸர்வாபீஷ்டங்களையும் சொரியும் கண்கள்

प्रणय-परिणताभ्यां प्राभवालम्बनाभ्यां
प्रतिपदललिताभ्यां प्रत्यहं नूतनाभ्याम् ।
पतिमुहुरधिकाभ्यां प्रस्नुवल्लोचनाभ्यां
प्रभवतु हृदये नः प्राणनाथः किशोरः ॥ १-१३ ॥

ப்ரணய-பரிணதாப்யாம் ப்ராபவாலம்பனாப்யாம்
ப்ரதிபத-லலிதாப்யாம் ப்ரத்யஹம் நூதனாப்யாம் ।
ப்ரதிமுஹுரதிகாப்யாம் ப்ரஸ்நுவல்-லோசனாப்யாம்
ப்ரபவது ஹ்ருதயே நஃ ப்ராணநாதஃ கிசோரஃ ॥

1. 13. ப்ரணய-பரிணதாப்யாம்) அன்பினால் பரிபூர்ணமாயும் (ப்ராபவ-ஆலம்பனாப்யாம்) பிரபுத்தன்மைக்கு உறைவிடமாயும் (ப்ரதிபத-லலிதாப்யாம்) காணுந்தோறும் அழகு மிகுந்ததாயும் (ப்ரத்யஹம் நூதனாப்யாம்) தினந்தோறும் புதிதாகத் தோன்றுவதாயும் (ப்ரதி முஹுஃ அதிகாப்யாம்) ஒரு கணத்தில் கண்டதை விட மறுகணம் அழகுமிக்கதாயும் (ப்ரஸ்னுவல்-லோசனாப்யாம்)

Koviloor Digital Library

ஸர்வாபீஷ்டங்களையும் சொரிவதாயும் உள்ள கண்களுடன் (ஹ்ருதயே) என் உள்ளத்தில் (ப்ராணநாதஃ கிசோரஃ) பிராணநாதனை பாலகிருஷ்ணன் (ப்ரபவது) தோன்றட்டும்.

## 1.14. ஆனந்தக்கடல்

माधुर्य-वारिधि-मदान्ध-तरङ्ग-भङ्गी-
शृंगार-संकलित-शीत-किशोर-वषम् ।
आमन्दहास-ललितानन-चन्द्रबिंब-
मानन्दसंप्लव-मनुप्लवतां मनो मे ॥ १.१४ ॥

மாதுர்ய-வாரிதி-மதாந்த-தரங்க-பங்கீ
ச்ருங்கார-ஸங்கலித-சீத-கிசோர-வேஷம் ।
ஆமந்தஹாஸ-லலிதானன-சந்த்ரபிம்ப-
மானந்தஸம்ப்லவ-மனுப்லவதாம் மனோ மே ॥

1. 14. (மாதுர்ய-வாரிதி-) இன்பக்கடலிலிருந்து கிளம்பி (மதாந்த தரங்க-பங்கீ) இன்பவெறியூட்டிப் பார்வையை மறைக்கும் அலைகளின் வரிசைகள் போன்ற (ச்ருங்கார-ஸங்கலித-) சிருங்காரச் சேஷ்டைகளுடன் கூடி (சீத-) குளிர்ந்திருக்கும் (கிசோர வேஷம்) சிறுபிள்ளை வேஷங் கொண்டவனும், (ஆனந்த ஹாஸ-லலித-) ஆனந்தப் புன்முறுவலினால் அழகிய (ஆனன-சந்த்ர-பிம்பம்) சந்திரபிம்பம் போன்ற முகமுடையவனும், (ஆனந்த ஸம்ப்லவம்) ஆனந்தக் கடல்போன்றவனுமானவனை (மே) என்னுடைய (மனஃ) மனது (அனுப்லவதாம்) பின்பற்றிச் செல்லட்டும்.

ஒ. இனிமைக்கலை பொழி சுந்தர மதனக்கடல் வதனன்
கனிவுக் கடலுருவாகிய இளமைக்கலை வடிவன்
கனி மென்னக நிலவேறிய பனிமாமதி வதனன்
முனிவர்துதி முரளீதரன் இதயத்தினில் வாழ்க.

—மோகன அமுதம்.

Koviloor Digital Library


## 1.15. குழலூதும் அழகு

अव्याज-मञ्जुल-मुखाम्बुज-मुग्धभावै-
राखाद्यमान-निजवेणु-विनोदनादम् ।
आक्रीडता-मरुणपाद-सरोरुहाभ्या-
मार्द्रे मदीय-हृदये भुवनार्द्रमोजः ॥ १ १५ ॥

அவ்யாஜ-மஞ்ஜுல-முகாம்புஜ-முக்தபாவை-
ராஸ்வாத்பமான-நிஜவேணு-விநோத-நாதம் ।
ஆக்ரீடதா-மருணபாத-ஸரோருஹாப்யா-
மார்த்ரே மதீய-ஹ்ருதயே புவனார்த்ர-மோஜः ॥

1. 15. (அவ்யாஜ-மஞ்ஜுல-) ஒரு காரணமுமின்றி இயற்கையாகவே இனிய (முகாம்புஜ-முக்தபாவை:) முககமலத்தின் புதிய புதிய பாவனைகளால் (ஆஸ்வாத்யமான-நிஜ-வேணு-விநோத-நாதம்) தனது புல்லாங்குழலில் இருந்துவரும் அதிசயமான நாதத்தை ருசித்து அனுபவிப்பவரும், (புவன-ஆர்த்ராம் ஓஜ:) உலகமக்களிடம் அன்பு பெருகும் தேஜோருபியும் ஆன கிருஷ்ணன் (அருண பாத ஸரோருஹாப்யாம்) சிவந்த பாதகமலங்களால் (ஆர்த்ரே) பக்திரஸத்தால் நனைந்த (மதீய ஹ்ருதயே) என்னுடைய இருதயத்தில் (ஆக்ரீடதாம்) விளையாடட்டும்.

## 1.16 திருவடியழகு

मणिनूपुर-वाचालं वन्दे तच्चरणं विभोः ।
ललितानि यदीयानि लक्ष्माणि व्रजवीथिषु ॥१.१६ ॥

மணிநூபுர-வாசாலம் வந்தே தச்சரணம் விபோः ।
லலிதானி யதீயானி லக்ஷ்மாணி வ்ரஜ-வீதிஷு ॥

1. 16. (வ்ரஜவீதிஷு-) ஆயர் வீதிகளில் (விபோ:) பிரபுவான கிருஷ்ணனுடைய (யதீயானி) எந்தத் திருவடிகளின்

Koviloor Digital Library

(லக்ஷ்மாணி) வஜ்ரம் அங்குசம் முதலிய அடையாளங்கள் (லலிதானி) அழகியனவாய்க் காணப்படுகின்றனவோ. (மணிநூபுர வாசாலம்)—எந்தத் திருவடிகளி லணியப் பெற்ற—ரத்னச் சிலம் பின் ஒலி கேட்கப்படுகிறதோ. (தச்சரணம்) அந்தத்திருவடிகளை (வந்தே) வணங்குகிறேன்.

## 1,17. பாதச் சிலம்பொலி

मम चेतसि स्फुरतु वल्लवी-विभो-
मणिनूपुर-प्रणयि-मञ्जु-शिञ्जितम् ।
कमलावनेचर-कलिन्दकन्यका-
कलहंसकण्ठ-कलकूजितादृतम् ॥ १.१७ ॥

மம சேதஸி ஸ்புரது வல்லவீ-விபோர்-
மணிநூபுர-ப்ரணயி-மஞ்ஜு-சிஞ்ஜிதம் .
கமலாவனேசர-கலிந்த-கன்யகா-
கலஹம்ஸகண்ட-கலகூஜிதாத்ருதம் ॥ 1.17 ॥

1. 17. (கமலாவனே-சா-) லக்ஷ்மிக்குப் பிரியமான வனத்தில் பாயும் (கலிந்த-கன்யகா-) யமுனையாற்றில் (கலஹம்ஸ-கண்ட-) அழகிய ஹம்ஸங்களின் கண்டத்திலிருந்து எழும் (கல-கூஜித-) இனிமையான குரலால் (ஆத்ருதம்) போற்றப்படும் (வல்லவீ-விபோ꞉) கோபீவல்லபனை கிருஷ்ணனுடைய (மணி நூபுர-ப்ரணயி-மஞ்ஜு-சிஞ்சிதம்) ரத்னச் சிலம்பி லிருந்து எழும் இனிய ஒலி (மம) என்னுடைய (சேதஸி) மனதில் (ஸ்புரது) தோன்றட்டும்.

௯. கதா புன꞉ சங்க-ரதாங்க-கல்பக-
த்வஜாரவிந்தாங்குச-வஜ்ர-லாஞ்சனம் ।

Koviloor Digital Library

த்ரிவிக்ரம த்வச்சரணாம்புஜத்வயம்
மதீய மூர்த்தான-மலங்கரிஷ்யதி ॥

—ஆளவந்தார் ஸ்தோத்ரரத்னம் 31:

## 1.18. குழலூதி என் மனதில் விளையாடுங் கிருஷ்ணன்

तरुणारुण-करुणामय-विपुलायत-नयनं
कमलाकुच-कलशीभर-पुलकीकृत-हृदयम् ।
मुरलीरव-तरलीकृत-मुनिमानस-नलिनं
मम खेलति मदचेतसि मधुराधर-ममृतम् ॥ १.१८ ॥

தருணாருண-கருணாமய-விபுலாயத-நயனம்
கமலாகுச-கலசீபர-புலகீக்ருத-ஹ்ருதயம் ।
முரலீரவ-தரலீக்ருத-முனிமானஸ-நலினம்
மம கேலதி மதசேதஸி மதுராதர-மம்ருதம் ॥

1, 18. (தருண-அருண-கருணாமய-விபுல-ஆயத - நயனம்) இளமையும் சிவப்பும் கருணையுங்கூடி அகன்று நீண்டுள்ள கண்களையுடையதும (கமலா-குச - கலசீபர - புலகீக்ருத ஹ்ருதயம்) லக்ஷ்மிதேவியின் பூர்ணகலசம் போன்ற நகில்களினால் புளகாங்கிதமடைந்த இருதயப் பிரதேசத்தை உடையதும் (முரலீ-ரவ-தரலீக்ருத-முனி-மானஸ-நலினம்) முனிவர்களுடைய உள்ளத்தாமரையைப் பிரகாசிக்கச் செய்யும் வேணுகானத்தை உடையதும் (மதுர-அதரம்)—புல்லாங்குழல் பேரருந்தி—இனிமையாய் விளங்கும் கீழுதட்டை உடையதும் ஆகிய (அம்ருதம்) அழியாத செல்வத் திருவுருவம் (மம) என்னுடைய (மத சேதஸி) களிப்பு மிக்க மனதில் (கேலதி) விளையாடுகின்றது.

Koviloor Digital Library


## 1.19 குழலூதி கோபியரை மயக்கும் கண்ணன்

आमुग्ध-मर्धनयनाम्बुज-चुम्ब्यमान-
हर्षाकुल-व्रजवधू-मधुराननेन्दोः ।
आरब्धवेणु-रव-मादि-किशोर-मूर्ते-
राविर्भवन्ति मम चेतसि केऽपि भावाः ॥ १.१९ ॥

ஆமுக்த-மர்த்த-நயனும்புஜ-சும்ப்யமான-
ஹர்ஷாகுல-வ்ரஜவதூ-மதுரானனேந்தோः ।
ஆரப்த-வேணு-ரவ-மாதி-கிசோர-மூர்த்தே-
ராவிர்பவந்தி மம சேதஸி கேऽபி பாவாः ॥ 1.19 ॥

1. 19. (அர்த்தநயனும்புஜ-) பாதி மூடிப் பாதி திறந்த தாமரைபோன்ற கண்களினுல் (சும்ப்யமான-) முத்த மிடுவதுபோல் நோக்கப் பெற்று, (ஹர்ஷ-ஆகுல-வ்ரஜவதூ-) அதனுல் ஏற்பட்ட மகிழ்ச்சியில் மயங்கிய இடைப் பெண்களின் (மதுர-ஆநந-இந்தோः) கண்களுக்கு இனிய சந்திரனைப் போலுள்ள முகமண்டலம் விளங்கும் (ஆதி-கிசோர மூர்த்தேः) பிள்ளை வடிவுகொண்ட ஆதிமூர்த்தியின் (ஆமுக்தம்) புதிய அழகும் (ஆரப்த-வேணுரவம்) குழலூத ஆரம்பிப்பதும் உள்ளதாக (கேऽபி பாவாः) இன்ன தென்று சொல்ல முடியாத பாவனைகள் (மம சேதஸி) என் மனத்தில் (ஆவிர்ப்பவந்தி) உதிக்கின்றன.

ஒ. நாவலம் பெரிய தீவினில்வாழும் நங்கைமீர்க ளிதோரற்புதங்கேளீர்
தூவலம் புரியுடைய திருமால் தூயவாயிற் குழலோசை வழியே
கோவலர் சிறுமியரிளங் கொங்கை குதுகுலிப்ப வுடலுளவிழ்ந்து எங்கும்
காவலுங்கடந்து கயிறு மாலையாகி வந்து கவிழ்ந்து நின்றனரே.

—பெரியாழ்வார்.

Koviloor Digital Library

## 1.20. சயனத்திலிருந்து எழுந்து வரும் கோலம்

कलक्वणित-कङ्कणं करनिरुद्धपीताम्बरं
क्रमप्रसृत-कुन्तलं कलितबर्हभूषं विभोः।
पुनः प्रसृति-चापलं प्रणयिनी-भुजायन्त्रितं
मम स्फुरतु मानसे मदनकेलि-शय्योत्थितम् ॥१.२०॥

கலக்வணித-கங்கணம் கரநிருத்த-பீதாம்பரம்
க்ரமப்ரஸ்ருத-குந்தலம் கலிதபர்ஹபூஷம் விபோ:।
புன: ப்ரஸ்ருதி-சாபலம் ப்ரணயினீ-புஜாயந்த்ரிதம்
மம ஸ்புரது மானஸே மதனகேலி-சய்யோத்திதம்॥

1. 20. (கல-க்வணித-கங்கணம்) அழகாக கிலுகிலுக்கும் கங்கணமும், (கர-நிருத்த-பீதாம்பரம்) நழுவாமல் கையில் பிடித்துக் கொள்ளப்பட்ட பட்டாடையும் (க்ரம-ப்ரஸ்ருத-குந்தலம்) மெள்ள மெள்ள அவிழும் தலைமுடியும் (கலித-பர்ஹபூஷம்) நழுவிப்போன மயிலிறகு ஆபரணமும் (புன: ப்ரஸ்ருதிசாபலம்) மீண்டும் வெளியே செல்ல விரும்பும் கோலமும் (ப்ரணயினீ-புஜாயந்த்ரிதம்)—பிரிய மன மில்லாமல்—அன்புமிக்க நாயகியின் கைகளால் ஆலிங்கனம் செய்யப் பெற்ற வடிவமாக (மதன-கேலி-சய்யா-உத்திதம்) காமலீலைக்குரிய சயனத்திலிருந்து எழுந்த கண்ணனுடைய அழகு (மம மானஸே) என்மனதில் (ஸ்புரது) பிரகாசிக்கட்டும்.

## 1.21. பகவானுடைய பொய்யுறக்கம்

स्तोक-स्तोक-निरुध्यमान-मृदुल-प्रस्यन्दि-मन्दस्मितं
प्रेमोद्भेद-निरर्गल-प्रसृमर-प्रव्यक्त-रोमोद्गमम्।
श्रोतृ-श्रोत्र-मनोहर-व्रजवधू-लीला-मिथो-जल्पितं
मिथ्यास्वाप-मुपास्महे भगवतः क्रीडा-निमीलद्दृशः॥

Koviloor Digital Library


ஸ்தோக-ஸ்தோக-நிருத்யமான-
ம்ருதுல-ப்ரஸ்யந்தி-மந்தஸ்மிதம்
ப்ரேமோத்பேத-நிரர்கல-ப்ரஸ்ருமர-
ப்ரவ்யக்த-ரோமோத்கமம் ।
ச்ரோத்ரு-ச்ரோத்ர-மனோஹர-
வ்ரஜவதூ-லீலா-மிதோ-ஜல்பிதம்
மித்யாஸ்வாப-முபாஸ்மஹே
பகவதஃ க்ரீடா-நிமீலத்-த்ருசஃ ॥ 1.21 ॥

1. 21. (ஸ்தோக-ஸ்தோக-) கொஞ்சம் கொஞ்சமாக (நிருத்யமான) அடக்கப்பட்டும் (ம்ருதுல-ப்ரஸ்யந்தி) மெதுவாக வெளிப்படும் (மந்தஸ்மிதம்) புன்முறுவலை யுடையதும், (ப்ரேம-உத்பேத) பிரேமையின் எழுச்சியினால் (நிரர்கல-) தடுக்கமுடியாது (ப்ரஸ்ருமர-) பரவும் (ப்ரவ்யக்த-ரோம-உத்கமம்) வெளிப்படையான மயிர்க்கூச்சுடையதும், (ச்ரோத்ரு-ச்ரோத்ர-மனோஹர-) கேட்பவர்களின் காதுக்கு இனிமையாக (வ்ரஜவதூ-லீலா) இடைப் பெண்கள் விளையாட்டாக (மிதஃ ஜல்பிதம்) ஒருவர்க்கொருவர் பேசிக்கொள்ளும் பேச்சை உடையதுமான (க்ரீடா-நிமீலத்) த்ருசஃ) வேடிக்கைக்காக மூடப்பெற்ற கண்களையுடைய (பகவதஃ-கிருஷ்ணபகவானின் (மித்யாஸ்வாபம்) பொய்யுறக்கத்தை (உபாஸ்மஹே) தியானம் செய்கிறோம்.

கிருஷ்ணன் கோபிகள் வருவதைப் பார்த்துத் தூங்குவதுபோல் பாசாங்கு செய்தான். கோபிகள் நெருங்கி ஒருவருக் கொருவர் கிருஷ்ணனைப்பற்றி அன்புடனும் பரிஹாஸமாகவும் பேச ஆரம்பிக்கவே அவன் அதைக்கேட்டு மகிழ்ச்சியால் அடக்கமுடியாத புன்முறுவலையும் மயிர்க்கூச்சையு மடைந்தான்.

## 1.22. ஸ்ரீகிருஷ்ணன் உறைவிடம்

विचित्र-पत्राङ्कुर-शालि-बाला-
स्तनान्तरं मौनि-मनोन्तरं वा ।

Kovilnet Digital Library

अपास्य वृन्दावन-पादपास्य-
मुपास्य-मन्य-न्न विलोकयामः ॥ १.२२ ॥

விசித்ர-பத்ராங்குர-சாலி-பாலா-
ஸ்தனந்தரம் மௌனி-மனோந்தரம் வா ।
அபாஸ்ய ப்ருந்தாவன-பாதபாஸ்ய-
முபாஸ்ய-மன்யந்ந விலோகயாமஃ ॥ 1 22 ॥

1. 22. (விசித்ர-பத்ர-அங்குர-சாலி-) பலவிதமான இலைக ளாலும் மொட்டுகளாலும் அலங்கரிக்கப்பெற்று விளங்கும் (பாலா-ஸ்தனந்தரம்) இளம் பெண்களின் நகில் பிரதேசத்தையும் (மௌனிமனோந்தரம்) முனிவர்களின் மனப்பிரதேசத்தையும் (ப்ருந்தாவன-பாதப-ஆஸ்யம்) பிருந்தாவனத்துள்ள மரங்களின் அடிப் பிரதேசத்தையும் (அபாஸ்ய) விட்டு(உபாஸ்யம்)–கண்ணன் திருவடிகளை—தியானம் செய்தற்குரிய இடம் (அன்யத்) வேறொன்றை (ந விலோகயாமஃ) நாங்கள் காணவில்லை.

## 1.23. வேணுகோபால வடிவம்

सार्धं समृद्धै-रमृतायमानै-
राध्मायमानै-र्मुरली-निनादैः ।
मूर्धाभिषिक्तं मधुराकृतीनां
बालं कदा नाम विलोकयिष्ये ॥ १.२३ ॥

ஸார்த்தம் ஸம்ருத்தை-ரம்ருதாயமானை-
ராத்மாயமானைர்-முரலீ-நிநாதைஃ ।
மூர்த்தாபிஷிக்தம் மதுராக்ருதீனும்
பாலம் கதா நாம விலோகயிஷ்யே ॥ 1.23 ॥

1. 23. (ஸம்ருத்தைஃ) குறைவற்ற (அம்ருதாயமானைஃ) அமுதம் போன்று (ஆத்மாயமானைஃ-முரளீ-நிநாதைஃ) உற்பத்தி

Koviloor Digital Library

செய்யப்பட்ட வேணுகானத்துடன் (ஸார்த்தம்) கூடியவனும் மதுர-ஆக்ருதீனும் மூர்த்தாபிஷிக்தம்) வடிவழகு படைத்தவர்க ளில் தலைசிறந்தவனுமான (பாலம்) பாலகிருஷ்ணனை (கதா நாம) எப்பேரதுதான் (விலோகயிஷ்யே) நான் காணப்போகிறேன் ?

## 1.24. புன்முறுவல பூத்த சந்திரன் போன்ற முகம்

शिशिरीकुरुते कदा नु नः
शिखिपिञ्छाभरण-शिशुर्दृशोः ।
युगलं विगलन्मधुद्रव
स्मित-मुद्रामृदुना मुखेन्दुना ॥ १.२४ ॥

சிசிரீகுருதே கதா நு நஃ
சிகிபிஞ்சாபரணஃ சிசுர்த்ருசோஃ ।
யுகலம் விகலன்-மதுத்ரவ-
ஸ்மிதமுத்ரா-ம்ருதுனா முகேந்துனா ॥ 1.24 ॥

1. 24. (சிகிபிஞ்சாபரணஃ) மயிலிறகை பூஷணமாயணிந்த (சிசுஃ) பாலகிருஷ்ணன் (விகலன்-மது த்ரவ-) தேனெழுகுவது போன்ற (ஸ்மித-முத்ரா-) புன்முறுவலின் பொலிவுடன்கூடிய (ம்ருதுனா முகேந்துனா) மெதுவாகிய சந்திரன்போன்ற முகத்தி னால் (நஃ) நம்முடைய (த்ருசோஃ யுகலம்) கண்களிரண்டையும் (கதா நு) எப்போதுதான் (சிசிரீ குருதே) குளிரப்பண்ணுவானோ)

## 1.25. ஸ்ரீக்ருஷ்ண சந்திரன்

कारुण्य-कर्बुर-कटाक्ष-निरीक्षणेन
तारुण्य-संवलित-शैशव-वैभवेन ।
आपुष्णता भुवन-मद्भुत-विभ्रमेण
श्रीकृष्णचन्द्र शिशिरी कुरु लोचनं मे ॥ १.२५ ॥

Kovilpoor Digital Library

காருண்ய-கர்புர-கடாக்ஷ-நிரீக்ஷணேன
தாருண்ய-ஸம்வலித-சைசவ-வைபவேன।
ஆபுஷ்ணதா புவன-மத்புத-விப்ரமேண
ஸ்ரீக்ருஷ்ணசந்த்ர! சிசிரீ குரு லோசனம் மே॥ 1.25॥

1. 25. (ஸ்ரீ க்ருஷ்ணசந்த்ர) சந்திரனைப்போல் குளிர்ந்த கண்ணா! (காருண்ய-கர்புர) கருணையால் கலங்கிய (கடாக்ஷ-நிரீக்ஷணேன) கடைக்கண் பார்வையாலும் (தாருண்ய-ஸம்வலித-) யௌவனத்தின் பொலிவு சூழ்ந்த (சைசவ-வைபவேன) இளமையின் பெருமையாலும், (புவனம்) உலகை (ஆபுஷ்ணதா-) போஷிக்கும் (அத்புத-விப்ரமேண) அதிசயமான லீலையாலும் (மே) என்னுடைய (லோசனம்) கண்ணை (சிசிரீ குரு) குளிரச் செய்வாய்.

## 1.26. கருணாகடாக்ஷம்

कदा वा कालिन्दी-कुवलयदल-श्यामलतराः
कटाक्षा लक्ष्यन्ते किमपि करुणा-वीचि-निचिताः।
कदा वा कन्दर्प-प्रतिभट-जटाचन्द्र-शिशिराः
किमप्यन्त-स्तोषं ददति मुरली-केलि-निनदाः॥

கதா வா காலிந்தீ-குவலயதல-ச்யாமலதரா:
கடாக்ஷா லக்ஷ்யந்தே கிமபி கருணா-வீசி-நிசிதா:।
கதா வா கந்தர்ப்ப-ப்ரதிபட-ஜடா சந்த்ர-சிசிரா:
கிமப்யந்தஸ்-தோஷம் தததி முரலீ கேலி-நிநதா:॥

1. 26. (காலிந்தீ-) யமுனையாற்றிலுள்ள (குவலயதல-) நெய்தல் பூவின் இதழைக்காட்டிலும் (ச்யாமலதரா:) அதிகக் கறுப்பாயும், (கிமபி) இப்படி யென்று வர்ணிக்க முடியாத (கருணா-வீசி-நிசிதா:) அலைபோல் பெருகும் கருணை நிறைந்ததுமான (கடாக்ஷா:) கண்ணனுடைய கடைக்கண் பார்வைகள் (கதா வா) எப்போதுதான் (லக்ஷ்யந்தே) என்னால் காணப்படுமோ

Kovitoor Digital Library

(கந்தர்ப்ப-ப்ரதிபட-) மன்மதனின் சத்ருவான பரமசிவனுடைய (ஜடா–சந்த்ர-) ஜடையில் விளங்கும் சந்திரனுடைய கிரணங்களைப் போன்று (சிசிராঃ) குளிர்ந்தவையான (முரலீ-கேலி-நிநதாঃ) வேணுகான ஒலிகள் (கிம் அபி) அளவிடற்கரிய (அந்தஸ்தோஷம்) அகமகிழ்ச்சியை (கதா வா) எப்போதுதரன் (தததி) எனக்கு அளிக்கப் போகின்றனவோ ?

## 1.27. பார்வை பேச்சு நடை முதலியன

अधीर-मालोकित-मार्द्रजल्पितं
गतं च गंभीर-विलास-मन्थरम् ।
अमन्द-मालिङ्गित-माकुलोन्मद-
स्मितं च ते नाथ वदन्ति गोपिकाः ॥ १.२७ ॥

அதீர-மாலோகித மார்த்ரஜல்பிதம்
கதஞ் ச கம்பீர-விலாஸ-மந்தரம் ।
அமந்த-மாலிங்கித-மாகுலோன்மத
ஸ்மிதஞ் ச தே நாத வதந்தி கோபிகாঃ ॥ 1.27 ॥

1. 27. (நாத) என்னை ஆட்கொண்டவனே ! (தே) உன்னுடைய (அதீரம்) பயபாவனை உடைய (ஆலோகிதம்) பார்வையையும் (ஆர்த்ர-ஜல்பிதம்) அன்பு கசிந்த பேச்சையும் (கம்பீர-விலாஸ மந்தரம்) கம்பீரமும் எடுப்பும் நிறைந்த (கதம் ச) நடையையும் (அமந்தம் ஆலிங்கிதம்) இறுகிய தழுவுதலையும் (ஆகுல-உன்மத-ஸ்மிதம் ச) காண்பார் உள்ளத்தைக் கலக்கிப் பித்தேற்றும் புன்முறுவலையும் பற்றி (கோபிகாঃ) கோபிகைகள் (வதந்தி) பேசுகிறார்கள்.

## 1.28. தேஜோரூப தர்சனம்

अस्तोक-स्मितभर-मायतायताक्षं
निश्शेषस्तन-मृदितं व्रजाङ्गनाभिः ।

Kovilloor Digital Library

निस्सीम-स्तवकित-नीलकान्ति-धारं
दृश्यासं त्रिभुवनसुन्दरं महस्ते ॥ १.२८ ॥

அஸ்தோக-ஸ்மிதபர-மாயதாயதாக்ஷம்
நிஃசேஷஸ்தன-ம்ருதிதம் வ்ரஜாங்கனாபிஃ ।
நிஃஸீம-ஸ்தபகித-நீலகாந்தி-தாரம்
த்ருச்யாஸம் த்ரிபுவனஸுந்தரம் மஹஸ்தே ॥ 1.28 ॥

1. 28. (அஸ்தோக-ஸ்மிதபரம்) குறைவிலாச் சிரிப்பால் பூரித்ததும் (ஆயத ஆயதாக்ஷம்) விரிந்து மலர்ந்த கண்களை யுடையதும் (வ்ரஜ-அங்கனாபிஃ) இடைப்பெண்களால் (நிஃ சேஷஸ்தன-ம்ருதிதம்) இடையறாது நகில்கள் படியத் தழுவப் பெற்றதும் (நிஸ்ஸீம-ஸ்தபகித-நீலகாந்தி-தாரம்) நீலம்பூத்த அளவிலாத ஒலியின் பிரவாகம் போன்றதும் (த்ரிபுவன-ஸுந்தரம்) மூவுலகிலும் நிகரற்ற அழகுவாய்ந்ததுமான (தே) உன்னுடைய (மஹஃ) தேஜோருபத்தை (த்ருச்யாஸம்) நான் தரிசிப்பவனாக வேண்டும்.

### 1.29. அவன் அருளல்லாது மற்றவைகளால் ஆவதென்ன ?

मयि प्रसादं मधुरैः कटाक्षै-
र्वंशीनिनादानुचरै-र्विधेहि ।
त्वयि प्रसन्ने किमिहापरै-र्न-
स्त्वय्यप्रसन्ने किमिहापरै-र्नः ॥ १.२९ ॥

மயி ப்ரஸாதம் மதுரைஃ கடாக்ஷைர்-
வம்சீநிநாதானுசரைர்-விதேஹி ।
த்வயி ப்ரஸன்னே கிமிஹாபரைர்-நஸ்-
த்வய்யப்ரஸன்னே கிமிஹாபரைர்-நஃ ॥ 1.29 ॥

Koviloor Digital Library


1. 29. (வம்சீ - நிநாத - அனுசரை:) வேணுகானத்திற் கிணங்க (மதுரை:) இனிமையான (கடாக்ஷை:) கடைக்கண் பார்வைகளால் (மயி) என்னிடத்தில் (ப்ரஸாதம் விதேஹி) அருள் புரிதலை வேண்டுகிறேன். (த்வயி ப்ரஸன்னே) உன் அருள் கிடைக்கப் பெற்றால் (ந:) எங்களுக்கு (அபரை:) மற்றவைகளால் (கிம் இஹ) இங்கு ஆகவேண்டிய தென்ன ? (த்வயி அப்ரஸன்னே) உன் அருள் இல்லையெனில் (ந:) எங்களுக்கு (அபரை:) மற்றவைகளால் (கிம் இஹ) இங்கு ஆகவேண்டிய தென்ன ?

## 1.30. கருணைக்கடல்

निबद्ध-मुग्धांजलिरेष याचे
नीरन्ध्र-दैन्योन्नत-मुक्तकण्ठम् ।
दयाम्बुधे देव भवत्कटाक्ष-
दाक्षिण्य-लेशेन सकृन्निषिञ्च ॥ १.३० ॥

நிபத்த-முக்தாஞ்ஜலி-ரேஷ யாசே
நீரந்த்ர-தைன்யோந்நத-முக்தகண்டம் ।
தயாம்புதே தேவ பவத்கடாக்ஷ-
தாக்ஷிண்ய-லேசேன ஸக்ருந்நிஷிஞ்ச ॥ 1.30 ॥

1. 30. (தயாம்புதே) கருணைக்கடலே ! (தேவ) லீலைகளால் உலகில் பிரகாசிக்கும் தேவனே ! (நிபத்த-முக்தாஞ்ஜலி:) ஒன்று மறியாது கூப்பிய கையினனாய் (ஏஷ:) இவ்வுலகில் துன்பத்தி லாழ்ந்த நான் (யாசே) உன்னை இறைஞ்சுகிறேன். (நீரந்த்ர-தைன்ய-) இடையறாத மனோ நொய்மையால் (உன்னத-முக்த-கண்டம்) வாய்விட்டு உரக்கக் கதறும் இவனை (பவத் கடாக்ஷ) உம்முடைய கடைக்கண் பார்வையின் (தாக்ஷிண்ய லேசேன) அனுகூலத் துளியால் (ஸக்ருத்) ஒருமுறை (நிஷிஞ்ச) நனைப்பாயாக.

Kovilur Digital Library

ஓ. த்ருசா த்ராகீயஸ்யா தரதலித-நீலோத்பல-ருசா
தவீயாம்ஸம் தீனம் ஸ்நபய க்ருபயா மாமபி சிவே।
அனேனுயம் தன்யோ பவதி ந ச தே ஹானிரியதா
வனே வா ஹர்ம்யே வா ஸமகர-நிபாதோ ஹிமகரஃ ॥

நீண்டதும் சிறிது மலர்ந்த கருநெய்தல் போன்று பிரகாசிப்பது மான உனது பார்வையால் உனக்கு வெகுதூரத்தி லிருக்கும் ஏழை யாகிய என்னையுங்கூட கருணையால் நனைப்பாயாக. அதனுல் இவன் பாக்கியசாலி ஆவான். அதில் உனக்கு ஒரு நஷ்டமும் இல்லை. சந்திரன் காட்டிலாயினும் நாட்டிலுள்ள மாளிகையிலாயினும் தனது கிரணங்களைச் சமமாய்ப் பெருக்குகிறுன். (அதனுல் சந்திரனுக்கு என்ன நஷ்டம்?). —ஸௌந்தர்யலஹரீ. 57.

## 1.31. குழந்தைப்பருவ அழகு

पिञ्छावतंस-रचनोचित-केशपाशे
पीनस्तनी-नयन-पङ्कज-पूजनीये ।
चन्द्रारविन्द-विजयोद्यत-वक्त्रबिम्बे
चापल्यमेति नयनं तव शैशवे नः ॥ १.३१ ॥

பிஞ்சாவதம்ஸ-ரசனேசித-கேசபாசே
பீநஸ்தனீ-நயன-பங்கஜ-பூஜனீயே।
சந்த்ராரவிந்த-விஜயோத்யத-வக்த்ர-பிம்பே
சாபல்ய-மேதி நயனம் தவ சைசவே நஃ ॥ 1.31 ॥

1. 31. (பிஞ்ச-அவதம்ஸ-) மயில் இறகை உச்சியில் ஆபரணமாக (ரசனு-) வைத்து அலங்கரித்துக்கொள்ள (உசித-) பொருத்தமா யிருக்கும் (கேசபாசே) குழல் கற்றையையுடையதும், (பீநஸ்தனீ-) பருத்த நகில்களையுடைய பெண்களின் (நயன-பங்கஜ-) கண்களாகிற தாமரைப் பூக்களால் (பூஜனீயே) பூஜித்தற் குரியதும், (சந்த்ர) அரவிந்த-விஜயே-) சந்திரனையும் தாமரையையும் வெல்லுவதற்கு (உத்யத-) முற்படும் (வக்த்ர-பிம்பே) முக

Koviloor Digital Library

மண்டலத்தை யுடையதுமான (தவ) உன்னுடைய (சைசவே) குழந்தைப்பருவ அழகில் (நः) எங்களுடைய (நயனம்) பார்வை (சாபல்யம்) பேராசையை (ஏதி) அடைகிறது.

## 1.32. கண்ணனைக் காணும் ஆசை

त्वच्छैशवं त्रिभुवनाद्भुत-मित्यवैमि
यच्चापलं च मम वागविवादगम्यम् ।
तत्किं करोमि विरणन्मुरलीविलास-
मुग्धं मुखाम्बुज-मुदीक्षितु-मीक्षणाभ्याम् ॥ १·३२ ॥

த்வச்-சைசவம் த்ரிபுவனுத்புத-மித்யவைமி
யச்சாபலஞ் ச மம வாகவிவாத-கம்யம் ।
தத்கிம் கரோமி விரணன்-முரலீவிலாஸ-
முக்தம் முகாம்புஜ-முதீக்ஷிது-மீக்ஷணப்யாம் ॥ 1.32 ॥

1. 32. (த்வத்) உன்னுடைய (சைசவம்) இளமைப்பொலிவு (த்ரிபுவன-அத்புதமிதி) மூவ்வுலகிலும் அற்புதமானது—காண்டற்கரிது—என்று (அவைமி) நான் அறிவேன்; (யத் சாபலஞ்ச மம) உன்னைக்காண எனக்குள்ள ஆசையோ வாக்கினல் வர்ணிக்க இயலாது. (தத்) அது அங்ஙன மிருக்கையில் (விரணந்) இனிய ஒலிகளை உண்டாக்கும் (முரலீ-விலாஸ) குழல் பொருந்தியதால் (முக்தம்) அழகு மிகுந்து விளங்கும் (முகாம்புஜம்) தாமரைபோன்ற முகத்தை (ஈக்ஷணப்யாம்) இருகண்களாலும் (உதீக்ஷிதும்) நன்ருய்ப் பார்ப்பதற்கு (கிம் கரோமி) நான் என்ன செய்வேன்?

## 1.33. பேச்சழகு

पर्याचितामृत-रसानि पदार्थभंगी-
फल्गूनि वल्गित-विशाल-विलोचनानि ।

Koviloor Digital Library

बाल्याधिकानि मदवल्लव-भावितानि
भावे लुठन्ति सुदृशां तव जल्पितानि ॥ १.३३ ॥

பர்யாசிதாம்ருத-ரஸானி பதார்த்த-பங்கீ-
பல்கூனி வல்கித-விசால-விலோசனானி ।
பால்யாதிகானி மதவல்லவ-பாவிதானி
பாவே லுடந்தி ஸுத்ருசாம் தவ ஜல்பிதானி ॥ 1.33 ॥

1. 33. (பர்யாசித-) பரிபூர்ணமாக (அம்ருத-ரஸானி) அமிருதரஸம் நிறைந்தவைகளும், (பதார்த்த பங்கீ பல்கூனி) உலகிலுள்ள மற்றப் பொருள்களின் மேன்மையை எல்லாம் அல்பமாய்ச் செய்பவைகளும், (வல்கித-விசால-விலோசனானி) கண்களின் அகலத்தையும் அழகையும் தோற்றுவிப்பவைகளும் (பால்யாதிகானி) குழந்தைப் பருவத்திற்கு மீறியவைகளும் (மத-வல்லவ-பாவிதானி) மகிழ்ச்சி பொங்கிய இடையர்களால் கொண்டாடப்பட்டவைகளும் (ஸுத்ருசாம்) பெண்களுடன் (தவ ஜல்பிதானி) நீ பேசியவைகளுமான வார்த்தைகள் (லுடந்தி) திரும்பித் திரும்பி வந்துகொண்டே இருக்கின்றன.

### 1.34. ஸமாதியைக் கலைக்கும் குழல்

पुनः प्रसन्नेन मुखेन्दु-तेजसा
पुरोऽवतीर्णस्य कृपामहाम्बुधेः ।
तदेव लीलामुरली-रवामृतं
समाधि-विघ्नाय कदा नु मे भवेत ॥ १.३४ ॥

புனః ப்ரஸன்னேன முகேந்து-தேஜஸா
புரோऽவதீர்ணஸ்ய க்ருபா-மஹாம்புதேः ।
ததேவ லீலாமுரலீ-ரவாம்ருதம்
ஸமாதி-விக்னாய கதா நு மே பவேத் ॥ 1.34 ॥

Koviloor Digital Library


1. 34. (புனः ப்ரஸன்னேன)—நான் அவனுடைய திருமுக மண்டலத்தை தியானித்து ஸமாதி கூடியிருக்கையில், தியானத்தில் தோன்றிய தெளிவைக் காட்டிலும்—இன்னும் அதிகமான தெளிவுடன் கூடிய (முக-இந்து-தேஜஸா) சந்திரபிம்பம் போன்ற முகத்தின் காந்தியுடன் (புரः) என் முன்னே (அவதீர்ணஸ்ய) ப்ரஸன்னமாய்க் காக்ஷி யளித்து நிற்கும் (க்ருபா-மஹாம்புதேः) கருணைப் பெருங்கடலான கிருஷ்ணனுடைய (ததேவ லீலா-முரலீ-ரவாம்ருதம்) முகத்தில் தியானம் செய்யப்பட்ட அதே விளையாட்டுக் குழலினின்று பெருகும் அமுதுபோல் இனிய கானம் (ஸமாதி-விக்னய) ஸமாதியைக் கலைப்பதற்கு (கதா நு) எப்போதுதான் (மே) எனக்கு (பவேத்) நிகழுமோ?

புரः ப்ரஸன்னேன —பா. பே.

**ஸமாதி-விக்னய**—கண்ணனைக் காண்பதாலும் அவன் குழலைக் கேட்பதாலும் என் தியானமும் ஸமாதியும் கலையவேண்டும்.

ஒ. கண்களைமூடிக் கண்ணனை எண்ணி
நண்ணிய நிஷ்டை நான் புரிபோதில்
வண்ண இசைக்குழல் வாயில் இசைத்துப்
புண்ணியன் முன்வர பூசையும் கெடுமோ?

## 1.35. கண்ணனை அணைக்கும் இன்பம்

भावेन मुग्धचपलेन विलोकनेन
मन्मानसे किमपि चापल-मुद्वहन्तम् ।
लोलेन लोचन-रसायन-मीक्षणेन
लीला-किशोर-मुपगूहितु-मुत्सुकोऽस्मि ॥ १.३५ ॥

பாவேன முக்தசபலேன விலோகனேன
மன்மானஸே கிமபி சாபல-முத்வஹந்தம் ।
லோலேன லோசன-ரஸாயன-மீக்ஷணேன
லீலா-கிசோர-முபகூஹிது-முத்ஸுகோऽஸ்மி ॥ 1.35 ॥

Koviloor Digital Library


1.35. (முக்தசபலேன) மிக வழகாய்ச் சலிக்கும் (விலோகனேன) பார்வையினாலும் (பாவேன) செயலாலும் (மத் மானஸே) என்னுடைய மனதில் (கிம் அபி) வர்ணிக்க முடியாத (சாபலம்) பேராசையை (உத்வஹந்தம்) உண்டுபண்ணுபவனும் (லோசன ரஸாயனம்) கண்களுக்குப் பரமானந்தத்தை யளிப்பவனும் (லீலா கிசோரம்) விளையாட்டுப் பிள்ளையாகியவனுமான கிருஷ்ணனை ஈக்ஷணேன) ஆசையால் துடிக்கும் கண்களால் (உபகூஹிதும்) தழுவிக் கொள்வதற்கு (உத்ஸுகஃ அஸ்மி) ஆவலுடையவனாயிருக்கின்றேன்.

உத்ஸுகாஸ்மஃ. —பா. பே.

## 1.36. மனோஹரன்

अधीर-बिम्बाधर-विभ्रमेण
हर्षार्द्र-वेणु-स्वर-सम्पदा च ।
अनेन केनापि मनोहरेण
हा हन्त हा हन्त मनो धुनोति ॥ १.३६

அதீர-பிம்பாதர-விப்ரமேண
ஹர்ஷார்த்ர-வேணு-ஸ்வர-ஸம்பதா ச ।
அனேன கேனாபி மனோஹரேண
ஹா ஹந்த ஹா ஹந்த மனோ துனோதி ॥ 1.36 ॥

1.36. (அதீர) அசையும் (பிம்ப-அதர-) கோவைப்பழம் போன்ற கீழுதட்டின் (விப்ரமேண) பேரழகாலும், (ஹர்ஷ-ஆர்த்ர-) பொங்கும் மகிழ்ச்சியின் கசிவுடன் கூடிய (வேணுஸ்வர-) குழலோசையின் (ஸம்பதா ச) செல்வத்தாலும், (அனேன) இந்த (மனோஹரேண) மனதைக் கொள்ளை கொள்ளும் (கேனாபி) எதோ ஒரு சக்தியால் (மனஃ) என் மனது (துனோதி) நிலை கொள்ளாது அலைகிறது. (ஹா ஹந்த ஹா ஹந்த) ஐயோ, நான் என்ன செய்வேன்?

Koviloor Digital Library



## 1.37. அந்த்யகால ஸ்மரணை

**यावन्न मे निखिल-मर्म-दृढाभिघात-**
**निस्सन्धि-बन्धन-मुदेत्यसवोपतापः ।**
**तावद्विभो भवतु तावक-वक्त्रचन्द्र-**
**चन्द्रातप-द्विगुणिता मम चित्तधारा ॥ १.३७ ॥**

யாவந் ந மே நிகில-மர்ம-த்ருடாபிகாத-
நிஸ்ஸந்தி-பந்தன-முதேத்யஸவோபதாப: ।
தாவத்விபோ பவது தாவக-வக்த்ர-சந்த்ர-
சந்த்ராதப-த்விகுணிதா மம சித்ததாரா ॥ 1.37 ॥

1.37. (மே) எனக்கு (நிகில-மர்ம-) எல்லா உயிர் நிலைகளி லும் (த்ருட-அபிகாத-) திடமான-யமபடர்களின்-அடியினால் (நிஸ்-ஸந்தி பந்தனம்) அவயவங்களின் கட்டுகள் தளரும்படி (அஸவோப தாப:) பிராணன் போகும் வேதனையானது (யாவத் ந உதேதி) எதற்குள் ஏற்படவில்லையோ (தாவத்) அதற்குள் (விபோ) நாயகனே! (மம) என்னுடைய (சித்ததாரா) தியானத்தின் தொடர்ச்சியானது (தாவக) உன்னுடைய (வக்த்ர-சந்த்ர-) முக மாகிற சந்திரனிடத்தி லிருந்து பெருகும் (சந்த்ராதப-) நிலவின் பிரகாசத்தால் (த்விகுணிதா) இருமடங்காக (பவது) ஆகட்டும்.

ஒ. க்ருஷ்ண-த்வதீய பதபங்கஜ-பஞ்ஜராந்தம்
அத்யைவ மே விசது மானஸராஜ-ஹம்ஸ: ।
ப்ராணப்ரயாண-ஸமயே கபவாத-பித்தை:
கண்டாவரோதன-விதௌ ஸ்மரணம் குதஸ்தே ॥
—குலசேகராழ்வார்- முகுந்தமாலை.

ஒ. எய்ப்பென்னை வந்து நலியும் போதங்கேதும்
நானுன்னை நினைக்க மாட்டேன்
அப்போதைக் கிப்போதே சொல்லிவைத்தே
னரங்கத் தரவணைப் பள்ளியானே. —பெரியாழ்வார்.

Koviloor Digital Library


### 1.38. கண்பார்வை யுள்ளவரை கண்ணனைக் காணவேணும்

यावन्न मे नरदशा दशमी दृशोऽपि
रन्ध्रादुदेति तिमिरीकृत-सर्वभावा ।
लावण्य-केलि-भवनं तव तावदेतु
लक्ष्म्याः समुत्क्वणित-वेणु-मुखेन्दु-बिम्बम् ॥ १.३८ ॥

யாவந் ந மே நரதசா தசமீ த்ருசோऽபி
ரந்த்ரா-துதேதி திமிரீக்ருத-ஸர்வபாவா ।
லாவண்ய-கேலிபவனம் தவ தாவதேது
லக்ஷ்ம்யாஃ ஸமுத்க்வணித-வேணு-முகேந்து-பிம்பம் ॥

1.38. (மே) எனக்கு (திமிரீக்ருத-ஸர்வபாவா) எல்லாப் பொருள்களும் இருள்மூடிப்போன (நர-தசா தசமீ) பத்தாவது மானிடதசையானது (யாவத்) எதுவரை (த்ருசஃ அபி ரந்த்ராத்) கண்ணின் துவாரத்தின் வழியாக (ந உதேதி) ஏற்படவில்லையோ (தாவத்) அதுவரை (லாவண்ய-கேலி-பவனம்) அழகு விளையாடும் இடமாயும் (ஸமுத்க்வணித-வேணு-) இனிய வேணுகானம் உதிக்கு மிடமாயும் உள்ள (தவ) உன்னுடைய (முக-இந்து-பிம்பம்) சந்திரன்போன்ற முகம் (லக்ஷ்ம்யா) பூர்ண சோபையுடன் (ஏது) என்முன் தோன்றிக் கொண்டிருக்கட்டும்.

௯. கடைசிக் காலம் கண்கள் இருண்டு
அடியேன் இருளில் ஆழும் போதில்
நட்நாயக நின் நாதம் விளங்கும்
வடிவும் முகமும் முன் வரவேண்டும். —மோகன அமுதம்.

லாவண்யகேலிதஸதனம். பா. பே.

Koviloor Digital Library

## 1.39. குழலின் ஓசையும் சிலம்பொலியும்

आलोल-लोचन-विलोकित-केलिधारा-
नीराजिताग्र-सरणेः करुणाम्बुराशेः ।
आर्द्राणि वेणुनिनदैः प्रतिनादपूरै-
राकर्णयामि मणिनूपुर-शिञ्जितानि ॥ १.३९ ॥

ஆலோல-லோசன-விலோகித-கேலிதாரா-
நீராஜிதாக்ரஸரணேஃ கருணாம்புராசேஃ ।
ஆர்த்ராணி வேணுநிநதைஃ ப்ரதிநாத-பூரை-
ராகர்ணயாமி மணிநூபுர-சிஞ்ஜிதானி ॥ 1.39 ॥

1. 39. (ஆலோல-லோசன-) சஞ்சலமான கண்களின் (விலோகித-கேலி-தாரா) வீச்சின் விலாஸப் பெருக்கால் (நீராஜித-அக்ரஸரணேஃ) வீதிவழியில் நீராஜனம் செய்யப்பெற்றவரும் (கருணாம்புராசேஃ) கருணைக் கடலும் ஆகிய கண்ணனுடைய (வேணுநிநதைஃ) வேணுகானத்துக்கு இயைந்த தாளம்போல் அமைந்த (ஆர்த்ராணி) இனிமையான (மணிநூபுர-ஸிஞ்ஜிதானி) ரத்னப்பரல்களுடன் கூடிய சிலம்பின் ஒலிகளை (ஆகர்ணயாமி) நான் கேட்கிறேன்.

விலோகித-விலோகன ; ஆர்த்ராண-ஆர்த்ராணி. பா. பே.

## 1.40. எப்போது நான் உன்னைக் காண்பேன்?

हे देव हे दयित हे जगदेकबन्धो
हे कृष्ण हे चपल हे करुणैकसिन्धो ।
हे नाथ हे रमण हे नयनाभिराम
हा हा कदा नु भवितासि पदं दृशोर्मे ॥ १.४० ॥

ஹே தேவ ஹே தயித ஹே ஜகதேகபந்தோ
ஹே க்ருஷ்ண ஹே சபல ஹே கருணைகஸிந்தோ ।
ஹே நாத ஹே ரமண ஹே நயனபிராம
ஹா ஹா கதா நு பவிதாஸி பதம் த்ருசோர்-மே ॥ 1.40 ॥

Kovilloor Digital Library

1. 40 (ஹேதேவ) தேவதேவனே! (ஹேதயித) அன்பிற்குரியவனே! (ஹேஜகதேகபந்தோ) உலகனைத்திற்கும் சிறந்த உறவினனே! (க்ருஷ்ண) கிருஷ்ணா! (ஹேசபல) அடியார்களிடம் உருகுபவனே! (ஹே கருணைகஸிந்தோ) கருணைக் கடலே! (ஹேநாத) எங்களை ஆட்கொண்டவனே! (ஹேரமண) எங்களை மகிழ்விப்பவனே! (ஹே நயனாபிராம) கண்ணிற்கினியவனே! (ஹா ஹா) உன்னைக் காணாமல் நான் வருந்துகிறேன். (மே) என்னுடைய (த்ருசோ:) கண்களுக்கு (பதம்) எதிரில் காணும்படியாக (கதா நு) எப்போது தான் (பவிதா அஸி) நீ விளங்கப் போகிறாய்?

## 1.41. கண்ணனைக் காணாத நாளெல்லாம் வீணே

अमून्यधन्यानि दिनान्तराणि
हरे त्वदालोकन-मन्तरेण ।
अनाथबन्धो करुणैकसिन्धो
हा हन्त हा हन्त कथं नयामि ॥ १.४१ ॥

அமூன்யதன்யானி திநாந்தராணி
ஹரே த்வதாலோகன-மந்தரேண ।
அநாதபந்தோ கருணைகஸிந்தோ
ஹா ஹந்த ஹா ஹந்த கதம் நயாமி ॥ 1.41 ॥

1. 41. (அநாத பந்தோ) அநாதைகளின் உறவினனே! (கருணைக-ஸிந்தோ) கருணைக்கடலே! (ஹரே) அடியார்களின் துன்பத்தைத் துடைப்பவனே! (த்வத்-) உன்னுடைய (ஆலோகனம் அந்தரேண) காட்சி இல்லாமல் (அதன்யானி) அமங்களமாய் வீண்போகும் (அமூனி திநாந்தராணி) இந்த இடை நாட்களை (கதம்) எப்படி (நயாமி) நான் கழிப்பேன்? (ஹா ஹந்த) ஐயோ கஷ்டம். (ஹா ஹந்த) ஐயோ கஷ்டம்.

Koviloor Digital Library



## 1.42. வேறு பேச்சை விட்டொழியுங்கள்

किमिव शृणुमः कस्य ब्रूमः कथं कृतमाशया
कथयत कथां धन्या-मन्यामहो हृदयेशयः ।
मधुर-मधुर-स्मेराकारे मनोनयनोत्सवे
कृपणकृपणा कृष्णे तृष्णा चिरं बत लम्बते ॥ १.४२ ॥

கிமிவ ச்ருணுமஃ 'கஸ்ய ப்ரூமஃ கதம் க்ருதமாசயா
கதயத கதாம் தன்யா-மன்யாமஹோஃ ஹ்ருதயேசயஃ ।
மதுர-மதுர-ஸ்மேராகாரே மனோநயனோத்ஸவே
க்ருபணக்ருபணா க்ருஷ்ணே த்ருஷ்ணா சிரம் பத லம்பதே ॥

1. 42. (கிம் இஹ ச்ருணுமஃ) இங்கே நாங்கள் எதைக் கேட்போம்? (கஸ்ய ப்ரூமஃ) யாரிடம் சொல்லிக் கொள்வோம்? (ஆசயா) - கண்ணனைக் கண்ணெதிரில் காணவேண்டுமென்ற - ஆசையால் (கதம் க்ருதம்) என்ன செய்யப்பட்டுவிட்டது என்று. (அஹோ) ஆச்சரியம்! (ஹ்ருதயே சயஃ) இருதயத்தில் அவன் உறங்குகிறான் - (தன்யாம்)—உபயோகமற்ற உலகப் பேச்சைப் பேசாமல்—கிருஷ்ண பக்தியாகிற செல்வத்தை வளர்க்கும் (அன்யாம்) வேறு (கதாம்) கதையை (கதயத) பேசுங்கள். (மதுர-மதுர-) இனிமைக்கும் இனிமையாய் (ஸ்மேர) மலர்ந்த (ஆகாரே) வடிவுடையவனும் (மனோ-நயன-உத்ஸவே) மனத்துக்கும் கண்களுக்கும் களிப்பூட்டுகிறவனும் உள்ள (கிருஷ்ணே) கிருஷ்ணனிடத்தில் (க்ருபண - க்ருபணா) லோபிக்குத் தான் சேமித்த செல்வத்தில் ஏற்பட்டது போன்ற (த்ருஷ்ணா) ஆசை (சிரம்) நெடுங்காலமாக (லம்பதே) என்னைப் பிடித்துக்கொண்டிருக்கிறது.

**கதய கதாம் தன்யாம்**—ஒ. 'தமேவைகம் ஜானத ஆத்மானம் அன்யா வாசோ விமுஞ்சத அம்ருதஸ்யைஷ ஸேதுஃ।' பரமாத்மாவாகிய அந்த ஒருவனையே அறிவீர்களாக. மற்ற வார்த்தைகளை விட்டொழிக. இதுவே மோக்ஷத்திற்குப் பாலம். —முண்டகோபநிஷத். 2.2.5.

தன்யா மன்யாமஹோ ஹ்ருதயேசயம்—பா. பே.

Koviloor Digital Library


## 1.43. இந்த இரு கண்களாலும் காண ஆசை

आभ्यां विलोचनाभ्या-
मम्बुजदल-ललित-लोचनं बालम् ।
द्वाभ्यामपि परिरब्धुं
दूरे मम हन्त दैव-सामग्री ॥ १४३ ॥

ஆப்யாம் விலோசனாப்யா-
மம்புஜதல-லலித-லோசனம் பாலம் ।
த்வாப்யாமபி பரிரப்தும்
தூரே மம ஹந்த தைவ-ஸாமக்ரீ ॥ 1.43 ॥

1. 43. (அம்புஜ - தல - லலித - லோசனம்) தாமரையிதழ் போலழகிய கண்களையுடைய (பாலம்) குழந்தை கிருஷ்ணனை (ஆப்யாம்) இந்த (த்வாப்யாம்) இரண்டு (விலோசனாப்யாம் அபி) கண்களாலும் (பரிரப்தும்) தழுவிக்கொள்வதற்கு (மம) எனக்கு (தைவஸாமக்ரீ) தெய்வபலம் (தூரே) தூரத்திலிருக்கிறது.

## 1.44. இடையருது புன்முறுவல் பூத்த முகம்

अश्रान्त-स्मित-मरुणारुणाधरोष्ठं
हर्षार्द्र-द्विगुण-मनोज्ञ-वेणुगीतम् ।
विभ्राम्य-द्विपुल-विलोचनार्ध-मुग्धं
वीक्षिष्ये तव वदनाम्बुजं कदा नु ॥ १.४४ ॥

அச்ராந்த-ஸ்மித-மருணருணதரோஷ்டம்
ஹர்ஷார்த்ர-த்விகுண-மனோஜ்ஞ-வேணுகீதம் ।
விப்ராம்யத்-விபுல-விலோசனார்த்த-முக்தம்
வீக்ஷிஷ்யே தவ வதனம்புஜம் கதா நு ॥ 1.44 ॥

1. 44. (அச்ராந்த - ஸ்மிதம்) இடையருது புன்முறுவல் பூத்ததும் (அருண - அருண - அதரோஷ்டம்) - மிகச் சிவந்த

Koviloor Digital Library

கீமுதடுடன் கூடியதும் (ஹர்ஷ-ஆர்த்ர-) மகிழ்ச்சியின் கசிவால் (த்விகுண-மனோஜ்ஞ-) இரட்டிப்பான கவர்ச்சியுடைய (வேணு கீதம்) வேணு கானத்துடன் கூடியதும் (விப்ராம்யத்) நாற்புரமும் சுற்றிப் பார்ப்பதும் (விபுல-) பரபரப்புடையதும் (விலோசன-அர்த்த-முக்தம்) பாதி மூடியதுமான கண்களால் அழகு மிக்கது மான (தவ) உன்னுடைய (வதன-அம்புஜம்) தாமரை போன்ற முகத்தை (கதா நு) எப்போது தான் (வீக்ஷிஷ்யே) நான் பார்க்கப் போகிறேன் ?

## 1.45 கண்ணன் எந்தக் காலத்தில் என்னைப் பார்க்கப் போகிருன் ?

लीलायताभ्यां रसशीतलाभ्यां
नीलारुणाभ्यां नयनाम्बुजाभ्याम् ।
आलोकये-दद्भुत-विभ्रमाभ्यां
बालः कदा कारुणिकः किशोरः ॥ १४५ ॥

லீலாயதாப்யாம் ரஸ-சீதலாப்யாம்
நீலாருணாப்யாம் நயனம்புஜாப்யாம் ।
ஆலோகயே-தத்புத-விப்ரமாப்யாம்
பாலஃ கதா காருணிகஃ கிசோரஃ ॥ 1.45 ॥

1. 45. (லீலா-ஆயதாப்யாம்) விளையாட்டால் பரந்தும் (ரஸ-சீதலாப்யாம்) கருணாரஸத்தால் குளிர்ந்தும் (நீல-அருணாப்யாம்) கறுத்தும் சிவந்தும் (அத்புதவிப்ரமாப்யாம்) அற்புதமான ஓட்டம் உடையதாயும் விளங்கும் (நயன-அம்புஜாப்யாம்) கமலக் கண்களால் (காருணிகஃ) கருணாமூர்த்தியான (கிசோரஃ) விளையாட்டுப் பிள்ளை கிருஷ்ணன் (கதா காலே) எந்தக் காலத்தில் (ஆலோகயேத்) என்னைக் கண்ணெடுத்துப் பார்க்கப் போகிருனே ?

Koviloor Digital Library

### 1.46. கிருஷ்ணனை என் கண் தேடுகிறது

बहुल-चिकुरभारं बद्धपिञ्छावतंसं
चपल-चपल-नेत्रं चारु-बिम्बाधरोष्ठम् ।
मधुर-मृदुल-हासं मन्थरोदार-लीलं
मृगयति नयनं मे मुग्धवेषं मुरारेः ॥ १.४६ ॥

பஹுல-சிகுரபாரம் பத்த-பிஞ்சாவதம்ஸம்
சபல-சபல-நேத்ரம் சாரு-பிம்பாதரோஷ்டம் ।
மதுர-ம்ருதுல-ஹாஸம் மந்தரோதார-லீலம்
ம்ருகயதி நயனம் மே முக்தவேஷம் முராரே: ॥ 1.46॥

1. 46. (பஹுல-சிகுர-பாரம்) நெருங்கிய மயிர்முடியுடையவனும் (பத்த-பிஞ்சாவதம்ஸம்) மயிலிறகை ஆபரணமாயணிந்தவனும் (சபல-சபல-நேத்ரம்) பரபரப்பான கண்களையுடையவனும் (சாரு-பிம்ப-அதரோஷ்டம்) கோவைப்பழம் போன்று அழகிய கீழுதட்டையுடையவனும் (மதுர-ம்ருதுல-ஹாஸம்) இனிமையான புன்முறுவலையுடையவனும் (மந்தர-உதார-லீலம்) ஆசைகளையெல்லாம் பூர்த்திசெய்யும் சிறந்த லீலைகளை உடையவனும் ஆகிய (முராரே:) கிருஷ்ணனுடைய (முக்த வேஷம்) மனதிற்கினிய திருமுகத்தை (மே) என்னுடைய (நயனம்) கண் (ம்ருகயதி) தேடுகிறது.

### 1.47. மேகவண்ணனைத் தேடுகிறோம்

बहुल जलद-च्छाया-चोरं विलासभरालसं
मदशिखि-शिखा-लीलोत्तंसं मनोज्ञ-मुखाम्बुजम् ।
कमपि कमलापाङ्गोदग्र-प्रपन्न-जगज्जितं
मधुरिमपरीपाकोद्रेकं वयं मृगयामहे ॥ १.४७ ॥

Koviloor Digital Library



பஹுல-ஜலதச்சாயா-சோரம் விலாஸபராலஸம்
மதசிகி-சிகா-லீலோத்தமஸம் மனோஜ்ஞ-முகாம்புஜம் ।
கமபி கமலாபாங்கோதக்ர-ப்ரபன்ன-ஜகஜ்ஜிதம்
மதுரிமபரீபாகோத்ரேகம் வயம் ம்ருகயாமஹே ॥1.47॥

1. 47. (பஹுல-ஜலத-ச்சாயா) நெருங்கிய மேகத்தின் வண்ணத்தை (சோரம்) அபகரித்துக் கொண்டவனும் (விலாஸ-பர-) ஆனந்தத்தின் மிகுதியால் (அலஸம்) அசைவற்றிருப்பவனும் (மத-சிகி-சிகா) கொழுத்த மயிலின் இறகை (லீலா-உத்தம்ஸம்) விளையாட்டாகச் சிரசிலணிந்தவனும் (மனோஜ்ஞ-) மனதிற்கினிய (முகாம்புஜம்) தாமரை போன்ற முகத்தை உடையவனும் (கமலா-அபாங்க-) ஸ்ரீ தேவியின் கடைக்கண் பார்வையால் (உதக்ர) மேன்மை பெற்ற (ப்ரபன்ன-ஜகத் ஜிதம்) அடியார்களின் குழுவால் ஜயிக்கப்பட்டவனும் (மதுரிம-பரீபாக-உத்ரேகம்) இனிமையின் பரிபக்குவம் சிறப்புற்று விளங்குமிடமும் ஆகிய (கம் அபி) யாரோ ஒருவனை (வயம்) நாங்கள் (ம்ருகயாமஹே) தேடுகிறோம்.

கமபி கருணா பாங்கோதக்ர-ப்ரஸன்ன-ஜகஜ்ஜடம் ।

—பா. பே

## 1.48. ஆராய்ச்சிக்கு எட்டாதவன், அன்புக்கு எட்டுபவன்

परामृश्यं दूरे परिषदि मुनीनां व्रजवधू-
दृशां दृश्यं शश्वत्त्रिभुवन-मनोहारि-वपुषम् ।
अनामृश्यं वाचामनिद-मुदयानामपि कदा
दरीदृश्ये देव दरदलित-नीलोत्पल-निभम् ॥१.४८॥

பராம்ருச்யம் தூரே பரிஷதி முனீனாம் வ்ரஜவதூ
த்ருசாம் த்ருச்யம் சச்வத்-த்ரிபுவன-மனோஹாரி-வபுஷம் ।
அனாம்ருச்யம் வாசாமனித-முதயானாமபி கதா
தரீத்ருச்யே தேவம் தரதலித-நீலோத்பல-நிபம் ॥ 1.48 ॥

Koviloor Digital Library


1. 48. (முனீனாம்) முனிவர்களுடைய (பரிஷதி) குழாங்களில் (பராம்ருச்யம்) ஆராயப்படுபவனுயினும் (தூரே) ஆராய்ச்சிக்கு எட்டாதவனுயினும், (வ்ரஜவதூ-த்ருசாம்) இடைப் பெண்களின் கண்களுக்கு (சச்வத்) அடிக்கடி (த்ருச்யம்) காணப்படுபவனுயும் (த்ரிபுவன-மனோஹாரி-) முவ்வுலகத்தாருடைய மனதையும் கவர்பவனுயும் (அனிதம் உதயானும் வாசாம் அபி) ஒரு காலத்தையோ தேசத்தையோ புருஷனையோ தான் உதிப்பதற்குக் காரணமாய்க் கொள்ளாத அனுதியான வேத வாக்குங்கூட (அனும்ருச்யம்) இவ்விதமென்று நிருபிக்கவொண்ணுதவனுயும் (தர-தலித-) சிறிது மலர்ந்த (நீலோத்பலநிபம்) நீலோத்பலத்தைப் போன்ற காந்தியுடையவனுயும் உள்ள (தேவம்) கிருஷ்ணனுகிய தெய்வத்தை (கதா) எப்போது (தரீத்ருச்யே) நான் கண்டு சேவிக்கப்போகிறேன்?

ஒ. நாஹம் வேதைர் ந தபஸா ந தானேன நசேஜ்யயா |
சக்ய ஏவம் விதோ த்ரஷ்டும் த்ருஷ்டவானஸி மாம் யதா ||

பக்த்யா த்வனன்யயா சக்ய அஹமேவம் விதோऽர்ஜுன |
ஜ்ஞாதும் த்ரஷ்டுஞ்ச தத்வேன ப்ரவேஷ்டுஞ்ச பரந்தப ||

நான் வேதங்களாலும் தவத்தாலும் தானத்தாலும் வேள்வியாலும் காணக்கூடியவனல்லன். வேறு நாட்டமில்லாத பக்தியாலேயே நான் உண்மையில் அறிவதற்கும் காண்பதற்கும் அளவளாவிக் கூடுவதற்கும் உரியவன்.

## 1.49. கண்ணிற்கினிய கண்ணனை எப்போது காண்பேன்?

लीलाननाम्बुज-मधीर-मुदीक्षमाणं
नर्माणि वेणु-विवरेषु निवेशयन्तम् ।
डोलायमान-नयनं नयनाभिरामं
देवं कदा नु दयितं व्यतिलोकयिष्ये ॥ १-४९ ॥

Koviloor Digital Library



லீலானனும்புஜ-மதீர-முதீக்ஷமாணம்
நர்மாணி வேணு-விவரேஷு நிவேசயந்தம் ।
டோலாயமான-நயனம் நயனாபிராமம்
தேவம் கதா நு தயிதம் வ்யதிலோகயிஷ்யே ॥1.49॥

1. 49. (லீலானனும்புஜம்) லக்ஷ்மீதேவி கையில் விளையாட்டாக வைத்துக் கொண்டிருக்கும் சிறந்த தாமரையைப் போன்ற முகத்தை உடையவனும் (அதீரம்-உதீக்ஷமாணம்) சுற்று முற்றும் பார்ப்பவனும் (வேணு-விவரேஷு) புல்லாங்குழலின் துவாரங்களில் (நர்மாணி) ரகசியமான பாவனைகளை (நிவேசயந்தம்) வைத்து ஊதுபவனும் (டோலாயமான-நயனம்) ஊசலாடுவது போன்ற பார்வையையுடையவனும் (நயன-அபிராமம்) கண்ணிற்கினியவனும் (தயிதம்) எனக்குப் பிரியனுமான (தேவம்) தேவனை (கதா நு) எப்போது (வ்யதிலோகயிஷ்யே) நான் காணப் போகிறேன்.

**ரகசியமான பாவனைகளை வைத்துக் குழலூதுபவன் —**

ஒ. ஓங்காரார்த்த-முதீரயன் விஜயதே வம்சீ நிநாத: சிசோ:॥
கருஷ்ண கர்ணாம்ருதம். 2.109

லோலாயமான நயனம் । வந்தே கதா நு தயிதம் । —பா. பே.

## 1.50. உள்ளத்தில் எழுதிய சித்திரம் போன்ற உருவம்

लग्नं मुहु-र्मनसि लम्पट-संप्रदायि-
लेखा-विलेखन-रसज्ञ-मनोज्ञवेषम् ।
लज्जन्मृदुस्मित-मधु-स्नपिताधरांशु-
राकेन्दु-लालित-मुखेन्दु-मुकुन्द-बाल्यम् ॥ १.५० ॥

லக்னம் முஹுர்-மனஸி லம்பட-ஸம்ப்ரதாயி-
லேகா-விலேகன-ரஸஜ்ஞ-மனோஜ்ஞவேஷம் ।
லஜ்ஜன்ம்ருதுஸ்மித-மது-ஸ்நபிதாதராம்சு-
ராகேந்து-லாலித-முகேந்து-முகுந்த-பால்யம் ॥ 1.50 ॥

Koviloor Digital Library


1.50. (லம்பட-ஸம்ப்ரதாய-ரேகா- அவலேகன) ஆசையுடன் முறைப்படி சித்திர ரேகைகளால் எழுதப்பட்டது போன்ற (ரஸஜ்ஞ-மனோஜ்ஞ-வேஷம்) ரஸிகர்களின் மனதிற்கினிய வடிவமுடையவனும், (லஜ்ஜன்-ம்ருதுஸ்மித-) வெட்கத்துடன் கூடிய அழகிய சிரிப்பெனும் (மது-ஸ்னபித-அதர-அம்சு) தேனால் நனைக்கப்பெற்ற கீழுதட்டின் காந்தியால் பிரகாசிப்பதும் (ராகா-இந்து-லாலித) பூர்ண சந்திரனால் கொண்டாடத் தக்க (முக-இந்து-முகுந்த-பால்யம்) சந்திர வதனத்தையுடையதுமான முகுந்தனுடைய இளம் பருவம் (மனஸி) என் மனதில் (முஹு:) அடிக்கடி (லக்னம்) தோன்றுகிறது.

### 1.51 அவனழகில் லயிக்கும் மனம்

अहिमकर-करनिकर-मृदु-मृदित-लक्ष्मी-
सरसतर-सरसिरुह-सदृशदृशि देवे ।
व्रजयुवति-रतिकलह-विजयि-निजलीला-
मदमुदित-वदन-शशि-मधुरिमणि लीये ॥ १.५१ ॥

அஹிமகர-கரநிகர-ம்ருது-ம்ருதித-லக்ஷ்மீ-
ஸரஸதர-ஸரஸிருஹ-ஸத்ருசத்ருசி தேவே
வ்ரஜயுவதி-ரதிகலஹ-விஜயி-நிஜலீலா
மதமுதித வதன-சசி-மதுரிமணி லீயே ॥ 1.51 ॥

1.51. (அஹிமகர-) பனியைப் போக்கும் சூரியனுடைய (கர-நிகர-) கிரணங்களின் கூட்டத்தால் (ம்ருது ம்ருதித-) மெதுவாகத் தொடப்பட்ட (லக்ஷ்மீ) அழகுடன் கூடிய (ஸரஸதர) மிக மகிழ்ச்சி தரும் (ஸரஸிருஹ-) தாமரைப் பூவுக்கு (ஸத்ருச) ஸமமான (த்ருசி) கண்களையுடையவனும் (வ்ரஜ்யுவதி-) இடைப் பெண்களுடன் (ரதிகலஹ-) விளையாட்டுச் சண்டையில் (விஜயி) ஜயித்த (நிஜலீலா) தனது லீலையால் (மதமுதித) கர்வித்து மகிழும் (வதன-சசி-) சந்திரன் போன்ற முகத்தையுடைமையால்

Koviloor Digital Library



(மதுரிமணி) இனிமை நிறைந்த (தேவே) தெய்வமாகிய கிருஷ்ண னிடத்தில் (லீயே) நான் லயிக்கின்றேன்.

## 1.52. ஆனந்தம் பொங்கும் வடிவில் லயிக்கும் மனம்

करकमल-दलदलित-ललिततर-वंशी
कलनिनद-गलदमृत-घनसरसि देवे ।
सहज-रस-भर-भरित-दरहसित-वीथी-
सततवह-दधरमणि-मधुरिमणि लीये ॥ १.५२ ॥

கரகமல-தலதலித-லலிததர-வம்சீ
கலநிநத-கலதம்ருத-கனஸரஸி தேவே ।
ஸஹஜரஸ-பரபரித-தரஹஸித-வீதீ
ஸததவஹ-தத்ரமணி-மதுரிமணி லீயே ॥ 1.52 ॥

1. 52. (கர கமல-) கையாகிற தாமரைப் பூவின் (தலதலித) இதழ் போன்ற விரல்களால் மூடித் திறக்கப்பட்ட (லலிததர-) மிக அழகான (வம்சீ) குழலினுடைய (கலநிநத) இனிமையான ஒலி வடிவில் (கலதம்ருத ) பெருகும் அமுதம் (கன ஸரஸி) நிறைந்த தடாகம் போன்றவனும், (ஸஹஜ-ரஸபர பரித) இயற்கையான ஆனந்த ரஸத்தால் பூர்ணமான (தரஹஸித-) புன்முறுவலின் (வீதி) தொடர்ச்சியை (ஸதத-வஹத்) எப்போதும் தாங்கும் (அதர மணி) ரத்னம் போன்ற கீழுதட்டையுடையவனும் (மதுரி-மணி தேவே) இனிமை நிறைந்த தெய்வமுமாகிய கிருஷ்ண னிடத்தில் (லீயே) நான் லயிக்கின்றேன்.

கரகமல-தரதலித | —பா. பே.

## 1.53. கோபியர்களை மயக்கும் வடிவில் லயிக்கும் மனம்

कुसुमशर-शरसमर-कुपित-मदगोपी-
कुचकलश-घुसृणरस-लसदुरसि देवे ।
मदलुलित-मृदुहसित-मुषितशशि-शोभा-
मुहुरधिक-मुखकमल-मधुरिमणि लीये ॥ १.५३ ॥

Koviloor Digital Library

குஸுமசர-சரஸமர-குபிதமத-கோபீ
குசகலச-குஸ்ருணரஸ-லஸதுரஸி தேவே ।
மதலுலித-ம்ருதுஹஸித-முஷிதசசி-சோபா-
முஹுரதிக-முககமல-மதுரிமணி லீயே ॥ 1.53 ॥

1. 53. (குஸுமசர-) மன்மதனுடைய (சர-ஸமர-) புஷ்ப பாணச் சண்டையில்-காமலீலையில்-(குபித-மத கோபீ) கோபமும் மதமும் கொண்ட கோபியர்களின் (குசகலச-குஸ்ருண-ரஸ) நகில்களில் பூசப் பெற்ற குங்குமக் குழம்பு (லஸத் உரஸி) படிந்த மார்புடையவனும்,(மதலுலித)கர்வத்தினலெழுந்த (ம்ருதுஹஸித-) புன்சிரிப்பினல் (முஷித-சசி-சோபா) சந்திரனுடைய காந்தியைத் தோற்கடிப்பவனும் (முஹுரதிக-) மேன்மேலும் (முக கமல) தாமரை முகத்தின் அழகால் (மதுரிமணி தேவே) இனிமையைப் பெருக்குபவனும் ஆன தெய்வமாகிய கிருஷ்ணனிடத்தில் (லீயே) நான் லயிக்கின்றேன்.

## 1.54 திருமேனியழகு

आनम्रा-मसितभ्रुवो-रुपचिता-मक्षीण-पक्ष्माङ्कुरे-
ष्वालोला-मनुरागिणो-र्नयनयो-रार्द्रां मृदौ जल्पिते ।
आताम्रा-मधरामृते मदकला-मम्लान-वंशीरवे-
ष्वाशास्ते मम लोचनं व्रजशिशो-र्मूर्तिं जगन्मोहिनीम् ॥

ஆநம்ரா-மஸிதப்ருவோ-ருபசிதா-
மக்ஷீண-பக்ஷ்மாங்குரேஷ்
வாலோலா-மனுராகிணோர்-நயனயோ-
ரார்த்ராம் ம்ருதௌ ஜல்பிதே ।
ஆதாம்ரா-மதராம்ருதே மதகலா-
மம்லான-வம்சீரவேஷ்-
வாசாஸ்தே மம லோசனம் வ்ரஜசிசோர்-
மூர்த்திம் ஜகன்மோஹினீம் ॥ 1-54 ॥

Koviloor Digital Library

1. 54. (அஸித-ப்ருவோ:) கறுத்த புருவங்களில் (ஆநம்ராம்) வளைவுடன் கூடியதும் (அக்ஷீண-பக்ஷ்மாங்குரேஷு) அடர்ந்த இமை மயிர்களின் முளைகளில் (உபசிதாம்) பருத்ததும் (அனுராகிணோ: நயனயோ:) கருணை ததும்புங் கண்களில் (ஆலோலாம்) சலனமுடையதும் (ம்ருதுள ஜல்பிதே) மெல்லிய பேச்சில் (ஆர்த்ராம்) கசிவுள்ளதும் (அதர-அம்ருதே) அமுதம் பெருகும் உதட்டில் (ஆதாம்ராம்) சிவந்ததும் (அம்லான-வம்சீரவேஷு) இனிய குழலோசைகளில் (மதநலாம்) மதமுடையதும் ஆன (வ்ரஜசிசோ:) ஆய்ப்பாடிக் குழந்தையின் (ஜகன் மோஹினீம் மூர்த்திம்) உலகை மயக்கும் திருமேனியை (மம லோசனம்) எனது கண் (ஆசாஸ்தே) காண ஆசைப்படுகின்றது.

ஒ. நீலப் பருவக் கொடியில் வளைவு, நெடுநேர் இமையில் முடியாநிறைவு
சீலக் கருணை விழியில் அசைவு, சிதையா வசனவளியில் குழைவு
கோலக் குமுத இதழில் கனிவு, குழலார் சுதியில் இசையாரமுது
ஏலக் குழலான் இனிதாம வடிவான், பாலன் உருவை நாடும் நயனம்.

—மோகன அமுதம்.

## 1.55. பிற தெய்வங்களிடத்தில் இல்லாத அழகு

तत्कैशोरं तच्च वक्त्रारविन्दं
तत्कारुण्यं ते च लीलाकटाक्षाः।
तत्सौन्दर्यं सा च मन्दस्मितश्रीः
सत्यं सत्यं दुर्लभं दैवतेषु ॥ १.५५ ॥

தத்கைசோரம் தச்ச வக்த்ராரவிந்தம்
தத்காருண்யம் தே ச லீலா-கடாக்ஷாः।
தத்ஸௌந்தர்யம் ஸா ச மந்தஸ்மிதஸ்ரீः
ஸத்யம் ஸத்யம் துர்லபம் தைவதேஷு॥ 1-55 ॥

Koviloor Digital Library


1. 55. (தத் கைசோரம்) ஸ்ரீகிருஷ்ணனுடைய அந்த இளமையும் (தத் ச வக்த்ராரவிந்தம்) அந்தத் தாமரை போன்ற முகமும் (தத் காருண்யம்) அந்தக் கருணையும் (தே ச லீலா கடாக்ஷா:) அவ்விளையாட்டுக் கடைக் கண் பார்வைகளும் (தத் ஸௌந்தர்யம்) அந்த அழகும் (ஸா ச மந்தஸ்மித ஸ்ரீ:) அந்தப் புன்சிரிப்பினுடைய சோபையும் (தைவதேஷு) பிற தெய்வங்களிடத்தில் (துர்லபம்) காண்பதரிது; (ஸத்யம் ஸத்யம்) இது மெய்; இதில் சந்தேகம் இல்லை.

### 1.56. செல்லுமிடமெங்கும் அவ்வழகு

विश्वोपप्लव-शमनैक-बद्ध-दीक्षं
विश्वास-स्तवकित-चेतसां जनानाम् ।
पश्यामः प्रतिनवकान्ति-कन्दलार्द्रं
पश्यामः पथि पथि शैशवं मुरारेः ॥ १.५६ ॥

விச்வோபப்லவ-சமனைக-பத்த-தீக்ஷம்
விச்வாஸ-ஸ்தபகித-சேதஸாம் ஜனானாம் ।
பச்யாம: ப்ரதிநவகாந்தி-கந்தலார்த்ரம்
பச்யாம: பதி பதி சைசவம் முராரே: ॥ 1.56 ॥

1. 56. (விச்வ-உபப்லவ-) எல்லா உபத்ரவங்களையும் அறவே போக்குவதற்கு (ஏக பத்த தீக்ஷம்) திடமான ஒரு ஸங்கல்பத்தை உடையதாகவும் (விச்வாஸ-) மெய்யன்பினால் (ஸ்தபகித-சேதஸாம்) அரும்பி மலர்ந்திருக்கும் மனதையுடைய (ஜனானாம்) மக்களுக்கு (ப்ரதி நவ-காந்தி-) ஒவ்வொரு கணமும் புதிய காந்தியின் (கந்தல-ஆர்த்ரம்) எழுச்சியினால் உள்ளத்தைத் திரவிக்கச் செய்வதாகவும் (முராரே:) முராரியினுடைய (சைசவம்) இளமையழகை (பச்யாம:) காண்கிறோம். (பதி பதி) செல்லுமிடமெங்கும் (பச்யாம:) அவ்வழகையே காண்கிறோம்.

Koviloor Digital Library


## 1.57. மதுரை வீதியில் செல்லும் அழகன்

**मौलिश्चन्द्रक-भूषणा मरकत-स्तम्भाभिरामं वपु-**
**र्वक्त्रं चित्रविमुग्ध-हासमधुरं बाले विलोले दृशौ ।**
**वाचश्शैशव-शीतला-मदगज-श्लाघ्या विलासस्थिति-**
**र्मन्दं मन्दमये! क एष मथुरावीथीमितो गाहते ॥ १.५७॥**

மௌலிச்-சந்த்ரக-பூஷணா
மரகத-ஸ்தம்பாபிராமம் வபுர்-
வக்த்ரம் சித்ரவிமுக்த-ஹாஸமதுரம்
பாலே விலோலே த்ருசௌ ।
வாசஃ சைசவ-சீதலா மதகஜ-
ச்லாக்யா விலாஸஸ்திதிர்-
மந்தம் மந்தமயே ! க ஏஷ
மதுராவீதீமிதோ காஹதே ॥ 1-57 ॥

1. 57. (அயே பாலே) ஏ பெண்ணே ! (மௌலிஃ)-இவனுடைய-தலை (சந்த்ரக-பூஷணா) மயில் கண்ணால் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது; (வபுஃ) உடல் (மரகத-ஸ்தம்ப-அபி ராமம்) மரகதத் தூண்போல் அழகாயிருக்கிறது; (வக்த்ரம்) முகம் (சித்ர-விமுக்த-ஹாஸ-மதுரம்) ஆச்சரியமான ஆனந்தப் புன்சிரிப்பால் இனிமையாயிருக்கிறது; (த்ருசௌ) கண்கள் (விலோலே) வட்டமிட்டுக் கொண்டிருக்கின்றன; (வாசஃ) சொற்கள் (சைசவ-சீதலாஃ) இளமையின் குளிர்ச்சியுடையவையாயிருக்கின்றன, (விலாஸ-ஸ்திதிஃ) நடையின் நிலை (மதகஜ-ச்லாக்யா) மதங்கொண்ட யானையினுடையது போல் போற்றத்தக்கதாய் உளது; (மந்தம் மந்தம்) மெள்ள மெள்ள (இதஃ) இங்கிருந்து (மதுராவீதிம்) மதுரையின் வீதியில் (காஹதே) நுழைகிறானே (ஏஷஃ) இவன் (கஃ) யார் ?

Koviloor Digital Library


## 1.58. இந்த ஒளிப் பிழம்பு கிருஷ்ணன் தானு ?

**पादौ पादविनिर्जिताम्बुजवनौ पद्मालयालङ्कृतौ**
**पाणी वेणुविनोदन-प्रणयिनौ पर्याप्त-शिल्पश्रियौ ।**
**बाहूदोहदभाजनं मृगदृशां माधुर्यधारा गिरो**
**वक्त्रं वाग्विभवातिलङ्घित-महो बालं किमेतन्महः ॥**

பாதௌ பாத-விநிர்ஜிதாம்புஜவநௌ
பத்மாலயாலங்க்ருதௌ
பாணீ வேணுவிநோதன-ப்ரணயிநௌ
பர்யாப்த-சில்பச்ரியௌ ।
பாஹூ தோஹதபாஜனம் ம்ருக-
த்ருசாம் மாதுர்யதாரா கிரோ
வக்த்ரம் வாக்விபவாதிலங்கித-
மஹோ பாலம் கிமேதன்மஹ: ॥ 1.58 ॥

1. 58. (பாத-) ஓம்சத்திஞல் (விநிர்ஜித-அம்புஜ-வநௌ) தாமரைக் கூட்டத்தை வெல்பவைகளான (பாதௌ) பாதங்கள் (பத்மாலயா) லக்ஷ்மிதேவியால் (அலங்க்ருதௌ) அலங்கரிக்கப் பட்டிருக்கின்றன; (வேணு விநோதன-) வேணுகானத்தில் (ப்ரண யிநௌ) பிரியமுள்ள (பாணீ) கைகள் (பர்யாப்த-சில்பச்ரியௌ) சிறந்த நாட்டிய முத்திரைகளைச் சித்தரித்துக் காட்டுவது போலிருக் கின்றன; (பாஹூ) புஜங்கள் (ம்ருகத்ருசாம்) மான் விழி படைத்த பெண்களுக்கு (தோஹத-பாஜனம்) காமபோகத்தை யளிப்பவையாயிருக்கின்றன; (கிர:) சொற்கள் (மாதுர்யதாரா:) இனிமையைப் பெருக்குபவையாயிருக்கின்றன; (வக்த்ரம்) முகம் (வாக்-விபவ-அதிலங்கிதம்) சொல்லின் திறத்தை மீறியிருக்கிறது; (அஹோ) ஆச்சரியம்! (எதத் மஹ:) இந்த ஒளிப்பிழம்பு (பாலம் கிம்) குழந்தையாகிய கிருஷ்ணன் தானு ?

Koviloor Digital Library



## 1.59. அதியத்புதமான பேரொளி வடிவு

बर्हं नाम विभूषणं बहुमतं वेषाय शेषैरलं
वक्त्रं द्वित्रिविशेष-कान्तिलहरी-विन्यास-धन्याधरम् ।
शीलै-रल्पधिया-मगम्यविभवैः शृङ्गारभङ्गीमयं
चित्रं चित्रमहो विचित्रितमहो चित्रं विचित्रं महः ॥

பர்ஹம் நாம விபூஷணம் பஹு³மதம்
வேஷாய சேஷைரலம்
வக்த்ரம் த்வித்ருவிசேஷ-காந்திலஹரீ-
விந்யாஸ-தன்யாதரம் ।
சீலை-ரல்பதியா-மகம்யவிபவைः
ச்ருங்காரபங்கீமயம்
சித்ரம் சித்ரமஹோ விசித்ரிதமஹோ
சித்ரம் விசித்ரம் மஹः ॥ 1.59 ॥

1. 59. (பர்ஹம் நாம விபூஷணம்) மயிலிறகென்ற பிரசித்தமான ஆபரணமே (பஹு³மதம்) அவனுக்குவப்பானது; (வேஷாய) அலங்காரத்திற்கு (சேஷைः) மற்ற ஆபரணங்களினல் (அலம்) ஆகவேண்டியதொன்றுமில்லை; (சித்ரம்) இது ஆச்சரியம். (வக்த்ரம்) முகம் (த்வி-த்ரி-விசேஷ-காந்தி-லஹரீ) இரண்டு மூன்று திலகங்களினுலுண்டான காந்தியின் வெள்ளத்திற்கு (விந்யாஸ-) இருப்பிடமாயும் (தன்ய-அதரம்) அழகிய உதட்டை உடையதாயுமிருக்கிறது; (சித்ரம் அஹோ) இதுவும் வெகு ஆச்சரியம். (அல்பதியாம்) அல்ப புத்தியுடையவர்களால் (அகம்ய-விபவைः) அடையமுடியாத மகிமையுடைய (சீலைः) குணங்களால் (ச்ருங்கார-பங்கீமயம்) சிருங்கார ரஸமே உருக்கொண்டாற் போன்றது அவனுருவம்; (விசித்ரிதம் அஹோ) இதுவும் ஆச்சரியம். (சித்ரம்) இப்படி பலவகைப்பட்ட (மஹः) பேரொளி வடிவு (விசித்ரம்) அத்யத்புதமாய் விளங்குகிறது.

Koyiloor Digital Library

### 1.60. எங்கும் நிறைந்திருப்பன், எட்டியும் எட்டாதிருப்பன்

अग्रे समग्रयति कामपि केलिलक्ष्मी-
मन्यासु दिक्ष्वपि विलोचनमेव साक्षी ।
हा हन्त हस्त-पथ-दूरमहो किमेत-
दासीत् किशोरमय-मम्ब जगत्त्रयं मे ॥ १.६० ॥

அக்ரே ஸமக்ரயதி காமபி கேலிலக்ஷ்மீ-
மன்யாஸு திக்ஷ்வபி விலோசனமேவ ஸாக்ஷீ ।
ஹா ஹந்த ஹஸ்த-பத-தூரமஹோ கிமேத-
தாஸீத் கிசோரமய-மம்ப ஜகத்த்ரயம் மே ॥ 1.60 ॥

1. 60. (அஹோ) ஆச்சரியம் (கிம் ஏதத்) இது என்ன? (காம் அபி கேலி-லக்ஷ்மீம்) வர்ணிக்க முடியாத ஒரு விளையாட்டழகை (அக்ரே) என் முன்பே (ஸமக்ரயதி) பரிபூர்ணமாகத் தோற்றுவிக்கிறது; (அன்யாஸு திக்ஷு அபி) மற்றுமுள்ள திக்குகளிலும்-அவ்வழகு நிறைந்துளது, (விலோசனம் ஏவ ஸாக்ஷீ) என் கண்ணே அதற்குச் சாக்ஷி. (அம்ப) அம்மா! (மே) எனக்கு (ஜகத் த்ரயம்) மூவுலகும் (கிசோரமயம் ஆஸீத்) குழந்தை கிருஷ்ண மயமாகவே ஆகிவிட்டது. (ஹஸ்தபத தூரம்) ஆனால் கை வழிக்கு எட்டாமலிருக்கிறது. (ஹா ஹந்த) என்ன கஷ்டம்.

### 1.61 கண்ணன் அழகைக் கண்டனுபவிப்பது எப்பொழுது?

चिकुरं बहुलं विरलं भ्रमरं
मृदुलं वचनं विपुलं नयनम् ।
अधरं मधुरं वदनं ललितं
चपलं चरितं च कदाऽनुभवे ॥ १.६१ ॥

Koviloor Digital Library



சிகுரம் பஹுலம் விரலம் ப்ரமரம்
ம்ருதுலம் வசனம் விபுலம் நயனம் ।
அதரம் மதுரம் வதனம் லலிதம்
சபலம் சரிதந்து கதா஽நுபவே ॥ 1.61 ॥

1. 61. கண்ணனுடைய - (பஹுலம்) நெருங்கிய (சிகுரம்) குழற்கற்றையையும் (விரலம்) பரந்த (ப்ரமரம்) நெற்றியையும் (ம்ருதுலம்) மெதுவான (வசனம்) வார்த்தையையும் (விபுலம்) அகன்ற (நயனம்) கண்ணையும் (மதுரம்) இனிமையான (அதரம்) கீழுதட்டையும் (லலிதம்) அழகான (வதனம்) முகத்தையும் (சபலம்) சஞ்சலமான (சரிதம்) நடத்தையையும் (கதா) எப்போது (அனுபவே) அனுபவிக்கப் போகிறேன்?

## 1·62. என் முறையீடு அவன் செவியில் புகுமா?

परिपालय नः कृपालयेत्यसकृज्जल्पित-मात्मबान्धवः ।
मुरलीमृदुल-स्वनान्तरे विभुराकर्णयिता कदा नु नः ॥१.६२॥

பரிபாலய நஃ க்ருபாலயேத்-
யஸக்ருஜ்-ஜல்பித-மாத்மபாந்தவஃ ।
முரலீம்ருதுல-ஸ்வநாந்தரே விபு-
ராகர்ணயிதா கதா நு நஃ ॥ 1.62 ॥

1. 62. (க்ருபா-ஆலய) கருணைக் குறைவிடமே! (நஃ) எங்களை (பரிபாலய) காப்பாற்றியருள்வாயாக (இதி) என்று (அஸக்ருத்) பலமுறை (ஜல்பிதம்) என்னால் சொல்லப்பட்டதை (ஆத்ம பாந்தவஃ) என் உயிர்த்துணைவனான (விபுஃ) ஸ்ரீ கிருஷ்ணன் (முரலீ-ம்ருதுல-ஸ்வந-அந்தரே) வேணுவின் இனிய கானத்தின் இடையில் (கதா நு) எப்போது (ஆகர்ணயிதா) கேட்பவனாவானோ?

ஆகர்ணயதாம். —பா. பே.

Koviloor Digital Library


### 1.63. கண்ணன் நம்மை எப்போது கடாக்ஷிப்பானோ?

कदा नु कस्यां नु विपद्दशायां
कैशोरगन्धिः करुणाम्बुधिर्नः।
विलोचनाभ्यां विपुलायताभ्यां
व्यालोकयिष्यन् विषयीकरोति ॥ १.६३ ॥

கதா நு கஸ்யாம் நு விபத்தசாயாம்
கைசோரகந்தி: கருணாம்புதிர் ந:।
விலோசனாப்யாம் விபுலாயதாப்யாம்
வ்யாலோகயிஷ்யன் விஷயீகரோதி ॥ 1.63 ॥

1. 63. (கைசோரகந்தி:) இளமை மணக்கும் (கருணாம்புதி:) கருணைக் கடலான கண்ணன் (கஸ்யாம்) எந்த (விபத்தசாயாம்) ஆபத்து நிலையில் (ந:) நம்மை (விபுல-ஆயதாப்யாம்) பரந்தும் நீண்டுமுள்ள (விலோசனாப்யாம்) கண்களால் (வ்யாலோகயிஷ்யன்) கடாக்ஷித்துக் கொண்டு (கதா நு) எப்போது (விஷயீகரோதி) அங்கீகரிப்பானோ?

### 1:64. கண்ணனை நேரில் காண்பேனா?

मधुर-मधरबिम्बे मञ्जुलं मन्दहासे
शिशिर-ममृतवाक्ये शीतलं दृष्टिपाते।
विपुल-मरुणनेत्रे विश्रुतं वेणुनादे
मरकतमणि-नीलं बाल-मालोकये नु ॥ १.६४ ॥

மதுர-மதரபிம்பே மஞ்ஜுலம் மந்தஹாஸே
சிசிர-மம்ருதவாக்யே சீதலம் த்ருஷ்டிபாதே।
விபுல-மருணநேத்ரே விச்ருதம் வேணுநாதே
மரகதமணி-நீலம் பால-மாலோகயே நு ॥ 1.64 ॥

Koviloor Digital Library

1. 64. (அதாபிம்பே) கோவைப் பழம் போன்ற உதட்டில் (மதுரம்) இனிப்பும் (மந்தஹாஸே) புன்சிரிப்பில் (மஞ்ஜுளம்) மனக்கவர்ச்சியும் (அம்ருதவாக்யே) அமுதம் போன்ற பேச்சில் (சிசிரம்) பனித்துளி பெய்தாற் போன்ற உணர்ச்சியும் (த்ருஷ்டிபாதே) கண் பார்வையில் (சீதளம்) குளிர்ச்சியும் (அருணநேத்ரே) செவ்வரி படர்ந்த கண்ணில் (விபுலம்) பரந்த நோக்கும் (வேணு நாதே) குழலோசையில் (விச்ருதம்) கேள்வியின் பெருமையும் பொருந்திய (மரகதமணி நீலம் பாலம்) மரகதமணி போல் நீல வண்ணனான குழந்தை கிருஷ்ணனை (ஆலோகயே நு) நான் நேரில் காண்பேனோ?

## 1.65. இனிமையினும் இனிய இளமை

माधुर्यादपि मधुरं मन्मथ-तातस्य किमपि कैशोरम् ।
चापल्यादपि चपलं चेतो मम हरति हन्त किं कुर्मः ॥ १.६५ ॥

மாதுர்யாதபி மதுரம் மன்மத-
தாதஸ்ய கிமபி கைசோரம் ।
சாபல்யாதபி சபலம் சேதோ மம
ஹரதி ஹந்த கிம் குர்மஃ ॥ 1.65 ॥

1. 65. (மாதுர்யாத் அபி மதுரம்) இனிய பண்டங்கள் அனைத்தினும் இனியதாயும் (சாபல்யாதபி சபலம்) சஞ்சலமான மின்னல் முதலியவற்றைக் காட்டிலும் சஞ்சலமானதாயும் உள்ள (மன்மத தாதஸ்ய) மன்மதனுக்குத் தந்தையான கிருஷ்ணனுடைய (கிமபி கைசோரம்) வர்ணிக்க முடியாத இளமை (மம) என்னுடைய (சேதஃ) சித்தத்தை (ஹரதி) கவர்ந்து கொண்டு விட்டது; (ஹந்த) ஐயோ! (கிம் குர்ம:) என்ன செய்வோம்?

Koviloor Digital Library

## 1.66. பாலகிருஷ்ணனை எப்போது காண்பேன்?

वक्षःस्थले च विपुलं नयनोत्पले च
मन्दस्मिते च मृदुलं मदजल्पिते च ।
बिम्बाधरे च मधुरं मुरलीरवे च
बालं विलास-निधि-माकलये कदा नु ॥ १.६६ ॥

வக்ஷ:ஸ்தலே ச விபுலம் நயனோத்பலே ச
மந்தஸ்மிதே ச ம்ருதுலம் மதஜல்பிதே ச ।
பிம்பாதரே ச மதுரம் முரலீரவே ச
பாலம் விலாஸ-நிதி-மாகலயே கதா நு ॥ 1.66 ॥

1. 66. (வக்ஷ:ஸ்தலே ச) மார்புப் பிரதேசத்திலும் (நயனோத்பலே ச) கருநெய்தல் பூப்போன்ற கண்ணிலும் (விபுலம்) பரந்திருக்குந் தன்மை, (மந்தஸ்மிதே ச) புன்சிரிப்பிலும் (மதஜல்பிதே ச) கேலிப் பேச்சிலும் (ம்ருதுலம்) மிருதுத் தன்மை, (பிம்பாதரே ச) கோவைப்பழம் போன்ற உதட்டிலும் (முரலீரவே ச) வேணு நாதத்திலும் (மதுரம்) இனிப்பு, ஆகிய வற்றுடன் கூடிய (விலாஸ நிதிம்) லீலைகளுக்கிருப்பிடமான (பாலம்) பாலகிருஷ்ணனை (கதா நு ஆகலயே) எப்போது நேரில் காணப்போகிறேன்.

## 1.67. கண்ணனைப் புண்ணியசாலிகள் பார்க்கிறார்கள்

आर्द्रावलोकित-दयापरिणद्धनेत्र-
माविष्कृत-स्मित-सुधा-मधुराधरोष्ठम् ।
आद्यं पुमांस-मवतंसित-बर्हिबर्ह-
मालोकयन्ति कृतिनः कृतपुण्य-पुञ्जाः ॥ १.६७ ॥

ஆர்த்ராவலோகித-தயாபரிணத்த-நேத்ர-
மாவிஷ்க்ருத-ஸ்மித-ஸுதா-மதுராதரோஷ்டம் ।
ஆத்யம் புமாம்ஸ-மவதம்ஸித-பர்ஹிபர்ஹ-
மாலோகயந்தி க்ருதின: க்ருதபுண்ய-புஞ்ஜா: ॥ 1.67 ॥

Koviloor Digital Library



1. 67. (ஆர்த்ர-அவலோகித-) குளிர்ந்த பார்வையும் (தயா பரிணத்த) நிறைந்த தயையும் உடைய (நேத்ரம்) கண்கள் படைத்தவனும், (ஆவிஷ்க்ருத-) வெளிக்கிளம்பும் (ஸ்மித-ஸுதா) புன்னகையாகிற அமுதத்தால் (மதுர-) இனிமையான (அதர ஓஷ்டம்) கீழுதட்டையுடையவனும், (அவதம்ஸித-பர்ஹிபர்ஹம்) மயிலிறகைச் சிரசிலணிந்தவனும் ஆகிய (ஆத்யம் புமாம்ஸம்) ஆதி புருஷனை (க்ருத-புண்ய புஞ்ஜாஃ) முன்செய்த புண்ணியக் குவியலையுடைய (க்ருதினஃ) பாக்கியசாலிகள் (ஆலோகயந்தி) பார்க்கிறார்கள்.

### 1.68. இவன் மன்மதன் தானோ?

मारः स्वयं नु मधुरद्युतिमण्डलं नु
माधुर्यमेव नु मनोनयनामृतं नु ।
वाणीमृजा नु मम जीवितवल्लभो नु
बालोऽयमभ्युदयते मम लोचनाय ॥ १.६८ ॥

மாரஃ ஸ்வயந் நு மதுரத்யுதி மண்டலம் நு
மாதுர்யமேவ நு மனோநயனாம்ருதம் நு ।
வாணீம்ருஜா நு மம ஜீவிதவல்லபோ நு
பாலோऽயமப்யுதயதே மம லோசனாய ॥ 1.68 ॥

1. 68. (மாரஃ ஸ்வயம் நு) இவன் மன்மதன் தானோ? (மதுர-த்யுதி-மண்டலம் நு) இனிய ஒளியைப் பரப்பும் சந்திர மண்டலமோ? (மாதுர்யம் ஏவ நு) இனிமையே உருவெடுத்தவனோ? (மனோ-நயன-அம்ருதம் நு) மனதுக்கும் கண்ணுக்கும் அமுதமாகியவனோ? (வாணீ ம்ருஜா நு) வாக்கிற்கு பூஷணமாகியவனோ? (மம) என்னுடைய (ஜீவித-வல்லபஃ நு) பிராண நாயகனோ? (மம லோசனாய) என் கண்ணெதிரில் (பாலஃ அயம் அப்யுதயதே) தோன்றுகிறானே இந்த இளம்பிள்ளை.

Kavitaa Digital Library

இவன் மன்மதன் தானே?

௯. தாஸாமாவிரபூச்சௌரிஃ ஸ்மயமான முகாம்புஜஃ ।
பீதாம்பரதரஃ ஸ்ரக்வீ ஸாக்ஷான் மன்மத-மன்மதஃ ॥

—பாகவதம் 10-32-2.

## 1.69. ஆய்குலத்திற்குப் பொருத்தமான வேஷம்

बालोऽयमालोल-विलोचनेन
वक्त्रेण चित्रीकृत-दिङ्मुखेन ।
वेषेण घोषोचित-भूषणेन
मुग्धेन दुग्धे नयनोत्सुकं नः ॥ १.६९ ॥

பாலோऽயமாலோல-விலோசனேன
வக்த்ரேண சித்ரீக்ருத-திங்முகேன ।
வேஷேண கோஷோசித-பூஷணேன
முக்தேன துக்தே நயனோத்ஸுகம் நஃ ॥ 1.69 ॥

1. 69. (அயம் பாலஃ) இந்தக் குழந்தை (ஆலோல-விலோசனேன) சுழலும் கண்களாலும், (சித்ரீக்ருத-திங்முகேன) திசைகளை அழகுபடுத்தும் (வக்த்ரேண) முகத்தாலும், (முக்தேன) கவர்ச்சிவாய்ந்த (கோஷ-உசித-பூஷணேன) இடையர் குலத்திற்குப் பொருத்தமான ஆபரணங்களைக்கொண்ட (வேஷேண) வேஷத்தாலும் (நஃ) நம்முடைய (நயன-உத்ஸுகம்) கண்களுக்கு மகிழ்ச்சியை (துக்தே) சுரக்கச் செய்கிறான்.

## 1.70. பிறவிப் பிணிக்கு மருந்து

आन्दोलिताग्र-भुज-माकुल-नेत्रलील-
मार्द्र-स्मिताद्र-वदनाम्बुज-चन्द्रबिम्बम् ।
शिञ्जान-भूषणशतं शिखिपिञ्छ-मौलि
शीतं विलोचन-रसायन-मभ्युपैति ॥ १.७० ॥

Koviloor Digital Library



ஆந்தோலிதாக்ர-புஜமாகுல-நேத்ரலீல-
மார்த்ரஸ்மிதார்த்ர-வதனும்புஜ-சந்த்ரபிம்பம் ।
சிஞ்ஜான-பூஷணசதம் சிகிபிஞ்ச-மௌலிம்
சீதம் விலோசன-ரஸாயன-மப்யுபைதி ॥ 1.70 ॥

1. 70. (ஆந்தோலித-அக்ரபுஜம்) முன் கைகளை வீசிக் கொண்டு வருவதாயும் (ஆகுல-நேத்ர-லீலம்) கண்கள் சுழல்வதாயும் (ஆர்த்ர-ஸ்மித-) நெஞ்சையுருக்கும் சிரிப்பினுல் (ஆர்த்ர-வதன-அம்புஜ-சந்த்ரபிம்பம்) குளிர்ந்த தாமரைபோலும் சந்திரனைப் போலுமுள்ள முகத்தையுடையதாயும் (சிஞ்ஜான-பூஷண சதம்) ஒலிக்கும் பல ஆபரணங்களை அணிந்ததாயும் (சிகிபிஞ்ச-மௌலிம்) மயிலிறகைத் தலையில் சூடியதாயும் (சீதம்) மனதைக் குளிரச் செய்வதாயும் (விலோசன-ரஸாயனம்) கண்கொண்டு பருகும் அமுதாயும் விளங்கும் ஏதோ ஒரு தத்துவம் (அப்யுபைதி) என்னை நாடி வருகிறது.

ரஸாயனம்—ஒ. ரஸோ வை ஸ: । ரஸம் ஹ்யேவாயம் லப்த்வா ஆனந்தீ பவதி ॥ அவன் வடிவே ஆனந்த ரஸம். அந்த ரஸத்தை அடைந்து தான் ஒருவன் ஆனந்தமுள்ளவனுகிறுன். —தை. உப. 2-6.

## 1.71. இடைப்பிள்ளைகளின் கூட்டத்திற்கு அணிகலன்

पशुपाल-पाल-परिषद्विभूषणं
शिशुरेष शीतल-विलोल-लोचनः ।
मृदुल-स्मितार्द्र-वदनेन्दु-सम्पदा
मदयन्मदीय-हृदयं विगाहते ॥ १.७१ ॥

பசுபால-பால-பரிஷத்விபூஷணம்
சிசுரேஷ சீதல-விலோல-லோசன: ।
ம்ருதுல-ஸ்மிதார்த்ர-வதனேந்து-ஸம்பதா
மதயன்மதீய-ஹ்ருதயம் விகாஹதே ॥ 1.71 ॥

Koviloor Digital Library


1. 71. (பசுபால-பால-) இடைப்பிள்ளைகளுடைய (பரிஷத்-விபூஷணம்) கூட்டத்திற்கு அணிகலனாகியவனும் (சீதல-விலோல-லோசனை) குளிர்ச்சியுடன் சுற்றுமுற்றும் பார்க்கும் கண்கள் படைத்தவனும் ஆகிய கண்ணன் (ம்ருதுல-ஸ்மித) அழகிய புன்சிரிப்பில் (ஆர்த்ர-வதன-இந்து-ஸம்பதா) கசிந்த சந்திரன் போன்ற முகத்தின் காந்தியால் (மதயன்) என்னை மயக்கிக் கொண்டு (மதீய ஹ்ருதயம் விகாஹதே) என்னுடைய நெஞ்சில் ஆழத்தில் புகுந்து விளங்குகிறான்.

## 1.72. கண்ணெதிரில் சாட்சி தரும் கண்ணன்

तदिद-मुपनतं तमालनीलं
तरल-विलोचन-तारकाभिरामम् ।
मुदित-मुदित-वक्त्र-चन्द्रबिम्बं
मुखरित-वेणु-विलास-जीवितं मे ॥ १.७२ ॥

ததித-முபநதம் தமாலநீலம்
தரல-விலோசன-தாரகாபிராமம் ।
முதித-முதித-வக்த்ர-சந்த்ரபிம்பம்
முகரித-வேணு-விலாஸ-ஜீவிதம் மே ॥ 1.72 ॥

1. 72. (தமால-நீலம்) மாவிலிங்கைபோல் நீல வர்ணமாயும், (தரல-விலோசன-தாரகா-அபிராமம்) சஞ்சலமான கண்களின் கருவிழிகளால் அழகு மிகுந்ததாயும் (முதித-முதித-வக்த்ர-சந்த்ர பிம்பம்) மகிழ்ச்சி பொங்கும் சந்திர பிம்பம் போன்ற முகமுடையதாயும் (முகரித-வேணு-விலாஸ-ஜீவிதம்) வாயில் வைக்கப்பட்ட குழலினின்று எழும் ஒலிக்கு உயிராயும் விளங்கும் (தத் இதம்) அப்படிப்பட்ட இந்தக் கண்ணனுடைய வடிவம் (மே) எனக்கு (உபநதம்) எதிரில் காட்சியளிக்கிறது.

Koviloor Digital Library


## 1.73 ஆய்குலத்தின் பாக்கியத்திற்கு எல்லை நிலம்

चापल्यसीम चपलानुभवैकसीम
चातुर्यसीम चतुरानन-शिल्पसीम ।
सौरभ्यसीम सकलाद्भुत-केलिसीम
सौभाग्यसीम तदिदं व्रजभाग्यसीम ॥ १.७३ ॥

சாபல்யஸீம சபலானுபவைகஸீம
சாதுர்யஸீம சதுரானன-சில்பஸீம ।
ஸௌரப்யஸீம ஸகலாத்புத-கேலிஸீம
ஸௌபாக்யஸீம ததிதம் வ்ரஜபாக்யஸீம ॥ 1.73 ॥

1. 73. (சாபல்ய-ஸீம) நிலைகொள்ளாத விளையாட்டிற்கு எல்லை நிலமும் (சபலா-அனுபவ-ஏக-ஸீம) ஸ்ரீதேவியினுடைய சுகானுபவத்திற்குப் பிரதான எல்லை நிலமும் (சாதுர்ய-ஸீம) ஸாமர்த்தியத்திற்கு எல்லை நிலமும் (சதுரானன-சில்ப-ஸீம) நான் முகப் பிரம்மாவின் சிருஷ்டித் திறமைக்கு எல்லை நிலமும் (ஸௌரப்ய - ஸீம) திவ்ய பரிமளத்திற்கு எல்லை நிலமும் (ஸகலாத்புத-கேலி-ஸீம) எல்லாவிதமான அற்புத லீலைகளுக்கும் எல்லை நிலமும் (ஸௌபாக்ய ஸீம) அழகிற்கு எல்லை நிலமும் (வ்ரஜபாக்யஸீம) ஆய்ப்பாடி மக்களின் பாக்கியத்திற்கு எல்லை நிலமும் ஆகி விளங்குவது (தத் இதம்) இந்தப் பரதத்துவம்.

## 1.74. புண்ணியத்தின் பரிபாகம்

माधुर्येण द्विगुण-शिशिरं वक्त्रचन्द्रं वहन्ती
वंशी-वीथी-विगल-दमृत-स्रोतसा सेचयन्ती ।
मद्वाणीनां विहरणपदं मत्तसौभाग्यभाजां
मत्पुण्यानां परिणतिरहो नेत्रयोस्सन्निधत्ते ॥ १.७४ ॥

Koviloor Digital Library

மாதுர்யேண த்விகுண-சிசிரம்
வக்த்ர சந்த்ரம் வஹந்தீ
வம்சீ-வீதீ-விகல தம்ருத-
ஸ்ரோதஸா ஸேசயந்தீ।
மத்வாணீனும் விஹரணபதம்
மத்தஸௌபாக்யபாஜாம்
மத்புண்யானும் பரிணதிரஹோ
நேத்ரயோஸ்-ஸந்நிதத்தே ॥ 1.74 ॥

1. 74. (மாதுர்யேண) அன்பினுல் (த்விகுண-சிசிரம்) இருமடங்கு குளிர்ந்திருக்கும் (வக்த்ர-சந்த்ரம்) சந்திரன் போன்ற முகத்தை உடையதும், (வம்சீ-வீதீ-) குழலின் வழியாக (விகலத்-அம்ருத) பெருகுகின்ற அமுதகானத்தின் (ஸ்ரோதஸா) வெள்ளத்தால் (ஸேசயந்தீ) கேட்பவர்கள் உள்ளத்தை நனைப்பதும், (மத்-வாணீனும்) என்னுடைய சொற்களுக்கு (விஹரண-பதம்) விளையாட்டிடமாயிருப்பதும் (மத்தஸௌபாக்ய-பாஜாம்) முதிர்ந்த பரிபாகத்தை அடைந்திருக்கிற (மத் புண்யானும்) என்னுடைய புண்ணியங்களின் (பரிணதி:) ஆவிர்ப்பாவமே போன்றதுமாகிய–கண்ணனுடைய வடிவம்–(நேத்ரயோ: ஸந்நிதத்தே) கண்களுக்கெதிரில் காட்சியளிக்கிறது. (அஹோ) ஆச்சரியம்.

## 1.75 லோகபாலனுகிய கோபாலனுக்கு நமஸ்காரம்

तेजसेऽस्तु नमो धेनुपालिने लोकपालिने ॥
राधापयोधरोत्सङ्गशायिने शेषशायिने ॥ १.७५ ॥

தேஜஸேஸ்து நமோ தேனுபாலினே லோகபாலினே ।
ராதாபயோதரோத்ஸங்கசாயினே சேஷசாயினே ॥ 1.75॥

1. 75. (தேனுபாலினே) பசுக்களை மேய்ப்பவனும் (லோகபாலினே) உலகங்களை ரக்ஷிப்பவனும் (ராதா-பயோதர-உத்ஸங்க-சாயினே) ராதையின் கொங்கை மேல் சயனிப்பவனும் (சேஷசாயினே) ஆதிசேஷன்மேல் சயனிப்பவனும் ஆகிய (தேஜஸே) கிருஷ்ணன் எனும் பரஞ்ஜோதிக்கு (நம:) நமஸ்காரம் (அஸ்து) இருக்கட்டும்.

Koviloor Digital Library

## 1.76. ஓங்காரப் பொருளாகிய கிருஷ்ணனுக்கு நமஸ்காரம்

धेनुपाल-दयिता-स्तनस्थली-
　　धन्यकुङ्कुम-सनाथ-कान्तये ।
वेणुगीत-गति-मूल-वेधसे
　　तेजसे तदिद-मों नमो नमः ॥ १.७६ ॥

தேனுபால-தயிதா-ஸ்தனஸ்தலீ-
　　தன்யகுங்கும-ஸநாத-காந்தயே ।
வேணுகீத-கதி-மூல-வேதஸே
　　தேஜஸே ததித-மோம் நமோ நம: ॥ 1.76 ॥

(தேனு பால-தயிதா) ஆயர் குலப் பெண்களின் (ஸ்தன ஸ்தலீ) நகில்களில் படிந்த (தன்ய-குங்கும) அழகிய குங்குமத் துடன் (ஸநாத) கூடிய (காந்தயே) காந்தியுடையவனும் (வேணு-கீத-) குழலோசையின் (கதி) எழுச்சிக்கு (மூலவேதஸே) ஆதிகர்த்தாவாயும் (தேஜஸே) பரஞ்ஜோதியாயும் (ஓம்) ஓங்காரப் பொருளாயும் விளங்கும் கிருஷ்ணனுக்கு (தத்) சாணாகதி வடிவான (இதம்) இந்த (நம:) நமஸ்காரம் (நம:) மீண்டும் நமஸ்காரம்.

## 1.77. கண்ணன் என்னை நாடி வருகிறான்

मृदुक्वण-न्नूपुर-मन्थरेण
　　वालेन पादाम्वुज-पल्लवेन ।
अनुक्वणन्मञ्जुल-वेणुगीत-
　　मायाति मे जीवितमात्तकेलि ॥ १.७७ ॥

ம்ருதுக்வணந்-நூபுர-மந்தரேண
　　பாலேன பாதாம்புஜ-பல்லவேன ।
அனுக்வணன் மஞ்ஜுல-வேணுகீத-
　　மாயாதி மே ஜீவிதமாத்த-கேலி ॥ 1.77 ॥

Keviloor Digital Library

1. 77. (பாலேன பாதாம்புஜ-பல்லவேன) சின்னஞ்சிறு தாமரையிதழ் போன்ற திருவடிகளில் (ம்ருதுக்வணத்) மெள்ள மெள்ள சப்திக்கின்ற (நூபுர-மந்தரேண) சிலம்பொலிக்கு (அனுக்வணத்) இசைவாக ஒலிக்கின்ற (மஞ்ஜுல-வேணுகீதம்) அழகிய வேணுகானத்துடன் (ஆத்த கேலி) விளையாடி வரும் (மே) எனது (ஜீவிதம்) உயிருக்குயிரான கண்ணன் (ஆயாதி) என்னை நாடி வருகிறான்.

அனுஸ்வநத் பா. பே,

## 1.78. அனன்யபந்துவாகிய கிருஷ்ணன்

सोऽयं विलास-मुरली-निनदामृतेन
सिञ्चन्नुदञ्चित-मिदं मम कर्णयुग्मम् ।
आयाति मे नयनबन्धु-रनन्यबन्धु-
रानन्दकन्दलित-केलिकटाक्ष-लक्ष्यः ॥ १.७८ ॥

ஸோऽயம் விலாஸ-முரளீ-நிநதாம்ருதேன
ஸிஞ்சந்நுதஞ்சித-மிதம் மம கர்ணயுக்மம் ।
ஆயாதி மே நயனபந்து-ரனன்யபந்து-
ரானந்த-கந்தலித-கேலி-கடாக்ஷ-லக்ஷ்ய: ॥ 1.78 ॥

(விலாஸ-முரளீ-நிநத-அம்ருதேன) அழகான குழலோசையின் அமுதத்தால் (உதஞ்சிதம்) அதைக் கேட்க முயலும் (மம) என்னுடைய (இதம்) இந்த (கர்ணயுக்மம்) இரு காதுகளையும் (ஸிஞ்சன்) குளிர நனைத்துக் கொண்டு (மே) எனது (நயனபந்து:) கண்களுக்கு உறவினனும் (அனன்யபந்து:) வேறு நாட்டமில்லாதவர்க்கு சரணியனும் (ஆனந்த-கந்தலித-) மகிழ்ச்சியை வளர்க்கும் (கேலி-கடாக்ஷ-லக்ஷ்ய:) விளையாட்டுக் கடைக்கண் நோக்கால் காணத் தக்கவனும் ஆகிய (ஸ: அயம்) அந்தப் பிரச்சித்தனான கிருஷ்ணன் (ஆயாதி) வருகிறான்.

Koviloor Digital Library

## 1.79. எட்டி நின்ற கண்ணன் கிட்டி வருகிறுன்

दूराद्विलोकयति वारणखेलगामी
धाराकटाक्ष-भरितेन विलोचनेन ।
आरादुपैति हृदयङ्गमवेणुनाद-
वेणीदुघेन दशनावरणेन देवः ॥ १.७९ ॥

தூராத்-விலோகயதி வாரணகேல-காமீ
தாரா கடாக்ஷ-பரிதேன விலோசனேன ।
ஆரா-துபைதி ஹ்ருதயங்கம-வேணுநாத-
வேணீதுகேன தசனுவரணேன தேவஃ ॥ 1.79 ॥

1. 79. (தேவஃ) தேவ தேவனுகிய கண்ணன் (தூராத் விலோகயதி) எட்டி நின்று என்னைப் பார்க்கிறுன். (வாரண-கேல-காமீ) யானையின் நடை போன்ற கம்பீரமான விளையாட்டு நடையுடையவனும் (தாரா-கடாக்ஷ-பரிதேன விலோசனேன) தொடர்ந்த கடைக்கண் பார்வையால் பூரித்த கண்களுடனும் (ஹ்ருதயங்கம-வேணுநாத-வேணீதுகேன) உள்ளத்தைக் கவரும் குழலோசையைத் தொடர்ந்து பொழியும் (தசனுவரணேன) உதடுகளின் அழகுடனும் (ஆராத்) என்னருகில் (உபைதி) வருகிறுன்.

## 1.80. திருவடியின் பெருமை

त्रिभुवन-सरसाभ्यां दीप्तभूषापदाभ्यां
दृशि दृशि शिशिराभ्यां दिव्यलीलाकुलाभ्याम् ।
अशरण-शरणाभ्या-मद्भुताभ्यां पदाभ्या-
मयमय-मनुकूज-द्वेणु-रायाति देवः ॥ १.८० ॥

த்ரிபுவன-ஸரஸாப்யாம் தீப்தபூஷாபதாப்யாம்
த்ருசி தருசி சிசிராப்யாம் திவ்யலீலாகுலாப்யாம் ।
அசரண-சரணுப்யா-மத்புதாப்யாம் பதாப்யா-
மய-மய-மனுகூஜத்-வேணு-ராயாதி தேவஃ ॥ 1.80 ॥

Koviloor Digital Library


1. 80. (அனுகூஜத் வேணு:) குழலை ஊதிக் கொண்டு (அயம்) இவ்வளவு அழகுடன் கூடிய (அயம் தேவ:) இந்தக் கிருஷ்ணன் (த்ரிபுவன-ஸரஸாப்யாம்) மூவ்வுலகங்களுக்கும் இன்பந்தருவனவாயும் (தீப்த-பூஷாபதாப்யாம்) பிரகாசிக்கும் ஆபரணங்களுக்கு இருப்பிடங்களாயும் (த்ருசி த்ருசி) காணுந் தோறும் (சிசிராப்பாம்) உள்ளத்தைக் குளிரச் செய்பவை களாயும் (திவ்ய-லிலாகுலாப்யாம்) தெய்விகமான லீலைகள் நிறைந்தவைகளாயும் (அசரண-சரணுப்யாம்) வேறு புகலை நாடாதவர்களுக்குப் புகலிடங்களாயும் உள்ள (அத்புதாப்யாம் பதாப்பாம்) அற்புதமான திருவடிகளால் (ஆயாதி) நடந்து வருகிருன்.

## 1.81 உள்ளங்கவர் கள்வன்

सोऽयं मुनीन्द्र-जनमानस-तापहारी
सोऽयं मदव्रज-वधू-वसनापहारी ।
सोऽयं तृतीय-भुवनेश्वर-दर्पहारी
सोऽयं मदीय-हृदयाम्बुरुहापहारी ॥ १.८१ ॥

ஸோऽயம் முனீந்த்ர-ஜனமானஸ-தாபஹாரீ
ஸோऽயம் மதவ்ரஜ-வதூ-வஸனுபஹாரீ ।
ஸோऽயம் த்ருதீய-புவனேச்வர-தர்ப்பஹாரீ
ஸோऽயம் மதீய ஹ்ருதயாம்புருஹாபஹாரீ ॥ 1.81 ॥

1. 81. (முனீந்த்ர-ஜனமானஸ—தாபஹாரீ) முனிசிரேஷ்டர் களுடைய மனதிலுள்ள தாபத்தைப் போக்குபவனுகிய (ஸ:) அவன் (அயம்) இவனே. (மதவ்ரஜ-வதூ-வஸன-அபஹாரீ) கர்வித்திருந்த இடைப் பெண்களின் ஆடைகளை அபகரித்த (ஸ:) அவன் (அயம்) இவனே. (த்ருதீய-புவனேச்வர-தர்ப்பஹாரீ) ஸ்வர்க்க லோகத்தை யாளும் இந்திரனுடைய கர்வத்தை அடக்கிய (ஸ:) அவன் (அயம்) இவனே. (மதீய) என்னுடைய (ஹ்ருதய-அம்புருஹ-அபஹாரீ) இருதய கமலத்தை அபஹரித்துக் கொண்ட (ஸ:) அவனும் (அயம்) இவனே.

Koviloor Digital Library

## 1.82. அறிவும் அறியாமையும் அவனே

**सर्वज्ञत्वे च मौग्ध्ये च सार्वभौम-मिदं मम ।**
**निर्विशन्नयनं तेजो निर्वाणपद-मश्नुते ॥ १.८२ ॥**

ஸர்வஜ்ஞத்வே ச மௌக்த்யே ச
ஸார்வபௌம-மிதம் மம ।
நிர்விசந் நயனம் தேஜோ
நிர்வாணபத-மச்னுதே ॥ 1.82

1. 82. (ஸர்வஜ்ஞத்வே ச) எல்லாவற்றையும் அறியும் அறிவுக்கும் (மௌக்த்யே ச) ஒன்றையும் அறியாத அறியாமைக்கும் (ஸார்வபௌமம்) சக்ரவர்த்தித் தன்மை வகிக்கும் (இதம்) இந்த (தேஜ:) ஒளிப்பிழம்பை (நிர்விசன்) நாடியடைந்து (மம) என்னுடைய (நயனம்) கண் (நிர்வாண-பதம்) முக்தி இன்பத்தை (அச்னுதே) அனுபவிக்கிறது.

## 1.83. கிருஷ்ண சந்திரன்

**कृष्णान-मेतत्पुनरुक्त-शोभ-**
**मुष्णेतरांशो-रुदयं मुखेन्दोः ।**
**तृष्णाम्बुराशिं द्विगुणी-करोति**
**कृष्णाह्वयं किञ्चन जीवितं मे ॥ १.८३ ॥**

க்ருஷ்ணன-மேதத் புனருக்த-சோப-
முஷ்ணேதராம்சோ-ருதயம் முகேந்தோ: ।
த்ருஷ்ணம்புராசிம் த்விகுணீ கரோதி
க்ருஷ்ணஹ்வயம் கிஞ்சன ஜீவிதம் மே ॥ 1.83 ॥

1. 83. (க்ருஷ்ண-ஆஹ்வயம்) கிருஷ்ணன் என்ற பெயரையுடையதும் (மே) எனது (ஜீவிதம்) உயிருக்குயிராகியதும் (கிஞ்சன) இன்னதென்று வர்ணிக்க முடியாததுமான எதோ

Koviloor Digital Library

ஒன்று (முக-இந்தோ:) தன்னுடைய முகமாகிற சந்திரனால் (உஷ்ண-இதர-அம்சோ:) குளிர்ந்த சந்திரனுடைய (உதயம்) உதயத்தை (புனருக்த-சோபம்) சொன்னதையே சொல்வது போலும் செய்ததையே செய்வது போலும் தோன்றும்படி (க்ருஷ்ணனம்) செய்து கொண்டு (த்ருஷ்ணா அம்புராசிம்) எனது ஆசைக்கடலை (த்விகுணீ கரோதி) இரட்டிப்பாகப் பொங்கச் செய்கிறது.

புனருக்த-தோஷம். பா. பே.

## 1.84. அவன் முகத்தை என் மனது முத்தமிடுகிறது

तदेतदाताम्र-विलोचनश्री-
सम्भाविताशेष-विनम्र-वर्गम् ।
मुहु-र्मुरारे-र्मधुराधरोष्ठं
मुखाम्बुजं चुम्बति मानसं मे ॥ १.८४ ॥

ததேத-தா-தாம்ர-விலோசன-ஸ்ரீ-
ஸம்பாவிதாசேஷ-விநம்ர-வர்க்கம் ।
முஹுர் முராரேர்-மதுராதரோஷ்டம்
முகாம்புஜம் சும்பதி மானஸம் மே ॥ 1.84 ॥

1. 84. (ஸம்பாவித-அசேஷ-விநம்ர-வர்க்கம்) அடியார் களனைவராலும் போற்றப்பட்ட (ஆதாம்ர-விலோசன-ஸ்ரீ) சிறிது சிவந்த கண்ணழகையுடையதும் (மதுர-அதர-ஓஷ்டம்) இனிய கீழுதட்டை உடையதுமான (முராரே:) கிருஷ்ணனுடைய (தத் ஏதத்) அப்படிப்பட்ட இந்த (முக-அம்புஜம்) தாமரை போன்ற முகத்தை (மே) எனது (மானஸம்) மனது (முஹு:) அடிக்கடி (சும்பதி) முத்தமிடுகிறது.

Koviloor Digital Library

## 1.85. கண்ணுக்கு அமுதமாகிய இளமையழகு

करौ शरदुदञ्चिताम्बुज-विलास-शिक्षागुरू
पदौ विबुध-पादप-प्रथमपल्लवोल्लङ्घिनौ ।
दृशौ दलित-दुर्मद-त्रिभुवनोपमानश्रियौ
विलोक्य सुविलोचनामृत-महो महच्छैशवम् ॥

கரௌஸரதுதஞ்சிதாம்புஜ-விலாஸ-சிக்ஷாகுரூ
பதௌ விபுத-பாதப-ப்ரதம-பல்லவோல்லங்கிநௌ ।
த்ருஸௌ தலித-துர்மத-த்ரிபுவனோபமானச்ரியௌ
விலோக்ய ஸுவிலோசனாம்ருத-மஹோ மஹச்சைசவம் ॥

1. 85. (கரௌ) கைகள் (சரத்-உதஞ்சித-) ஐப்பசி கார்த்திகை மாதங்களில் தலை தூக்கி நிற்கும் (அம்புஜ-விலாஸ-) தாமரையின் அழகிற்கு (சிக்ஷா-குரு) சிக்ஷிக்கும் குருஸ்தானமாயிருக்கின்றன. (பதள) பாதங்கள் (விபுத-பாதப-) தேவலோகத்திலுள்ள கல்பக விருக்ஷத்தின் (ப்ரதம-பல்லவ-) இளந்தளிர்களை (உல்லங்கிநௌ) மிருத்து தன்மையில் மீறியவைகளாயிருக்கின்றன. (த்ருசௌ) கண்கள் (த்ரிபுவன–) மூவுலகிலும் உள்ள (தலித-துர்மத உபமானச்ரியௌ) அழகிற்குவமையான எல்லாப் பொருள்களின் கர்வத்தையும் பிளப்பதா யிருக்கின்றன. (ஸுவிலோசன-அம்ருதம்) கண்ணுக்கு அமுதமாயிருக்கும் (மஹத்) சிறந்த (சைசவம்) இந்த இளமையழகை (விலோகய) கண்டனுபவிப்பாயாக. (அஹோ) ஆச்சரியம்

## 1·86. மன்மதன் கொண்டாடும் அழகு

आचिन्वानमह-न्यहन्यहनि साकारान् विहारक्रमा-
नारुन्धान-मरुन्धती-हृदय-मप्यार्द्र-स्मितास्यश्रिया ।
आतन्वान-मनन्यजन्म-नयन-श्लाघ्या-मनर्घ्यां दशा-
मामन्दं व्रजसुन्दरी-स्तनतटी साम्राज्य-मुज्जृम्भते ॥ १.८६॥

Koviloor Digital Library

ஆசின்வான-மஹன்யஹன்யஹனி
ஸாகாரான் விஹாரக்ரமா-
நாருந்தான-மருந்ததீ-ஹ்ருதய-
மப்யார்த்ர-ஸ்மிதாஸ்யச்ரியா ।
ஆதன்வான-மனன்யஜன்ம-நயன-
ச்லாக்யா-மனர்க்யாம் தசா-
மாமந்தம் வ்ரஜஸுந்தரீ-
ஸ்தனதடீ-ஸாம்ராஜ்ய-முஜ்ஜ்ரும்பதே ॥ 1.86 ॥

1. 86. (அஹனி அஹனி அஹனி) புதிது புதிது புதிதாக நாள்தோறும் (ஸாகாரான்) உருவெடுக்கும் (விஹாரக்ரமான்) விளையாட்டு வரிசைகளை (ஆசின்வானம்) தோற்றுவிப்பதும், (ஆர்த்ர-) குளிர்ந்த (ஸ்மித-) புன்முறுவல் பூத்த (ஆஸ்ய-) முகத்தின் (ச்ரியா) அழகால் (அருந்ததீ-ஹ்ருதயம் அபி) அருந்ததியின் உள்ளத்தையும் (ஆருந்தானம்) தகைவதும், (அனன்யஜன்ம-) தன்னிடம் தோன்றிய மன்மதனுடைய (நயன-) கண்களுக்கும் (ச்லாக்யாம்) கொண்டாடத் தக்கதாய் (அனர்க்யாம்) மதிப்பிடற்கரியதாய் விளங்கும் (தசாம்) நிலையை (ஆதன்வானம்) விருத்தி செய்வதும், (வ்ரஜஸுந்தரீ-) இடைப் பெண்களின் (ஸ்தனதடீ-) நகில் பிரதேசங்களில் (ஸாம்ராஜ்யம்) ஆட்சிபுரிவதும் ஆகிய கிருஷ்ண தத்துவம் (ஆமந்தம்) அதிசீக்கிரத்தில் (உஜ்ஜ்ரும்பதே) என் கண்முன் தோன்றி வளர்கிறது.

## 1.87. முவ்வுலகையும் மயக்கும் யௌவன அழகு

समुच्छ्वसित-यौवनं तरल-शैशवालङ्कृतं
मदच्छुरित-लोचनं मदनमुग्ध-हासामृतम् ।
प्रतिक्षण-विलोभनं प्रणय-पीत-वंशी-मुखं
जगत्त्रय-विमोहनं जयति मामकं जीवितम् ॥१.८७॥

Koviloor Digital Library

ஸமுச்ச்வஸித-யௌவனம் தரல-சைசவாலங்க்ருதம்
மதச்சுரித-லோசனம் மதனமுக்த-ஹாஸாம்ருதம் ।
ப்ரதிக்ஷண-விலோகனம் ப்ரணய-பீத-வம்சீமுகம்
ஜகத்த்ரய-விமோஹனம் ஜயதி மாமகம் ஜீவிதம் ॥ 1.87 ॥

1. 87. (ஸமுச்ச்வஸித-யௌவனம்) யௌவனம் மேல் கிளம்புவதாயும் (தரல-சைசவ-அலங்க்ருதம்) பால்யத்தின் அலங்காரங்களும் அடையாளங்களும் மெள்ள மெள்ள நழுவுவதாயும் (மத-ச்சுரித-லோசனம்) யௌவன மதம் படர்ந்த கண்களை உடையதாயும் (மதன-முக்த-ஹாஸ-அம்ருதம்) காம ரஸத்தைக் குறிக்கும் அமுதம் போன்ற புன்முறுவலால் அழகியதாயும் (ப்ரதிக்ஷண-விலோகனம்) ஒவ்வொரு கணமும் புதிது புதிதான பார்வையுடையதாயும் (ப்ரணய-பீத-வம்சீ முகம்) அன்புடன் குழலின் அமுதத்தைப் பருகுவது போன்ற வாயையுடையதாயும் (ஜகத்-த்ரய-விமோஹனம்) முவ்வுலகத்தையும் மயக்குவதாயும் (மாமகம்) என்னுடைய (ஜீவிதம்) உயிர்நிலையாயும் உள்ள கிருஷ்ணன் எனும் தத்துவம் (ஜயதி) வெற்றியுடன் விளங்குகிறது.

ப்ரதிக்ஷண-விலோபனம். —பா. பே.

## 1·88. கிருஷ்ண தத்துவம் மேன்மேலும் விசித்திரமானது

चित्रं तदेतच्चरणारविन्दं चित्रं तदेतन्नयनारविन्दम् ।
चित्रं तदेतद्वदनारविन्दं चित्रं तदेतत्पुनरम्ब चित्रम् ॥१.८८॥

சித்ரம் ததேதச்சரணாரவிந்தம்
சித்ரம் ததேதந்நயனாரவிந்தம் ।
சித்ரம் ததேதத் வதனாரவிந்தம்
சித்ரம் ததேதத்புனரம்ப சித்ரம் ॥ 1.88 ॥

Kovilor Digital Library

1. 88. (தத்) அந்தக் கிருஷ்ணனுடைய (ஏதத்) என் முன்னே தோன்றும் இந்த (சரணாரவிந்தம்) திருவடித் தாமரை (சித்ரம்) ஆச்சரியமானது. (தத்) அந்தக் கிருஷ்ணனுடைய (ஏதத்) இந்த (நயனாரவிந்தம்) தாமரை போன்ற கண் (சித்ரம்) ஆச்சரியமானது. (தத்) அந்தக் கிருஷ்ணனுடைய (ஏதத்) இந்த (வதனாரவிந்தம்) தாமரை போன்ற முகமும் (சித்ரம்) ஆச்சரியமானது. (அம்ப!) அம்மா, அப்படிப் பிரசித்தமான (ஏதத்) இந்த கிருஷ்ண தத்துவம் (புனஃ) மேன்மேலும் (சித்ரம்) விசித்திரமாகவே இருக்கிறது.

### 1.89. கோபியர்களாகிய முத்துமாலைக்கு மரகதமணி போன்றவன்

अखिल-भुवनैक-भूष-मधिभूषित-
जलधि-दुहितृ-कुचकुम्भम् ।
व्रजयुवती-हारावलि-मरकत-
नायक-महामणिं वन्दे ॥ १.८९ ॥

அகில-புவனைக பூஷ-மதிபூஷித-
ஜலதி-துஹித்ரு-குசகும்பம் ।
வ்ரஜயுவதீ-ஹாராவலி-மரகத-
நாயக-மஹாமணிம் வந்தே ॥ 1.89 ॥

1. 89. (அகில-புவன-கை-பூஷம்) உலகனைத்திற்கும் ஒரே அணிகலனும், (ஜலதி-துஹித்ரு-) ஸமுத்ரராஜன் பெண்ணான லக்ஷ்மீதேவியின் (அதீபூஷித-குசகும்பம்) கலசம்போன்ற நகில்களுக்குச் சிறந்த அணிகலனும், (வ்ரஜயுவதீ-ஹாரவல்லீ) சூழ்ந்து நின்ற இளங்கோபியர்களாகிற முத்துமாலைக்கு (மரகத-நாயக-மஹாமணிம்) நடுநாயகமாயமைந்த மரகதமணியாயும் விளங்கும் கிருஷ்ணனை (வந்தே) நான் வணங்குகிறேன்.

Koviloor Digital Library


## 1.90. கிருஷ்ணன் எனும் ஒளி என் முன் விளையாடுகிறது

कान्ता-कचग्रहण-विग्रह-बद्ध-लक्ष्मी-
खण्डाङ्गराग-रसरञ्जित-मञ्जुलश्रीः ।
गण्डस्थली-मुकुर-मण्डल-खेलमान-
घर्माङ्कुरं किमपि खेलति कृष्णतेजः ॥ १.९० ॥

காந்தா-கசக்ரஹண-விக்ரஹ-பத்த-லக்ஷ்மீ-
கண்டாங்கராக-ரஸரஞ்ஜித-மஞ்ஜுலஸ்ரீ: ।
கண்டஸ்தலீ-முகுர-மண்டல-கேலமான-
கர்மாங்குரம் கிமபி கேலதி க்ருஷ்ணதேஜ: ॥

1. 90. (காந்தா-கச-க்ரஹண) நாயகியின் மயிர் முடியைப பிடித்து விளையாடிய (விக்ரஹ-பத்த-லக்ஷ்மீ-) பிரணயகலகத்தில் கட்டிக்கொள்ளப்பட்ட லக்ஷ்மிதேவியின் (கண்டாங்கராக-ரஸரஞ்ஜித-மஞ்ஜுலஸ்ரீ:) அங்கத்திலுள்ள காச்மிரச் சந்தனக் குழம்பினால் சிவப்பாக்கப் பெற்ற அழகுடனும், (கண்ட-ஸ்தலீ-முகுர-மண்டல-) கன்னமாகிற கண்ணாடியில் (கேலமான-) நடனம் புரியும் (கர்ம-அங்குரம்) வியர்வைத் துளிகளுடனும் (கிமபி) எதோ ஒரு (க்ருஷ்ணதேஜ:) கிருஷ்ணன் எனும் ஒளிப்பிழம்பு (கேலதி) என்முன் விளையாடுகிறது.

குசக்ரஹண. —பா. பே.

## 1.91. கிருஷ்ணன் இனிமையே உருவெடுத்தவன்

मधुरं मधुरं वपुरस्य विभो-
र्मधुरं मधुरं वदनं मधुरम् ।
मधुगन्धि मृदुस्मित-मेतदहो
मधुरं मधुरं मधुरं मधुरम् ॥ १.९१ ॥

Koviloor Digital Library


மதுரம் மதுரம் வபுரஸ்ய விபோர்-
மதுரம் மதுரம் வதனம் மதுரம் ।
மதுகந்தி-ம்ருதுஸ்மித-மேத-தஹோ
மதுரம் மதுரம் மதுரம் மதுரம் ॥ 1.91 ॥

1. 91. (அஸ்ய விபோ:) இந்தப் பிரபுவினுடைய (வபு:) திருமேனி (மதுரம் மதுரம்) இனியவை அனைத்திலும் இனியது; (வதனம்) அவனுடைய முகமோ (மதுகந்தி-) தேன் மணப்பதாய் (ம்ருதுஸ்மிதம்) புன்முறுவலுடன் பிரகாசிப்பதாய் (மதுரம்) எனக்கு இனியதாய் (மதுரம் மதுரம்) இனியவை அனைத்திலும் இனியதாய் உளது. (அஹோ!) ஆச்சரியம். (ஏதத்) இந்த கிருஷ்ண தத்துவம் (மதுரம், மதுரம், மதுரம், மதுரம்) இனியது, இனியது, இனியது, இனியது—என்று சொல்வதைத் தவிற வேறு விதமாய் வர்ணிக்கத் தெரியவில்லை.

## 1·92. உலகனைத்திற்கும் புகலிடம்

शृङ्गार-रस-सर्वस्वं शिखिपिञ्छ-विभूषणम् ।
अङ्गीकृत-नराकार-माश्रये भुवनाश्रयम् ॥ १.९२ ॥

ச்ருங்காரரஸ-ஸர்வஸ்வம் சிகிபிஞ்ச-விபூஷணம் ।
அங்கீக்ருத-நராகார-மாச்ரயே புவனாச்ரயம் ॥ 1.92 ॥

1. 92. (ச்ருங்கார-ரஸ-ஸர்வஸ்வம்) சிருங்கார ரஸத்தின் பரிபூர்ண ஸ்வருபனும் (சிகிபிஞ்ச-விபூஷணம்) மயிலிறகை ஆபரணமாய்க் கொண்டவனும் (அங்கீக்ருத-நராகாரம்) தன் விச்சையால் மனித வடிவெடுத்தவனும் (புவனாச்ரயம்) உலகனைத்திற்கும் புகலிடமும் ஆகிய ஸ்ரீ கிருஷ்ணனை (ஆச்ரயே) புகலடைகின்றேன்.

Koviloor Digital Library



## 1.93. காணற்கரிய கண்ணன் தரிசனம்

नाद्यापि पश्यति कदाचन दर्शनेन
चित्तेन चोपनिषदा सुदृशां सहस्रम् ।
स त्वं चिरं नयनयो-रनयोः पदव्यां
स्वामिन् कया नु कृपया मम सन्निधत्से ॥ १.९३ ॥

நாத்யாபி பச்யதி கதாசன தர்சனேன
சித்தேன சோபநிஷதா ஸுத்ருசாம் ஸஹஸ்ரம் ।
ஸ த்வம் சிரம் நயனயோ-ரனயோः பதவ்யாம்
ஸ்வாமின் கயா நு க்ருபயா மம ஸந்நிதத்ஸே ॥ 1.93 ॥

1. 93. (தர்சனேன) சாஸ்திரக் கல்வியாலும் (சித்தேன ச) தியானத்தாலும் (உபநிஷதா) உபநிஷத ஆராய்ச்சியாலும் (ஸுத்ருசாம் ஸஹஸ்ரம்) ஞானப் பார்வை படைத்த பண்டிதர்களின் குழாம் (அத்யாபி) இக்காலத்திலும் (கதாசன) வேறெக் காலத்திலும் (ந பச்யதி) எவனைக் காணவில்லையோ (ஸ த்வம்) அப்படிப்பட்ட நீ, (ஸ்வாமின்) பிரபுவே! (கயா நு க்ருபயா) ஒரு காரணமுமில்லாத எந்தக் கிருபையால் (மம) என்னுடைய (அனயோः நயனயோः) இந்த ஊனக் கண்களின் (பதவ்யாம்) பார்வை செல்லும் வழியில் (சிரம்) நெடு நேரம் (ஸந்நிதத்ஸே) பிரஸன்னமாயிருக்கிறாய்?

கதஞ்சன | கதா நு | —பா. பே.

## 1.94. நிரதிசயமான வடிவம்

केयं कान्तिः केशव त्वन्मुखेन्दोः
कोऽयं वेषः कोऽपि वाचामभूमिः ।
सेयं सोऽयं स्वादुना मञ्जुलश्रीः
भूयो भूयो भूयसस्त्वां नमामि ॥ १.९४ ॥

Koviloor Digital Library

கேயம் காந்தி: கேசவ த்வன்முகேந்தோ:
கோऽயம் வேஷ: கோऽபி வாசாமபூமி: ।
ஸேயம் ஸோऽயம் ஸ்வாதுதா மஞ்ஜுலஸ்ரீ:
பூயோ பூயோ பூயசஸ்தாந் நமாமி ॥ 1.94 ॥

1. 94. (கேசவ) கிருஷ்ணா! (த்வத்) உன்னுடைய (முக-இந்தோ:) முகமாகிற சந்திரனுடைய (இயம்) இந்த (காந்தி:) பிரகாசம் (கா) எப்படிப்பட்டது? (க: அபி வாசாம் அபூமி:) நிரதிசயமான அவ்வடிவம் வாக்குக்கு எட்டாதது. (ஸா இயம்) அந்தக் காந்தியும் (ஸ: அயம்) அந்த வடிவமும் (ஸ்வாதுதா) இனிமையும் (மஞ்ஜுலஸ்ரீ:) அழகின் பெருமையும் மிகுந்துள்ளன. (பூய: பூய: பூய:) மீண்டும் மீண்டும் மீண்டும் (தான்) அவற்றை (நமாமி) நமஸ்கரிக்கின்றேன்.

## 1.95. சந்திரகாந்தி பொருந்திய நகங்களையுடைய திருவடி

वदनेन्दु-विनिर्जितश्शशी दशधा देव पदं प्रपद्यते ।
अधिकां श्रिय-मश्नुतेतरां तव कारुण्य-विजृम्भितं कियत् ॥

வதனேந்து-விநிர்ஜித:-சசீ
தசதா தேவ பதம் ப்ரபத்யதே ।
அதிகாம் ச்ரிய-மச்னுதேதராம் தவ
காருண்ய-விஜ்ரும்பிதம் கியத் ॥ 1.95 ॥

1. 95. (வதன - இந்து -) உன் முகமாகிற சந்திரனால் (விநிர்ஜித:) ஜயிக்கப்பட்ட (சசீ) சந்திரன் (தசதா-) பத்து உருவெடுத்துக்கொண்டு (தேவ) தேவதேவனே! (பதம்)-நகங்களாக - உன் பாதங்களை (ப்ரபத்யதே) வந்தடைகிறான். (அதிகாம் ச்ரியம்)-அதனால்-அதிகமான பிரகாசத்தை (அச்னுதே தராம்) அடைகிறான். (தவ) உன்னுடைய (காருண்ய - விஜ்ரும்பிதம்) கருணையின் மலர்ச்சி (கியத்) எவ்வளவு சிறந்தது?

தாருண்ய-விஜ்ரும்பிதம் —பா. பே.

Koviloor Digital Library


## 1.96. உவமையற்ற அழகு

तत्त्वन्मुखं कथमिवाब्ज-समानकक्ष्यं
वाङ्माधुरी-बहुलपर्व-कलासमृद्धम् ।
तत् किं ब्रुवे किमपरं भुवनैक-कान्तं
यस्य त्वदाननसमा सुषमा सदा स्यात् ॥ १.९६ ॥

தத்-த்வன்முகம் கதமிவாப்ஜ-ஸமானகக்ஷ்யம்
வாங்மாதுரீ-பஹுல-பர்வ-கலா-ஸம்ருத்தம் ।
தத் கிம் ப்ருவே கிமபரம் புவனைக-காந்தம்
யஸ்ய த்வதானனஸமா ஸுஷமா ஸதா ஸ்யாத் ॥

1. 96. (வாங்மாதுரீ) இன்சொல்லாகிற (பஹுல-பர்வ-கலா-) பல பௌர்ணமிக் கலைகளால் (ஸம்ருத்தம்) பரிபூர்ணமாய் விளங்கும் (தத்) அந்த (த்வத் முகம்) உன்னுடைய முகம் (கதம் இவ) எப்படி (அப்ஜ-) கடலில் தோன்றிய சந்திரனுக்கு (ஸமான-கக்ஷ்யம்) சமமாகக் கூறமுடியும்? (தத்) அவ்வழகை (கிம் ப்ருவே) என்னவென்று வர்ணிப்பேன்? (கிம் அபரம்) வேறு எது (புவன-ஏக-காந்தம்) உலகனைத்தையும் ஒருங்கே வசீகரிப்பதாய் உளது? (யஸ்ய ஸுஷமா) எதனுடைய அழகு (த்வத ஆனன ஸமா) உன் முகத்திற்குச் சமமாயும் (ஸதா) வளர்வதும் தேய்வதுமில்லாமல் எப்போதும் ஒரு தன்மையாயும் (ஸ்யாத்) இருக்கிறது?—எதுவுமில்லை.

தத்கிம் பவேத். —பா. பே.

## 1.97 சந்திரன் கிருஷ்ணனுடைய முக மண்டலத்திற்குச் செய்யும் நீராஜனம்

शुश्रूषसे यदि वचः शृणु मामकीनं
पूर्वै-रपूर्व-कविभि-र्न कटाक्षितं यत् ।
नीराजनक्रम-धुर भवदाननेन्दोः
निर्व्याज-मर्हति चिराय शशि-प्रदीपः ॥ १.९७ ॥

Koviloor Digital Library


சுச்ருஷஸே யதி வச: ச்ருணு மாமகீனம்
பூர்வை-ரபூர்வ-கவிபிர்-ந கடாக்ஷிதம் யத் ।
நீராஜனக்ரம-துரம் பவதானனேந்தோ:
நிர்வ்யாஜ-மர்ஹதி சிராய சசி-ப்ரதீப: ॥ 1.97 ॥

1. 97. (பூர்வை:) முன்னோர்களான (அபூர்வ-கவிபி:) ஒப்பற்ற கவிகளால் (யத்) எந்த விஷயம் (ந கடாக்ஷிதம்) கண்டு கூறப்படவில்லையோ - அப்படிப்பட்ட - (மாமகீனம் வச:) என்னுடைய வார்த்தையை (சுச்ருஷஸே யதி) கேட்க விரும்பினால் (ச்ருணு) கேட்பாயாக. (சசிப்ரதீப:) சந்திரன் தீபமாயிருந்துகொண்டு (பவத்-ஆனன-இந்தோ:) உன்னுடைய முகமாகிற சந்திரனுக்கு (நீராஜன-க்ரம-துரம்) நீராஜனம் செய்யும் பொறுப்பை (சிராய) வெகுகாலம் (நிர்வ்யாஜம்) வேறு நோக்கமின்றி ஏற்க (அர்ஹதி) தகுதியுடையதாயிருக்கிறது.

சிராயு-சசி-ப்ரதீப: —பா. பே.

## 1.98. குளிர்ந்த புன்முறுவலின் சிறப்பு

अखण्ड-निर्वाण-रस-प्रवाहै-
विखण्डिताशेष-रसान्तराणि ।
अयन्त्रितोद्वान्त-सुधार्णवानि
जयन्ति शीतानि तव स्मितानि ॥ १.९८ ॥

அகண்ட-நிர்வாண-ரஸ-ப்ரவாஹைர்-
விகண்டிதாசேஷ-ரஸாந்தராணி ।
அயந்த்ரிதோத்வாந்த-ஸுதார்ணவானி
ஜயந்தி சீதானி தவ ஸ்மிதானி ॥ 1.98 ॥

1. 98. (அகண்ட) அளவுகடந்த (நிர்வாண - ரஸ - ப்ரவாஹை:) முக்தி ரஸமாகிற இன்ப வெள்ளத்தால் (விகண்டித-அசேஷ-ரஸாந்தராணி) மற்ற விஷய ரஸங்களனைத்தையும் ஒருங்கே

சிதறடிப்பனவாயும் (அயந்த்ரித-) ஒரு முயற்சியுமின்றி (உத்வாந்த-ஸுதா-அர்ணவானி) அமுதக்கடலை உமிழ்வனவாயும் (ஜயந்தி) விளங்குகின்றன (தவ) உன்னுடைய (சீதானி ஸ்மிதானி) குளிர்ந்த புன்முறுவல்கள்.

நியந்த்ரித. —பா. பே.

## 1.99. அழகின் எல்லை நிலம் அவனே

**कामं सन्तु सहस्रशः कतिपये स्वारस्यधौरेयकाः**
**कामं वा कमनीयता-परिणति-स्वाराज्यबद्धव्रताः।**
**तैर्नैव विवदामहे न च वयं देव प्रियं ब्रूमहे**
**यत्सत्यं रमणीयता-परिणति-स्त्वय्येव पारंगता ॥ १.९९ ॥**

காமம் ஸந்து ஸஹஸ்ரசः
கதிபயே ஸ்வாரஸ்ய-தௌரேயகாः
காமம் வா கமனீயதா-பரிணதி-
ஸ்வாராஜ்ய-பத்தவ்ரதாः।
தைர்நைவம் விவதாமஹே ந ச
வயம் தேவ ப்ரியம் ப்ரூமஹே
யத்ஸத்யம் ரமணீயதா-பரிணதிஸ்-
த்வய்யேவ பாரங்கதா ॥ 1.99 ॥

1. 99. (தேவ) தேவதேவனே! (ஸ்வாரஸ்ய - தௌரேயகாः) ஸௌபாக்கியத்தில் தலைசிறந்தவர்கள் (கதிபயே) சிலராகவோ (ஸஹஸ்ரசः) ஆயிரக்கணக்காகவோ (காமம் ஸந்து) இஷ்டப்படி இருக்கட்டும். (கமனீயதா-பரிணதி-) முதிர்ந்த அழகின் (ஸ்வாராஜ்ய-) ஏகபோக உரிமை தங்களுடையதென்ற (பத்த வ்ரதாः) விரதத்தில் கட்டப்பட்டவர்களும் (காமம் வா) இஷ்டப் படி இருக்கட்டும். (தைः) அவர்களுடன்! (வயம்) நாங்கள் (ந ஏவம் விவதாமஹே) விவாதத்திற்குச் செல்லவில்லை; (ந ச ப்ரியம் ப்ரூமஹே) பிரிய வார்த்தையும் பேசவில்லை. (ரமணீயதா-

Koviloor Digital Library

பரிணதி:) அழகின் முதிர்ச்சி (த்வயி ஏவ பாரங்கதா) உன்னிடத்திலேயே எல்லை நிலத்தை யடைந்திருப்பது (யத் ஸத்யம்) ஸத்தியமாயிருக்கும் காரணத்தால்.

ஸாரஸ்ய தௌரேயகா: | கமநீயதா-பரிமள- | —பா. பே.

## 1.100 ஆயர் குலத்துதித்த பூர்ண சந்திரன்

मन्दारमूले मदनाभिरामं बिम्बाधरापूरित-वेणुनादम् ।
गोगोपगोपीजन-मध्यसंस्थं गोप भजे गोकुल-पूर्णचन्द्रम् ॥

மந்தாரமூலே மதனாபிராமம்
பிம்பாதராபூரித-வேணுநாதம் ।
கோகோபகோபீஜன-மத்ய-ஸம்ஸ்தம்
கோபம் பஜே கோகுல-பூர்ணசந்த்ரம் ॥ 1.100 ॥

1. 100. (மந்தார மூலே) கல்ப விருக்ஷத்தினடியில் (கோ-கோப - கோபீஜன - மத்ய - ஸம்ஸ்தம்) பசுக்கள், கோபர்கள், கோபிகள் சூழ அவர்கள் மத்தியில் நிற்பவனும் (பிம்ப-அதர-வேணு-நாதம்) கோவைப் பழம்போல் சிவந்த உதட்டில் விளங்கும் குழலினின்று ஒலியை எழுப்புபவனும் (மதன-அபிராமம்) மன்மதனைக் காட்டிலும் அழகியவனும் (கோகுல பூர்ண சந்த்ரம்) ஆய்ப்பாடியிலுதித்த பூர்ண சந்திரன் போன்றவனும் ஆகிய (கோபம்) ஆய்குலந்துக் கண்ணனை (பஜே) போற்றுகிறேன்.

## 1.101. நீ பிறந்ததால் என் பிறவியும் பயனுள்ளதாயிற்று

गलद्व्रीडा लोला मदनवनिता गोपवनिता
मधुस्फीतं गीतं किमपि मधुरं चापल-धुराः ।
समुज्जृम्भा गुम्भा मधुरिमगिरां मादृशगिरां
त्वयि स्थाने जाते दधति चपलं जन्म च फलम् ॥१.१०१॥

Koviloor Digital Library


கலத்வ்ரீடா லோலா மதனவனிதா கோபவனிதா
மதுஸ்பீதம் கீதம் கிமபி மதுராः சாபலதுராः ।
ஸமுஜ்ஜ்ரும்பா கும்பா மதுரிமகிராம் மாத்ருசகிராம்
த்வயி ஸ்தானே ஜாதே தததி சபலம் ஜன்ம ச பலம் ॥

1. 101. (த்வயி ஜாதே) நீ அவதாரம் செய்த மாத்திரத்தில் (லோலாः) சபலசித்தமுடைய (கோபவனிதாः) இடைப்பெண்கள் (கலத்-வ்ரீடாः) நாணம் நழுவியவர்களாகவும் (மதனவனிதாः) காம வசப்பட்டவர்களாகவும் ஆனார்கள்; (கீதம் கிமபி) — உன்னைப்பற்றி அவர்கள் பாடிய—பாட்டு எதுவாயினும் (மது ஸ்பீதம்) தேனைப்போல் இனியதாயிற்று; (சாபலதுராः) விளையாட்டெல்லாம் (மதுராः) - ஞானியர்க்கும் - இன்பந் தருவனவாயின; (மாத்ருச-கிராம்) என் போன்றவர்களுடைய வார்த்தைகளின் (கும்பா) கூட்டம் (மதுரிம-கிராம்)- கவிகளின் இனிய சொற்களைப் போல் (ஸமுஜ்ஜ்ரும்பா) சிறப்புடையனவாயின; (சபலம்) நிலையற்றதான (ஜன்ம ச) - என்னுடைய - பிறவியும் (பலம் தததி) பயனைப் பெற்றதாக விளங்குகிறது; (ஸ்தானே) இது எல்லாம் பொருத்தமே.

தததி ஜன்ம-ஸ்பலம் ।  —பா. பே.

## 1.102. உன் விளையாட்டு விசித்திரமானது

भुवनं भवनं विलासिनी श्री-
स्तनय-स्तामरसासनः स्मरश्च ।
परिचार-परम्पराः सुरेन्द्रा-
स्तदपि त्वच्चरितं विभो विचित्रम् ॥ १.१०२ ॥

புவனம் பவனம் விலாஸினீ ஸ்ரீஸ்-
தநயஸ் தாமரஸாஸநः ஸ்மரச்ச ।
பரிசார-பரம்பராः ஸுரேந்த்ராஸ்-
ததபி த்வச்சரிதம் விபோ விசித்ரம் ॥ 1.102 ॥

Kovilnoor Digital Library

1. 102. (புவனம் பவனம்) உலகமே உன் வீடு; (விலாஸினீ ஸ்ரீஃ) லக்ஷ்மீதேவி உன் மனைவி; (தாமரஸ - ஆஸனஃ) தாமரையில் வீற்றிருக்கும் பிரம்மா (தனயஃ) குமாரன்; (ஸ்மரஃ ச) மன்மதனும் குமாரன். (ஸுரேந்த்ராஃ) தேவசிரேஷ்டர்கள் (பரிசார-பரம்பராஃ) பணியாட்களின் கூட்டம்; (விபோ!) எங்கும் நிறைந்த கிருஷ்ணா! (த்வத் சரிதம்) உன்னுடைய விளையாட்டோ (தத் அபி) அது எல்லாவற்றைக் காட்டிலும் (விசித்ரம்) ஆச்சரிய மானது.

பவனம் புவனம். —பா. பே.

## 1.103. கிருஷ்ணன் வெற்றியுடன் விளங்கட்டும்

देवस्त्रिलोक-सौभाग्य-कस्तूरी-तिलकाङ्कुरः ।
जीयाद्व्रजाङ्गनानङ्गकेली-ललितविभ्रमः ॥ १.१०३ ॥

தேவஸ்த்ரிலோக-ஸௌபாக்ய-கஸ்தூரீ-திலகாங்குரஃ ।
ஜீயாத்வ்ரஜாங்கனானங்ககேலீ-லலிதவிப்ரமஃ ॥ 1.103 ॥

1. 103. (த்ரிலோக-ஸௌபாக்ய-) மூவுலகங்களின் சிறந்த பாக்கியத்திற்கு அடையாளமாக (கஸ்தூரீ - திலக - அங்குரஃ) நெற்றியிலிடப்பட்ட சிறு கஸ்தூரி திலகத்தை உடையவனும் (வ்ரஜ-அங்கனா) இடைப்பெண்களின் (அனங்க கேலீ) காம லீலைகளாலுண்டான (லலித-) அழகிய (விப்ரமஃ) வியாபாரங்களை உடையவனுமான (தேவஃ) கிருஷ்ணன் (ஜீயாத்) வெற்றியுடன் விளங்கட்டும்.

தேவஸ் த்ரிலோகீ. —பா. பே.

## 1.104. எனக்கு எல்லாம் நீயே

प्रेमदं च मे कामदं च मे वेदनं च मे वैभवं च मे ।
जीवनं च मे जीवितं च मे दैवतं च मे देव नापरम् ॥

Koviloor Digital Library

ப்ரேமதந் ச மே காமதஞ்ச மே
வேதனஞ்சமே வைபவஞ்சமே ।
ஜீவனஞ் ச மே ஜீவிதஞ்ச மே
தைவதஞ்சமே தேவ நாபரம் ॥ 1.104 ॥

1. 104. (தேவ) தேவதேவனே! (மே) எனக்கு (ப்ரேமதம் ச) அன்பை அளிப்பவனும், (மே) எனக்கு (காமதம் ச) ஆசையைப் பூர்த்தி செய்பவனும், (மே) எனக்கு (வேதனம் ச) அறிவைக் கொடுப்பவனும், (மே) எனக்கு (வைபவம் ச) செல்வமும் (மே) எனக்கு (ஜீவனம் ச) உயிரும், (மே) எனக்கு (ஜீவிதம் ச) ஆயுளும், (மே) எனக்கு (தைவதம் ச) தெய்வமும் (அபரம்) உன்னையன்றி வேறாக (ந) இல்லை.

ஒ. த்வமேவ மாதா ச பிதா த்வமேவ
த்வமேவ பந்துர்ச ஸகா த்வமேவ ।
த்வமேவ வித்யா த்ரவிணம் த்வமேவ
த்வமேவ ஸர்வம் மம தேவதேவ ॥

## 1.105. வாக்கு அவன் பெருமையைப் பேச மனது அவனை தியானிக்க

माधुर्येण विजृम्भन्तां वाचो नस्तव वैभवे ।
चापल्येन विवर्धन्तां चिन्ता नस्तव शैशवे ॥ १.१०५ ॥

மாதுர்யேண விஜ்ரும்பந்தாம் வாசோ நஸ்தவ வைபவே ।
சாபல்யேன விவர்த்தந்தாம் சிந்தா நஸ்தவ சைசவே ॥

1. 105. (தவ) உன்னுடைய (வைபவே) பெருமையைப் பேசுவதில் (நஃ) எங்களுடைய (வாசஃ) வாக்குகள் (மாதுர்யேண) மதுரமாக (விஜ்ரும்பந்தாம்) வளர்ச்சியடையட்டும். (தவ) உன்னுடைய (சைசவே) பாலலீலைகளை தியானிப்பதில் (நஃ) எங்களுடைய (சிந்தாஃ) எண்ணங்கள் (சாபல்யேன) மிகுந்த பிரீதியுடன் (விவர்த்தந்தாம்) பெருகட்டும்.

Kovilgor Digital Library

௭. ஜிஹ்வே கீர்த்தய கேசவம்
முரரிபும் சேதோ பஜ ஸ்ரீதரம்
பாணித்வந்த்வ ஸமர்ச்சய
அச்யுதகதா: ச்ரோத்ரத்வய த்வம் ச்ருணு ।
க்ருஷ்ணம் லோகய லோசனத்வய ஹரேர்
கச்சாங்க்ரியுக்மாலயம்
ஜிக்ர க்ராண முகுந்தபாததுலஸீம்
மூர்த்தன் நமாதோக்ஷஜம் ॥

—முகுந்தமாலா

**1.106. உன்னுடைய லீலையாகிற அமுதவெள்ளம் என் உள்ளத்தில் பெருகட்டும்**

**यानि त्वच्चरितामृतानि रसनालेह्यानि धन्यात्मनां**
**ये वा चापल-शैशव-व्यतिकरा राधापराधोन्मुखाः ।**
**या वा भावित-वेणुगीत-गतयो लीलामुखाम्भोरुहे**
**धारावाहिकया वहन्तु हृदये तान्येव तान्येव मे ॥ १.१०६ ॥**

யானி த்வச்சரிதாம்ருதானி
ரஸநாலேஹ்யானி தன்யாத்மனாம்
யே வா சாபல-சைசவ-
வ்யதிகரா ராதாபராதோன்முகா: ।
யா வா பாவித-வேணுகீத-கதயோ
லீலாமுகாம்போருஹே
தாராவாஹிகயா வஹந்து ஹ்ருதயே
தான்யேவ தான்யேவ மே ॥ 1.106 ॥

1. 106. (தன்யாத்மனாம்) புண்ணியத்தைச் செல்வமாய்ப் படைத்தவர்களுக்கு (ரஸநா-லேஹ்யானி) நாவினால் ருசிக்கப்படும் லேஹ்யங்களாக உள்ள (த்வத் சரிதாம்ருதானி) அமுதம் போன்ற உனது சரித்திரங்கள் எவையோ, (ராதா-அபராத உன்முகா:) ராதையிடம் விஷமம் செய்வது முதலிய (சாபல-சைசவ வ்யதிகரா:)

Koviloor Digital Library


உலக விபரீதமான பால லீலைகள் (யே வா) எவையோ, (பாவித) எல்லோராலும் கொண்டாடப்பட்ட (வேணுகீத - கதய:) குழலோசையின் கதிகள் (லீலா - முக - அம்போருஹே) லீலைபுரிய விருப்பங்கொண்ட உனது முக கமலத்தில் (யா வா) எவை உதிக்கின்றனவோ, (தானி ஏவ) அவையே (தானி ஏவ) அவையே மீண்டும் மீண்டும் (மே) எனது (ஹ்ருதயே) இருதயத்தில் (தாரா-வாஹிகயா) தொடர்ந்து செல்லும் வெள்ளம்போல் (வஹந்து) பெருகிக் கொண்டிருக்கட்டும்.

வேணுகீதி | —பா. பே.

## 1.107. உன்னிடம் பக்தி உண்டானால் தர்மார்த்த காம மோக்ஷம் தாமே சித்திக்கும்

भक्तिस्त्वयि स्थिरतरा भगवन् यदि स्या-
दैवेन नः फलितदिव्य-किशोरवेषे।
मुक्तिः स्वयं मुकुलिताञ्जलि सेवतेऽस्मान्
धर्मार्थ-काम-गतयः समयप्रतीक्षाः॥ १.१०७॥

பக்திஸ்த்வயி ஸ்திரதரா பகவன் யதி ஸ்யாத்
தைவேன ந: பலித-திவ்ய-கிசோர-வேஷே ।
முக்தி: ஸ்வயம் முகுலிதாஞ்ஜலி ஸேவதே஽ஸ்மான்
தர்மார்த்த-காம-கதய: ஸமயப்ரதீக்ஷா: ॥ 1.107 ॥

1. 107. (பகவன்) பகவானே! (ந:) எங்களுடைய (தைவேன) பூர்வ புண்ணிய வசமாக (பலித திவ்ய-கிசோர-வேஷே) திவ்வியமான இளம்பிள்ளை வடிவுகொண்டு விளங்கும் (த்வயி) உன்னிடத்தில் (ஸ்திரதரா) செவ்வனே நிலைத்த (பக்தி:) பக்தியானது (ஸ்யாத் யதி) இருக்குமேயானல் (முக்தி:) முக்தியானது (ஸ்வயம்) தானகவே (முகுலிதாஞ்ஜலி) கூப்பிய கையுடன் (அஸ்மான்) எங்களை (ஸேவதே) வந்தடையும் (தர்ம-அர்த்த-காம-கதய:) அறம் பொருள் இன்பம் ஆகியவற்றின்

Koviloor Digital Library

பயன்கள் (ஸமய-ப்ரதீக்ஷா:) வந்து சேரவேண்டிய காலத்தை எதிர்பார்த்துக் கொண்டிருப்பன வாகும்.

பக்திர்யதி ஸ்திரதரா | முகுலிதாஞ்ஜலி-ரேவசாஸ்யான்
—பா. பே.

## 1.108. செவிக்கும் மனதுக்கும் கண்ணுக்கும் அமுதமாகியவன்

जय जय जय देव देव-देव त्रिभुवनमङ्गल-दिव्यनामधेय ।
जय जय जय बालकृष्णदेव श्रवणमनोनयनामृतावतार ॥

ஜய ஜய ஜய தேவ தேவ-தேவ
த்ரிபுவனமங்கள-திவ்யநாமதேய ।
ஜய ஜய ஜய பாலக்ருஷ்ணதேவ
ச்ரவண-மனோநயனாம்ருதாவதார ॥ 1.108 ॥

1. 108. (த்ரிபுவன-மங்கள-திவ்ய-நாமதேய) மூவுலகிற்கும் மங்களத்தைச் செய்யும் சிறந்த பெயரை உடையவனே! (தேவ தேவ-தேவ) தேவ, தேவர்களுக்கும் தெய்வமே! (ஜய ஜய ஜய) மூவ்வுலகிலும் முக்காலத்திலும் வெற்றியுடன் விளங்குவாயாக. (ச்ரவண-மனோ-நயன-) செவிக்கும் மனதுக்கும் கண்ணுக்கும் (அம்ருத-அவதார) அமுதம் போன்று அவதரித்தவனே! (பால-க்ருஷ்ண-தேவ) பாலகிருஷ்ணனாகிய தெய்வமே! (ஜய ஜய ஜய) மேன்மேலும் வெற்றியுடன் விளங்குவாயாக.

## 1.109. புண்ணியவான்களின் தியானங்களில் தெளிவுறத் தோன்றுபவன்

तुभ्यं निर्भर-हर्षवर्ष-विवशावेश-स्फुटाविर्भव-
द्भूयश्चापलभूषितेषु सुकृतां भावेषु निर्भासते ।
श्रीमद्गोकुल-मण्डनाय महते वाचां विदूर-स्फुट-
न्माधुर्यैक-रसार्णवाय महसे कस्मै चिदस्मै नमः ॥ १.१०९ ॥

Koviloor Digital Library


துப்யம் நிர்பர-ஹர்ஷவர்ஷ-
விவசாவேச-ஸ்புடாவிர்பவத்-
பூயச்சாபல-பூஷிதேஷு
ஸுக்ருதாம் பாவேஷு நிர்ப்பாஸதே ।
ஸ்ரீமத்கோகுல-மண்டனாய மஹதே
வாசாம் விதூர-ஸ்புடன்
மாதுர்யைக-ரஸார்ணவாய
மஹஸே கஸ்மை சிதஸ்மை நமః ॥ 1.109 ॥

1. 109. (நிர்ப்பர -) பரிபூர்ணமான (ஹர்ஷ - வர்ஷ -) ஆனந்த மழைப் பொழிவில் (விவச - ஆவேச -) மெய்மறந்த ஆவலினால் (ஆவிர்ப்பவத்) பிரகாசிக்கிற (பூயச்சாபல பூஷிதேஷு) பால லீலைகளால் மிகுதியும் அலங்கரிக்கப் பெற்ற (ஸுக்ருதாம் பாவேஷு) புண்ணியவான்களின் தியானங்களில் (நிர்ப்பாஸதே) தெளிவுறத் தோன்றுபவனும் (ஸ்ரீமத் கோகுல-மண்டனாய) செல்வம் நிறைந்த கோகுலத்திற்கு அணிபோன்றவனும் (மஹதே) மகிமை மிக்கவனும் (வாசாம்) வாக்குக்கு (விதூரஸ்புடத்) வெகு தூரத்தில் இருப்பவனும் (மாதுர்ய-ஏக-ரஸ - அர்ணவாய) இனிமைக்குக் கடல் போன்ற ஒருவனும் (மஹஸே) ஒளி வண்ணனும (கஸ்மை சித்) வர்ணிக்க முடியாத பிரபாவமுடையவனும் ஆகிய (அஸ்மை) இந்த-எனக்குப் பிரத்தியக்ஷமான-(துப்யம்) உனக்கு (நமః) நமஸ்காரம்.

சாபல்யேன விபூஷிதேஷு | ஸ்புரன் மாதுர்யைக ॥

## 1.110. அழியாத புகழ்

ईशान-देव चरणाभरणेन नीवी-
दामोदरस्थिरयशः स्तवकोद्गमेन ।
लीलाशुकेन रचितं तव देव कृष्ण-
कर्णामृतं वहतु कल्पशतान्तरेऽपि ॥ १.११० ॥

॥ इति श्रीकृष्णकर्णामृते प्रथमाश्वासः समाप्तः ॥

Koviloor Digital Library

ஈசான-தேவ-சரணாபரணேன நீவீ
தாமோதர-ஸ்திரயசஃ ஸ்தபகோத்கமேன ।
லீலாசுகேன ரசிதம் தவ தேவ க்ருஷ்ண
கர்ணாம்ருதம் வஹது கல்பசதாந்தரே஽பி ॥ 1.110॥

॥ இதி ஸ்ரீ க்ருஷ்ணகர்ணாம்ருதே
ப்ரதமாச்வாஸஃ ஸமாப்தஃ ॥

1. 110. (தேவ க்ருஷ்ண -) தேவதேவனாகிய கிருஷ்ணா! (ஈசான தேவ-சரண-) சிவபிரானுடைய திருவடிகளை (ஆபரணேன) தலைக்கு ஆபரணமாய்க் கொண்டவனும் (நீவீ - தாமோதர -) யசோதையால் கயிறுகொண்டு வயிற்றில் கட்டப்பெற்ற கண்ணனுடைய (ஸ்திர - யசஃ) அழியாத புகழ் ஆகிய (ஸ்தபக-) பூங்கொத்துப் போன்ற இந்த ஸ்தோத்திரத்தை-உலகுக்களிப்பதில்-(உத்கமேன) விருப்பமுடையவனும் ஆகிய (லீலா சுகேன) லீலா சுகனால் (ரசிதம்) செய்யப்பட்ட இந்த நூல் (கல்பசதாந்தரே அபி) நூறு கல்ப காலத்திற்கப்பாலும் (கர்ண-அம்ருதம்) செவிக்கு அமுதம்போல் இனிமையை (வஹது) உண்டு பண்ணட்டும்.

ஸ்ரீகிருஷ்ணகர்ணாம்ருதத்தில் முதல் ஆச்வாஸம்
முற்றும்.

Koviloor Digital Library

## ॥ द्वितीयाश्वासः ॥

### இரண்டாவது ஆச்வாஸம்

**2.1. கிருஷ்ணன் நமது மனோரதத்தைப் பூர்த்தி செய்யட்டும்**

अभिनव-नवनीत-स्निग्ध-मापीत-दुग्धं
दधिकण-परिदिग्धं मुग्धमङ्गं मुरारेः ।
दिशतु भुवनकृच्छ्रच्छेदि तापिञ्छ-गुच्छ-
च्छवि नवशिखिपिञ्छा-लाञ्छितं वाञ्छितं नः ॥

**த்விதீயாச்வாஸஃ**

அபிநவ-நவநீத-ஸ்நிக்த-மாபீத-துக்தம்
ததிகண-பரிதிக்தம் முக்தமங்கம் முராரேஃ ।
திசது புவனக்ருச்ச்ரச்சேதி தாபிஞ்ச்ச-குச்சச்-
சவி நவசிகிபிஞ்சா-லாஞ்சிதம் வாஞ்சிதம் நஃ ॥ 2.1 ॥

2. 1. (அபிநவ-) புதிதான (நவநீத-) வெண்ணெய்யினால் (ஸ்நிக்தம்) பளபளப்பாயிருப்பதும், (ஆபீத-துக்தம்) பாலைக் குடித்ததும் (ததிகண-பரிதிக்தம்) தயிர்த் துளிகளால் பூசப் பெற்றதும் (புவன-) உலகத்தின் (க்ருச்ச்ரச்சேதி) துன்பத்தைப் போக்குவதும் (தாபிஞ்ச - குச்சச் - சவி) பச்சை மரத்தினுடைய பூங்கொத்துப் போல் காந்தியுடையதும் (நவ-) புதிய (சிகி-பிஞ்சா-) மயிலிறகால் (லாஞ்சிதம்) அலங்கரிக்கப் பெற்றதும் ஆகிய (முராரேஃ) கிருஷ்ணனுடைய (முக்தம்) அழகிய (அங்கம்) திருமேனி (நஃ) நம்முடைய (வாஞ்சிதம்) மனோரதத்தை (திசது) அளிக்கட்டும்.

Koviloor Digital Library

## 2.2. கருமுகில் வண்ணன் நம்மைக் காக்கட்டும்

**यां दृष्ट्वा यमुनां पिपासुरनिशं व्यूहो गवां गाहते**
**विद्युत्वानिति नीलकण्ठ-निवहो यां द्रष्टु-मुत्कण्ठते ।**
**उत्तंसाय तमाल-पल्लवमिति च्छिन्दन्ति यां गोपिकाः**
**कान्तिः कालियशासनस्य वपुषः सा पावनी पातु नः ॥**

யாம் த்ருஷ்ட்வா யமுனும் பிபாஸு
ரநிசம் வ்யூஹோ கவாம் காஹதே
வித்யுத்வாநிதி நீலகண்ட-நிவஹோ
யாம் த்ரஷ்டு-முத்கண்டதே ।
உததம்ஸாய தமால-பலலவமிதி
ச்சிந்தந்தி யாம் கோபிகாঃ
காந்திঃ காளியசாஸனஸ்ய
வபுஷঃ ஸா பாவனீ பாது நঃ ॥ 2.2 ॥

2. 2. (யாம்) எந்தக் காந்தியை (த்ருஷ்ட்வா) பார்த்து (கவாம்) பசுக்களின் (வ்யூஹঃ) கூட்டம் (பிபாஸுঃ) தண்ணீர் குடிக்க விரும்பி (அநிசம்) எப்போதும் (யமுனும்) யமுனை என்று எண்ணி (காஹதே) பிரவேசிக்கிறதோ; (வித்யுத்வான் இதி) மின்னலுடன் கூடிய மேகம் என்று எண்ணி (நீலகண்ட நிவஹঃ) மயில்களின் கூட்டம் (யாம்) எந்தக் காந்தியை (த்ரஷ்டும்) பார்ப்பதற்கு (உத்கண்டதே) விரும்புகிறதோ; (உத்தம்ஸாய) தலையில் அணிந்துகொள்ள (தமால-பல்லவம் இதி) பசு மரத்தின் தளிர் என்று எண்ணி (யாம்) எந்த ஒளி வடிவை (கோபிகாঃ) கோபிகைகள் (ச்சிந்தந்தி) கிள்ளுகிறார்களோ; (காளிய-சாஸனஸ்ய) காளியனைத் தண்டித்த கிருஷ்ணனுடைய (வபுஷঃ) திருமேனியின் (ஸா பாவனீ காந்திঃ) அந்தப் புனிதமான காந்தி (நঃ) நம்மை (பாது) பாதுகாக்கட்டும்.

Koviloor Digital Library

## 2.3. கோபியர்களின் ஆடைகளை அபகரித்த கண்ணன்

देवः पायात्पयसि विमले यामुने मज्जतीनां
याचन्तीना-मनुनयपदै-र्वञ्चितान्यंशुकानि ।
लज्जालोलै-रलस-विलसै-रुन्मिषत्पञ्चबाणै-
र्गोपस्त्रीणां नयनकुसुमै-रर्चितः केशवो नः ॥ २.३ ॥

தேவஃ பாயாத் பயஸி விமலே யாமுனே மஜ்ஜதீனாம்
யாசந்தீனா-மனுநயபதைர்-வஞ்சிதான்யம்சுகானி ।
லஜ்ஜா-லோலை-ரலஸ-விலஸை-ருன்மிஷத் பஞ்சபாணைர்-
கோபஸ்த்ரீணாம் நயனகுஸுமை-ரர்ச்சிதஃ கேசவோ நஃ ॥

2. 3. (யாமுனே) யமுனையாற்றின் (விமலே பயஸி) தெளிவான நீரில் (மஜ்ஜதீனாம்) ஸ்நானம் செய்பவர்களும் (வஞ்சிதானி அம்சுகானி) ஏமாற்றி எடுத்துக் கொள்ளப்பட்ட ஆடைகளை (அனுநய பதைஃ) நயமான வார்த்தைகளால் (யாசந்தீனாம்) திருப்பித் தரும்படி கெஞ்சிக் கேட்பவர்களுமான (கோபஸ்த்ரீணாம்) ஆய்ப்பாடிப் பெண்களின் (லஜ்ஜா-லோலைஃ) வெட்கத்தால் சலிப்பவையும் (அலஸ-விலஸைஃ) மெள்ளமெள்ளக் கள்ளப் பார்வையுடன் (உன்மிஷத் பஞ்ச பாணைஃ) காமக்கணைகளை ஏவுபவையும் ஆன (நயன குஸுமைஃ) கண்களாகிற மலர்களால் (அர்ச்சிதஃ) அர்ச்சிக்கப்பெற்ற (தேவஃ கேசவஃ) தேவதேவனாகிய கேசவன் (நஃ) நம்மை (பாயாத்) இரக்ஷிக்கட்டும்.

## 2.4. கலைவாணிக் கிழைத்த பிழைக்குப் பிராயச்சித்தம் கண்ணன் புகழ்

मात-र्नीतः परमनुचितं यत्खलानां पुरस्ता-
दस्ताशङ्कं जठरपिठरी-पूर्तये नाततास ।
तत्क्षन्तव्यं सहजसरले वत्सले वाणि कुर्यां
प्रायश्चित्तं गुणगणनया गोपवेषस्य विष्णोः ॥ २.४ ॥

Koviloor Digital Library


மாதர்-நாத: பர-மனுசிதம் யத் கலானும் புரஸ்தா-
தஸ்தாசங்கம் ஜடரபிடரீ-பூர்த்தயே நர்த்திதாஸி ।
தத் க்ஷந்தவ்யம் ஸஹஜ ஸரலே வத்ஸலே வாணி குர்யாம்
ப்ராயச்சித்தம் குண கணனயா கோபவேஷஸ்ய விஷ்ணோ:॥

2. 4. (மாத:) தாயே! (ஸஹஜ-ஸரலே) இயற்கையாக இனியவளே! (வத்ஸலே) குழந்தைகளிடம் குற்றம் பாராத அன்புடையவளே! (வாணி) ஸரஸ்வதி தேவியே! (அஸ்த-ஆசங்கம்) வெட்கமில்லாமல் (ஜடர-பிடரீ-பூர்த்தயே) வயிற்றுக் குழியை நிரப்புவதற்காக (கலானும் புரஸ்தாத்) மூர்க்கர்களின் முன்னிலையில் (நர்த்திதாஸி) என்னால் ஆட்டுவிக்கப்பட்டாய் என்பது (யத்) எது உண்டோ (அத: பரம்) அதைக் காட்டிலும் (அனுசிதம்) தகாத காரியம் (ந) இல்லை. (தத்) அந்தப் பிழை (க்ஷந்தவ்யம்) மன்னிக்கப்பட வேண்டும். (கோப-வேஷஸ்ய விஷ்ணோ:) ஆயர் வடிவில் வந்த விஷ்ணுவின் (குண-கணனயா) குணங்களைப் பேசுவதால் (ப்ராயச்சித்தம்) குற்றத்தைக் களையும் பிராயச்சித்தத்தை (குர்யாம்) செய்கிறேன்.

## 2.5. குழலூதும் நந்தகோப குமரன்

अङ्गुल्यग्रै-ररुणकिरणै-र्मुक्तसंरुद्ध-रन्ध्रं
वारं वारं वदनमरुता वेणु-मापूरयन्तम् ।
व्यत्यस्ताङ्घ्रिं विकच-कमलच्छाय-विस्तार-नेत्रं
वन्दे वृन्दावन-सुचरितं नन्दगोपालसूनुम् ॥ २.५ ॥

அங்குல்யக்ரை-ரருணகிரணைர்-முக்த ஸம்ருத்த-ரந்த்ரம்
வாரம் வாரம் வதனமருதா வேணு-மாபூரயந்தம் ।
வ்யத்யஸ்தாங்க்ரிம் விகச-கமலச்சாய-விஸ்தார-நேத்ரம்
வந்தே ப்ருந்தாவன-ஸுசரிதம் நந்தகோபால-ஸூனும் ॥

2. 5. (அருணகிரணை:) இளஞ்சூரியனைப்போல் சிவந்திருக்கிற (அங்குல்யக்ரை:) விரல் நுனிகளால் (வாரம் வாரம்) திரும்பத்.

Koviloor Digital Library


திரும்ப (முக்த-ஸம்ருத்த-ரந்த்ராம்) திறந்து மூடப்பட்ட துவாரங்களையுடைய (வேணும்) குழலை (வதன-மருதா) வாய்க்காற்றினால் (ஆபூரயந்தம்) நிறைப்பவனும். (வ்யத்யஸ்த-) மாறி வைக்கப்பட்ட (அங்க்ரிம்) பாதங்களையுடையவனும். (விகச-கமலச்சாய) மலர்ந்த தாமரைபோல் அழகியதும் (விஸ்தார-) அகன்றதுமான (நேத்ரம்) கண்களையுடையவனும். (ப்ருந்தாவன-ஸஞ்சரிதம்) பிருந்தாவனத்தில் மகிழ்ந்து சஞ்சரிப்பவனும் ஆகிய (நந்தகோபால-ஸூனும்) நந்தகோபன் மகனை (வந்தே) வணங்குகிறேன்.

## 2.6. நாவே! கண்ணனைப்பற்றிப் பேசு

मन्दं मन्दं मधुर-निनदै-र्वेणु मापूरयन्तं
वृन्दं वृन्दावनभुवि गवां चारयन्तं चरन्तम् ।
छन्दोभागे शतमख-मुख-ध्वंसिनां दानवानां
हन्तारं तं कथय रसने गोपकन्या-भुजङ्गम् ॥ २.६ ॥

மந்தம் மந்தம் மதுர-நிநதைர்-வேணு-மாபூரயந்தம்
ப்ருந்தம் ப்ருந்தாவனபுவி கவாம் சாரயந்தம் சரந்தம் ।
சந்தோபாகே சதமக-முக-த்வம்ஸினும் தானவானும்
ஹந்தாரம் தம் கதய ரஸனே கோபகன்யா-புஜங்கம் ॥

2. 6. (மந்தம் மந்தம்) மெள்ள-மெள்ள (மதுர-நிநதைః) இனிய ஸ்வரங்களால் (வேணும்) புல்லாங்குழலை (ஆபூரயந்தம்) நிறைப்பவனும், (கவாம் ப்ருந்தம்) பசுக்கூட்டத்தை (ப்ருந்தாவன-புவி) பிருந்தாவன பூமியில் (சாரயந்தம்) மேய்ப்பவனும் (ச்சந்தோபாகே) வேதத்தின் பகுதியான உபநிஷத்தில் (சரந்தம்) நடமாடுபவனும் (சதமக-முக-த்வம்ஸினும்) இந்திரன் முதலிய தேவர்களை இம்சிக்கும் (தானவானும்) அசுரர்களின் (ஹந்தாரம்) ஸம்ஹார கர்த்தாவும், (கோபகன்யா-புஜங்கம்) இடைப்பெண்களின் ஆசை நாயகனும் ஆகிய (தம்) அந்தக் கிருஷ்ணனைப்பற்றி (ரஸனே) நாவே! (கதய) பேசுவாயாக.

Koviloor Digital Library


## 2.7 கனவில் என்னைத் தழுவிய கண்ணன்

वेणीमूले विरचित-घनश्याम-पिञ्छावचूडो
विद्युल्लेखावलयित इव स्निग्ध-पीताम्बरेण ।
मामालिङ्गन्मरकतमणि-स्तम्भ-गम्भीर-बाहुः
स्वप्ने दृष्ट-स्तरुण-तुलसीभूषणो नीलमेघः ॥ २.७ ॥

வேணீ-மூலே விரசித-கனச்யாம-பிஞ்சாவசூடோ
வித்யுல்லேகா-வலயித இவ ஸ்நிக்த-பீதாம்பரேண ।
மாமாலிங்கன்-மரகதமணி-ஸ்தம்ப-கம்பீரபாஹு:
ஸ்வப்னே த்ருஷ்டஸ்-தருண-துலஸீபூஷணோ நீலமேக: ॥

2. 7. (வேணீ மூலே) முடியின் அடியில் (விரசித-) கட்டப்பட்ட (கனச்யாம) மேகம்போல் கறுத்த (பிஞ்ச - அவசூட:) மயிலிறகைச் சிரோபூஷணமாயுடையவனும், (ஸ்நிக்த-) மழமழப்பான (பிதாம்பரேண) மஞ்சட்பட்டாடையால் (வித்யுத் லேகா-) மின்னல் கொடியால் (வலயித:) சூழப்பட்ட (நீலமேக: இவ) கரிய மேகத்தை போன்றவனும் -(மரகதமணி-ஸ்தம்ப-) மரகதமணியாலான (ஸ்தம்ப-) தூண் போன்ற (கம்பீர-பாஹு:) கம்பீரமான கைகளையுடையவனும் (த்ருண-துலஸீ-பூஷண:) இளமையான துளசி மாலை யணிந்தவனும் ஆகிய கிருஷ்ணன் (மாம்) என்னை (ஆலிங்கன்) தழுவிக்கொண்டிருப்பதாக (ஸ்வப்னே) கனவில் (த்ருஷ்ட:) காணப்பட்டான்.

மாம்—ஸ்ரீ தேவியான ருக்மிணியை என்றும் பொருள் கொள்ளலாம்.

கனவில் காணப்பட்டான்—விழிப்பு நிலையில் உலகச் சந்தடியில் நமது மனது சிதறிக் கிடக்கும் நிலையில் எட்டி நிற்கும் பகவான், தூக்க நிலையில் இந்திரியங்களின் சேஷ்டைகளடங்கி நாம் தனித்திருக்கும் போது தானே நம்மை நாடி வந்து அணைத்துக்கொள்ளுகிறான். இது பக்தர்களின் அநுபவம்.

'ப்ரஹ்மஸம்ஸ்பர்ச - மத்யந்தம ஸுகமச்னுதே'—பரப்பிரம்மம் கேள்வியாய மட்டுமிராமல் தொட்டு அனுபவிக்கும் பரமானந்தமாயத் திகழ்கின்றது. —கீதை 6.28.

Koviloor Digital Library

## 2.8. வஸ்திராபஹரண லீலை

कृष्णे हृत्वा वसन-निचयं कूलकुञ्जाधिरूढे
मुग्धा काचिन्मुहु-रनुनयैः किन्त्विति व्याहरन्ती ।
सभ्रूभङ्गं सदरहसितं सत्रपं सानुरागं
छायाशौरेः करतल-गतान्यंबराण्याचकर्ष ॥ २.८ ॥

கருஷ்ணே ஹ்ருத்வா வஸந-
நிசயம் கூலகுஞ்ஜாதிருடே
முக்தா காசின்-முஹு-ரனு
நயை: கின்விதி வ்யாஹரந்தீ ।
ஸப்ருபங்கம் ஸதரஹஸிதம்
ஸத்ரபம் ஸானுராகம்
ச்சாயா-சௌரே: கரதல-
கதான்யம்பராண்யாசகர்ஷ ॥ 2.8 ॥

2. 8. (வஸந-நிசயம்) வஸ்திரக் குவியலை (ஹ்ருத்வா) எடுத்துக்கொண்டு (க்ருஷ்ணே கூல - குஞ்ச - அதிருடே) கிருஷ்ணன் நதிக்கரையிலுள்ள புதரில் ஒரு மரத்தின்மேல் ஏறிக் கொண்டபோது (காசித் முக்தா) ஒரு இளம்பெண் (முஹு:) திரும்பத்திரும்ப (அனுநயை:) நயமான வார்த்தைகளால் (கிந் நு இதி) இது என்ன-இப்படிச் செய்கிறாய்-என்று (வ்யாஹரந்தீ) மொழிபவளாய் (ஸ - ப்ரு - பங்கம்) நெளிந்த புருவத்துடனும் (ஸ-தர-ஹஸிதம்) புன்முறுவலுடனும் (ஸத்ரபம்) வெட்கத்துடனும் (ஸ - அனுராகம்) பிரியத்துடனும் (ச்சாயா - சௌரே:) நீரில் நிழலில் கண்ட கண்ணனுடைய (கரதல-கதானி) கையிலிருந்த (அம்பராணி) ஆடைகளை (ஆசகர்ஷ) இழுக்கலானாள்.

**வஸ்த்ராபஹரணம்**—ஜாதி, வித்தை, குலம், ரூபம், தனம், தேஹாபிமானம், ஆண் பெண் என்ற உணர்ச்சி எல்லாமே நம்மை மறைக்கும் வஸ்திரங்கள். அவைகளை யெல்லாம் பகவான் அபஹரித-

Koviloor Digital Library


துக்கொண்ட பின்னரே நாம் அவருடைய பூர்ணமான அருளுக்குப் பாத்திரமாகிறோம் என்பது இங்கிகழ்ச்சியின் உட்கருத்து.

விசய–கிசயம். —பா. பே.

கோபீவஸ்திராபஹரணக் கதையைச் சொல்லுபவர் சுகர், கேட்பவர் பரீக்ஷித்து, ஆதரித்தோதுபவர்கள் ஞானிகள். அப்படியிருக்கையில் அதில் எளனத்துக்கிடமிருக்க இயலாது. சிறிய எண்ணங்களிலும் உள்ள சிறுமை கிருஷ்ணனுடன் சேர்த்துப் பார்க்கும்போது நீங்கும்.

## 2.9. கண்ணன் கையில் குழலாயிருக்க ஆசை

**अपि जनुषि परस्मि-न्नात्तपुण्यो भवेयं**
**तटभुवि यमुनाया-स्तादृशो वंशनालः ।**
**अनुभवति य एषः-श्रीमदाभीरसूनो**
**रधरमणि-समीपन्यास-धन्या-मवस्थाम् ॥ २.९ ॥**

அபி ஜனுஷி பரஸ்மின்-னாத்தபுண்யோ பவேயம்
தடபுவி யமுனாயாஸ்-தாத்ருசோ வம்சநாலஃ ।
அனுபவதி ய ஏஷஃ ஸ்ரீமதாபீரஸூனோ-
ரதரமணி-ஸமீபந்யாஸ-தன்யா-மவஸ்தாம் ॥ 2-9 ॥

2. 9. (யஃ) எந்த (ஏஷஃ) இந்த குழல் (ஸ்ரீமத்-ஆபீர-ஸூனோஃ) செல்வனான கோபகுமாரனுடைய (அதரமணி-ஸமீப-) சிறந்த உதட்டினருகில் (ந்யாஸ-) வைக்கப்பெறும் (தன்யாம் அவஸ்தாம்) உத்தமப் பதவியை (அனுபவதி) அனுபவிக்கிறதோ—அந்தப் பதவியைப் பெறுவதற்கு (அஹம்) நான் (ஆத்த-புண்யஃ) புண்ணியம் படைத்தவனாகி (பரஸ்மின் ஜனுஷி) இன்னொரு பிறவியில் (யமுனாயாஃ தட-புவி) யமுனைக்கரை பூமியில் (தாத்ருசஃ) அதைப்போல் (வம்சநாலஃ) மூங்கில் குழலாக (அபிபவேயம்) ஆவேனா?

Koviloor Digital Library

௯. செடியாய வல் வினைகள் தீர்க்கும் திருமாலே
நெடியானே! வேங்கடவா! நின் கோயிலின்வாசல்
அடியாரும் வானவரும்அரம்பையரும் கிடந்தியங்கும்
படியாய்க் கிடந்துன் பவளவாய் காண்பேனே.
—குலசேகராழ்வார்.

## 2.10. மனமே! கிருஷ்ணனை இடைவிடாது சிந்திப்பாயாக

अयि परिचिनु चेतः प्रातरम्भोज-नेत्रं
कबर-कलित-चञ्चत्पिञ्छदामाभिरामम् ।
वलभिदुपलनीलं वल्लवी-भागधेयं
निखिल-निगमवल्ली-मूलकन्दं मुकुन्दम् ॥ २.१० ॥

அயி பரிசினு சேதஃ ப்ராதரம்போஜ-நேத்ரம்
கபர-கலித-சஞ்சத்பிஞ்சதாமாபிராமம் ।
வலபிதுபலநீலம் வல்லவீ-பாகதேயம்
நிகில-நிகமவல்லீ-மூலகந்தம் முகுந்தம் ॥ 2.10 ॥

2. 10 (அயி சேதஃ) ஏ மனமே! (ப்ராதஃ - அம்போஜ-நேத்ரம்) சூரிய உதயகாலத்தில் உள்ள தாமரை போன்ற கண்களை உடையவனும், (கபர-கலித) முடியில் சூடிய (சஞ்சத்) அசைகின்ற (பிஞ்ச-தாம) மயிலிறகின் மாலையினால் (அபிராமம்) அழகியவனும்) (வலபித் உபல-நீலம்) இந்திர நீலக்கல்போல் நீலவர்ணமுடையவனும், (வல்லவீ-பாகதேயம்) கோபிகைகளின் புண்ணியமே உருவெடுத்தாற் போன்றவனும் (நிகில நிகம-வல்லீ) வேதத் திரட்டாகிய, கொடிக்கு (மூல-கந்தம்) ஆதாரமான கிழங்கு போன்றவனும் ஆகிய (முகுந்தம்) கிருஷ்ணனை (பரிசினு) இடைவிடாது சிந்திப்பாயாக.

Koviloor Digital Library

**2.11 குழலே! என் நிலையை கண்ணனிடம் தெரிவி**

अयि मुरलि मुकुन्द-स्मेर-वक्त्रारविन्द-
श्वसन-मधु-रसज्ञे त्वां प्रणम्याद्य याचे ।
अधरमणिसमीपं प्राप्तवत्यां भवत्यां
कथय रहसि कर्णे मद्दशां नन्दसूनोः ॥ २.११ ॥

அயி முரளி முகுந்த-ஸ்மேர-வக்த்ராரவிந்த-
ச்வஸன-மது-ரஸஜ்ஞே த்வாம் ப்ரணம்யாத்ய யாசே ।
அதரமணிஸமீபம் ப்ராப்தவத்யாம் பவத்யாம்
கதய ரஹஸி கர்ணே மத்தசாம் நந்தஸூனோ: ॥2 11॥

2. 11. (அயி முரளி!) ஏ குழலே! (முகுந்த-) கிருஷ்ணனுடைய (ஸ்மேர வக்த்ர-) சிரித்த முகமாகிற (அரவிந்த-) தாமரையிலிருந்துவரும் (ச்வஸன-மது- ரஸஜ்ஞே) காற்றின் இனியசுவையை அறிந்தவளே! (த்வாம்) உன்னை (அத்ய) இப்பொழுது (ப்ரணம்ய) நமஸ்கரித்து (அதரமணி-ஸமீபம்) ரத்னம் போன்று சிவந்த உதட்டினருகாமையை (ப்ராப்தவத்யாம் பவத்யாம்) அடைந்த உன்னிடம் (யாசே) வேண்டிக்கொள்ளுகிறேன். (நந்தஸூனோ:) நந்தகுமாரனுடைய (கர்ணே) காதில் (மத்-தசாம்) என்னுடைய நிலைமையை (ரஹஸி) ரகசியமாக (கதய) சொல்லுவாயாக.

**2:12. ஸாதுக்களுடைய மனதில் விளையாடுபவன்**

सजल-जलदनीलं वल्लवी-केलि-लोलं
श्रित-सुरतरु-मूलं विद्यु-दुल्लासि-चेलम् ।
सुररिपु-कुल-कालं सन्मनोबिम्ब-लीलं
नतसुर-मुनिजालं नौमि गोपाल-बालम् ॥ २.१२ ॥

ஸஜல-ஜலதநீலம் வல்லவீ-கேலி-லோலம்
ச்ரித-ஸுரதரு-மூலம் வித்யு-துல்லாஸி-சேலம் ।
ஸுரரிபு-குல-காலம் ஸன்மனோபிம்ப-லீலம்
நதஸுர-முனிஜாலம் நௌமி கோபாலபாலம் ॥

Koviloor Digital Library

2. 12. (ஸஜல-ஜலத-நீலம்) நீருடன் கூடிய மேகம்போல் நீலவண்ணனும் (வல்லவீ-கேலி-லோலம்) இடைப்பெண்களுடன் விளையாடுவதில் பிரியமுள்ளவனும் (ச்ரித-ஸுரதரு-மூலம்) கற்பக விருக்ஷத்தினடியில் அமர்ந்தவனும் (வித்யுத்-உல்லாஸி-சேலம்) மின்னல் போல் பிரகாசிக்கும் ஆடையுடுத்தவனும் (ஸுராரிபுகுல-காலம்) தேவ சத்துருக்களை ஒழிப்பவனும் (ஸத்-மனோபிம்ப-லீலம்) ஸாதுக்களுடைய மனதில் விளையாடுபவனும் (நத-ஸுர-முனி-ஜாலம்) முனிவர் கூட்டத்தாலும் தேவர் கூட்டத்தாலும் வணங்கப் படுபவனும் ஆகிய (கோபால பாலம்) கோபச் சிறுவனை (நௌமி) வணங்குகிறேன்.

## 2.13. குழலின் கானத்தில் களிப்பெய்துபவன்

अधरबिम्ब-विडम्बित-विद्रुमं
मधुर-वेणु-निनाद-विनोदिनम् ।
कमल-कोमल-कम्र-मुखांबुजं
कमपि गोपकुमार-मुपास्महे ॥ २.१३ ॥

அதரபிம்ப-விடம்பித-வித்ருமம்
மதுர-வேணு-நிநாத-விநோதினம் ।
கமல-கோமல-கம்ர-முகாம்புஜம்
கமபி கோபகுமார-முபாஸ்மஹே ॥ 2.13 ॥

2. 13. (அதரபிம்ப-) கோவைப் பழம்போல் சிவந்த உதட்டினால் (விடம்பித-வித்ருமம்) பவழக் கொடியைப் பழிப்பவனும் (மதுர-வேணு-) இனிய குழலின் (நிநாத) கானத்தில் (விநோதினம்) களிப்பெய்துபவனும் (கமல கோமல-) தாமரை போல் மென்மையும்(கம்ர)அழகுமுடைய (முகாம்புஜம்) முகாரவிந்தத்தையுடையவனும் ஆகிய (கமபி) ஒப்புயர்வற்ற (கோபகுமாரம்) கோப குமாரனை (உபாஸ்மஹே) தியானம் செய்கிறோம்.

Koviloor Digital Library

## 2.14. குழலூதும் கிருஷ்ணன்

अधरे विनिवेश्य वंशनालं
विवराण्यस्य सलील-मङ्गुलीभिः ।
मुहुरन्तरयन्मुहु-र्विवृण्वन्
मधुरं गायति माधवो वनान्ते ॥ २.१४ ॥

அதரே விநிவேச்ய வம்ச-நாலம்
விவராண்யஸ்ய ஸலீல-மங்குலீபிः ।
முஹுரந்தரயன் முஹுர்-விவ்ருண்வன்
மதுரம் காயதி மாதவோ வனாந்தே ॥ 2.14 ॥

2. 14. (அதரே) உதட்டில் (வம்சநாலம்) குழலை (விநிவேச்ய) வைத்து (அஸ்ய) அதனுடைய (விவராணி) துவாரங்களை (ஸலீலம்) விளையாட்டாக (அங்குலீபிः) விரல்களால் (முஹுः) மீண்டும் மீண்டும் (அந்தரயன்) மூடியும் (முஹுः) மீண்டும் மீண்டும் (விவ்ருண்வன்) திறந்தும் (மாதவः) கிருஷ்ணன் (வனாந்தே) வனத்தின் நடுவில் (மதுரம்) இனிமையாக (காயதி) பாடுகிறான்.

## 2.15. வெண்ணெய் மணம் கமழும கண்ணன்

वदने नवनीत-गन्धवाहं
वचने तस्कर-चातुरी-धुरीणम् ।
नयने कुहनाश्रु-माश्रयेथा-
श्चरणे कोमल-ताण्डवं कुमारम् ॥ २. १५ ॥

வதனே நவநீத-கந்தவாஹம்
வசனே தஸ்கர-சாதுரீ-துரீணம் ।
நயனே குஹனாச்ரு-மாச்ரயேதாச்-
சரணே கோமல-தாண்டவம் குமாரம் ॥ 2.15 ॥

Koviloor Digital Library


2. 15. (வதனே) முகத்தில் (நவநீத-கந்தவாஹம்) வெண்ணெய்யின் வாஸனை கமழ்பவனும், (வசனே) பேச்சில் (தஸ்கர-சாதுரீ - துரீணம்) திருடனுடைய ஸாமர்த்தியமுடையவனும் (நயனே) கண்ணில் (குஹந-அச்ரும்) பொய்க் கண்ணீரையுடையவனும் (சரணே) பாதத்தில் (கோமல-தாண்டவம்) அழகிய நடனமுடையவனுமாகிய (குமாரம்) குமாரனை (ஆச்ரயேதாః) வழிபடுங்கள்.

வெண்ணெய் திருடினனென்று கண்ணனை கோபிமார்கள் யசோதையிடம் கொண்டுவிட்டபோது அவன் வாயில் வெண்ணெய்யின் வாசனை கமழ்ந்தது. 'நீ திருடினயா?' என்று தாயார் கேட்டபோது திருடனைப்போல் ஸாமர்த்தியமாகப் பதிலளித்தான். பின்பு தாயார் அதட்டியபோது 'இவர்கள் பொய் சொல்லுகிறார்கள்' என்று கண்ணீர் பெருக்கலானன். அழவேண்டாமென்று தாயார் நல்ல வார்த்தை சொல்லவே நர்த்தனம் செய்யத் தொடங்கினன்.

## 2.16. கிருஷ்ணன் நமக்கு ரக்ஷகன் ஆகமாட்டானு?

अमुनाऽखिल-गोप-गोपनार्थं
यमुना-रोधसि नन्दनन्दनेन ।
दमुना वनसम्भवः पपे नः
किमु नासौ शरणार्थिनां शरण्यः ॥ २.१६ ॥

அமுனாऽகில-கோப-கோபனார்த்தம்
யமுனா-ரோதஸி நந்தநந்தனேன ।
தமுனா வன-ஸம்பவః பபே நః
கிமு நாஸௌ சரணார்த்தினம் சரண்யః ॥ 2.16 ॥

2. 16. (யமுனா - ரோதஸி) யமுனைக்கரையில் (அகில - கோப-கோபனார்த்தம்) எல்லா கோபர்களையும் காப்பாற்றுவதற்காக (அமுனா) இந்த (நந்தநந்தனேன) நந்தகோபகுமரனுல் (வனஸம்பவః) காட்டில் உண்டான (தமுனா) தீயானது (பபே) பானம் செய்யப்பட்டது. (அஸௌ) இப்படிப்பட்ட கிருஷ்ணன் (சரணார்த்தினம்) புகலைப் பிரார்த்திக்கும் (நః) நமக்கு (சரண்யः) ரக்ஷகனக (ந கிமு) ஆகமாட்டானு?

Koviloor Digital Library

ஸ்ரீமத் பாகவதம் 10-வது ஸ்கந்தம் 17-வது அத்தியாயத்தில் காட்டுத் தீயிலிருந்து நந்தகோபரையும் பிறரையும் காப்பாற்றியது கூறப்படுகிறது.

தமுத்தவ ஸம்பவ: | அமுஞ கில | —பா. பே.

## 2 17 உலகோரால் கொண்டாடத்தக்க களவியல்

जगदादरणीय-जारभावं
    जलजापत्य-वचो-विचारगम्यम् ।
तनुतां तनुतां शिवेतराणां
    सुरनाथोपल-सुन्दरं महो नः ॥ २.१७ ॥

ஜகதாதரணீய-ஜாரபாவம்
    ஜலஜாபத்ய-வசோ-விசாரகம்யம் ।
தனுதாம் தனுதாம் சிவேதராணும்
    ஸுரநாதோபல-ஸுந்தரம் மஹோ ந: ॥ 2.17 ॥

2. 17. (ஜகத்-ஆதரணீய) உலகோரால கொண்டாடத் தக்க (ஜார-பாவம்) களவியலுடையதும் (ஜலஜ-அபத்ய) தாமரையில் தோன்றிய பிரம்மாவின் (வச:) வாக்காகிற வேதத்தின் (விசார-) ஆராய்ச்சியால் (கம்யம்) அடையத்தக்கதும் (ஸுரநாத-உபல-) இந்திர நீலக்கல்லைப்போல் (ஸுந்தரம்) அழகியதுமான (மஹ:) ஒளிப்பிழம்பு (ந:) நம்முடைய (சிவ-இதராணும்) புண்ணியத்தினின்று வேறுபட்ட செயல்களுக்கெல்லாம் (தனுதாம்) தேய்வை அல்லது அழிவை (தனுதாம்) செய்யட்டும்.

களவியல்—பிறர் களவியல் நிந்திக்கத் தக்கதாயினும் கண்ணன் களவியல் போற்றத்தக்கது. அவனைக் கள்வனுகப் போற்றினுல் இவனுடைய கள்ளத் தன்மை நீங்குகிறது. அவனை மானிடனுய்ப் பிறந்தவனுகத் துதித்தால் இவனுக்குப் பிறவி இல்லாததாகின்றது. அவனை உரலில் கட்டுண்டவனுக தியானித்தால் இவனுடைய கட்டுகள் எல்லாம் நீங்குகின்றன

Koviloor Digital Library


## 2.18. உபநிஷத்திலும் யோகியர் இருதயத்திலும் கோபியர் பாதங்களிலும் காணப்படுபவன்

या शेखरे श्रुतिगिरां हृदि योगभाजां
पादाम्बुजे च सुलभा व्रजसुन्दरीणाम् ।
सा काऽपि सर्वजगता-मभिराम-सीमा
कामाय नो भवतु गोप-किशोर-मूर्तिः ॥ २.१८ ॥

யா சேகரே ச்ருதிகிராம் ஹ்ருதி யோகபாஜாம்
பாதாம்புஜே ச ஸுலபா வ்ரஜஸுந்தரீணாம் ।
ஸா காऽபி ஸர்வஜகதா-மபிராம-ஸீமா
காமாய நோ பவது கோப-கிசோரமூர்த்திः ॥2.18॥

2. 18. (ச்ருதிகிராம்) வேதவாக்கியங்களின் (சேகரே) உச்சியில் உபநிஷதத்திலும் (யோகபாஜாம்) யோகத்தை அப்பியசிப்பவர்களின் (ஹ்ருதி) இருதயத்திலும் (வ்ரஜஸுந்தரீணாம்) இடைப்பெண்களின் (பாதாம்புஜே ச) மலரடிகளிலும் (ஸுலபா) எளிதில் காணக் கிடைக்கும் (ஸா) அந்த (காऽபி) இன்னதென்று விளக்க இயலாததும் (ஸர்வஜகதாம்) உலகுக்கெல்லாம் (அபிராம-ஸீமா) அழகின் எல்லை நிலமானதும் ஆகிய (கோப-கிசோர-மூர்த்திः) இடைப்பிள்ளை வடிவம் (நः) நமக்கு (காமாய) ஆசைப் பொருளாக (பவது) ஆகட்டும்.

வேதவாக்கியங்களுக்கும் எட்டாதவன் கோபியர்களின் அன்புக்கு எளிதில் வசப்படுகிறான்.

'ஸா காபி' என்பதை முதலடியாகவும் 'யாசேகரே' என்பதை இரண்டாவது அடியாகவும் சொல்வது பாடபேதம்.

## 2.19. காயாம் பூவண்ணச் சின்னஞ் சிறு குழந்தை

अत्यन्त-बाल-मतसी-कुसुम-प्रकाशं
दिग्वाससं कनक-भूषण-भूषिताङ्गम् ।
विस्रस्त-केश-मरुणाधर-मायताक्षं
कृष्णं नमामि मनसा वसुदेवसूनुम् ॥ २.१९ ॥

Koviloor Digital Library

அத்யந்த-பால-மதஸீ-குஸு‌ம-ப்ரகாசம்
திக்வாஸஸம் கனக-பூஷண-பூஷிதாங்கம் ।
விஸ்ரஸ்த-கேச-மருணாதர-மாயதாக்ஷம்
க்ருஷ்ணம் நமாமி மனஸா வஸுதேவ-ஸூனும் ॥

2. 19. (அத்யந்த-பாலம்) சின்னஞ்சிறு குழந்தையாகவும் (அதஸீ-குஸும-ப்ரகாசம்) காயாம்பூப் போன்ற காந்தியுடையவனாகவும் (திக்வாஸஸம்) திசைகளையே ஆடையாகக் கொண்டவனாகவும்—அதாவது ஆடையணியாதவனாகவும்—(கனக - பூஷண-பூஷித-அங்கம்) பொன் ஆபரணங்களால் அலங்கரிக்கப் பெற்ற திருமேனி உடையவனாகவும் (விஸ்ரஸ்த–கேசம்) முடியாத குழலை உடையவனாகவும் (அருண-அதரம்) சிவந்த உதடுகளை உடையவனாகவும் (ஆயத-அக்ஷம்) பரந்த கண்களை உடையவனாகவும் விளங்கும் (வஸுதேவ-ஸூனும்) வசுதேவர் பிள்ளையாகிய கிருஷ்ணனை (மனஸா) மனத்தால் (நமாமி) நமஸ்கரிக்கிறேன்.

## 2.20. வசுதேவரின் புண்ணியத்தின் பயனாயவதரித்தவன்

हस्ताङ्घ्रि-निक्वणित-कङ्कण-किङ्किणीकं
मध्ये नितम्ब-मवलम्बित-हेमसूत्रम् ।
मुक्ताकलाप-मुकुलीकृत-काकपक्षं
वन्दामहे व्रजचरं वसुदेव-भाग्यम् ॥ २.२० ॥

ஹஸ்தாங்க்ரி-நிக்வணித-கங்கண-கிங்கிணீகம்
மத்யே நிதம்ப-மவலம்பித-ஹேமஸூத்ரம் ।
முக்தாகலாப-முகுளீக்ருத-காகபக்ஷம்
வந்தாமஹே வ்ரஜசரம் வஸுதேவ-பாக்யம் ॥ 2.20 ॥

2. 20. (ஹஸ்த - அங்க்ரி-) கைகளிலும் கால்களிலும் (நிக்வணித-) ஒலிக்கும் (கங்கண - கிங்கிணீகம்) வளைகளையும் சலங்கைகளையும் உடையவனும் (மத்யே நிதம்பம்) இடுப்பின்

Koviloor Digital Library


நடுவில் (அவலம்பித - ஹேமஸூத்ரம்) தொங்கும் பொன் அரை நாணுடையவனும் (முக்தா-கலாப-) முத்துமாலையினுல் (முகுளீ க்ருத-) மூடப்பெற்ற (காகபக்ஷம்) கன்றுக் குடுமியை உடையவனும் (வ்ராஜசரம்) ஆய்ப்பாடியில் சஞ்சரிப்பவனும் (வஸுதேவ-பாக்யம்) வசுதேவருடைய புண்ணியத்தின் பயனுயவதரித்தவனுமாகிய கிருஷ்ணனை (வந்தாமஹே) வந்தனம் செய்கின்றோம்.

## 2.21. வேதத்தின் உச்சியிலுறையும் பரம்பொருளே கண்ணன்

वृन्दावनद्रुमतलेषु गवां गणेषु
वेदावसान-समयेषु च दृश्यते यत् ।
तद्वेणुनादनपरं शिखिपिञ्छचूडं
ब्रह्म स्मरामि कमलेक्षण-मभ्रनीलम् ॥ २.२१ ॥

ப்ருந்தாவன-த்ரும-தலேஷு கவாம் கணேஷு
வேதாவஸான-ஸமயேஷு ச த்ருச்யதே யத் ।
தத்வேணு-நாதனபரம் சிகிபிஞ்ச-சூடம்
ப்ரஹ்ம ஸ்மராமி கமலேக்ஷண-மப்ரநீலம் ॥ 2.21 ॥

2. 21. (ப்ருந்தாவன - ) பிருந்தாவனத்தின் (த்ரும தலேஷு) மரத்தடிகளிலும் (கவாம் கணேஷு) பசுக்கூட்டங்களினிடையிலும் (வேத-அவஸான-ஸமயேஷுச) வேதத்தின் முடிவான உபநிஷதங்களின் கொள்கைகளிலும் (யத்) எந்த பொருள் (த்ருச்யதே) காணப்படுகிறதோ (வேணுநாதனபரம்) குழலூதுவதில் ஈடுபட்டதாயும் (சிகிபிஞ்சசூடம்) மயிலிறகைச் சூடியதாயும் (கமல-ஈக்ஷணம்) கமலம் போன்ற கண்களை உடையதாயும் (அப்ரநீலம்) மேகம் போல் நீல வர்ணமுடையதாயும் விளங்குகிறதோ (தத்) அந்த (ப்ரஹ்ம) பரம்பொருளை (ஸ்மராமி) தியானிக்கின்றேன்.

வேணுவாதனபரம். —பா. பே.

Koviloor Digital Library


## 2.22. குழலூதும் கிருஷ்ணன் பிராணப் பிரயாண ஸமயத்தில் காட்சி யளிக்கட்டும்

व्यत्यस्तपाद-मवतंसित-बर्हिबर्हं
साचीकृतानन-निवेशित-वेणुरन्ध्रम् ।
तेजः परं परमकारुणिकं पुरस्तात्
प्राण-प्रयाण-समये मम सन्निधत्ताम् ॥ २.२२ ॥

வ்யத்யஸ்த-பாத-மவதம்ஸித-பர்ஹிபர்ஹம்
ஸாசிக்ருதானன-நிவேசித-வேணுரந்த்ரம் ।
தேஜஃபரம் பரமகாருணிகம் புரஸ்தாத்
ப்ராண-ப்ரயாண-ஸமயே மம ஸந்நிதத்தாம ॥ 2.22॥

2. 22. (வ்யத்யஸ்த - பாதம்) மாற்றிவைத்த பாதங்களை யுடையவனும் (அவதம்ஸித-பர்ஹிபர்ஹம்) சூடிய மயில் தோகை யுடையவனும் (ஸாசீ-க்ருத-ஆனன-) சாய்ந்த முகத்தில் குறுக்காக (நிவேசித-) வைக்கப்பெற்ற (வேணுரந்த்ரம்) குழலின் துவாரங் களையுடையவனும் (பரம காருணிகம்) சிறந்த கருணையுடையவ னும் (தேஜஃ பரம்) பரஞ்ஜோதி வடிவினனுமான கிருஷ்ணன் (மம) என்னுடைய (ப்ராண-ப்ரயாண-ஸமயே) பிராணன் வெளிக் கிளம்பும் ஸமயத்தில் (ஸந்நிதத்தாம்) என் முன் காட்சியளிக் கட்டும்.

## 2.23. மூவுலகையும் வயிற்றில் கொண்ட கண்ணன்

घोषप्रघोष-शमनाय मथोगुणेन
मध्ये बबन्ध जननी नवनीत-चोरम् ।
तद्बन्धनं त्रिजगता-मुदराश्रयाणा-
माक्रोश-कारणमहो नितरां बभूव ॥ २.२३ ॥

Koviloor Digital Library

தோஷ-ப்ரகோஷ-சமனுய மதோகுணேன
மத்யே பபந்த ஜனனீ நவநீத-சோரம் ।
தத்பந்தனம் த்ரிஜகதா-முதராச்ரயாணும்-
மாக்ரோச-காரணமஹோ நிதராம் பபூவ ॥ 2.23 ॥

2. 23. (கோஷ-) ஆய்ப்பாடியில் (ப்ரகோஷ-)—கண்ணனுடைய விஷமச் செயல்களைப்பற்றி எழுந்த— கூக்குரலை (சமனுய) சமாதானப்படுத்துவதற்காக (மதோ-குணேன) தயிர் கடையும் மத்துக் கயிற்ருல் (நவநீத-சோரம்) வெண்ணெய் திருடிய கண்ணனை (ஜநநீ) அவனுடைய தாயான யசோதை (மத்யே) இடுப்பின் நடுவில் (பபந்த) கட்டினுள். (தத்) அந்த (பந்தனம்) கட்டானது (உதர-ஆச்ரயாணும்) அவனுடைய வயிற்றில் அடங்கியிருந்த (த்ரிஜகதாம்) மூவுலகிற்கும் (நிதராம்) மிகுந்த (ஆக்ரோச-காரணம்) கூக்குரலுக்குக் காரணமாக (பபூவ) ஆயிற்று.

தயிர் கடையும் கயிற்ருல் கட்டும்படி எளிய வடிவம் தாங்கி நின்ற கண்ணன் தன் வயிற்றில் மூவுலகையும் தாங்குபவன் என்பதையும் காட்டுபவனுய்க் காட்சியளித்தான். இந்தத் திருவிளையாடலால் அவனுக்கு **தாமோதரன்** என்ற சிறப்புப் பெயர் அமைந்தது.

## 2.24. நாங்கள் செய்வது பஞ்சாக்ஷரீ ஜபம் ; எங்களுக் கருள்பவன் கிருஷ்ணன்

शैवा वयं न खलु तत्र विचारणीयं
पञ्चाक्षरी-जपपरा नितरां तथापि ।
चेतो मदीय-मतसी-कुसुमावभासं
स्मेराननं स्मरति गोपवधूकिशोरम् ॥ २.२४ ॥

சைவா வயம் ந கலு தத்ர விசாரணீயம்
பஞ்சாக்ஷரீ-ஜபபரா நிதராம் ததாபி ।
சேதோ மதீய-மதஸீ-குஸுமாவபாஸம்
ஸ்மேராநனம் ஸ்மரதி கோபவதூ-கிசோரம் ॥ 2.24॥

Koviloor Digital Library

2. 24. (வயம்) நாங்கள் (சைவாः) சைவர்கள். (தத்ர) அதில் (ந கலு விசாரணீயம்) சிறிதும் சந்தேகமில்லை; (நிதராம்) மிகுதியாக (பஞ்சாக்ஷரீ ஜப-பராः) சிவபஞ்சாக்ஷர மந்திர ஜபத்தில் ஊக்கங் கொண்டவர்கள். (ததா அபி) அப்படி இருந்தபோதிலும் (மதீயம்) என்னுடைய (சேதः) சித்தம் (அதஸீ-குஸும-அவபாஸம்) காயாம்பூ வண்ணனும் (ஸ்மேர-ஆனனம்) சிரித்த முகத்தின னும் (கோபவதூ-கிசோரம்) கோபிகை யசோதையின் பிள்ளையும் ஆன கிருஷ்ணனை (ஸ்மரதி) நினைத்துக்கொண்டே இருக்கிறது.

௭. அர்ஜுனன் செய்து வந்தது சிவபூஜை. அவனுக்குத் தோழனாகவும், சாரதியாகவும், குருவாகவும், தெய்வமாகவும் இருந்து அருள்புரிந்தது கண்ணன். இதிலுள்ள ரகசியம் சிந்தித்துணர்தற் குரியது.

௭. யேப்யன்ய-தேவதா-பக்தா யஜந்தே ச்ரத்தயான்விதாः ।
தேऽபி மாமேவ கௌந்தேய யஜந்த்யவிதி-பூர்வகம் ॥

கௌந்தேய! மற்ற தேவதைகளின் பக்தர்களும் சிரத்தையுடன் பூஜிப்பார்களேயாயின், அவர்களும் என்னையே தான் அறியாத வழியில் பூஜிக்கின்றனர். —கீதை 9.23.

## 2.25. ராதையின் மெய்மறந்த பக்தி

राधा पुनातु जग-दच्युत-दत्तचित्ता
मन्थान-माकलयती दधिरिक्त-पात्रे ।
तस्याः स्तन-स्तबक-चञ्चल-लोलदृष्टि-
र्देवोऽपि दोहनधिया वृषभं निरुन्धन् ॥ २.२५ ॥

ராதா புனாது ஜகதச்யுத-தத்தசித்தா
மந்தான-மாகலயதி ததிரிக்த-பாத்ரே ।
தஸ்யாः ஸ்தன-ஸ்தபக-சஞ்சல-லோல-த்ருஷ்டிர்-
தேவோऽபி தோஹனதியா வ்ருஷபம் நிருந்தன் ॥

2. 25. (அச்யுத-தத்த-சித்தா) அச்சுதனிடத்தில் அர்ப் பணம் செய்துவிட்ட சித்தத்தையுடையவளாய் (ததி-ரிக்த-பாத்ரே)

Koviloor Digital Library

துயிரில்லாத வெறும் பானையில் — மெய்மறந்து — (மந்தானம் ஆகலயதீ) மத்தை இட்டுக்கடையும் (ராதா) ராதையும் (தஸ்யா꞉) அவளுடைய (ஸ்தன-ஸ்தபக-) பூங்கொத்துப் போன்ற கொங்கை மேல் (சஞ்சல-லோல த்ருஷ்டி꞉) அடுத்தடுத்து ஆசைப் பார்வையுடன் கூடியவனாய் (தோஹன—தியா) பால் கறக்கவேணுமென்ற நினைவால் (வ்ருஷபம்) எருதை (நிருந்தன்) காலணையும் (தேவ꞉ அபி) கிருஷ்ணனும் (ஜகத்) உலகத்தை (புனது) புனிதமாக்கட்டும்.

## 2.26. பசுக்களின் பாததூளியால் அழுக்கடைந்த திருமேனி

**गोधूलि-धूसरित-कोमल-कुन्तलाग्रं**
**गोवर्धनोद्धरण-केलि-कृतप्रयासम् ।**
**गोपीजनस्य कुचकुङ्कुम-मुद्रिताङ्गं**
**गोविन्द-मिन्दुवदनं शरणं भजामः ॥ २.२६ ॥**

கோதூலி-தூஸரித-கோமல-குந்தலாக்ரம்
கோவர்த்தனோத்தரண-கேலி-க்ருதப்ரயாஸம் ।
கோபீஜனஸ்ய குசகுங்கும-முத்ரிதாங்கம்
கோவிந்த-மிந்து-வதனம் சரணம் பஜாம꞉ ॥ 2.26 ॥

2. 26. (கோதூலி - தூஸரித -) பசுக்களின் தூளியால் அழுக்கடைந்த (கோமல-குந்தல-அக்ரம்) அழகிய மயிர் நுனிகளையுடையவனும் (கோவர்த்தன-உத்தரண) கோவர்த்தன கிரியைத் தூக்கும் (கேலி க்ருத-ப்ரயாஸம்) விளையாட்டுப் பிரயாஸமுடையவனும் (கோபீ ஜனஸ்ய) கோபிமார்களின் (குச-குங்கும-) நகில்களின் மேலுள்ள குங்குமத்தால் (முத்ரித-அங்கம்) அடையாளம் செய்யப்பட்ட அங்கங்களை உடையவனும் (இந்து வதனம்) சந்திரன் போன்ற முகத்தை உடையவனுமான (கோவிந்தம்) கோவிந்தனை (சரணம்) புகலாக (பஜாம꞉) அடைகின்றோம்.

Koviloor Digital Library


## 2.27. வராஹாவதாரமும் கிருஷ்ணாவதாரமும்

यद्रोमरन्ध्र-परिपूर्ति-विधावदक्षा
वाराह-जन्मनि बभूवुरमी समुद्राः ।
तं नाम नाथ-मरविन्द-दृशं यशोदा
पाणिद्वयान्तरजलैः स्नपयां-बभूव ॥ २.२७ ॥

யத்-ரோமரந்த்ர-பரிபூர்த்தி-விதாவதக்ஷா
வாராஹ-ஜன்மனி பபூவு-ரமீ ஸமுத்ராঃ ।
தம் நாம நாத-மரவிந்த-த்ருசம் யசோதா
பாணித்வயாந்தரஜலைঃ ஸ்நபயாம் பபூவ ॥ 2.27 ॥

2. 27. (யத்) எவனுடைய (ரோமரந்த்ர-) மயிர்க்கால்களை (பரிபூர்த்தி-விதௌ) நிரப்பும் செயலில் (அமீ ஸமுத்ராঃ) இக்கடல்கள் (வாராஹ-ஜன்மனி) அவன் வராஹ அவதாரம் எடுத்தபோது (அதக்ஷாঃ) திறமையற்றவைகளாக (பபூவுঃ) ஆயினவோ (அரவிந்த-த்ருசம்) தாமரைக் கண்ணனை (தம் நாம நாதம்) அப்படிப்பட்ட லோகநாதனை (யசோதா) யசோதையானவள் (பாணித்வய-) இரண்டு கைகளின் (அந்தர-ஜலைঃ) உள்ளே அடங்கிய ஜலத்தால் (ஸ்நபயாம் பபூவ) ஸ்நானம் செய்வித்தாள்.

## 2.28. உபநிஷத்தின் அர்த்தம் உரலில் கட்டிவைக்கப்பட்டுளது

वरमिम-मुपदेश-माद्रियध्वं
निगमवनेषु नितान्त-चारखिन्नाः ।
विचिनुत भवनेषु वल्लवीना-
मुपनिषदर्थ-मुलूखले निबद्धम् ॥ २.२८ ॥

Koviloor Digital Library

வர-மிம-முபதேச-மாத்ரியத்வம்
நிகம-வனேஷு நிதாந்தசார-கின்னா: ।
விசினுத பவனேஷு வல்லவீனா-
முபநிஷதர்த்த-முலூகலே நிபத்தம் ॥ 2.28 ॥

2. 28. (நிகம - வனேஷு) வேதங்களாகிய வனங்களில் (நிதாந்த-சார) வெகுவாகச் சஞ்சரித்து (கின்னா:) களைப் புற்றிருப்பவர்களே ! (வரம்) சிறந்த (இமம்) இந்த (உபதேசம்) உபதேசத்தை (ஆத்ரியத்வம்) ஆதரியுங்கள். (உலூகலே நிபத்தம்) உரலில் கட்டி வைத்திருக்கும் (உபநிஷ-தர்த்தம்) உபநிஷத்தின் அர்த்தத்தை (வல்லவீனாம்) கோபியர்களின் (பவனேஷு) வீடுகளில் (விசினுத) தேடுங்கள்.

## 2.29. கிருஷ்ணனை நினைக்கும் எனக்கு யமபயம் ஏது ?

देवकीतनय-पूजन-पूतः पूतनारि-चरणोदक-धौतः ।
यद्यहं स्मृत-धनञ्जयसूतः किं करिष्यति स मे यमदूतः ॥

தேவகீதனய-பூஜன-பூத:
பூதனாரி-சரணோதக-தௌத: ।
யத்யஹம் ஸ்ம்ருத-தனஞ்ஜய-ஸூத:
கிம் கரிஷ்யதி ஸ மே யமதூத: ॥ 2.29 ॥

2. 29. (தேவகீதனய -) தேவகீ புத்திரனை (பூஜன -) பூஜிப்பதால் (பூத:) பரிசுத்தனாகவும் (பூதனா-அரி) பூதனையைக் கொன்றவனுடைய (சரண-உதக) பாத தீர்த்தத்தினால் (தௌத:) பாபமற்றவனாகவும் (ஸ்ம்ருத-தனஞ்ஜய-ஸூத:) பார்த்தஸாரதியைச் சித்தத்தில் வைத்தவனாகவும் (அஹம் யதி) நான் ஆவேனாகில் (ஸ: யமதூத:) அந்த யமதூதன் (மே) என் விஷயத்தில் (கிம் கரிஷ்யதி) என்ன செய்யக்கூடும் ?

Koviloor Digital Library

## 2.30. ஸம்ஸார பயத்திற்கு ஒரே மருந்து

भासतां भवभयैक-भेषजं
मानसे मम मुहु-र्मुहु-र्मुहुः ।
गोपवेष-मुपसेदुषस्स्वयं
यापि कापि रमणीयता विभोः ॥ २.३० ॥

பாஸதாம் பவபயைக-பேஷஜம்
மானஸே மம முஹு-ர்முஹு-ர்முஹு: ।
கோபவேஷ-முபஸேதுஷ: ஸ்வயம்
யாபி காபி ரமணீயதா விபோ: ॥ 2.30 ॥

2. 30. (கோபவேஷம்) — நாடகத்தில் நடிப்பதுபோல்— ஆயர்வடிவை (ஸ்வயம்) தானாகவே (உபஸேதுஷ:) எடுத்துக் கொண்ட (விபோ:) ஸர்வ வியாபகனான பகவானுடைய (யா அபி கா அபி) விளக்க முடியாத அதிசயமானதாயும் (பவ-பய-ஏக-பேஷஜம்) ஸம்ஸார பயத்திற்கு ஒரே மருந்தாயும் உள்ள (ரமணீயதா) அழகு (மம) என்னுடைய (மானஸே) மனதில் (முஹு: முஹு: முஹு:) மேலும் மேலும் மேலும் (பாஸதாம்) பிரகாசிக்கட்டும்.

பவ-பய-ஏகபேஷஜம்—

ஒ. 'பேஷஜம் பிஷக்'—மருந்தாகவும் வைத்தியனாகவும் இருப்பவன் அவனே. —விஷ்ணுஸஹஸ்ரநாமம்

ஒ. வ்யாமோஹ-ப்ரசமௌஷதம்
முனிமனோ வ்ருத்தி-ப்ரவ்ருத்யௌஷதம்
தைத்யேந்த்ரார்த்திஹரௌஷதம்
த்ரிஜகதாம் ஸஞ்ஜீவனௌஷதம் ।
பக்தாத்யந்த-ஹிதௌஷதம்
பவபய-ப்ரத்வம்ஸனௌஷதம்
ச்ரேய: ப்ராப்திகரௌஷதம் பிப
மன: ஸ்ரீக்ருஷ்ண திவ்யௌஷதம் ॥
—குலசேகராழ்வார்: முகுந்தமாலை.

Koviloor Digital Library

## 2.31. கண்ணனைக் கண்குளிரக் காண்கின்றோம்

कर्णलम्बित-कदम्बमञ्जरी
केसरारुण-कपोलमण्डलम् ।
निर्मलं निगमवागगोचरं
नीलिमान-मवलोकयामहे ॥ २.३१ ॥

கர்ணலம்பித-கதம்ப-மஞ்ஜரீ-
கேஸராருண-கபோல-மண்டலம் ।
நிர்மலம் நிகமவாககோசரம்
நீலிமான-மவலோகயாமஹே ॥ 2.31 ॥

2. 31. (கர்ண-லம்பித-) காதுகளில் தொங்கும் (கதம்ப-மஞ்ஜரீ-) கடப்பம் பூக்கொத்தினுடைய (கேஸா-) இதழ்களால் (அருண-) சிவப்பாகத்தோன்றும் (கபோல-மண்டலம்) கன்னப் பிரதேசத்தை உடையவனும் (நிர்மலம்) பரிசுத்தமானவனும் (நிகம-வாக்-அகோசரம்) வேத வாக்கியங்களுக்கும் எட்டாதவனும் (நீலிமானம்) நீலவண்ணனுமான கிருஷ்ணனை (அவலோகயாமஹே) நாங்கள்—கண்குளிர—காண்கின்றோம்.

## 2.32. குழலூதும் கண்ணன்

साचि-सञ्चलित-लोचनोत्पलं
सामिकुट्मलित-कोमलाधरम् ।
वेगवल्गित-कराङ्गुलीमुखं
वेणुनादरसिकं भजामहे ॥ २.३२ ॥

ஸாசி-ஸஞ்சலித-லோசனோத்பலம்
ஸாமி குட்மலித-கோமலாதரம் ।
வேத-வல்கித-கராங்குலீமுகம்
வேணுநாத-ரஸிகம் பஜாமஹே ॥ 2.32 ॥

Koviloor Digital Library

2. 32. (ஸாசி-) குறுக்காக (ஸஞ்சலித-) சஞ்சரிக்கும் (லோசன-உத்பலம்) நீலோத்பலம் போன்ற கண்களை உடையவனும் (ஸாமி-) இருபாதியாகப்பிரிக்கப்பட்ட (குட்மலித) அரும்பு போன்ற (கோமல-) அழகிய (அதரம்) உதடுகளை உடையவனும் (வேக-வல்கித-) விரைவாக அசையும் (கர-அங்குலீ-முகம்) கைவிரல் நுனிகளை யுடையவனும் (வேணுநாத-ரஸிகம்) குழலோசையின் இனிமையை அனுபவிப்பவனுமான கண்ணனை (பஜாமஹே) நாடுகின்றோம்.

## 2.33. ருக்மிணீபரிணயம்

स्यन्दने गरुडमण्डितध्वजे कुण्डिनेश-तनयाधिरोपिता ।
केनचिन्नव-तमाल-पल्लव-श्यामलेन पुरुषेण नीयते ॥ २.३३॥

ஸ்யந்தனே கருடமண்டிதத்வஜே
குண்டினேச-தனயாதிரோபிதா ।
கேனசிந்நவ-தமால-பல்லவ-
ச்யாமலேன புருஷேண நீயதே ॥ 2.33 ॥

2. 33. (கருடமண்டிதத்வஜே) கருடனால் அலங்கரிக்கப் பட்ட கொடியை உடைய (ஸ்யந்தனே) தேரில் (குண்டினேச-தனயா) குண்டினபுரத் தரசனுடைய பெண்ணாகிய ருக்மிணி (அதிரோபிதா) ஏற்றிவைக்கப்பட்டு (நவ-தமால-பல்லவ-) புதிய மாவிலிங்கப் பச்சிலைத் தளிர்போல் (ச்யாமலேன) கரும்பச்சை வண்ணனான (கேனசித்) யாதோ ஒரு (புருஷேன) புருஷனால் (நீயதே) அழைத்துப் போகப்படுகிறாள்—அதை நான் என் கண் முன் காண்கிறேன்.

## 2.34. உள்ளங் கவர் கள்வன்

मा यात पान्थाः पथि भीमरथ्या
दिगम्बरः कोऽपि तमालनीलः ।
विन्यस्त-हस्तोऽपि नितम्बबिम्बे
धूर्तस्समाकर्षति चित्तवित्तम् ॥ २.३४ ॥

Koviloor Digital Library


மா யாத பாந்தாঃ பதி பீமரத்யா
திகம்பரঃ கோऽபி தமால நீலঃ ।
வின்யஸ்த-ஹஸ்தோऽபி நிதம்ப-பிம்பே
தூர்த்தঃ ஸமாகர்ஷதி சித்தவித்தம் ॥ 2:34 ॥

2. 34. (பாந்தாঃ) வழிப்போக்கர்களே! (மா யாத) இவ்வழி செல்லாதீர்கள். (பீமரத்யாঃ) பீமரதி எனும் ஆற்றின் (பதி) வழியில் (திகம்பரঃ) வஸ்திரமில்லாதவனும் (தமாலநீலঃ) மாவிலிங்கப் பச்சிலைபோல் நீலவண்ணனும் (நிதம்ப பிம்பே) இடுப்பிற்குப் பின்புறம் (வின்யஸ்த-ஹஸ்தঃ அபி) கைகளை வைத்துக்கொண்டிருப்பவனும் ஆகிய (கঃ அபி) யாரோ ஒரு (தூர்த்தঃ) துஷ்டன் (சித்த வித்தம்) சித்தமாகிய செல்வத்தை (ஸமாகர்ஷதி) கவர்ந்து கொள்ளுகிறான்.

## 2.35. ராஸக் கிரீடை

अङ्गनामङ्गना-मन्तरे माधवो
माधवं माधवं चान्तरेणाङ्गना ।
इत्थमाकल्पिते मण्डले मध्यगः
सञ्जगौ वेणुना देवकीनन्दनः ॥ २.३५ ॥

அங்கனமங்கன-மந்தரே மாதவோ
மாதவம் மாதவஞ் சாந்தரேணங்கன ।
இத்தமாகல்பிதே மண்டலே மத்யகঃ
ஸஞ்ஜகௌ வேணுன தேவகீநந்தனঃ ॥ 2.35 ॥

2. 35 (அங்கனம் அங்கனம்) ஒரு பெண்ணுக்கும் இன்னொரு பெண்ணுக்கும் (அந்தரே) இடையில் (மாதவঃ) ஒரு கிருஷ்ணனும் (மாதவம் மாதவம்) ஒரு கிருஷ்ணனுக்கும் இன்னொரு கிருஷ்ணனுக்கும் (அந்தரே) இடையில் (அங்கன)

Koviloor Digital Library

ஒரு பெண்ணுமாக (இத்தம்) இவ்வாறு (ஆகல்பிதே) எற்படுத்தப் பட்ட (மண்டலே) வட்டத்தில் (மத்யக:) நடுவில் அமைந்தவனு யிருந்து கொண்டு (தேவகீ நந்தன:) தேவகீ புத்திரனுன கிருஷ்ணன் (வேணுனு) குழலினுல் (ஸஞ்ஜகௌ) இனிமையாகப் பாடினுன்.

௯. ராஸோத்ஸவ: ஸம்ப்ரவ்ருத்தோ
கோபீ-மண்டல-மண்டித: ।
யோகேச்வரேண க்ருஷ்ணேன தாஸாம்
மத்யே த்வயோர்-த்வயோ: ॥
ப்ரவிஷ்டேன க்ருஹீதானும் கண்டே
ஸ்வநிகடம் ஸ்த்ரிய: ॥

அவர்களுள் இரண்டிரண்டு பேர்க்கிடையிலும் புகுந்து அந்த ஸ்திரீகள் தங்கள் பக்கத்திலேயே அவர் இருப்பதாக நினைக்கும்படி கழுத்தை அணைத்துக் கட்டிக்கொண்டிருந்த யோகீசுவரரான கிருஷ்ண னுல் கோபீ மண்டலத்துடன் ராஸக் கிரீடை ஆரம்பிக்கப்பட்டது.

—பாகவதம் 10.33.3-4.

## 2.36. மயில்களும் அன்னங்களும் மகிழும் குழலோசை

केकिकेकादृतानेक-पङ्केरुहा-
लीन-हंसावली-हृद्यता हृद्यता ।
कंसवंशाटवी-दाहदावानलः
सञ्जगौ वेणुना देवकीनन्दनः ॥ २.३६ ॥

கேகி-கேகாத்ருதானேக-பங்கேருஹா-
லீன-ஹம்ஸாவலீ-ஹ்ருத்யதா ஹ்ருத்யதா ।
கம்ஸவம்சாடவீ-தாஹதாவானல:
ஸஞ்ஜகௌ வேணுனு தேவகீநந்தன: ॥ 2.36 ॥

2. 36. (கேகி-) மயில்களினுல் (கே கா-) 'கே' 'கா' என்பது போன்ற சப்தங்களால் (ஆத்ருத) கொண்டாடப்படுவதும் (அனேக-) பல (பங்கேருஹ-) தாமரைப் பூக்களில் (ஆலீன)

Koviloor Digital Library



மறைந்துறையும் (ஹம்ஸ-ஆவலீ-) அன்னப் பறவைகளின் கூட்டத்திற்கு (ஹ்ருத்யதா) மகிழ்ச்சியைப் பெருக்குவதுமான (வேணுனா) புல்லாங்குழலினால் (கம்ஸ-வம்ச-அடவீ-) கம்ஸனுடைய குலமாகிற வனத்தை (தாஹ-) எரிக்கும் (தாவானலஃ) காட்டுத் தீ போன்ற (தேவகீநந்தனஃ) தேவகீ புத்திரனான கிருஷ்ணன் (ஸஞ்ஜகௌ) இனிமையாகப் பாடினான்.

கம்ஸ - வம்சாடவீ—ஒ. கஞ்சன் வயிற்றில் நெருப்பென்ன நின்ற நெடுமாலே. —திருப்பாவை.

## 2.37. ஆடுபவனும் பாடுபவனும்

काऽपि वीणाभिराराविणा कम्पितः
काऽपि वीणाभिरा-किङ्किणी-नर्तितः ।
काऽपि वीणाभिरामान्तरं गापितः
सञ्जगौ वेणुना देवकीनन्दनः ॥ २.३७ ॥

க்வாபி வீணாபி-ராராவிணா கம்பிதஃ
க்வாபி வீணாபிரா-கிங்கிணீ-நர்த்திதஃ ।
க்வாபி வீணாபிராமாந்தரம் காபிதஃ
ஸஞ்ஜகௌ வேணுனா தேவகீநந்தனஃ ॥ 2.37 ॥

2. 37. (க்வ அபி) ஒரிடத்தில் (வீணாபிஃ) வீணைகளைக் கொண்டு (ஆராவிணா) பாடுகின்றவரால் (கம்பிதஃ) ஆட்டுவிக்கப் பெற்றவனும், (க்வ அபி) ஒரிடத்தில் (வீணாபிரா) வீணையோடொத்த ஒலியுடைய (கிங்கிணீ-) சலங்கைகளால் (நர்த்திதஃ) நர்த்தனம் செய்யும்படி தூண்டப் பெற்றவனும் (க்வ அபி) ஒரிடத்தில் (வீணா-அபிராம-அந்தரம்) வீணையின் நாதம் போன்ற இனிய குரலில் (காபிதஃ) பாடும்படி செய்யப் பெற்றவனுமான (தேவகீநந்தனஃ) கிருஷ்ணன் (வேணுனா) குழல்கொண்டு (ஸஞ்ஜகௌ) இனிமையாகப் பாடினான்.

Koyiloor Digital Library

## 2.38. கோபியர்களின் தெய்வம்

चारुचन्द्रावली-लोचनैश्चुम्बितो
गोपगोवृन्द-गोपालिका-वल्लभः ।
वल्लवीवृन्द-वृन्दारकः कामुकः
सञ्जगौ वेणुना देवकीनन्दनः ॥ २.३८ ॥

சாரு-சந்த்ராவலீ-லோசனைச்சும்பிதோ
கோபகோ-ப்ருந்த-கோபாலிகா-வல்லபஃ ।
வல்லவீ-ப்ருந்த-ப்ருந்தாரகஃ காமுகஃ
ஸஞ்ஜகௌ வேணுநா தேவகீநந்தனஃ ॥ 2.38 ॥

2. 38. (சாரு-) அழகிய (சந்த்ர - ஆவலீ-) சந்திரனைப் போன்ற முகம் படைத்த பல பெண்களின் (லோசனைஃ) கண்களால் (சும்பிதஃ) முத்தமிடப் பெற்றவனும் (கோப-) கோபர்களுக்கும் (கோ-) பசுக்களுக்கும் (கோபாலிகா-) கோபிகளுக்கும் (வல்லபஃ) நாயகனும் (காமுகஃ) கோபியர்களிடம் விருப்பங் கொண்டவனும் (வல்லவீ - ப்ருந்த -) கோபியர் குழாத்திற்கு (ப்ருந்தாரகஃ) அழகுத் தெய்வமும் ஆகிய (தேவகீ நந்தனஃ) கிருஷ்ணன் (வேணுநா) குழல்கொண்டு (ஸஞ்ஜகௌ) இனிமையாகப் பாடினான்.

## 2.39. கோபிகா ரமணன்

मौलि-मालामिलन्मत्त-भृङ्गीलता-
भीत-भीत-प्रिया-विभ्रमालिङ्गितः ।
स्रस्तगोपीकुचाभोग-सम्मेलितः
सञ्जगौ वेणुना देवकीनन्दनः ॥ २.३९ ॥

மௌலி-மாலாமிலன்-மத்தப்ருங்கீலதா-
பீத-பீத-ப்ரியா-விப்ரமாலிங்கிதஃ ।
ஸ்ரஸ்த-கோபீகுசாபோக-ஸம்மேலிதஃ
ஸஞ்ஜகௌ வேணுநா தேவகீநந்தனஃ ॥ 2.39 ॥

Koviloor Digital Library


2. 39. (மௌலி-மாலா-) தலையிலணிந்த பூமாலையில் (மிலத்-) சேர்ந்த (மத்த-ப்ருங்கீ-லதா) மதம் பிடித்த வண்டு களின் வரிசைக்கு (பீத-பீத-) மிகவும் பயந்த (ப்ரியா-) காதலியால் (விப்ரம-ஆலிங்கிதஃ) பரபரப்புடன் தழுவிக்கொள்ளப்படுபவனும் (ஸ்ரஸ்த-கோபீ-குச-) நகில்களின் மேலாடை நழுவின கோபி களால் (ஆபோக-ஸம்மேலிதஃ) பரந்த மார்புடன் சேர்க்கப்படு பவனுமாகிய (தேவகீநந்தனஃ) கிருஷ்ணன் (வேணுனா) குழல் கொண்டு (ஸஞ்ஜகௌ) இனிமையாகப் பாடினன்.

## 2.40. கோபிகளின் நடுநாயகம்

चारु-चामीकराभास-भामा-विभु-
वैजयन्तीलता-वासितोरःस्थलः ।
नन्दवृन्दावने वासिता-मध्यगः
सञ्जगौ वेणुना देवकी-नन्दनः ॥ २.४० ॥

சாரு-சாமீகராபாஸ-பாமா-விபுர்-
வைஜயந்தீலதா-வாஸிதோரஃஸ்தலஃ ।
நந்த-ப்ருந்தாவனே வாஸிதா-மத்யகஃ
ஸஞ்ஜகௌ வேணுனா தேவகீநந்தனஃ ॥ 2.40 ॥

2. 40. (சாரு-) அழகிய (சாமீகர-ஆபாஸ-) பொன்போல் பிரகாசிக்கும் (பாமா விபுஃ) லக்ஷ்மீதேவியின் நாயகனும் (வைஜயந்தீ-லதா-) வைஜயந்தீ மாலையால் (வாஸித-) வாஸனை பொருந்திய (உரஃ ஸ்தலஃ) மார்புப் பிரதேசத்தையுடையவனும் (நந்தப்ருந்தாவனே) நந்தகோபருடைய பிருந்தாவனத்தில் (வாஸிதா-) வசிக்கும் பெண்களின் (மத்யகஃ) நடுநாயகமாய் விளங்குபவனுமாகிய (தேவகீநந்தனஃ) கிருஷ்ணன் (வேணுனா) குழல்கொண்டு (ஸஞ்ஜகௌ) இனிமையாகப் பாடினன்.

Koviloor Digital Library

## 2.41. கோபிகா கீதத்திற்குத் தன்னை அர்ப்பணம் செய்தவன்

बालिका-तालिका-ताल-लीलालया-
सङ्गसन्दर्शित-भ्रूलताविभ्रमः ।
गोपिका-गीत-दत्तावधानस्स्वयं
सञ्जगौ वेणुना देवकीनन्दनः ॥ २.४१ ॥

பாலிகா-தாலிகா-தால-லீலாலயா-
ஸங்க-ஸந்தர்சித-ப்ரூலதா-விப்ரமஃ ।
கோபிகா-கீத-தத்தாவதானஃ ஸ்வயம்
ஸஞ்ஜகௌ வேணுனா தேவகீநந்தனஃ ॥ 2.41 ॥

2. 41. (பாலிகா-) சிறுமிகள் (தாலிகா-) ஆடல் பாடலுக்கிசைவாக — தாளம்போடும் (தால-லீலா-லய-) தாள லீலையில் லயித்து (ஆஸங்க-) அதனாலுண்டான ஆனந்தத்தை (ஸந்தர்சித-) காண்பிக்கும் (ப்ரூலதா-விப்ரமஃ) புருவக்கொடியின் விலாஸத்தையுடையவனும் (கோபிகா-கீத-) கோபிகளின் பாட்டிற்கு (தத்த-அவதானஃ ஸ்வயம்) தன்னையே முழு மனதுடன் அர்ப்பணம் செய்துவிட்டவனுமான (தேவகீநந்தனஃ) கிருஷ்ணன் (வேணுனா) குழல்கொண்டு (ஸஞ்ஜகௌ) இனிமையாகப் பாடினான்.

௯. இது தான் கிருஷ்ணாவதாரத்தின் ஸாரம். தத்துவத்தின் சிகரமாகிய கீதையும் கூட இந்தப் பித்தேறிய நிலைக்கு ஒப்பாகாது. கீதையில் சீடன் படிப்படியாக இலக்ஷியத்தை நோக்கி நடக்கக் கற்பிக்கப்படுகிறான். ஆனால் இங்கே உள்ளது பிரம்மானந்தப்பித்து, அன்பின் போதை: சீடனும் ஆசானும், உபதேசமும் சாஸ்திரங்களும் எல்லாம் ஒன்றுபட்டநிலை; பாபமும், ஸ்வர்க்கமும், தெய்வமும் எல்லாம் மறந்து, மறைந்து, அன்புப்பித்து ஒன்றே இங்கு எஞ்சி உளது.
—விவேகானந்தர்.

Koviloor Digital Library



## 2.42. பாமா ரமணன்—ராதா ரமணன்

पारिजातं समुद्धृत्य राधावरो
रोपयामास भामागृहस्याङ्गणे ।
शीतशीते वटे यामुनीये तटे
सञ्जगौ वेणुना देवकीनन्दनः ॥ २.४२ ॥

பாரிஜாதம் ஸமுத்த்ருத்ய ராதாவரோ
ரோபயாமாஸ பாமாக்ருஹஸ்யாங்கணே ।
சீதசீதே வடே யாமுனீயே தடே
ஸஞ்ஜகௌ வேணுனா தேவகீநந்தனঃ ॥ 2.42 ॥

2. 42. (பாரிஜாதம்) பாரிஜாத மரத்தை (ஸமுத்த்ருத்ய) (தேவலோகத்திலிருந்து கொணர்ந்து (பாமாக்ருஹஸ்ய அங்கணே) ஸத்யபாமையின் வீட்டு முற்றத்தில் (ரோபயாமாஸ) நட்டவனும் (ராதா-வரঃ) ராதா ரமணனும் ஆகிய (தேவகீநந்தனঃ) கிருஷ்ணன் (யாமுனீயே தடே) யமுனா நதிக்கரையில் (சீதசீதே வடே) மிகவும் குளிர்ச்சியான ஆலமரத்தின் கீழ் (வேணுனா) குழல் கொண்டு (ஸஞ்ஜகௌ) இனிமையாகப் பாடினான்.

தேவலோகத்திலிருந்து பாரிஜாத மரத்தைக் கொணர்ந்து ஸத்ய பாமை வீட்டில் நட்ட வரலாறு பாகவதம் 10.59. 39-40-ல் கூறப் பட்டுள்ளது.

2. 42. ராதா-வயோ-ரூபயா மா-ஸபாஸா குணை-ரங்கணே ।
—பா. பே.

## 2.43. அழியாத வழிகாட்டும் இடையன்

अग्रे दीर्घतरोऽयमर्जुनतरु-स्तस्याग्रतो वर्त्मनी
सा घोषं समुपैति तत्परिसरे देशे कलिन्दात्मजा ।
तस्यास्तीर-तमालकाननतले चक्रं गवां चारयन्
गोपः क्रीडति दर्शयिष्यति सखे पन्थानमव्याहतम् ॥

Koviloor Digital Library

அக்ரே தீர்க்கதரோsய-மர்ஜுனதருஸ்-
தஸ்யாக்ரதோ வர்த்மனீ
ஸா கோஷம் ஸமுபைதி தத்-பரிஸரே
தேசே கலிந்தாத்மஜா ।
தஸ்யாஸ்-தீர-தமாலகானனதலே
சக்ரம் கவாம் சாரயன்
கோப: க்ரீடதி தர்சயிஷ்யதி ஸகே
பந்தான-மவ்யாஹதம் ॥ 2.43 ॥

2. 43. (ஸகே) நண்பா! (அக்ரே) எதிரில் (தீர்க்க தர:) மிக உயர்ந்ததாகக் காணப்படும் (அயம்) இது (அர்ஜுன தரு:) அர்ஜுன மரம்; (தஸ்ய அக்ரத:) அதற்கு முன்பாக (வர்த்மனீ) வழி உளதே (ஸா) அது (கோஷம்) இடைச்சேரியை (ஸமுபைதி) சென்றடைகிறது. (தத் பரிஸரே தேசே) அதற்கருலுள்ள வெளியில் (கலிந்தாத்மஜா) யமுனை யாறு உளது. (தஸ்யா:) அவ்வாற்றின் (தீர-) கரையிலுள்ள (தமால கானன-தலே) பச்சிலை மரங்கள் நிறைந்த வனப்பிரதேசத்தில் (கோப:) ஒரு இடையன் (கவாம் சக்ரம்) பசு மண்டலத்தை (சாரயன்) மேய்த்துக் கொண்டு (க்ரீடதி) விளையாடிக்கொண்டிருக்கிறான், (பந்தானம் அவ்யாஹதம்) அழிவில்லாத வழியை (தர்சயிஷ்யதி) அவன் காண்பிப்பான்.

வர்த்தினி |

## 2.44. மாலையில் பசுக்களைக்கட்ட வீடுதோறும் செல்பவன்

गोधूलि-धूसरित-कोमल-गोपवेषं
गोपाल-बालकशतै-रनुगम्यमानम् ।
सायन्तने प्रतिगृहं पशुबन्धनार्थं
गच्छन्त-मच्युतशिशुं प्रणतोऽस्मि नित्यम् ॥ २.४४ ॥

Koviloor Digital Library



கோதூலி-தூஸரித-கோமல-கோபவேஷம்
கோபால-பாலகசதை-ரனுகம்யமானம் ।
ஸாயந்தனே ப்ரதிக்ருஹம் பசுபந்தனார்த்தம்
கச்சந்த-மச்யுதசிசும் ப்ரணதோ஽ஸ்மி நித்யம் ॥

2. 44. (கோ—தூலி-) பசுக்களின் குளம்படிகளிலிருந்தெழும் தூசியினால் (தூஸரித-) அழுக்கடைந்ததால் (கோமல-) அழகு தோன்றும் (கோபவேஷம்) மாடு மேய்க்கும் கோலம் பூண்டவனும் (கோபால-பாலக-சதைஃ) நூற்றுக்கணக்கான இடைச் சிறுவர்களால் (அனுகம்யமானம்) பின் தொடரப்பட்டவனும் (ஸாயந்தனே) மாலைப் பொழுதில் (பசுபந்தனார்த்தம்) பசுக்களைக் கட்டுவதற்காக (ப்ரதி-க்ருஹம்) வீடுதோறும் (கச்சந்தம்) செல்பவனுமாகிய (அச்யுதசிசும்) பாலகிருஷ்ணனை (நித்யம்) இடைவிடாது (ப்ரணதஃ அஸ்மி) நான் வணங்குகிறேன்.

## 2.45. அழகின் பொக்கசம்

निधिं लावण्यानां निखिल-जगदाश्चर्य-निलयं
निजावासं भासां निरवधिक-निश्श्रेयस-रसम् ।
सुधाधारासारं सुकृत-परिपाकं मृगदृशां
प्रपद्ये माङ्गल्यं प्रथम-मधिदैवं कृतधियाम् ॥ २.४५ ॥

நிதிம் லாவண்யானாம் நிகில-
ஜகதாச்சர்ய-நிலயம்
நிஜாவாஸம் பாஸாம் நிரவதிக-
நிஃச்ரேயஸ-ரஸம் ।
ஸுதாதாராஸாரம் ஸுக்ருத-
பரிபாகம் ம்ருகத்ருசாம்
ப்ரபத்யே மாங்கல்யம் ப்ரதம-
மதிதைவம் க்ருததியாம் ॥ 2.45 ॥

Koviloor Digital Library


2.45. (லாவண்யானும் நிதிம்) அழகின் லக்ஷணங்களுக்குப் பொக்கசமும் (நிகில ஜகத்) உலகனைத்திலுமுள்ள (ஆச்சர்ய-நிலயம்) ஆச்சரியங்களுக்கிருப்பிடமும் (பாஸாம்) பிரகாசங்களுக்கு (நிஜ ஆவாஸம்) இயற்கையான உறைவிடமும் (நிரவதிக-) எல்லையில்லாத (நிச்ரேயஸ-ரஸம்) மோக்ஷானந்தமாவதும் (ஸுதா-தாரா-ஸாரம்) அமிருதப் பிரவாகத்தின் ஸாரமும் (ம்ருகத்ருசாம்) மான் விழி படைத்த பெண்களின் (ஸுக்ருத-பரிபாகம்) புண்ணியத்தின் பக்குவ நிலையும் (க்ருதிநாம்) ஞானச் செல்வர்களின் (மாங்கல்யம்) மங்களமும் (ப்ரதமம் அதிதைவம்) முதலும் முக்ய தேவதையும் ஆகியவனை (ப்ரபத்யே) சரணடைகின்றேன்.

## 2.46. அர்ஜுனனுடைய தேருக்கு ஆபரணம் போன்றவன்

आताम्रपाणि-कमल-प्रणय-प्रतोद-
मालोल-हार-मणि-कुण्डल-हेमसूत्रम् ।
आविश्रमाम्बुकण-मम्बुद-नील-मव्या-
दाद्यं धनञ्जय-रथाभरणं महो नः ॥ २.४६ ॥

ஆதாம்ரபாணி-கமல-ப்ரணய-ப்ரதோத-
மாலோல-ஹார-மணி-குண்டல-ஹேமஸூத்ரம் ।
ஆவிச்ரமாம்புகண-மம்புதநீல-மவ்யா-
தாத்யம் தனஞ்ஜய-ரதாபரணம் மஹோ நः ॥ 2.46 ॥

2.46. (ஆதாம்ரபாணிகமல) செக்கச் சிவந்த தாமரை போன்ற கையுடன் (ப்ரணய-) உறவு கொண்ட (ப்ரதோதம்) சாட்டையை உடையதும் (ஆலோல-) அசையும் (ஹார-மணி குண்டல- ஹேமஸூத்ரம்) மாலை, ரத்ன குண்டலம், அரை ஞாண் ஆகியவற்றை உடையதும், (ஆவிச்ரம-அம்பு-கணம்) பரவிய வியர்வைத் துளிகளை உடையதும் (அம்புத-நீலம்) மேகம்போல்

Koviloor Digital Library



கரியதும் (தனஞ்ஜய-ரத-ஆபரணம்) அர்ஜுனனுடைய தேருக்கு ஆபரணம் போன்றதுமான (ஆத்யம் மஹ:) மூலவொளி (ந:) நம்மை (அவ்யாத்) காப்பாற்றட்டும்.

### 2.47. அர்ஜுனன் தேர்க்குதிரைகளைத் தானே கழுவிய கண்ணன்

नख-नियमित-कण्डून् पाण्डव-स्यन्दनाश्वा-
ननुदिन-मभिषिञ्चन्नञ्जलिस्थैः पयोभिः ।
अवतु वितत-गात्र-स्तोत्र-निष्ठ्यूत-मौलि-
र्दशन-विधृत-रश्मि-र्देवकीपुण्यराशिः ॥ २.४७ ॥

நக-நியமித-கண்டூன் பாண்டவ-ஸ்யந்தனாச்வா-
னனுதின-மபிஷிஞ்சன்னஞ்ஜலிஸ்தை: பயோபி: ।
அவது விதத-காத்ரஸ்-தோத்ர-நிஷ்ட்யூத-மௌலிர்-
தசன-வித்ருத-ரச்மிர்-தேவகீபுண்யராசி: ॥ 2.47 ॥

2. 47. (நக-நியமித-கண்டூன்) நகங்களினால் தினவு போக்கப் பெற்ற (பாண்டவ-ஸ்யந்தன-அச்வான்) பாண்டவன் தேர்க்குதிரைகளை (அஞ்ஜலிஸ்தை: பயோபி:) கைகளிலேந்திய நீரால் (அனுதினம்) நாள்தோறும் (அபிஷிஞ்சன்) குளிப்பாட்டிக் கொண்டு (விதத-காத்ர:) திறந்த உடம்புடனும் (தோத்ர-நிஷ்ட்யூத-மௌளி:) கசை செருகப் பெற்ற தலைப்பாகையுடனும் (தசன-வித்ருத-ரச்மி:) பற்களில் கடித்துக் கொண்ட கடிவாளத்துடனும் விளங்கிய (தேவகீபுண்யராசி:) தேவகியின் புண்ணிய ராசியாயவதரித்த கிருஷ்ணன் (அவது) நம்மை ரக்ஷிக்கட்டும்.

### 2.48. என்சித்தம் அவன் திருவடியிலேயே வசிக்கட்டும்.

व्रजयुवति-सहाये यौवनोल्लासिकाये
सकल-शुभविलासे कुन्दमन्दार-हासे ।
निवसतु मम चित्तं तत्पदायत्तवृत्तं
मुनिसरसिजभानौ नन्दगोपालसूनौ ॥ २.४८ ॥

Koviloor Digital Library

வ்ரஜயுவதி-ஸஹாயே யௌவனேல்லாஸிகாயே
ஸகல-சுபவிலாஸே குந்தமந்தார-ஹாஸே ।
நிவஸது மம சித்தம் தத்பதாயத்த-வ்ருத்தம்
முனிஸரஸிஜ-பாநௌ நந்தகோபால-ஸூநௌ ॥

2. 48. (வ்ரஜயுவதி-ஸஹாயே) ஆய்ப்பாடிப் பெண்களுக்குத் துணைவனும் (யௌவன-உல்லாஸி-காயே) யௌவனத்தின் அழகு மலர்ந்த திருமேனியுடையவனும் (ஸகல-சுப-விலாஸே) எல்லா மங்களங்களுக்கும் உறைவிடமானவனும் (குந்த-மந்தார-ஹாஸே) குருக்கத்திப் பூப்போலும் கொக்கு மந்தாரைப்போலும் வெண்மையான சிரிப்புடையவனும் (முனி-ஸரஸிஜ-பாநௌ) முனிவர்களாகிற தாமரைக்குச் சூரியன் போன்றவனும் ஆகிய (நந்த கோபால-ஸூநௌ) நந்தகோபர் குமாரனிடம் (மம சித்தம்) என் மனது (தத்-பத-ஆயத்த-வ்ருத்தம்) அவனுடைய திருவடிகளைப் பற்றின சிந்தனையையே தொழிலாய்க் கொண்டு (நிவஸது) திருவடிகளிலேயே வசிக்கட்டும்.

## 2.49. பூதேவியால் அணைத்துக் கொள்ளப்பட்ட திருவடிகள்

अरण्यानी-मार्द्र-स्मित-मधुर-बिम्बाधर-सुधा
सरण्या संक्रान्तैस्सपदि मदयन् वेणु-निनदैः ।
धरण्या सानन्दोत्पुलक-मुपगढांङ्घ्रि-कमलः
शरण्याना-माद्यस्स जयतु शरीरी मधुरिमा ॥२.४९॥

அரண்யானி-மார்த்ர-ஸ்மித-
மதுர-பிம்பாதர-ஸுதா
ஸரண்யா ஸங்க்ராந்தைஸ்-ஸபதி
மதயன் வேணு-நிநதை: ।

Koviloor Digital Library


தரண்யா ஸானந்தோத்புலக-
முபகூடாங்க்ரிகமலஃ
சரண்யானு-மாத்யஸ்ஸ ஜயது
சரீரீ மதுரிமா ॥ 2.49 ॥

2. 49. (அரண்யானீம்) பெரிய வனமாகிற பிருந்தாவனத்தை (ஆர்த்ர-ஸ்மித-) அன்பொழுகும் புன்சிரிப்பால் (மதுர-) இனிமையான (பிம்ப-அதர-ஸுதா-ஸரண்யா) கொவ்வைச் செவ்வாயின் அமுதப் பெருக்குடன் (ஸங்க்ராந்தைஃ) கலந்து வரும் (வேணு-நிநதைஃ) வேணுகானத்தால் (மதயன்) மயக்குவதும் (தரண்யா) பூதேவியால் (ஸானந்த-உத்புலகம்) ஆனந்தத்தாலுண்டான புளகாங்கிதத்துடன் (உபகூட-அங்க்ரி-கமலஃ) அணைத்துக் கொள்ளப்பட்ட திருவடித் தாமரைகளையுடையதும் (சரண்யானும் ஆத்யஃ) புகலிடங்களுக்குள் முதன்மையானதும் (மதுரிமா சரீரீ) இனிமையே உடல் கொண்டு விளங்குவதுமான (ஸஃ) அந்தப் பரதத்துவம் (ஜயது) வெற்றியுடன் விளங்கட்டும்.

## 2.50. வேத வாக்கியங்களுக்கும் எட்டாதவன்

विदग्ध-गोपाल-विलासिनीनां
संभोग-चिह्नाङ्कित-सर्वगात्रम् ।
पवित्र-माम्नायगिरा-मगम्यं
ब्रह्म प्रपद्ये नवनीतचोरम् ॥ २.५० ॥

விதக்த-கோபால-விலாஸினீனும்
ஸம்போக-சிஹ்னங்கித-ஸர்வகாத்ரம்
பவித்ர-மாம்னயகிரா-மகம்யம்
ப்ரஹ்ம ப்ரபத்யே நவநீதசோரம் ॥ 2.50 ॥

2. 50. (விதக்த-) பாவங்கள் எரியப் பெற்ற (கோபால-விலாஸினீனும்) இடைப் பெண்களுடன் (ஸம்போக-) கூடியதால் (சிஹ்ன-அங்கித-ஸர்வகாத்ரம்) அடையாளம் செய்யப்பட்ட

Koviloor Digital Library

எல்லா அங்கங்களையுமுடையவனும், (பவித்ரம்) அண்டியவர் களைப் புனிதமாக்குபவனும் (ஆம்னாயகிராம்-அகம்யம்) வேத வாக்கியங்களுக்கும் எட்டாதவனும் (நவநீத-சோரம்) வெண்ணெய் யைக் களவாடுபவனும் ஆகிய (ப்ராஹ்ம) பிரம்ம தத்துவமாகிய கிருஷ்ணனை (ப்ரத்யே) சரணடைகின்றேன்.

**2.51.** கட்டிற்கு அகப்படாதவன் கட்டப்பட்டு நின்றான்

**अन्तर्गृहे कृष्ण-मवेक्ष्य चोरं**
**बद्ध्वा कवाटं जननीं गतैका ।**
**उलूखले दामनिबद्ध-मेनं**
**तत्रापि दृष्ट्वा स्तिमिता बभूव ॥ २.५१ ॥**

அந்தர்-க்ருஹே க்ருஷ்ண-மவேக்ஷ்ய சோரம்
பத்த்வா கவாடம் ஜனனீம் கதைகா ।
உலூகலே தாமநிபத்த-மேனம்
தத்ராபி த்ருஷ்ட்வா ஸ்திமிதா பபூவ ॥ 2.51 ॥

2. 51. (ஏகா) ஒரு கோபிகை (சோரம்) வெண்ணெய்யைத் திருடிய (க்ருஷ்ணம்) கிருஷ்ணனை (அந்தர்-க்ருஹே) வீட்டுக்குள் (அவேக்ஷ்ய) பார்த்து, (பத்த்வா கவாடம்) கதவை அடைத்து விட்டு (ஜனனீம்) அவன் தாயான யசோதையிடம் (கதா) சென்றாள். (தத்ர அபி) அவ்விடத்திலும் (உலூகலே) உரலில் (தாம நிபத்தம்) கயிற்றினால் கட்டி வைக்கப்பட்டிருந்த (ஏனம்) இந்தக் கிருஷ்ணனை (த்ருஷ்ட்வா) பார்த்து (ஸ்திமிதா பபூவ) அசைவற்று நிற்கலானாள்.

**2.52.** தவழும் குழந்தை கிருஷ்ணன்

**रत्नस्थले जानुचरः कुमारः**
**सङ्क्रान्त-मात्मीय-मुखारविन्दम् ।**
**आदातु-लाभ-स्तदलाभ-खेदा-**
**द्विलोक्य धात्री-वदनं रुरोद ॥ २.५२ ॥**

Koviloor Digital Library


ரத்னஸ்தலே ஜானுசர꞉ குமார꞉
ஸங்கராந்த-மாத்மீய-முகாரவிந்தம் ।
ஆதாது-லாபஸ்-ததலாப-கேதாத்-
விலோக்ய தாத்ரீ-வதனம் ருரோத ॥ 2.52. ॥

2. 52. (ரத்னஸ்தலே) ரத்னமிழைத்த தரையில் (ஜானுசர꞉) தவழ்ந்து செல்லும் (குமார꞉) குழந்தை கிருஷ்ணன் (ஸங்க்ராந்தம்) தரையில் பிரதிபலித்த (ஆத்மீய-) தன்னுடைய (முகாரவிந்தம்) தாமரை போன்ற முகத்தை (ஆதாது-லாப꞉) பிடிக்க விரும்பியவன் (தத் அலாப கேதாத்) அதைப் பிடிக்க முடியாத வருத்தத்தினால் (தாத்ரீ வதனம்) தாதியினுடைய முகத்தை (விலோக்ய) பார்த்து (ருரோத) அழுதான்.

ஆதாதுகாம꞉ பா. பே.

## 2.53. மனதிற்கொத்த காட்சியளிக்கும் கிரிதர கிருஷ்ணன்

आनन्देन यशोदया समदनं गोपाङ्गनाभिश्चिरं
साशङ्कं बलविद्विषा सकुसुमैः सिद्धैः पृथिव्याकुलम् ।
सेर्ष्यं गोपकुमारकैः-स्सकरुणं पौरै-र्जनैः सस्मितं
यो दृष्टः स पुनातु नो मुररिपुः प्रोत्क्षिप्त-गोवर्धनः ॥२.५३॥

ஆனந்தேன யசோதயா
ஸமதனம் கோபாங்கனாபிச்சிரம்
ஸாசங்கம் பலவித்விஷா
ஸகுஸுமை꞉ ஸித்தை꞉ ப்ருதிவ்யாகுலம் ।
ஸேர்ஷ்யம் கோபகுமாரகைஸ்-
ஸகருணம் பௌரைர்-ஜனை꞉ ஸஸ்மிதம
யோ த்ருஷ்ட꞉ ஸ புனாது நோ
முராரிபு꞉ ப்ரோத்க்ஷிப்த-கோவர்த்தன꞉ ॥ 2.53 ॥

Koviloor Digital Library

2. 53. (ஆனந்தேன) ஆனந்தத்துடன் (யசோதயா) யசோதையாலும், (ஸமதனம்) காமத்துடன் (சிரம்) நீண்ட காலம் (கோபாங்கனுபிஃ) கோபிகைகளாலும், (ஸ-ஆசங்கம்) ஸந்தேகத்துடன் (பலவித்விஷா) இந்திரனாலும், (ஸகுஸுமைஃ) அர்ச்சிப்பதற்குப் புஷ்பங்களுடன் (ஸித்தைஃ) சித்தர்களாலும், (ஆகுலம்) வருத்தத்துடன் (ப்ருதிவ்யா) பூ தேவியாலும், (ஸ ஈர்ஷ்யம்) பொருமையுடன் (கோபகுமாரகைஃ) ஆயர்பாடிச் சிறுவர்களாலும் (ஸகருணம்) . கருணையுடன் (பௌரைஃ) ஊர் மக்களாலும் (ஜனைஃ) மற்றுமுள்ள ஜனங்களால் (ஸஸ்மிதம்) புன்னகையுடனும் (ப்ரோக்ஷிப்த-கோவர்த்தனஃ) கோவர்த்தன கிரியைத் தூக்கினவனுகிய (யஃ முராரிபுஃ) எந்த கிருஷ்ணன் (த்ருஷ்டஃ) பார்க்கப்பட்டானே (ஸஃ) அவன் (நஃ) நம்மை (புனுது) புனிதமாக்கட்டும். எல்லாவிதமான மனோபாவனைகளும் அவனிடம் பொருந்தலாயின.

## 2.54. பால லீலையாகிய அமுதக்கடல்

उपासता-मात्मविदः पुराणाः
परं पुमांसं निहितं गुहायाम् ।
वयं यशोदा-शिशु-बाललीला-
कथा-सुधा-सिन्धुषु लीलयामः ॥ २.५४ ॥

உபாஸதா-மாத்மவிதஃ புராணுஃ
பரம் புமாம்ஸம் நிஹிதம் குஹாயாம் ।
வயம் யசோதா-சிசு-பால லீலா-
கதா-ஸுதா-ஸிந்துஷு லீலயாமஃ ॥ 2·54 ॥

2. 54. (புராணுஃ) புராதனவழியில் செல்லும் (ஆத்மவிதஃ) ஆத்மஞானிகள் (குஹாயாம்) இருதய குகையில் (நிஹிதம்) மறைந்துறையும் (பரம் புமாம்ஸம்) பரம புருஷனை (உபாஸதாம்) தியானம் செய்யட்டும். (வயம்) நாம் (யசோதா-சிசு-) யசோதையின் குழந்தையான கிருஷ்ணனுடைய (பால-லீலா) பால லீலைகளைப் பற்றிய (கதா-ஸுதா-ஸிந்துஷு) கதைகளாகிற அமுதக்கடலில் (லீலயாமஃ) விளையாடுவோம்

Koviloor Digital Library



ஒ. த்யாநாப்பாஸ - வசீக்ருதேந மநஸா யந்நிர்குணம் நிஷ்-க்ரியம் ஜ்யோதிः கிஞ்சந யோகிநோ யதி பரம் பச்யந்தி பச்யந்து தே ।
அஸ்மாகந் து ததேவ லோசந-சமத்காராய பூயாச்சிரம் காலிந்தீ புலிநேஷு யத் கிமபி தந்நீலம் மஹோ தாவதி ॥

—மதுஸூதன ஸரஸ்வதி.

பரம் பரஸ்தாந்நிஹிதம் குஹாயாம் —பா. பே.

## 2.55. தயிர் விற்கச் சென்ற கோபிகையின் பக்தி பரவசம்

विक्रेतु-कामा किल गोपकन्या
मुरारि-पादार्पित-चित्तवृत्तिः ।
दध्यादिकं मोहवशा-दवोच-
द्गोविन्द दामोदर माधवेति ॥ २.५५ ॥

விக்ரேது-காமா கில கோபகன்யா
முராரி-பாதார்ப்பித-சித்தவ்ருத்திः ।
தத்யாதிகம் மோஹவசா-தவோசத்-
கோவிந்த தாமோதர மாதவேதி ॥ 2.55 ॥

2. 55. (தத்யாதிகம்) தயிர் முதலியவற்றை (விக்ரேது காமா) விற்க விரும்பிச் சென்ற (கோப கன்யா) ஓர் இடைப்பெண் (முராரி-பாத-அர்ப்பித-) கிருஷ்ணனுடைய திருவடியில் வைக்கப் பெற்ற (சித்த-வ்ருத்திः) மனோ வியாபாரத்தை உடையவளாய் (மோஹவசாத்) தன் வயமிழந்து, (கோவிந்த தாமோதர மாதவ இதி)—தயிரோ பாலோ என்று கூவாமல் — 'கோவிந்தா தாமோதரா மாதவ' என்று (அவோசத் கில) கூவ வில்லையா ?

விக்ரீதுகாமா. —பா. பே.

## 2.56. கிருஷ்ணனாகிய யானைக்குட்டிக்குக் கட்டுத்தறி

उलूखलं वा यमिनां मनो वा
गोपाङ्गनानां कुचकुट्मलं वा ।
मुरारि-नाम्नः कलभस्य नून-
मालान-मासीत् त्रयमेव भूमौ ॥ २.५६ ॥

Koyiloor Digital Library


உலூகலம் வா யமினும் மனோ வா
கோபாங்கனுனும் குசகுட்மலம் வா ।
முராரி-நாம்னஃ கலபஸ்ய நூன-
மாலான-மாஸீத் த்ரயமேவ பூமௌ ॥ 2.56 ॥

2. 56. (உலூகலம் வா) உரலோ (யமினும்) யோகிகளுடைய (மனஃ வா) மனமோ (கோப அங்கனுனும்) இடைப்பெண்களுடைய (குசகுட்மலம் வா) மொக்குப் போன்ற நகில்களோ— (த்ரயம் ஏவ) இம்மூன்றே (பூமௌ) பூலோகத்தில் (முராரி நாம்னஃ) கிருஷ்ணன் என்று பெயர் பெற்ற (கலபஸ்ய) யானைக் குட்டிக்கு (ஆலானம்) கட்டுத்தறியாக (ஆஸீத்) ஆயிற்று; (நூனம்) இது நிச்சயம்.

## 2.57. ஆலிலையில் பள்ளிகொண்ட மாயன்

करारविन्देन पदारविन्दं
मुखारविन्दे विनिवेशयन्तम् ।
वटस्य पत्रस्य पुटे शयानं
बालं मुकुन्दं मनसा स्मरामि ॥ २.५७ ॥

கராரவிந்தேன பதாரவிந்தம்
முகாரவிந்தே விநிவேசயந்தம் ।
வடஸ்ய பத்ரஸ்ய புடே சயானம்
பாலம் முகுந்தம் மனஸா ஸ்மராமி ॥ 2.57 ॥

2. 57. (கர அரவிந்தேன) தாமரை போன்ற கையால் (பத அரவிந்தம்) தாமரை போன்ற பாதத்தைப் பிடித்து (முக அரவிந்தே) தாமரை போன்ற வாயில் (விநிவேசயந்தம்) வைத்துக் கொண்டு (வடஸ்ய பத்ரஸ்ய) ஆல் இலையின் (புடே) தலத்தில் (சயானம்) பள்ளிகொண்டிருக்கும் (பாலம் முகுந்தம்) பால முகுந்தனை (மனஸா) மனதால் (ஸ்மராமி) தியானிக்கின்றேன்.

Koviloor Digital Library


## 2.58. பாலகிருஷ்ணனுடைய கனவு

शम्भो स्वागत-मास्यतामित इतो वामेन पद्मासन
क्रौञ्चारे कुशलं सुखं सुरपते वित्तेश नो दृश्यसे।
इत्थं स्वप्नगतस्य कैटभजितश्श्रुत्वा यशोदा गिरः
किं किं बालक जल्पसीति रचितं धूधूकृतं पातु नः॥२.५८॥

சம்போ ஸ்வாகத-மாஸ்யதாமித
இதோ வாமேன பத்மாஸன
க்ரௌஞ்சாரே குசலம் ஸுகம் ஸுரபதே
வித்தேச நோ த்ருச்யஸே।
இத்தம் ஸ்வப்னகதஸ்ய கைடப-
ஜிதஃ ச்ருத்வா யசோதா கிரஃ
கிம் கிம் பாலக ஜல்பஸீதி ரசிதம்
தூதூக்ருதம் பாது நஃ॥ 2.58॥

2. 58. '(சம்போ) சம்புவே! (ஸ்வாகதம்) நல்வரவு; (இதஃ) இங்கே (ஆஸ்யதாம்) உட்காரலாம். (பத்மாஸன) பிரம்மாவே (இதஃ) இப்படி (வாமே) இடது பக்கத்தில்— (ஆஸ்யதாம்) உட்காரலாம்—(க்ரௌஞ்சாரே) கார்த்திகேயா! (குசலம்) க்ஷேமமா? (ஸுரபதே) தேவேந்திரா! (நோ த்ருச்யஸே) ஏன் காணப்படுவதே இல்லை?' (இத்தம்) இம்மாதிரி யாக (ஸ்வப்ன-கதஸ்ய) தூங்குகிற (கைடப ஜிதஃ) கிருஷ்ண னுடைய (கிரஃ) சொற்களை (யசோதா) யசோதை (ச்ருத்வா) கேட்டு (பாலக) குழந்தாய்! (கிம் கிம் ஜல்பஸி) என்ன! என்ன பிதற்றுகிறாய் (இதி) என்று (ரசிதம்) செய்யப்பட்ட (தூ தூ க்ருதம்) தூ! தூ! என்ற அகட்டல் (நஃ) நம்மை (பாது) காப் பாற்றட்டும்.

Noolaham Digital Library

## 2.59. கண்ணனுடைய மழலைப் பேச்சு

मातः किं यदुनाथ देहि चषकं
किं तेन पातुं पय-
स्तन्नास्त्यद्य:कदास्ति वा निशि निशा
का वाऽन्धकारोदये।
आमील्याक्षियुगं निशाप्युप-गता
देहीति मातु-र्मुहु-
र्वक्षोजांशुक-कर्षणोद्यत-करः
कृष्णस्स पुष्णातु नः॥ २.५९.॥

மாத: கிம் யதுநாத தேஹி சஷகம்
கிம் தேந பாதும் பயஸ்-
தந்நாஸ்த்யத்ய கதாஸ்தி வா நிசி நிசா
காவாऽந்தகாரோதயே ।
ஆமீல்யாக்ஷியுகம் நிசாப்யுபகதா
தேஹீதி மாதுர்-முஹுர்-
வக்ஷோஜாம்சுக-கர்ஷணோத்யதகர:
க்ருஷ்ணஸ்-ஸ புஷ்ணாது ந: ॥ 2.59 ॥

2. 59. '(மாத:) அம்மா!'—'(கிம் யது நாத) என்ன கிருஷ்ணா?' '(தேஹி சஷகம்) கிண்ணம் கொடு'—'(கிம் தேந) அதனால் ஆவதென்ன?'—'(பாதும் பய:) பால் குடிப்பதற்கு'—'(தத் நாஸ்தி அத்ய) அது இப்போது இல்லை'—'(கதா வா அஸ்தி) ஆனால் எப்போது இருக்கும்?'—'(நிசி) ராத்திரியில்'—'(நிசா கா வா) ராத்திரி என்றால் என்ன?' '(அந்தகார உதயே) இருட்டு ஆரம்பிக்கும்போது'—(அக்ஷியுகம்) இரு கண்களையும் (ஆமீல்ய) மூடிக்கொண்டு—'(நிசா அபி உபகதா) இருட்டு வந்துவிட்டது (தேஹி) கொடு'—(இதி) என்று (முஹு:) அடிக்கடி (மாது:) தாயினுடைய (வக்ஷோஜ-அம்சுக) கொங்கை மேலுள்ள

Koviloor Digital Library

வஸ்திரத்தை (கர்ஷண-உத்யத꞉) இழுப்பதில் முயலும் (கர꞉) கைகளையுடைய (ஸ꞉ க்ருஷ்ண꞉) அந்த கிருஷ்ணன் (ந꞉) நம்மை (புஷ்ணாது) போஷிக்கட்டும்.

## 2.60. கண்ணனிடம் யசோதையின் நயவஞ்சகப் பேச்சு

कालिन्दी-पुलिनोदरेषु मुसली
    यावद्गतः खेलितुं
तावत्कार्परिकं पयः पिब हरे
    वर्धिष्यते ते शिखा ।
इत्थं बालतया प्रतारणपराः
    श्रुत्वा यशोदा-गिरः
पायान्नस्स्वशिखां स्पृशन् प्रमुदितः
    क्षीरेऽर्धपीते हरिः ॥ २.६० ॥

காளிந்தீ-புலினோதரேஷு முஸலீ
    யாவத்கத꞉ கேலிதும்
தாவத்கார்ப்பரிகம் பய꞉ பிப ஹரே
    வர்த்திஷ்யதே தே சிகா ।
இத்தம் பாலதயா ப்ரதாரணபரா꞉
    ச்ருத்வா யசோதா-கிர꞉
பாயாந்ந꞉ ஸ்வசிகாம் ஸ்ப்ருசன் ப்ரமுதித꞉
    க்ஷீரேऽர்த்தபீதே ஹரி꞉ ॥ 2.60 ॥

2. 60. '(ஹரே) கிருஷ்ணா! (முஸலீ) பலராமன் (காளிந்தீ-புலினோதரேஷு) யமுனையாற்றின் மணற்குன்றுகளிடை (கேலிதும்) விளையாடுவதற்கு (யாவத் கத꞉ தாவத்) போயிருக்கும் போதே (கார்ப்பரிகம்) பொற்கிண்ணத்தில் வைக்கப்பட்ட (பய꞉) பாலை (பிப) பருகிவிடு. (தே) உனக்கு (சிகா) குடுமி

Koviloor Digital Library

(வர்த்திஷ்யதே) வளரும்' (இத்தம்) இம்மாதிரி (ப்ரதாரணபராஃ) நயவஞ்சகமாய்ச் சொன்ன (யசோதாகிரஃ) யசோதையின் சொற்களை (ச்ருத்வா) கேட்டு (பாலதயா) குழந்தைத் தன்மையால் (க்ஷீரே அர்த்த பீதே) பாதிப் பால் பருகியானதும் (ஸ்வசிகாம்) தனது குடுமியை (ஸ்ப்ருசன்) தொட்டுப் பார்த்த (ப்ரமுதிதஃ) மகிழ்ச்சியடைந்த (ஹரிஃ) கிருஷ்ணன் (நஃ) நம்மை (பாயாத்) காப்பாற்றட்டும்.

கர்ப்புரிகம். —பா. பே.

## 2.61. 'வாயினுள் வையங் கண்டாள்'

कलासो नवनीतति क्षितिरियं प्राग्जग्धमृल्लोष्टति
क्षीरोदोऽपि निपीतदुग्धति लसत् स्मेरे प्रफुल्ले मुखे ।
मात्राऽजीर्णधिया दृढं चकितया नष्टाऽस्मि दृष्टः कया
धूधू वत्सक ! जीव जीव चिरमित्युक्तोऽवतान्नो हरिः ॥

கைலாஸோ நவநீததி க்ஷிதிரியம்
ப்ராக்ஜக்த-ம்ருல்லோஷ்டதி
க்ஷீரோதோ ऽபி நிபீததுக்ததி
லஸத்ஸ்மேரே ப்ரபுல்லே முகே ।
மாத்ராऽஜீர்ணதியா த்ருடஞ் சகிதயா
நஷ்டாऽஸ்மி த்ருஷ்டஃ கயா
தூதூ வத்ஸக ! ஜீவ ஜீவ சிரமித்
யுக்தோऽவதாந்நோ ஹரிஃ ॥ 2.61 ॥

2.61. (லஸத் ஸ்மேரே) புன்சிரிப்புடன் பிரகாசிக்கும் (முகே ப்ரபுல்லே) கண்ணனுடைய வாய் மலரும்போது (கைலாஸஃ) வெண்மையான-கைலாஸமலை (நவநீததி)-அவனுடைய வாய்க்குள் வெண்ணெய் போல் தோன்றுகிறது; (இயம்) இந்த (க்ஷிதிஃ) பூமி (ப்ராக்) முன்பு (ஜக்த-) தின்ற (ம்ருத்-லோஷ்டதி) மண்ணுங்கட்டிபோல் தோன்றுகிறது; (க்ஷீரோதஃ அபி) பாற்

KOVILOOR ANDAVAR
A. No. 22021

Koviloor Digital Library

கடலும் (நிபீத-) முன்பு பருகிய (துக்ததி) பால்போல் தோன்றுகிறது. (மாத்ரா)-இங்ஙனம் கண்ட-தாயாகிய யசோதையால் அஜீர்ணதியா)-குழந்தைக்கு-அஜீர்ணம் என்ற எண்ணத்தால் (த்ருடம்-சகிதயா) மிகவும் பயந்திருந்தவளால் '(நஷ்டா அஸ்மி) நான் கெட்டேன். (த்ருஷ்டஃ சயா) யாரோ ஒருத்தியால் திருஷ்டி தோஷம் ஏற்பட்டிருக்கிறது. (தூதூ) தூர விலகிப் போகட்டும் (வத்ஸக) குழந்தாய்ஃ (ஜீவ) வாழ்வாய் (சிரம் ஜீவ) நெடுநாள் வாழ்வாய்ஃ' (இதி) என்றிவ்வாறு (உக்தஃ) சொல்லப்பெற்ற (ஹரிஃ) கிருஷ்ணன் (நஃ) நம்மை (அவதாத்) காப்பாற்றட்டும்.

## 2.62. கண்ணன் ஸ்தன்யபானம் செய்யும் அழகு

किञ्चित्कुञ्चित-लोचनस्य पिबतः पर्याय-पीतस्तनं
सद्यः प्रस्नुत-दुग्धबिन्दु-मपरं हस्तेन सम्मार्जतः।
मात्रैकाङ्गुलिलालितस्य चुबुके स्मेराननस्याधरे
शौरेः क्षीणकणान्विता निपतिता दन्तद्युतिः पातु नः॥

கிஞ்சித் குஞ்சித-லோசனஸ்ய பிபதஃ
பர்யாய-பீதஸ்தனம்
ஸத்யஃ ப்ரஸ்னுத-துக்தபிந்து-மபரம்
ஹஸ்தேன ஸம்மார்ஜதஃ।
மாத்ரைகாங்குலி-லாலிதஸ்ய சுபுகே
ஸ்மேரானனஸ்யாதரே
சௌரேஃ க்ஷீணகணான்விதா நிபதிதா
தந்தத்யுதிஃ பாது நஃ॥ 2.62 ॥

2. 62. (பர்யாய-பீத-ஸ்தனம்)-இடமும் வலமும்-மாறி மாறித் தாயின் முலையில் (பிபதஃ) பால் குடிப்பவனும் (ஸத்யஃ) அப்போது (ப்ரஸ்னுத-துக்த-பிந்தும் அபரம்) பால் துளி விட்ட மற்றொரு முலையை (ஹஸ்தேன) கையால் (ஸம்மார்ஜதஃ) தடவுபவனும் (மாத்ரா) தாயால் (சுபுகே) மோவாயில் (ஏகாங்குலி-

Koviloor Digital Library

லாலிதஸ்ய) ஒரு விரலினால் தடவிக் கொண்டாடப்பட்டவனும் (ஸ்மேர-ஆனனஸ்ய) முறுவல் பூத்த முகமுடையவனும் ஆகிய (சௌரே:) கிருஷ்ணனுடைய (அதரே) கீழுதட்டில் (நிபதிதா) பரவிய (க்ஷீர-கணான்விதா) பால் துளிகளுடன் கூடிய (தந்தத்யுதி:) பற்களின் காந்தி (ந:) நம்மை (பாது) காப்பாற்றட்டும்.

## 2.63. ருக்மிணியின் முத்து மாலையில் கிருஷ்ணப் பிரதிபிம்பம்

उत्तुङ्गस्तन-मण्डलोपरिलसत्प्रालम्ब-मुक्तामणे-
रन्तर्बिम्बित-मिन्द्रनील-निकर-च्छायानुकारिद्युतेः ।
लज्जाव्याज-मुपेत्य नम्रवदना स्पष्टं मुरारेर्वपुः
पश्यन्ती मुदिता मुदेऽस्तु भवतां लक्ष्मी-विवाहोत्सवे ॥

உத்துங்க-ஸ்தன-மண்டலோபரி-லஸத்-
ப்ராலம்ப-முக்தாமணே-
ரந்தர்-பிம்பித-மிந்த்ரநீல-நிகர-
ச்சாயானுகாரி-த்யுதே: ।
லஜ்ஜா-வ்யாஜ-முபேத்ய நம்ரவதநா
ஸ்பஷ்டம் முராரேர்-வபு:
பச்யந்தீ முதிதா முதே஽ஸ்து பவதாம்
லக்ஷ்மீர்-விவாஹோத்ஸவே ॥ 2.63 ॥

2. 63 (விவாஹ-உத்ஸவே) கலியாணக் கொண்டாட்டத்தின்போது (உத்துங்க-ஸ்தன-மண்டல-உபரி) பருத்த ஸ்தன மண்டலத்தின்மேல் (லஸத்) பிரகாசியாநின்ற (ப்ராலம்ப-முக்தாமணே:) நீண்ட மாலையின் முத்துக்களில் (அந்தர்-பிம்பிதம்) உள்ளே பிரதிபலித்ததும் (இந்த்ர-நீல-நிகரச்சாயா-) இந்திர நீல மாணிக்கக் குவியலின் காந்தியை (அனுகாரி) ஒத்ததான (த்யுதே:) காந்தியை உடையதுமான (முராரே:) கிருஷ்ணனுடைய (வபு:)

Koviloor Digital Library

திருமேனியை (லஜ்ஜா-வ்யாஜம் உபேத்ய) வெட்கம் என்கிற போலிக் காரணத்தைக் கொண்டு (நம்ர-வதநா) குனிந்த முகம் உடையவளாய் (ஸ்பஷ்டம்) தெளிவாக (பச்யந்தீ) பார்த்துக் கொண்டு (முதிதா) மகிழ்ச்சியடைந்த (லக்ஷ்மீ:) ருக்மிணீ தேவியானவள் (பவதாம்) உங்களுடைய (முதே) ஆனந்தத்திற்கு காரணமாக (அஸ்து) இருக்கட்டும்.

## 2.64. மண்தின்ற வாயில் யசோதை உலகங் கண்டது

कृष्णेनाम्ब गतेन रन्तु-मधुना मृद्भक्षिता स्वेच्छया
तथ्यं कृष्ण क एवमाह मुसली मिथ्याम्ब पश्याननम्।
व्यादेहीति विदारिते शिशुमुखे दृष्ट्वा समस्तं जग-
न्माता यस्य जगाम विस्मयपदं पायात् स नः केशवः॥

க்ருஷ்ணேனாம்ப கதேன ரந்து-மதுநா
ம்ருத்பக்ஷிதா ஸ்வேச்சயா
தத்யம் க்ருஷ்ண க ஏவ-மாஹ முஸலீ
மித்த்யாம்ப பச்யானனம் ।
வ்யாதேஹீதி விதாரிதே சிசுமுகே
த்ருஷ்ட்வா ஸமஸ்தம் ஜகத்
மாதா யஸ்ய ஜகாம விஸ்மயபதம்
பாயாத் ஸ ந: கேசவ: ॥ 2.64 ॥

2. 64. '(அம்ப) அம்மா! (ரந்தும்) விளையாடுவதற்கு (கதேன) சென்ற (க்ருஷ்ணேன) கிருஷ்ணனால் (அதுனா) இப்பொழுது (ம்ருத்) மண்ணானது (ஸ்வேச்சயா) இஷ்டப்படி (பக்ஷிதா) தின்னப்பட்டது.' '(தத்யம் க்ருஷ்ண!) மண்ணைத் தின்றது உண்மையா? கிருஷ்ணா?' '(க: ஏவம் ஆஹ) யார் அப்படிச் சொன்னது?' '(முஸலீ) பலராமன்.' '(மித்யா அம்ப, பச்ய ஆனனம்) பொய், அம்மா, வாயைப் பார்.' '(வ்யாதேஹி) வாயைத் திற' (இதி) எனவே (விதாரிதே சிசு முகே) குழந்

Koviloor Digital Library

தையின் திறந்த வாயில் (ஸமஸ்தம் ஜகத்) உலகனைத்தையும் (யஸ்ய மாதா) எவனுடைய தாயார் (த்ருஷ்ட்வா) கண்டு (விஸ்மய பதம்) ஆச்சரிய நிலையை (ஜகாம) அடைந்தாளோ (ஸ: கேசவ:) அந்தக் கண்ணன் (ந:) நம்மை (பாயாத்) காப்பாற்றட்டும்.

ஒ. யசோதை குழந்தையின் வாயில் ஸ்தாவரமும் ஜங்கமமும் ஆன உலகனைத்தையும் கண்டாள். வாயு, அக்கினி, சந்திரன். நக்ஷத்திரம் இவைகளுடன் கூட வானையும், திசைகளையும், மலை, தீவு, கடல் இவைகளுடன் பூலோகத்தையும் கண்டாள். தன் குழந் தையின் திறந்த வாயில், ஜீவன், காலம், ஸ்வபாவம், கர்மம், ஆசயம் இவற்றால் வேறுபட்ட அடையாளங்களுடன் விசித்திரமாய் விளங்கும் இவ்வுலகையும், கோகுலத்தையும், தன்னையுங்கூடப் பார்த்துச் சந்தேகங் கொண்டாள். இது என்ன கனவா, அல்லது தேவ மாயையா, அல்லது என் புத்திமோகமா? அல்லது இந்த என் குழந் தைக்கு இயற்கையாகவே ஏற்பட்டுள்ள ஒரு ஆத்ம சக்தி தானா? இது ஆச்சரியம்.' இப்படி யசோதை தத்துவத்தை ஆராய்ந்தபோது ஸர்வவியாபியான அந்த ஈசுவரன் புத்திரவாஞ்சை என்ற விஷ்ணு மாயையை உண்டாக்கினார். உடனே தத்துவத்தை மறந்து அந்த யசோதை மகனை மடியில் தூக்கி வைத்துக் கொண்டு முன்போலவே புத்திரன் என்ற ஆசை நிறைந்த மனமுடையவளானாள்.

—பாகவதம்: 10. 8. 37—44.

## 265. ரோஹிணீ நக்ஷத்திரம் பெற்ற நீலரத்னம்

स्वाती सपत्नी किल तारकाणां
मुक्ताफलानां जननीति रोषात् ।
सा रोहिणी नील-मसूत रत्नं
कृतास्पदं गोपवधूकुचेषु ॥ २.६५ ॥

Koviloor Digital Library

ஸ்வாதீ ஸபத்னீ கில தாரகாணும்
முக்தாபலானும் ஜனனீதி ரோஷாத் ।
ஸா ரோஹிணீ நீல-மஸூத ரத்னம்
க்ருதாஸ்பதம் கோபவதூ குசேஷு ॥ 2.65 ॥

2. 65. (தாரகாணும்) நக்ஷத்திரங்களின் (ஸபத்னீ) சக்களத்தியாகிய (ஸ்வாதீ) ஸ்வாதீ என்பவள் (முக்தாபலானும்) முத்துக்களுக்கு (ஜனனீ கில இதி) தாயாகி விட்டாள் அல்லவா என்ற (ரோஷாத்) கோபத்தால் (ஸா ரோஹிணீ)—நக்ஷத்திரங்களில் ஒருத்தியாகிய—அந்த ரோஹிணீ (கோபவதூ-குசேஷு) இடைப்பெண்களின் நகில்களின் மத்தியில் (க்ருத-ஆஸ்பதம்) இடம்பெற்று விளங்கும் (நீலம் ரத்னம்)—கிருஷ்ணனுகிற—நீல ரத்னத்தை (அஸூத) பெற்றுள்.

## 2.66. ரத்னத் தூணில் தோன்றி யசோதையை மயக்கிய கிருஷ்ணன்

नृत्यन्त-मत्यन्त-विलोकनीयं
कृष्णं मणिस्तम्भगतं मृगाक्षी ।
निरीक्ष्य साक्षादिव कृष्णमग्रे
द्विधा वितेने नवनीत-मेकम् ॥ २.६६ ॥

ந்ருத்யந்த-மத்யந்த-விலோகனீயம்
க்ருஷ்ணம் மணிஸ்தம்ப-கதம் ம்ருகாக்ஷீ ।
நிரீக்ஷ்ய ஸாக்ஷாதிவ க்ருஷ்ண-மக்ரே
த்விதா விதேனே நவநீத-மேகம் ॥ 2.66 ॥

Koviloor Digital Library

2. 66. (ம்ருகாக்ஷீ) மான் விழி படைத்த யசோதை (ந்ருத்யந்தம்) கூத்தாடும் (க்ருஷ்ணம்) கிருஷ்ணனையும் (மணிஸ்தம்பகதம்) ரத்னத் தூணினுள்ளே (அத்யந்த-விலோகனீயம்) தெளிவாக அருகில் தோன்றும் பிரதிபிம்பத்தையும் (ஸாக்ஷாத் க்ருஷ்ணம் இவ) நேராக வந்த இன்னொரு கிருஷ்ணன் போல் (நிரீக்ஷ்ய) கண்டு (ஏகம் நவநீதம்) ஒரு வெண்ணெய் உருண்டையை (த்விதா) இரண்டாக (விதேனே) பாகம் பண்ணினாள்.

## 2.67. தூங்கியெழும் முகத்தழகு

वत्स जागृहि विभात-मागतं
जीव कृष्ण शरदां शतं शतम् ।
इत्युदीर्य सुचिरं यशोदया
दृश्यमान-वदनं भजामहे ॥ २.६७ ॥

வத்ஸ ஜாக்ருஹி விபாத-மாகதம்
ஜீவ க்ருஷ்ண சரதாம் சதம் சதம் ।
இத்யுதீர்ய ஸுசிரம் யசோதயா
த்ருச்யமான-வதனம் பஜாமஹே ॥ 2.67 ॥

2. 67. '(வத்ஸ) குழந்தாய்! (ஜாக்ருஹி) விழித்துக்கொள், (விபாதம் ஆகதம்) விடியற்காலமாய் விட்டது. (க்ருஷ்ண) கண்ணா! (சரதாம் சதம் சதம்) நூறு நூற்றாண்டு (ஜீவ) வாழ்வாய்.' (இதி) என்றிவ்வாறு (உதீர்ய) சொல்லிக்கொண்டு (யசோதயா) யசோதையால் (ஸுசிரம்) வெகுகாலம் (த்ருச்யமான-வதனம்) தரிசிக்கப்பட்ட முகத்தையுடைய கிருஷ்ணனை (பஜாமஹே) தொழுகிறோம்.

Noolaham Digital Library

**2.68.** **ஏமாற்றுபவர்களின் தலைவஞன பாலகிருஷ்ணன்**

**ओष्ठं जिघ्रन् शिशुरिति धिया चुम्बितो वल्लवीभिः**
**कण्ठं गृह्णन्नरुणितपदं गाढमालिङ्गिताङ्गः ।**
**दोर्ष्णा लज्जापद-मभिमृशन्नङ्क-मारोपितात्मा**
**धूर्तस्वामी हरतु दुरितं दूरतो बालकृष्णः ॥ २,६८ ॥**

ஓஷ்டம் ஜிக்ரன் சிசுரிதி தியா
சும்பிதோ வல்லவீபிஃ
கண்டம் க்ருஹ்ணன்னருணிதபதம்
காடமாலிங்கிதாங்கஃ ।
தோஷ்ணு லஜ்ஜாபத-மபிம்ருசன்
னங்க-மாரோபிதாத்மா
தூர்த்தஸ்வாமீ ஹரது துரிதம்
தூரதோ பாலக்ருஷ்ணஃ ॥ 2.68 ॥

2. 68. (வல்லவீபீஃ) கோபியர்களால் (**சிசுஃ** இதி **தியா**) குழந்தை என்ற எண்ணத்தில் (சும்**பி**தஃ) முத்தமிடப்பட்டவனுய் (ஓஷ்டம்) கீழுதட்டை (ஜிக்ரன்) முகர்ந்து பார்த்தும், (**காடம்** ஆலிங்**கி**த-அங்**க**ஃ) இறுகத் தழுவிக்கொள்ளப்பட்ட அங்கங்களே யுடையவனுய் (அருணித ப**த**ம்) பிடித்த இடம் சிவக்கும்படி (கண்டம்) கழுத்தை (**க்ருஹ்ண**ன்) தழுவிக்கொண்டும், (அங்கம்) மடியில் (ஆரோபிதாத்மா) வைத்துக்கொள்ளப்பட்ட சரீரத்தை யுடையவனுப் (**தோஷ்ணு**) கையினுல் (லஜ்ஜாப**த**ம்) வெட்கத்திற்குரிய இடத்தை (அ**பி**ம்ரு**ச**ன்) தடவிக் கொண்டும்—லீலே புரிந்த—(**தூ**ர்த்த ஸ்வாமீ) ஏமாற்றுபவர்களின் தலைவனுன (பாலக்**ரு**ஷ்ணன்) பாலகிருஷ்ணன் (**து**ரிதம்) பாவத்தை (**தூ**ரதஃ) துலேவில் (ஹரது) கொண்டு போகட்டும்.

Koviloor Digital Library


## 2.69. கண்ணனுடைய கனவு நிலே

एते लक्ष्मण जानकी-विरहित मां खेदयन्त्यम्बुदा
मर्माणीव च घट्टयन्त्यलममी क्रूरः कदाम्बानिलाः ।
इत्थं व्याहृत-पूर्वजन्मचरितं यो राधया वीक्षितः
सेर्ष्यं शङ्कितया स नस्सुखयतु स्वप्नायमानो हरिः ॥ २.६९ ॥

ஏதே லக்ஷ்மண ஜானகீ-விரஹிதம்
மாம் கேதயந்த்யம்புதா
மர்மாணிவ ச கட்டயந்த்யலமமீ
க்ரூராஃ கதம்பாநிலாஃ ।
இத்தம் வ்யாஹ்ருத-பூர்வஜன்மசரிதம்
யோ ராதயா வீக்ஷிதஃ
ஸேர்ஷ்யம் சங்கிதயா ஸ நஸ்ஸுகயது
ஸ்வப்னாயமானோ ஹரிஃ ॥ 2.69 ॥

2. 69. '(லக்ஷ்மண) லக்ஷ்மணா! (ஜானகீ-விரஹிதம்) ஸீதையின் பிரிவாற்றாமையால் தவிக்கும் (மாம்) என்னை (அம்புதாஃ) மேகங்கள் (கேதயந்தி) துன்புறுத்துகின்றன, (க்ரூராஃ) கொடியவைகளான (அமீ கதம்பாநிலாஃ) கடம்பை மரங்களில் பட்டுவரும் இக்காற்றுகள் (அலம்) மிகவும் (மர்மாணி) மர்ம ஸ்தானங்களை (கட்டயந்தி) துளைக்கின்றன.' (இத்தம்) இவ்வாறு (வ்யாஹ்ருத-பூர்வஜன்ம-சரிதம்) முன் அவதாரத்தின் நிகழ்ச்சிகளைக் கூறிய (யஃ) எந்த (ஸ்வப்னாயமானஃ ஹரிஃ) தூங்கிக்கொண்டிருந்த கிருஷ்ணனானவன் (ஸேர்ஷ்யா) பொறாமையுடனும் (சங்கிதயா) ஸந்தேகத்துடனும் கூடிய (ராதயா) ராதையால் (வீக்ஷிதஃ) பார்க்கப்பட்டானோ (ஸஃ) அவன் (நஃ) நம்மை (ஸுகயது) இன்புறச் செய்யட்டும்.

ஸேர்ஷ்யாசங்கிதயா. —பா. பே.

Koviloor Digital Library


## 2.70. ருக்மிணியுடன் வேடிக்கைப் பேச்சு

**ओष्ठं मुञ्च हरे बिभेमि भवता पानैर्हता पूतना**
**कण्ठाश्लेषममुं जहीहि दलिता-वालिङ्गनेनार्जुनौ ।**
**मा देहि च्छुरितं हिरण्यकशिपु-र्नीतो नखैः पञ्चता-**
**मित्थं वारित-रात्रि-केलि-रवताल्लक्ष्म्यापहासाद्धरिः ॥**

ஒஷ்டம் முஞ்ச ஹரே பிபேமி பவதா
பானைர்ஹதா பூதநா
கண்டாச்லேஷமமும் ஜஹீஹி தலிதா
வாலிங்கனேனார்ஜுநௌ ।
மா தேஹிச்சுரிதம் ஹிரண்யகசிபுர்-
நீதோ நகைஃ பஞ்சதாம்
இத்தம் வாரித-ராத்ரி-கேலி-ரவதால்-
லக்ஷ்ம்யாபஹாஸாத்-தரிஃ ॥ 2.70 ॥

2. 70. '(ஹரே) கிருஷ்ணா! (ஒஷ்டம்) உதட்டை (முஞ்ச) விடும்; (பிபேமி) பயப்படுகிறேன்; (பவதா) உம்மால் (பூதநா) பூதனையானவள் (பானை: ஹதா) பானத்தால் கொல்லப்பட்டாள். (அமும்) இந்த (கண்டாச்லேஷம்) கழுத்தைத் தழுவுதலை (ஜஹீஹி) விட்டுவிடும்; (ஆலிங்கனேன) தழுவுதலால் (அர்ஜுநௌ) மருத மரங்கள் (தலிதௌ) முறித்து வீழ்த்தப்பட்டன. (ச்சுரிதம்) நகத்தால் சொறிதலை (மாதேஹி) எனக்குத் தரவேண்டாம்; (ஹிரண்யகசிபுஃ) ஹிரண்யகசிபு (நகைஃ) நகங்களால் (பஞ்சதாம் நீதஃ) மரணத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டான்' (இத்தம்) இவ்வாறு (லக்ஷ்ம்யா) ருக்மிணியால் (அபஹாஸாத்) வேடிக்கைப் பேச்சினால் (வாரித-ராத்ரி-கேலிஃ) இரவு லீலையில் தடுக்கப் பெற்ற (ஹரிஃ) கிருஷ்ணன் (அவதாத்) நம்மைக் காப்பாற்றட்டும்.

Koviloor Digital Library

## 2.71. கண்ணனுக்கு யசோதை ராமாயணக் கதை சொன்னது

रामो नाम बभूव हुं तदबला सीतेति हुं तौ पितु-
र्वाचा पञ्चवटीतटे विहरत-स्तस्याहार-द्रावणः ।
निद्रार्थं जननी कथामिति हरे-र्हुङ्कारतः शृण्वतः
सौमित्रे क्व धनु-र्धनु-र्धनुरिति व्यग्रा गिरः पातु नः ॥

ராமோ நாம பபூவ ஹும் ததபலா
ஸீதேதி ஹும் தௌ பிதுர்-
வாசா பஞ்சவடீதடே விஹரதஸ்
தாமாஹரத் ராவணஃ।
நித்ரார்த்தம் ஜனனீ கதாமிதி ஹரேர்-
ஹுங்காரதஃ ச்ருண்வதஃ
ஸௌமித்ரே க்வதனுர்-தனுர்-
தனுரிதி வ்யக்ரா கிரஃ பாது நஃ ॥ 2.71 ॥

2. 71. '(ராமஃ நாம) ராமன் எனப் பெயர் பெற்ற ஒருவர் (பபூவ) இருந்தார்.'—என்று கதை சொல்ல ஆரம்பித்தாள் யசோதை. '(ஹும்)—ஊம்'—என்றான் குழந்தை கிருஷ்ணன். '(தத் அபலா ஸீதா இதி) அவருடைய மனைவி பெயர் ஸீதை என்பது'. '(ஹும்) ஊம்.' '(தௌ) அவ்விருவரும் (பிதுஃ வாசா) தந்தையின சொல்படி—வனம் சென்று—(பஞ்ச வடீதடே) பஞ்சவடிக் கரையில் (விஹரதஃ) வசித்துக் கொண்டிருக்கையில் (தாம்) அந்த ஸீதையை (ராவணஃ) ராவணன் என்ற அரக்கன் (ஆஹரத்) தூக்கிக் கொண்டு போய் விட்டான்' (இதி) இவ்வாறு (நித்ரார்த்தம்) தூங்கப்பண்ணுவதற்காக (ஜனனீ-கதாம்) தாய் சொன்ன கதையை (ஹுங்காரதஃ) ஊம் ஊம் என்று (ச்ருண்வதஃ)

Koviloor Digital Library


கேட்டுக் கொண்டிருந்த (ஹரேঃ) கிருஷ்ணனுடைய (வ்யக்ராக்ஷராঃ) பரபரப்பான சொற்கள்—'(ஸௌமித்ரே) லக்ஷ்மணா! (க்வ தநுঃ தநுঃ தநுঃ இதி) எங்கே வில், வில், வில்?' என்ற சொற்கள்—(நঃ) நம்மை (பாது) காப்பாற்றட்டும்.

71. தாம் பிதுர்வாசா பஞ்சவடீவனே விஹரதஸ்-தஸ்யாஹரத் பா.பே.

## 2.72. பொருத்தமற்றதெல்லாம் அவனிடம் பொருந்தும்

बालोऽपि शैलोद्धरणाग्रपाणि-
नीलोऽपि नीरन्ध्र-तमः प्रदीपः ।
धीरोऽपि राधा-नयनावबद्धो
जारोऽपि संसारहरः कुतस्त्वम् ॥ २.७२ ॥

பாலோऽபி சைலோத்தரணாக்ர-பாணிர்-
நீலோऽபி நீரந்த்ர-தமঃ ப்ரதீபঃ ।
தீரோऽபி ராதா-நயனாவபத்தோ
ஜாரோऽபி ஸம்ஸாரஹரঃ குதஸ்த்வம் ॥ 2.72 ॥

2. 72. (த்வம்) நீ (பாலঃ அபி) சிறு பிள்ளையாயிருந்தும் (சைல-உத்தாண அக்ரபாணিঃ) நுனிக்கையால் மலையைத் தூக்கினது (குதঃ) எங்ஙனம்? (நீலঃ அபி) கறுப்பு நிறத்தனாயிருந்தும் (நீரந்த்ர) அடர்ந்த (தமঃ) இருட்டில் (ப்ரதீபঃ) பிரகாசிக்கும் விளக்குப் போலிருப்பது—(குதঃ) எங்ஙனம்? (தீரঃ அபி) சூரனாயிருந்தும் (ராதா-நயன) ராதையின் கண்பார்வையில் (அவபத்தঃ) கட்டுப்பட்டு நின்றது—(குதঃ) எங்ஙனம்? (ஜாரঃ அபி) கள்ளப் புருஷனாயிருந்தும் (ஸம்ஸார ஹரঃ) பிறவித் துன்பத்தைப் போக்குபவனாவது—(குதঃ) எங்ஙனம்?

Koviloor Digital Library

## 2.73. திகம்பரனாகிய பாலகிருஷ்ணன்

बालाय नीलवपुषे नवकिङ्किणीक-
जालाभिराम-जघनाय दिगम्बराय ।
शार्दूल-दिव्य-नख-भूषण-भूषिताय
नन्दात्मजाय नवनीत-मुषे नमस्ते ॥ २.७३ ॥

பாலாய நீலவபுஷே நவகிங்கிணீக-
ஜாலாபிராம-ஜகனாய திகம்பராய
சார்த்தூல-திவ்ய-நக-பூஷண-பூஷிதாய
நந்தாத்மஜாய நவநீத-முஷே நமஸ்தே ॥ 2.73 ॥

2. 73 (பாலாய) இளம்பிள்ளையும் (நீலவபுஷே) நீல வண்ணனும் (நவ-கிங்கிணீக-ஜால) புதிய சலங்கைகளின் தொகுதியால் (அபிராம) அழகிய (ஜகனாய) இடுப்பையுடையவனும் (திகம்பராய) ஆடையணியாதவனும் (சார்த்தூல-திவ்ய-நக) சிறந்த புலி நகத்தாலான (பூஷண-பூஷிதாய) பூஷணத்தால் அலங்கரிக்கப் பெற்றவனும் (நவநீத-முஷே) வெண்ணெயைக் களவாடுபவனும் (நந்தாதமஜாய) நந்தகோபகுமாரனுமாகிய (தே) உனக்கு (நம:) நமஸ்காரம்.

## 2.74. பாயஸான்னமும் வெண்ணெய்யும் கையிலேந்திய குழந்தை வடிவம்

पाणौ पायस-भक्त-माहृत-रसं बिभ्रन्मुदा दक्षिणे
सव्ये शारद-चन्द्रमण्डलनिभं हय्यंगवीनं दधत् ।
कण्ठे कल्पित-पुण्डरीक-नखमप्युद्दाम-दीप्तिं वहन्
देवो दिव्य-दिगम्बरो दिशतु नस्सौख्यं यशोदा-शिशुः ॥

பாணௌ பாயஸ-பக்த-மாஹித-
ரஸம் பிப்ரன்-முதா தக்ஷிணே

Koviloor Digital Library


ஸவ்யே சாரத-சந்த்ர-மண்டல-
நிபம் ஹையங்கவீனம் ததத் ।
கண்டே கல்பித-புண்டரீக-
நக-மப்யுத்தாம-தீப்திம் வஹன்
தேவோ திவ்ய-திகம்பரோ திசது
நஸ்ஸௌக்யம் யசோதா-சிசுஃ ॥ 2.74 ॥

2. 74. (தக்ஷிணே-பாணௌ) வலது கையில் (பாயஸ-பக்தம் ஆஹித-ரஸம்) சுவை பொருந்திய பாயஸ அன்னத்தையும் (முதா) மகிழ்ச்சியுடன் (பிப்ரத்) வைத்துக்கொண்டிருப்பவனும் (ஸவ்யே) இடது கையில் (சாரத-சந்த்ர மண்டல-நிபம்) சரத்கால சந்திரனைப் போல் வெண்மையாயும் உருண்டையாயுமிருக்கும் (ஹையங்கவீனம்) கடைந்த வெண்ணெய்யை (ததத்) வைத்துக் கொண்டிருப்பவனும், (கண்டே) கழுத்தில் (கல்பித-புண்டரீக-நகம்) ஆபரணமாகப் புலி நகத்தையும் (அபி) மேலும்-உடலில்-(உத்தாம தீப்திம்) மேன்மேலும் பெருகும் காந்தியையும் (வஹன்) தரிப்பவனும் (திவ்ய-திகம்பரஃ) ஆடையில்லாத திவ்ய ரூபத்துடன் விளங்குபவனும் (யசோதா சிசுஃ) யசோதையின் குழந்தையும் ஆகிய (தேவஃ) தெய்வம் (நஃ) நமக்கு (ஸௌக்யம்) இன்பத்தை (திசது) அளிக்கட்டும்.

## 2.75. முற்றத்தில் தவழ்ந்து விளையாடும் கண்ணன்

किङ्किणि-किणिकिणि-रभसै-
रङ्गणभुवि रिङ्खणैः सदाऽटन्तम् ।
कुङ्कुनु-कुनु-पदयुगलं
कङ्कण-करभूषणं हरिं वन्दे ॥ २.७५ ॥

கிங்கிணி-கிணிகிணி-ரபஸை-
ரங்கணபுவி ரிங்கணைஃ ஸதாऽடந்தம் ।
குங்குனு-குனு-பதயுகளம்
கங்கண-கரபூஷணம் ஹரிம் வந்தே ॥ 2.75 ॥

Koviloor Digital Library



2. 75. (கிங்கிணி) சலங்கைகளின் (கிணி-கிணி) கிணி கிணி என்கிற (ரபஸை:) ஒலியுடன் (அங்கண புவி) முற்றத்துத் தரையில் (ரிங்கணை:) தவழ்ந்து (ஸதா) இடைவிடாது (அடந்தம்) சென்று கொண்டிருப்பவனும் (குங் குணு-குணு) குணு குணு என்று ஒலிக்கும் சிலம்பணிந்த (பதயுகளம்) இரண்டு பாதங்களை உடையவனும் (கங்கண-காபூஷணம்) கைகளில் வளைகளை ஆபரணமாயணிந்தவனுமாகிய (ஹரிம்) கிருஷ்ணனை (வந்தே) வணங்குகிறேன்.

## 2.76. பசுக் கூட்டத்தில் மகிழும் பாலகிருஷ்ணன்

सम्बाधे सुरभीणां-मम्बामायासयन्त-मनुयान्तीम् ।
लम्बालक-मवलम्बे तं बालं तनुविलग्नजम्बालम् ॥ २.७६ ॥

ஸம்பாதே ஸுரபீணா-
மம்பா-மாயாஸயந்த-மனுயாந்தீம் ।
லம்பாலக-மவலம்பே
தம் பாலம் தனுவிலக்ன-ஜம்பாலம் ॥ 2.76 ॥

2. 76. (ஸுரபீணாம்) பசுக்களின் (ஸம்பாதே) கூட்டத்தினிடையில்—இவன் செல்லும்போது இவனைப் பிடிப்பதற்காக—(அனுயாந்தீம்) பின் தொடர்ந்து வரும் (அம்பாம்) தாயாகிய யசோதையை (ஆயாஸயந்தம்) களைப்புறச் செய்பவனும் (லம்ப-அலகம்) தொங்கும் தலைமயிரை உடையவனும் (தனு-விலக்ன-) உடம்பில் ஒட்டிக்கொண்ட (ஜம்பாலம்) சேற்றையுடையவனும் ஆகிய (தம் பாலம்) அந்த பாலகிருஷ்ணனை (அவலம்பே) நான் சரணடைகின்றேன்.

## 2.77. மாடு மேய்க்கும் கிருஷ்ணன்

अञ्चित-पिञ्छाचूडं सञ्चित-सौजन्य-वल्लवी-वलयम् ।
अधरमणि-निहित-वेणुं बालं गोपाल-मनिश-मवलम्बे ॥२-७७॥

Koviloor Digital Library

அஞ்சித-பிஞ்சாசூடம் ஸஞ்சித-
ஸௌஜன்ய-வல்லவீ-வலயம் ।
அதரமணி-நிஹித-வேணும் பாலம்
கோபால-மனிச-மவலம்பே ॥ 2.77 ॥

2. 77. (அஞ்சித-பிஞ்சா-சூடம்) தலையில் மயிலிறகைச் சூடியவனும் (ஸஞ்சித-ஸௌஜன்ய-) அன்பு குவிந்த (வல்லவீ-வலயம்) இடைப் பெண்களால் சூழப் பெற்றவனும் (அதரமணி-நிஹித-) அழகிய உதட்டில் வைக்கப் பெற்ற (வேணும்) குழலை யுடையவனும் (கோபாலம்) பசுக்களை மேய்ப்பவனுமான (பாலம்) பாலகிருஷ்ணனை (அனிசம்) இடைவிடாது (அவலம்பே) தொழுகிறேன்.

அஞ்சித-பிஞ்சா பிடம். —பா. பே.

## 2.78. நரசிம்மனுக தியானித்தல்

प्रह्लाद-भागधेयं निगम-महाद्रे-र्गुहान्त-राधेयम् ।
नरहरि-पदाभिधेयं विबुध-विधेयं ममानुसंधेयम् ॥ २.७८ ॥

ப்ரஹ்லாத-பாகதேயம்
நிகம-மஹாத்ரேர்-குஹாந்தராதேயம் ।
நரஹரி-பதாபிதேயம்
விபுத-விதேயம் மமானுஸந்தேயம் ॥ 2.78 ॥

2. 78. (ப்ரஹ்லாத-பாகதேயம்) பிரஹ்லாதனுடைய புண்ணியமே உருவெடுத்ததும் (நிகம-மஹாத்ரே:) வேதமாகிற சிறந்த மலையின் (குஹாந்தர-) குகையினுள்ளே (ஆதேயம்) உறைவதும் (நரஹரி பத-அபிதேயம்) நரசிம்மம் என்ற சொல்லால் கூறத்தக்கதும் (விபுத-விதேயம்) தேவர்களுடைய சொல்லுக்கிணங்கி நடப்பதுமாகிய பொருள் எதுவோ அதுவே (மம) எனக்கு (அனுஸந்தேயம்) தியானித்தற்குரியது.

Kovitoor Digital Library

## 2.79. ஸம்ஸாரத்தில் ஸாரம் திருவடி பஜனம்

संसारे किं सारं कंसारे-श्चरणकमल-परिभजनम् ।
ज्योतिः किमन्धकारे यदन्धकारे-रनुस्मरणम् ॥ २ ७९ ॥

ஸம்ஸாரே கிம் ஸாரம்
கம்ஸாரேச்-சரணகமல-பரிபஜனம் ।
ஜ்யோதிஃ கிமந்தகாரே
யதந்த-காரே-ரனுஸ்மரணம் ॥ 2.79 ॥

2. 79. (ஸம்ஸாரே) பிறவிச் சுழலில் (கிம் ஸாரம்) ஸாரமானது எதுவெனில் (கம்ஸாரேஃ) கம்ஸனின் வைரியாகிய கிருஷ்ணனுடைய (சரணகமல-பரிபஜனம்) திருவடித் தாமரைகளைப் பரிவுடன் தியானம் செய்வதே யாகும். (அந்தகாரே) அஞ்ஞான இருளில் (ஜ்யோதிஃ கிம்) ஒளியாவது எதுவெனில் (யத் அந்தகாரேஃ அனுஸ்மரணம்) அந்தகன் எனும் அசுரனை மாய்த்த சிவனும் எவனை ஸ்மரணம் செய்து கொண்டிருக்கிறானோ அந்த ஸ்மரணமேயாம்.

## 2.80. விளையாட்டுக் கிருஷ்ணனிடம் மனது விளையாடட்டும்

कलश-नवनीत-चोरे कमला दृक्कुमुद-चन्द्रिकापूरे ।
विहरतु नन्दकुमारे चेतो मम गोपसुन्दरी- जारे ॥ २.८० ॥

கலச-நவநீத-சோரே
கமலாத்ருக்-குமுத-சந்த்ரிகாபூரே ।
விஹரது நந்தகுமாரே
சேதோ மம கோபஸுந்தரீ-ஜாரே ॥ 2.80 ॥

2. 80. (கலச-நவநீத-சோரே) பானையில் வைத்த வெண்ணெய்யைத் திருடுபவனும் (கமலா-த்ருக்-) ஸ்ரீ தேவியின் கண்களாகிற (குமுத) ஆம்பல் பூவிற்கு (சந்த்ரிகா பூரே) பூர்ண

Koviloor Digital Library


சந்திரன் போன்றவனும் (கோபஸுந்தரீ-ஜாரே) இடைப்பெண்களின் காதலனும் (நந்தகுமாரே) நந்தகோபன் குமாரனும் ஆகிய கிருஷ்ணனிடத்தில் (மம) என்னுடைய (சேதஃ) மனது (விஹரது) விளையாடட்டும்.

## 2.81. கன்றுக்குட்டியை வெண்ணெய்ப் பாத்திரத்தில் தேடிய கண்ணன்

कस्त्वं बाल बलानुजः किमिह ते मन्मन्दिराशङ्कया
युक्तं तन्नवनीत-पात्रविवरे हस्तं किमर्थं न्यसेः ।
मातः कञ्चन वत्सकं मृगयितुं मा गा विषादं क्षणा-
दित्येवं वरवल्लवी-प्रतिवचः कृष्णस्य पुष्णातु नः ॥ २.८१॥

கஸ்த்வம் பால பலானுஜஃ கிமிஹ தே
மன்மந்திராசங்கயா
யுக்தம் தந்நவநீத-பாத்ரவிவரே
ஹஸ்தம் கிமர்த்தம் ந்யஸேஃ ।
மாதஃ கஞ்சன வத்ஸகம் ம்ருகயிதும்
மாகா விஷாதம் க்ஷணா-
தித்யேவம் வரவல்லவீ-ப்ரதிவசஃ
க்ருஷ்ணஸ்ய புஷ்ணாது நஃ ॥ 2.81 ॥

2. 81. '(பால) குழந்தாய்! (த்வம்) நீ (கஃ) யார்?'

'(பலானுஜஃ) பலராமனுடைய தம்பி.'

'(இஹ) இங்கே (தே) உனக்கு (கிம்) என்ன வேண்டும்?'

'(மந்-) என்னுடைய (மந்திர-ஆசங்கயா) வீடு என்று சந்தேகத்தால்—வந்து விட்டேன்.'

'(யுக்தம் தத்) அது சரி; (நவநீத-பாத்ர-விவரே) வெண்ணெய்ப் பாத்திரத்திற்குள்ளே (ஹஸ்தம்) கையை (கிமர்த்தம்) எதற்காக (ந்யஸேஃ) வைத்தாய்?'

Kovaloor Digital Library

'(மாதஃ) அம்மா! (கஞ்சன வத்ஸகம்) ஒரு கன்றுக் குட்டியை (ம்ருகயிதும்) தேடுவதற்காக—கை வைத்தேன். (க்ஷணத்) நொடிப்பொழுதில் (விஷாதம்) வருத்தத்தை (மா காஃ) அடையாதீர்கள்.'

(இதி ஏவம்) இம்மாதிரியாக (க்ருஷ்ணஸ்ய வரவல்லவீ-ப்ரதி வசஃ) சிறந்ததொரு கோபிகையிடம் கிருஷ்ணனுடைய மறுமொழி (நஃ) நம்மை (புஷ்ணது) காப்பாற்றட்டும்.

## 2.82. அன்பொன்றினாலேயே அவனைப் பெறக் கூடும்

गोपालाजिरकर्दमे विहरसे विप्राध्वरे लज्जसे
ब्रूषे गोकुलहुङ्कृतैः स्तुतिशतै-र्मौनं विधत्से विदाम्।
दास्यं गोकुल-पुंश्चलीषु कुरुषे स्वाम्यं न दान्तात्मसु
ज्ञातं कृष्ण तवाङ्घ्रि-पङ्कजयुगं प्रेम्णाचलं मञ्जुलम्॥ २.८२॥

கோபாலாஜிர-கர்த்தமே விஹரஸே
விப்ராத்வரே லஜ்ஜஸே
ப்ருஷே கோகுல-ஹுங்க்ருதைஃ ஸ்துதிசதைர்-
மௌனம் விதத்ஸே விதாம்।
தாஸ்யம் கோகுல-பும்ச்சலீஷு குருஷே
ஸ்வாம்யம் ந தாந்தாத்மஸு
ஜ்ஞாதம் க்ருஷ்ண தவாங்க்ரி-பங்கஜயுகம்
ப்ரேம்ணாசலம் மஞ்ஜுளம்॥ 2.82॥

2. 82. (கோபால-) இடையர்களுடைய (அஜிர-) வீட்டு முற்றத்திலுள்ள (கர்த்தமே) சேற்றில் (விஹரஸே) விளையாடுகிறாய்; (விப்ர-) பிராம்மணர்களுடைய (அத்வரே) யாகசாலையில் (லஜ்ஜஸே)—போவதற்கும்—வெட்கப்படுகிறாய். (கோகுல-) பசுக் கூட்டங்களின் (ஹுங்க்ருதைஃ) ஹும் என்ற குரலைக் கேட்டு (ப்ருஷே) அவைகளுடன் பேசுகிறாய்; (விதாம்) வித்வான்களின்

Koviloor Digital Library


(ஸ்துதி சதை:) நூற்றுக்கணக்கான ஸ்துதிகளைக் கேட்டு (மௌனம் விதத்ஸே) மௌனம் சாதிக்கிறாய். (கோகுல-பும்ச்சலீஷு) சபல புத்தியுடைய இடைப்பெண்களிடம் (தாஸ்யம் குருஷே) பணிவிடை செய்கிறாய்; (தாந்தாத்மஸு) புலனடக்க முடைய தபஸ்விகளிடம் (ந ஸ்வாம்யம்) அவர்களுக்கு ஸ்வாமி யாயிருக்கவும் விரும்பவில்லை. (க்ருஷ்ண) கிருஷ்ணா! (மஞ்ஜுளம்) அழகு மிக்க (தவ) உன்னுடைய (அங்க்ரி-பங்கஜ-யுகம்) திருவடித் தாமரை யிரண்டும் (ப்ரேம்ணா) அன்பால் தான் (அசலம்) ஸ்திரமாகப் பெறக்கூடும்—என்று இதனால்—(ஜ்ஞாதம்) அறியப்பட்டதாகிறது.

## 2.83. ராதையின் அன்பில் பெருகிய பேரொளி

नमस्तस्मै यशोदाया दायादायास्तु तेजसे ।
यद्धि राधामुखाम्भोजं भोजं भोजं व्यवर्धत ॥ २.८३ ॥

நமஸ்தஸ்மை யசோதாயா
தாயாதாயாஸ்து தேஜஸே ।
யத்தி ராதாமுகாம்போஜம்
போஜம் போஜம் வ்யவர்த்தத ॥ 2.83 ॥

2. 83. (யத் ஹி) எது (ராதா-முக-அம்போஜம்) ராதையினுடைய தாமரை போன்ற முகத்தை (போஜம் போஜம்) கண்டு களித்துக் களித்து (வ்யவர்த்தத) மேன்மேலும் வளர்ச்சியுற்றதோ (தஸ்மை) அந்த (யசோதாயா தாயாதாய) யசோதையின் பிள்ளையாகிய கிருஷ்ணன் எனும் (தேஜஸே) பேரொளிக்கு (நம:) நமஸ்காரம் (அஸ்து) இருக்கட்டும்.

## 2.84. ஆய்குலத்திற்கு முக்தியளித்த கிருஷ்ணாவதாரச் சிறப்பு

अवताराः सन्त्वन्ये सरसिज-नयनस्य सर्वतोभद्राः ।
कृष्णादन्यः को वा प्रभवति गोगोपगोपिका-मुक्त्यै ॥ २.८४ ॥

Kovilpatti Digital Library

அவதாராஃ ஸந்த்வன்யே ஸரஸிஜ-
நயனஸ்ய ஸர்வதோபத்ராஃ ।
க்ருஷ்ணாதன்யஃ கோ வா ப்ரபவதி
கோ-கோப-கோபிகா-முக்த்யை ॥ 2.84 ॥

2. 84. (ஸரஸிஜ - நயனஸ்ய) தாமரைக் கண்ணனை விஷ்ணுவினுடைய (ஸர்வதோபத்ராஃ) எல்லாவாற்றாலும் மங்களகரமான (அன்யே) வேறு (அவதாராஃ) அவதாரங்கள் (ஸந்து) இருக்கட்டும். (க்ருஷ்ணாத்) கிருஷ்ணனைக் காட்டிலும் (அன்யஃ) வேறான (கஃ வா) எந்த அவதாரந்தான் (கோ-கோப-கோபிகா-) பசுக்களுக்கும் இடையர்களுக்கும் இடைச்சிகளுக்கும் (முக்த்யை) முக்தி தருவதற்கு (ப்ரபவதி) தகுதியுள்ளது?

## 2.85. குழந்தைப் பருவத்தின் பரிபூர்ண அழகுடைய கண்ணன்

मध्ये गोकुलमण्डलं प्रतिदिशं चाम्बारवोज्जृम्भिते
प्रातर्दोह-महोत्सवे नवघनश्यामं रणन्नूपुरम् ।
फाले बालविभूषणं कटिरणत्सत्किङ्किणी-मेखलं
कण्ठे व्याघ्रनखं च शैशवकला-कल्याण-कार्त्स्न्यं भजे ॥ २,८५॥

மத்யே கோகுலமண்டலம் ப்ரதிதிசஞ்
சாம்பாரவோஜ்ஜ்ரும்பிதே
ப்ராதர்-தோஹ-மஹோத்ஸவே நவகன-
ச்யாமம் ரணந்நூபுரம் ।
பாலே பாலவிபூஷணம் கடிரணத்-
ஸத்கிங்கிணீ-மேகலம்
கண்டே வ்யாக்ரநகஞ் ச சைசவகலா-
கல்யாண-கார்த்ஸ்ன்யம் பஜே ॥ 2.85 ॥

Koviloor Digital Library

2. 85. (மத்யே-கோகுல - மண்டலம்) சுற்றுமுள்ள பசுக் கூட்டத்தின் நடுவில் (ப்ரதி-திசஞ்ச) ஒவ்வொரு திக்கிலும் (அம்பா-ரவ-உஜ்ஜ்ரும்பிதே) 'அம்மா' என்று—கன்றுகளின்—குரலோசை கிளம்ப (ப்ராதஃ) காலையில் (தோஹ-மஹோத்ஸவே) பால் கறக்கும் ஸம்பிரமத்தில் (நவ-கனச்யாமம்) புதிய மேகம் போல் நீலவர்ணமானவனும், (ரணத் நூபுரம்) ஒலிக்கின்ற சிலம் பணிந்தவனும், (பாலே) நெற்றியில் (பால-விபூஷணம்) சுட்டியால் அலங்கரிக்கப் பெற்றவனும் (கடி-ரணத்-ஸத்-கிங்கிணீ-மேகலம்) இடுப்பில் ஒலிக்கும் சிறந்த சலங்கைகளுடன் கூடிய அரைஞாணை யுடையவனும், (கண்டே) கழுத்தில் (வ்யாக்ர நகம்) புலி நகத்தை யணிந்தவனும் (சைசவ-கலா-கல்யாண கார்த்ஸ்ன்யம்) குழந்தைப் பருவத்தின் பரிபூர்ணமான அழகையுடையவனுமாகிய கிருஷ்ண மூர்த்தியை (பஜே) தியானம் செய்கிறேன்.

## 2.86. விளையாட்டுப் பிள்ளையாகிய கோபாலன்

सजलजलद-नीलं दर्शितोदार-लीलं
करतल-धृतशैलं वेणुनादै-रसालम् ।
व्रजजन-कुल-पालं कामिनी-केलि-लोलं
कलित-ललित-मालं नौमि गोपाल-बालम् ॥ २.८६॥

ஸஜல-ஜலத-நீலம் தர்சிதோதார-லீலம்
கரதல-த்ருதசைலம் வேணுநாதை-ரஸாலம ।
வ்ரஜஜன-குல-பாலம் காமினீ-கேலி-லோலம்
கலித-லலித-மாலம் நௌமி கோபாலபாலம் ॥ 2.86 ॥

2. 86. (ஸஜல-ஜலத-நீலம்) நீருண்ட மேகம் போல் நீல வண்ணனும் (தர்சித-உதார-லீலம்) சிறந்த லீலைகளைக் காட்டி யருளியவனும் (கரதல-த்ருத-சைலம்) மலையைக் கைத்தலத்தில்

Kaviloor Digital Library

தாங்கியவனும் (வேணு நாதைஃ ரஸாலம்) குழலோசையில் மகிழ்பவனும் (வ்ரஜஜனகுல-பாலம்) ஆயர் குலத்தைப் பரிபாலிப்பவனும் (காமினீ-கேலி-லோலம்) பெண்களுடன் விளையாடிக் களிப்பவனும் (கலித-லலித-மாலம்) அழகிய வனமாலை யணிந்தவனும் ஆகிய (கோபால-பாலம்) ஆயர் சிறுவனை (நௌமி) போற்றுகின்றேன்.

## 2.87. புன்சிரிப்பால் அழகிய கன்னத்தையுடைவன் கோபாலன்

स्मित-ललित-कपोलं स्निग्ध-सङ्गीत-लोलं
ललित-चिकुर-जालं चौर्य-चातुर्य-लीलम् ।
शतमखरिपुकालं शातकुम्भाभचेलं
कुवलयदल-नीलं नौमि गोपालबालम् ॥ १.८७ ॥

ஸ்மித-லலித-கபோலம் ஸ்நிக்த-ஸங்கீத-லோலம்
லலித-சிகுர-ஜாலம் சௌர்ய-சாதுர்ய-லீலம் ।
சதமக-ரிபு-காலம் சாதகும்பாப-சேலம்
குவலயதலநீலம் நௌமி கோபாலபாலம் ॥ 2.87 ॥

2. 87. (ஸ்மித-லலித-கபோலம்) புன்சிரிப்பால் அழகிய கன்னத்தையுடையவனும், (ஸ்நிக்த-ஸங்கீத-லோலம்) இனிய ஸங்கீதத்தில் மகிழ்பவனும், (லலித-சிகுர-ஜாலம்) மெதுவான மயிர்க்கற்றையுடையவனும், (சௌர்ய-சாதுர்ய-லீலம்) களவியல் திறன் விளங்கும் லீலைகளையுடையவனும், (சதமக-ரிபு-காலம்) இந்திரனுடைய சத்துருக்களுக்கு யமன் போன்றவனும், (சாதகும்பாப-சேலம்) பொன் போன்று ஒளிரும் ஆடையணிந்தவனும், (குவலயதல-நீலம்) நெய்தல் பூவைப் போல் நீலவண்ணனும் ஆகிய (கோபால பாலம்) ஆயர் சிறுவனை (நௌமி) போற்றுகின்றேன்.

Koviloor Digital Library

## 2.88. குழலூதுவதில் மகிழும் கோபாலன்

मुरलि-निनद-लोलं मुग्ध-मायूर-चूडं
दलित-दनुज-जालं धन्य-सौजन्य-लीलम् ।
परहित-नवहेलं पद्मसद्मानुकूलं
नवजलधर-नीलं नौमि गोपालबालम् ॥ २.८८ ॥

முரளி-நிநத-லோலம் முக்த-மாயூர-சூடம்
தலித-தனுஜ-ஜாலம் தன்ய-ஸௌஜன்ய-லீலம் ।
பரஹித-நவஹேலம் பத்மஸத்மானுகூலம்
நவஜலதர-நீலம் நௌமி கோபாலபாலம் ॥ 2.88 ॥

2. 88. (முரளி-நிநத-லோலம்) குழலூதுவதில் மகிழ்பவனும், (முக்த-மாயூர-சூடம்) அழகிய மயிலிறகைச் சிரசில் சூடியவனும், (தலித-தனுஜ-ஜாலம்) அரக்கர் கூட்டத்தை முறியடித்தவனும், (தன்ய-ஸௌஜன்ய-லீலம்) புண்ணியஞ் செய்தவர்களிடம் அன்பினால் விளையாடுபவனும், (பரஹித-நவஹேலம்) பிறர்க்கு நலம் புரியப் புதிது புதிதாக லீலை புரிபவனும், (பத்ம-ஸத்ம-அனுகூலம்) தாமரையில் உறையும் பிரம்மாவுக்கு உதவிபுரிபவனும் (நவஜலதர-நீலம்) புதிய மேகம் போல் நீல வண்ணனும் ஆகிய (கோபால பாலம்) ஆயர் சிறுவனை (நௌமி) போற்றுகின்றேன்.

## 2.89. ஸச்சிதானந்தவடிவினனான கோபாலராயன்

सरसगुण-निकायं सच्चिदानन्दकायं
शमित-सकलमायं सत्यलक्ष्मी-सहायम् ।
शमदमसमुदायं शान्त-सर्वान्तरायं
सुहृदय-जनदायं नौमि गोपालरायम् ॥ २.८९ ॥

ஸரஸகுண-நிகாயம் ஸச்சிதானந்தகாயம்
சமித-ஸகலமாயம் ஸத்யலக்ஷ்மீ ஸஹாயம் ।
சமதம-ஸமுதாயம் சாந்த-ஸர்வாந்தராயம்
ஸுஹ்ருதய-ஜனதாயம் நௌமி கோபாலராயம் ॥ 2.89 ॥

Koviloor Digital Library



2. 89. (ஸரஸகுண-நிகாயம்) இன்பந்தரும் குணங்களுக்கு இருப்பிடமும், (ஸச்சிதானந்த-காயம்) ஸத்தும் சித்தும் ஆனந்தமும் உருவெடுத்தவனும், (சமித-ஸகலமாயம்) மாயை யனைத்தையும் ஒழித்தவனும், (ஸத்யலக்ஷ்மீ-ஸஹாயம்) ஸத்தியமாகிய செல்வத்திற்குத் தோழனும், (சம-தம-ஸமுதாயம்) மனவடக்கமும் புலனடக்கமும் கூடுமிடமும், (சாந்த-ஸர்வ-அந்தராயம்) எல்லா இடையூறுகளும் நீங்கிய இடமும், (ஸுஹ்ருதய-ஜன-தாயம்) நல்லமனம்படைத்த ஜனங்களின் பொருளும், (கோபாலராயம்) இடையர்களின் செல்வமும் ஆகிய கிருஷ்ணனை (நௌமி) போற்றுகிறேன்.

## 2.90 பரிசுத்தியளிக்கும் வசுதேவபுத்திரன்

लक्ष्मीकलत्रं ललिताब्जनेत्रं पूर्णेन्दुवक्त्रं पुरुहूतमित्रम् ।
कारुण्यपात्रं कमनीयगात्रं वन्दे पवित्रं वसुदेवपुत्रम् ॥२.९०॥

லக்ஷ்மி-களத்ரம் லலிதாப்ஜ-நேத்ரம்
பூர்ணேந்து-வக்த்ரம் புருஹூத-மித்ரம் ।
காருண்ய-பாத்ரம் கமனீய-காத்ரம்
வந்தே பவித்ரம் வஸுதேவபுத்ரம் ॥ 2.90 ॥

2. 90. (லக்ஷ்மீ-களத்ரம்) லக்ஷ்மியை நாயகியாகிய உடையவனும், (லலித-அப்ஜ-நேத்ரம்) அழகிய தாமரை மலர் போன்ற கண்களை உடையவனும், (பூர்ண-இந்து-வக்த்ரம்) பூர்ண சந்திரனைப் போன்ற முகமுடையவனும், (புருஹூத-மித்ரம்) இந்திரனிடம் நட்புக் கொண்டவனும், (காருண்ய-பாத்ரம்) கருணைக்கு உறைவிடமும், (கமனீயகாத்ரம்) வசீகரமான மேனி படைத்தவனும், (பவித்ரம்) பரிசுத்தமளிப்பவனும் ஆகிய (வஸுதேவ புத்ரம்) வசுதேவ புத்திரனை (வந்தே) வணங்குகிறேன்.

Koviloor Digital Library


## 2.91. காளியமர்த்தன கிருஷ்ணன்

**मदमय-मदमय-दुरगं यमुनामवतीर्य वीर्यशाली यः।**
**मम रति-ममरतिरस्कृति-शमनपरस्स क्रियात् कृष्णः २.९१॥**

மதமய-மதமய-துரகம் யமுனா-
மவதீர்ய வீர்யசாலீ யஃ।
மம ரதி-மமரதிரஸ்க்ருதி-சமன-
பரஸ் ஸ க்ரியாத் க்ருஷ்ணஃ॥ 2.91॥

2. 91. (வீர்யசாலீ) வீரியம் மிகுந்தவனாகிய (யஃ) எவன் (யமுனாம்) யமுனையாற்றில் (அவதீர்ய) இறங்கி (மதமயம்) கொழுப்பு மிக்கதான (உரகம்) காளியனென்கிற பாம்பை (அதமயத்) அடக்கினானோ, (அமரதிரஸ்க்ருதி-சமன பரஃ) தேவர்களுக்கேற்படும் அவமானத்தைப் போக்குவதில் விடா முயற்சியுள்ளவனோ, (ஸஃ) அந்த (க்ருஷ்ணஃ) கிருஷ்ணன் (மம) என்னுடைய (ரதிம்) மனோரதத்தை (க்ரியாத்) பூர்த்தி செய்து வைக்கட்டும்.

## 2.92. ஸர்வாபரண பூஷிதனான கிருஷ்ணன்

**मौलौ मायूरबर्हं मृगमद-तिलकं चारु लालाटपट्टे**
**कर्णद्वन्द्वे च तालीदल-मतिमृदुलं मौक्तिकं नासिकायाम्।**
**हारो मन्दारमाला-परिमलभरिते कौस्तुभस्योपकण्ठे**
**पाणौ वेणुश्च यस्य व्रजयुवति-युतः पातु पीताम्बरो नः॥२.९२॥**

மௌலௌ மாயூரபர்ஹம் ம்ருகமத-திலகம்
சாரு லாலாடபட்டே
கர்ணத்வந்த்வே ச தாலீதல-மதி ம்ருதுலம்
மௌக்திகம் நாஸிகாயாம் ।

Koviloor Digital Library


ஹாரோ மந்தாரமாலா பரிமளபரிதே
கௌஸ்துபஸ்யோபகண்டே
பாணௌ வேணுச்ச யஸ்ய வ்ரஜயுவதியுதஃ
பாது பீதாம்பரோ நஃ ॥ 2.92 ॥

2. 92. (யஸ்ய) எவனுடைய (மௌலௌ) சிரசில் (மாயூர-பர்ஹம்) மயிலிறகும், (லாலாடபட்டே) நெற்றித் தலத்தில் (சாரு) அழகிய (ம்ருகமத-திலகம்) கஸ்தூரித் திலகமும், (கர்ணத்வந்த்வே ச) இரு காதுகளிலும் (அதி-ம்ருதுலம்) மிக்க மெதுவான (தாலிதலம்) பச்சிலைகளும், (நாஸிகாயாம்) மூக்கில் (மௌக்திகம்) தொங்கும் முத்தும் (கௌஸ்துபஸ்ய உப கண்டே) கௌஸ்துப மணிக்கருகில் கழுத்திலிருந்து (மந்தார மாலா) மந்தாரப் பூ மாலையின் (பரிமளபரிதே) வாசனை நிறைந்த (ஹாரஃ) முத்து மாலையும் (பாணௌ) கையில் (வேணுஃ ச) புல்லாங்குழலும்—விளங்குகின்றனவோ—(பீத-அம்பரஃ) மஞ்சட் பட்டாடையணிந்து (வ்ரஜயுவதி-யுதஃ) ஆயர் சிறுமிகளால் சூழப் பெற்ற அந்த கிருஷ்ணன் (நஃ) நம்மை (பாது) காப்பாற்றட்டும்.

## 2.93. கோபியரின் ஆடைகளை அபகரித்த கிருஷ்ணன்

मुरारिणा वारिविहार-काले मृगेक्षणानां मुषितांशुकानाम् ।
करद्वयं वा कचसंहतिर्वा प्रमीलनं वा परिधान-मासीत् ॥

முராரிணா வாரிவிஹார-காலே
ம்ருகேக்ஷணானாம் முஷிதாம்சுகானாம் ।
கரத்வயம் வா கசஸம்ஹதிர்வா
ப்ரமீலனம் வா பரிதான-மாஸீத் ॥ 2 93 ॥

2. 93. (வாரிவிஹார-காலே) நீராடும்பொழுது (முராரிணா) கிருஷ்ணனால் (முஷித-அம்சுகானாம்) ஆடைகள் அபகரிக்கப்பட்ட (ம்ருக-ஈக்ஷணானாம்) மான் விழி படைத்த பெண்களுக்கு (கரத்வயம் வா) இரு கைகளோ, (கச-ஸம்ஹதிஃ வா) கூந்தல் கற்றையோ, (ப்ரமீலனம் வா) கண்களை மூடிக் கொள்ளுதலோ (பரிதானம்) ஆடையாக (ஆஸீத்) ஆயிற்று.

Koviloor Digital Library

## 2.94. கோபிகா ரமணன்

यासां गोपाङ्गनानां लसदसिततरालोल-लीलाकटाक्षा
यन्नासा चारु-मुक्तामणि- रुचिनिकर- व्योमगङ्गा-प्रवाहे।
मीनायन्तेऽपि तासा-मतिरभस- चलच्चारु- नीलालकान्ता
भृङ्गायन्ते यदङ्घ्रिद्वय-सरसिरुहे पातु पीताम्बरो नः ॥ २.९४ ॥

யாஸாம் கோபாங்கனானும் லஸ-
தஸிததராலோல-லீலாகடாக்ஷா
யந்நாஸா-சாரு-முக்தாமணி-
ருசிநிகர-வ்யோமகங்காப்ரவாஹே ।
மீனயந்தேऽபி தாஸா-மதி-
ரபஸ-சலச்சாரு-நீலாலகாந்தா
ப்ருங்காயந்தே யதங்க்ரித்வய-
ஸரஸிருஹே பாது பீதாம்பரோ நஃ ॥ 2.94 ॥

2. 94. (யத் நாஸா-) எவனுடைய மூக்கு நுனியில் தொங்கும் (சாரு-) அழகிய (முக்தாமணி-ருசி-நிகர) முத்தின் காந்தி வெள்ளமாகிற (வ்யோம-கங்கா-ப்ரவாஹே) ஆகாச கங்கைப் பிரவாகத்தில் (யாஸாம் கோபாங்கனானும்) எந்த கோபியரின் (லஸத்-அஸிததர-ஆலோல-) பிரகாசிப்பதாயும், மிகக் கருத்ததாயும், சஞ்சலமுள்ள தாயும் இருந்த (லீலா-கடாக்ஷாஃ) விளையாட்டுக் கடைக்கண் பார்வைகள் (மீனயந்தே) மீன்களைப் போலாகின்றனவோ; (அபி) மேலும் (தாஸாம்) அவர்களுடைய (அதிரபஸ-) மிகுந்த பரபரப்புடன் (சலத்-) அசையும் (சாரு-) அழகிய (நீல-அலக-அந்தாஃ) கருத்த நெற்றி மயிர் நுனிகள் (யத்) எவனுடைய (அங்க்ரித்வய-) அடியிணைகளாகிற (ஸரஸிருஹே) தாமரைகளில் (ப்ருங்காயந்தே) வண்டுகள் போலாகின்றனவோ; (ஸஃ) அந்த (பீதாம்பரஃ) மஞ்சள் பட்டாடையணிந்த கிருஷ்ணன் (நஃ) நம்மை (பாது) காப்பற்றட்டும்.

Koviloor Digital Library

## 2.95. குழலொலியின் கவர்ச்சி

यद्वेणु-श्रेणिरूप-स्थित- सुषिर-मुखोद्गीर्ण- नादप्रभिन्ना
पणाक्ष्यस्तत्क्षणेन त्रुटित-निजपति- प्रेमबन्धा बभूवुः ।
अस्तव्यस्तालकान्ताः स्फुरदधर- कुचद्वन्द्व-नाभि-प्रदेशाः
कामावेश- प्रकर्ष- प्रकटित- पुलकाः पातु पीताम्बरो नः ॥

யத்வேணுச்ரேணிருப-ஸ்தித-
ஸுஷிர-முகோத்கீர்ண-நாதப்ரபின்ந
ஏணாக்ஷ்யஸ்தத்க்ஷணேன
த்ருடித-நிஜபதி-ப்ரேமபந்தா பபூவு: ।
அஸ்தவ்யஸ்தாலகாந்தா:
ஸ்புர-ததர-குசத்வந்த்வ-நாபிப்ரதேசா:
காமாவேச-ப்ரகர்ஷ-
ப்ரகடித-புலகா: பாது பீதாம்பரோ ந: ॥ 2 95 ॥

2. 95. (யத்) எவனுடைய (வேணு) குழலில் (ச்ரேணிருப-ஸ்தித-) வரிசையாக இருந்த (ஸுஷிர-முக-) துவாரங்களின் வாயிலாக (உத்கீர்ண-) வெளிவந்த (நாதப்ரபின்நா:) ஒலியினால் மனந்தளர்ந்தவர்களாகிய (ஏணாக்ஷ்ய:) மான் விழிபடைத்த பெண்கள் (தத்-க்ஷணேன) அப்பொழுதே (த்ருடித-நிஜபதி-ப்ரேம-பந்தா:) தங்கள் கணவன்மார்களிடமிருந்து ஆசைப் பாசங்கள் அறுந்தவர்களாய் (அஸ்த-வ்யஸ்த-அலக-அந்தா:) அலந்து பரந்த முன் நெற்றி மயிர்களுடன் (ஸ்புரத்-அதர-குசத்வந்த்வ-நாபி-ப்ரதேசா:) துடிக்கும் உதடுகளும் நகில்களும் நாபிப் பிரதேசங்களும் உடையவர்களாய், (காம-ஆவேச-) காம வெறியின் (ப்ரகர்ஷ-ப்ரகடித-) இழுப்பால் வெளிக் கிளம்பிய (புலகா:) மயிர்க்கூச்சுடையவர்களாய் (பபூவு:) ஆயினரோ, (பீதாம்பர:) அந்த பீதாம்பரதாரியான கிருஷ்ணன் (ந:) நம்மை (பாது) காப்பாற்றட்டும்.

காமாவேச-ப்ரகல்ப-ப்ரகடித பா. பே.

Koviloor Digital Library


## 2.96. தேவகியின் வயிற்றில் தோன்றிய இந்திர நீலமணி

देवक्या जठराकरे समुदितः क्रीतो गवां पालिना
नन्देनानकदुन्दुभे- र्निजसुतापण्येन पुण्यात्मना ।
गोपालावलि- मुक्त- हारतरलो गोपीजनालङ्कृतिः
स्थेयान्नो हृदि सन्ततं सुमधुरः कोऽपीन्द्रनीलो मणिः ॥

தேவக்யா ஜடராகரே ஸமுதித:
க்ரீதோ கவாம் பாலிநா
நந்தேநாநகதுந்துபேர்-நிஜஸுதா-
பண்யேந புண்யாத்மநா ।
கோபாலாவலி-முக்த-ஹாரதரலோ
கோபீஜநாலங்க்ருதி:
ஸ்தேயாந்நோ ஹ்ருதி ஸந்ததம் ஸுமதுர:
கோபீந்த்ரநீலோ மணி: ॥ 2.96 ॥

2. 96. (தேவக்யா:) தேவகியின் (ஜடர-ஆகரே) வயிறாகிற சுரங்கத்திலிருந்து (ஸமுதித:) உண்டானதும், (கவாம் பாலிநா) பாடு மேய்க்கும் இடையனும் (புண்யாத்மநா) புண்ணியாத்மாவுமாகிய (நந்தேந) நந்த கோபனால் (ஆநகதுந்துபே:) வசுதேவனிடமிருந்து (நிஜ-ஸுதா—பண்யேந) தன் பெண் குழந்தையாகிற விலை கொடுத்து (க்ரீத:) வாங்கப்பட்டதும், (கோபால-ஆவலி-முக்த-ஹார) ஆயர் கூட்டமாகிய முத்து மாலையின் (தரல:) நடுரத்தினமாகியதும், (கோபீஜந- அலங்க்ருதி:) கோபிகைகளின் பூஷணமாய் விளங்குவதும் (ஸுமதுர:) அழகு மிக்கதும் (க: அபி) ஒப்புயர்வற்றதுமான (இந்த்ர-நீலோ மணி:) இந்திர நீல ரத்னம் (ஸந்ததம்) எப்பொழுதும் (ந:) நம்முடைய (ஹ்ருதி) இருதயத்தில் (ஸ்தேயாத்) நிலைபெற்றிருக்கட்டும்.

ஸ்தேயாத்வோ பா.பே.

Koviloor Digital Library

**2.97. உறியில் வைத்த பாலைக் களவாடிய கண்ணன்**

पीठे पीठनिषण्ण- बालकगले तिष्ठन् स गोपालको
यन्त्रान्तःस्थित-दुग्धभाण्ड- मपकृष्याच्छाद्य घण्टारवम् ।
वक्त्रोपान्त- कृताञ्जलिः कृतशिरः कम्पं पिबन् यः पयः
पाया- दागत-गोपिका-नयनयो-र्गण्डूष-फूत्कारकृत् ॥ २.९७॥

பீடே பீட-நிஷண்ண-பாலககளே
திஷ்டன் ஸ கோபாலகோ
யந்த்ராந்த:ஸ்தித-துக்தபாண்ட-மபக்ருஷ்-
யாச்சாத்ய கண்டாரவம் ।
வக்த்ரோபாந்த-க்ருதாஞ்ஜலி: க்ருதசிர:-
கம்பம் பிபன் ய: பய:
பாயா-தாகத-கோபிகா-நயனயோர்-
கண்டூஷ-பூத்காரக்ருத் ॥ 2.97 ॥

2. 97. (பீடே) ஒரு மணையின் மேல் (பீடநிஷண்ண) பாலககளே) மணையை வைத்து அதின்மேல் உட்கார்ந்த சிறுவனுடைய தோளின்மேல் (திஷ்டன்) நின்று கொண்டு (ய:) எவன் (யந்த்ர-அந்த: ஸ்தித-) உறியின் நடுவிலிருந்த (துக்தபாண்டம்-பால் பானையை (அபக்ருஷ்ய) இழுத்து (கண்டா-ரவம்)—அதில் கட்டியிருந்த—மணியோசையை (ஆச்சாத்ய) மறைத்து அடக்கி (வக்த்ர-உபாந்த-க்ருத-அஞ்ஜலி:) வாயினருகில் கையைக் கூப்பி வைத்துக் கொண்டு (க்ருத-சிர: கம்பம்) தலையை ஆட்டிக் கொண்டு (பய: பிபன்) பாலைக் குடிக்கையில் (ஆகத–) வந்த (கோபிகா-நயனயோ:)கோபிகையின் கண்களில் (கண்டூஷ-) எச்சிலான பாலை (பூத்கார-க்ருத்) சிதறி விழும்படி உமிழ்ந்தானோ (ஸ:) அந்த (கோபாலக:) கோபாலகிருஷ்ணன் (பாயாத்)—நம்மை—காப்பாற்றட்டும்.

Koviloor Digital Library

## 2.98. கிருஷ்ணபக்தி ஏற்படுவது பூர்வ புண்ணியத்தின் பயன்

यज्ञैरीजिमहे धनं ददिमहे पात्रेषु नूनं वयं
वृद्धान् भेजिमहे तपश्चकृमहे जन्मान्तरे दुश्चरम् ।
येनास्माक-मभू-दनन्यसुलभा भक्ति-र्भवद्वेषिणी
चाणूरद्विषि भक्तकल्मषमुषि श्रेयःपुषि श्रीजुषि ॥ २,९८॥

யஜ்ஞை-ரீஜிமஹே தனம் ததிமஹே
பாத்ரேஷு நூனம் வயம்
வ்ருத்தான் பேஜிமஹே தபச்சக்ருமஹே
ஜன்மாந்தரே துச்சரம் ।
யேனாஸ்மாக-மபூ-தனன்யஸுலபா
பக்திர்-பவத்வேஷிணீ
சாணூரத்விஷி பக்தகல்மஷமுஷி
ச்ரேயஃபுஷி ஸ்ரீஜுஷி ॥ 2.98 ॥

2. 98. (யேன) எதனால் (அஸ்மாகம்) நமக்கு (சாணூரத்விஷி) சாணூரனென்ற மல்லனைப் பகைத்தவனும் (பக்த-கல்மஷமுஷி) அடியார்களின் தோஷங்களைப் போக்குபவனும் (ச்ரேயஃ புஷி) உயர் நலத்தை வளர்ப்பவனும் (ஸ்ரீஜுஷி) எல்லா நலன்களுக்கும் உறைவிடமாகியவனுமான ஸ்ரீ கிருஷ்ணனிடம் (பவத்வேஷிணீ) பிறவித் துன்பத்தைப் போக்கும் (பக்திஃ) பக்தியானது. (அனன்ய-ஸுலபா) பிறர்க்கடைய முடியாதது. (அபூத) உண்டாயிருக்கிறதோ —அதனால்—(ஜன்மாந்தரே) முற்பிறவிகளில் (வயம்) நாம் (நூனம்) நிச்சயமாக (யஜ்ஞைஃ ஈஜிமஹே) யாகங்களால் பகவானை ஆராதித்திருக்க வேண்டும். (பாத்ரேஷு) தகுதியுடையவர்களுக்கு (தனம் ததிமஹே) பொருளை தானம் செய்திருக்க வேண்டும். (வ்ருத்தான்) பெரியோர்களை (பேஜிமஹே) சேவித்திருக்க வேண்டும். (துச்சரம்) செய்தற்கரிய தபஃ) தவத்தை (சக்ருமஹே) செய்திருக்க வேண்டும்.

Kovilbor Digital Library

## 2.99. நமது குணம் முக்கியமன்று அவனருள் முக்கியம்

त्वयि प्रसन्ने मम किं गुणेन त्वय्यप्रसन्ने मम किं गुणेन ।
रक्ते विरक्ते च वरे वधूनां निरर्थकः कुङ्कुम-पत्र-भङ्गः ॥२.९९॥

த்வயி ப்ரஸன்னே மம கிம் குணேன
த்வய்யப்ரஸன்னே மம கிம் குணேன ।
ரக்தே விரக்தே ச வரே வதூனாம்
நிரர்த்தகஃ குங்கும-பத்ர-பங்கஃ ॥ 2.99 ॥

2.99. (த்வயி ப்ரஸன்னே) நீ பிரஸன்னமாகி விட்டால் (மம) எனக்கு (குணேன) குணங்களால் (கிம்) ஆவதென்ன? (த்வயி அப்ரஸன்னே) நீ பிரஸன்னமாகா விட்டால் (மம) எனக்கு (குணேன) குணங்களால் (கிம்) ஆவதென்ன? (வதூனாம்) ஸ்திரீகளுக்கு (வரே ரக்தே) கணவனுடைய அன்பு இருக்குமேயானால் (குங்கும-பத்ர-பங்கஃ) குங்குமத்தாலும் தளிர், பூ முதலியவற்றாலும் அலங்கரித்துக் கொள்ளுதல் (நிரர்த்தகஃ) அவசியமில்லை; (விரக்தே) கணவனுடைய—அன்பு இல்லையானால்—அப்போதும் (நிரர்த்தகஃ) அது பயனில்லை.

## 2.100. விடியற்காலையில் கோபிமார் கண்ணனைப் பாடும் அழகு

गायन्ति क्षणदावसान-समये सानन्द-मिन्दुप्रभा
रुन्धन्त्यो निजदन्तकान्ति-निवहै-र्गोपाङ्गना गोकुले ।
मथ्नन्त्यो दधि पाणि-कङ्कण-क्वणत्कारानुकारं जवाद्-
व्यावल्गद्वसनाञ्चला यमनिशं पीताम्बरोऽव्यात्स नः ॥

காயந்தி க்ஷணதாவஸான-ஸமயே
ஸானந்த-மிந்துப்ரபா
ருந்தந்த்யோ நிஜதந்த-காந்தி-நிவஹைர்-
கோபாங்கனா கோகுலே ।

Koviloor Digital Library


மத்னந்த்யோ ததி பாணி-கங்கண-ஜணத்
காரானுகாரம் ஜவாத்
வ்யாவல்கத்-வஸனாஞ்சலா யமநிசம்
பீதாம்பரோऽவ்யாத் ஸ நः ॥ 2.100 ॥

2. 100. (நிஜ-) தங்களுடைய (தந்த-காந்தி-நிவஹைः) பற்களின் வெண்ணொளிச் சமூகத்தால் (இந்து-ப்ரபா) சந்திரனின் ஒளியை (நுந்தந்த்யः) வென்றவர்களாயும், (பாணி-கங்கண-) கை வளைகளின் (ஜணத்கார-) ஜண ஜண என்ற ஒலிக்கு (அனுகாரம்) இசைவாக (ஜவாத்) வேகத்துடன் (வ்யாவல்கத்) சுற்றிச் சுற்றியலையும் (வஸன-அஞ்சலாः) ஆடையின் நுனிகளை உடையவர்களாய், (ததி) தயிரை (மந்தந்த்யः) கடைபவர்களாயும் (கோகுலே) ஆய்ப்பாடியில் (கோபாங்கனाः) கோபஸ்திரீகள் (க்ஷணதா-) இரவின் (அவஸான-ஸமயே) முடிவு காலமாகிய விடியற்காலையில் (ஸானந்தம்) மகிழ்ச்சி பொங்க (யம்) எவனை (அநிசம்) நாள்தோறும் தொடர்ந்து (காயந்தி) பாடுகிறார்களோ (ஸः) அந்த (பீதாம்பரः) மஞ்சட் பட்டாடையணிந்த கிருஷ்ணன் (நः) நம்மை (அவ்யாத்) காப்பாற்றட்டும்.

## 2 101. கற்பகத்தடியில் குழலூதும் கிருஷ்ணன்

अंसालम्बित-वामकुण्डलभरं मन्दोन्नत-भ्रूलतं
किञ्चित्कुञ्चित-कोमलाधरपुटं साचि प्रसारेक्षणम् ।
आलोलाङ्गुलि-पल्लवै-र्मुरलिका-मापूरयन्तं मुदा
मूले कल्पतरो-स्त्रिभङ्गिललितं जाने जगन्मोहनम् ॥

அம்ஸாலம்பித-வாமகுண்டலபரம்
மந்தோன்னத-ப்ரூலதம்
கிஞ்சித்குஞ்சித-கோமலாதரபுடம்
ஸாசி ப்ரஸாரேக்ஷணம் ।

Koviloor Digital Library

ஆலோலாங்குலி-பல்லவைர்-முரலிகா-
மாபூரயந்தம் முதா
மூலே கல்பதரோஸ்-த்ரிபங்கிலலிதம்
ஜானே ஜகன்மோஹனம் ॥ 2.101 ॥

2. 101. (அம்ஸ-) தோள்வரை (ஆலம்பித-) தொங்கும் (வாம-) அழகிய (குண்டலபரம்) குண்டலங்களையணிந்தவனும், (மந்த-) சிறிது (உன்னத-) உயர்த்தப்பட்ட (ப்ரூலதம்) கொடி போன்ற புருவத்தை உடையவனும், (கிஞ்சித்-) கொஞ்சம் (குஞ்சித) தாழ்த்தப்பட்ட (கோமல-) அழகான (அதா-புடம்) கீழுதட்டை உடையவனும், (ஸாசி-) குறுக்காக (ப்ரஸார-) பாயும் (ஈக்ஷணம்)- கடைக்கண் பார்வையுடையவனும், (ஆலோல) விரைந்து அசையும் (அங்குலி-பல்லவைঃ) தளிர் போன்ற விரல்களால் (முதா) மகிழ்ச்சியுடன் (முரலிகாம்) அழகிய புல்லாங்குழலை (ஆபூரயந்தம்)—அடக்கி—காற்றை நிறைத்து ஊதுபவனும், (கல்பதரோঃ) கற்பக மரத்தின் (மூலே) அடியில் (த்ரிபங்கி-லலிதம்) தலை, இடுப்பு, பாதம் ஆகிய—மூன்றிடங்களில் அழகாக வளைந்து நிற்பவனும் (ஜகன் மோஹனம்) உலகைத் தன் வயமாக்குபவனும் ஆன ஸ்ரீ கிருஷ்ணனை (ஜானே) உள்ளத்து அறிகின்றேன்.

## 2.102. மல்லரங்கத்தில் எண்ணுவார் எண்ணியவாங்கு தோன்றியவன்

मल्लै-श्शैलेन्द्रकल्पः शिशुरितरजनैः पुष्पचापोऽङ्गनाभि-
र्गोपैस्तु प्राकृतात्मा दिवि कुलिशभृता विश्वकायोऽप्रमेयः ।
क्रुद्धः कंसेन कालो भयचकितदृशा योगिभि-र्ध्येय मूर्तिः
दृष्टो रङ्गावतारे हरि-रमरगणानन्दकृत् पातु युष्मान् ॥

மல்லைঃ சைலேந்த்ரகல்பঃ சிசு-ரிதரஜனைঃ
புஷ்பசாபோஸங்கனாபிர்-

Koviloor Digital Library


கோபைஸ்து ப்ராக்ருதாத்மா திவி குலிசப்ருதா
விச்வகாயோऽப்ரமேய: ।
க்ருத்த: கம்ஸேன காலோ பய-சகிதத்ருசா
யோகிபிர்-த்யேய மூர்த்திர்-
த்ருஷ்டோ ரங்காவதாரே ஹரி-ரமரகணா-
னந்தக்ருத் பாது யுஷ்மான் ॥ 2.102 ॥

2. 102. (ரங்க-அவதாரே) மல்லரங்கத்தில் இறங்கியபோது (மல்லை:) சாணூரன் முதலிய மல்லர்களால் (சைலேந்த்ர-கல்ப:) பெரிய மலை போன்றவனாகவும் (இதர ஜனை:) மற்ற ஜனங்களால் (சிசு:) குழந்தையாகவும் (அங்கனாபி:) பெண்களால் (புஷ்பபாப:) புஷ்பபாணத்தையுடைய மன்மதனாகவும் (கோபை: து) கோபர்களாலோ (ப்ராக்ருத-ஆத்மா) சாதாரண மனிதனாகவும் (திவி) தேவலோகத்திலுள்ள (குலிசப்ருதா) வஜ்ராயுதந் தாங்கிய இந்திரனால் (விச்வகாய:) உலகையே உடலாய்க் கொண்ட (அப்ரமேய:) அளவிலா மகிமையுடைய ஸர்வேச்வரனாகவும் (பயசகித-த்ருசா) பயத்தால் சலிக்கும் கண்களையுடைய (கம்ஸேன) கம்ஸனால் (க்ருத்த:கால:) கோபங்கொண்ட யமனாகவும் (யோகிபி:) யோகிகளால் (த்யேய-மூர்த்தி:) தியானம் செய்வதற்குரிய திவ்ய மூர்த்தியாகவும் (த்ருஷ்ட:) காணப்பட்ட (அமரகண-ஆனந்தக்ருத்) தேவகணங்களுக்கு மகிழ்ச்சியை உண்டாக்கும் (ஹரி:) ஹரியாகிய ஸ்ரீ கிருஷ்ணன் (யுஷ்மான்) உங்களை (பாது) ரக்ஷிக்கட்டும்.

## 2.103. ருக்மிணியுடன் கூடிய ஜகன்மோஹன கிருஷ்ணன்

संविष्टो मणिविष्टरेऽङ्कतलमध्यासीन लक्ष्मी मुखे
कस्तूरीतिलकं मुदा विरचयन् हर्षान्कुचौ संस्पृशन् ॥
अन्योन्य-स्मित-चन्द्रिका- किसलयै- राराधयन्मन्मथं
गोपी-गोप- परीवृतो यदुपतिः पायाज्जगन्मोहनः ॥ २.१०३॥

Koyil.org Digital Library

ஸம்விஷ்டோ மணிவிஷ்டரே-ஸங்கதல
மத்யாஸீன-லக்ஷ்மீ-முகே
கஸ்தூரீதிலகம் முதா விரசயன்
ஹர்ஷாத் குசௌ ஸம்ஸ்ப்ருசன் ।
அன்யோன்ய-ஸ்மித-சந்த்ரிகா-கிஸலயை-
ராராதயன் மன்மதம்
கோபீ-கோப-பரிவ்ருதோ யதுபதிஃ
பாயாஜ்-ஜகன்மோஹனஃ ॥ 2·103 ॥

2. 103. (மணிவிஷ்டரே) ரத்ன சிம்மாஸனத்தில் (ஸம்விஷ்டஃ) அமர்ந்தவனாகவும், (அங்கதலம் அத்யாஸீன-) துடைத்தலத்தில் உட்கார்ந்திருக்கும் (லக்ஷ்மீ) ருக்மிணியின் (முகே) முகத்தில் (கஸ்தூரீ திலகம்) கஸ்தூரி திலகத்தை (முதா) மகிழ்ச்சியுடன் (விரசயன்) இடுபவனாகவும், (ஹர்ஷாத்) களிப்பினால் (குசௌ) ஸ்தனங்களை (ஸம்ஸ்ப்ருசன்) தொடுபவனாகவும், (அன்யோன்ய-ஸ்மித-) ஒருவரை ஒருவர் நோக்கிச் செய்யும் புன்முறுவலாகிற (கிஸலயைஃ) தளிர்களால் (மன்மதம்) மன்மதனை (ஆராதயன்) வழிபடுபவனாகவும், (கோபீ-கோப-பரிவ்ருதஃ) கோபிகளாலும் கோபர்களாலும் சூழப்பட்டவனாகவும், (ஜகன் மோஹனஃ) உலகை மயக்குபவனாகவும் விளங்கும் (யதுபதிஃ) யதுபதியான ஸ்ரீ கிருஷ்ணன் (பாயாத்) நம்மைக் காப்பாற்றட்டும்.

## 2104. ருக்மிணியுடன் விளையாடும் கிருஷ்ணன்

आकृष्टे वसनाञ्चले कुवलयश्यामा त्रपाधःकृता
दृष्टिः संवलिता रुचा कुचयुगे स्वर्णप्रभे श्रीमति ।
बालः कश्चन चूतपल्लव इति भ्रान्त्यास्मितास्यश्रिय
स्त्रिय्यंस्तामथ रुक्मिणीं नतमुखीं कृष्णस्स पुष्णातु नः ॥

ஆக்ருஷ்டே வஸனாஞ்சலே குவலய-
ச்யாமா த்ரபாதஃக்ருதா

Koviloor Digital Library

த்ருஷ்டிः ஸம்வலிதா ருசா குச-யுகே
ஸ்வர்ணப்ரபே ஶ்ரீமதி ।
பாலः கச்சன சூதபல்லவ இதி
ப்ராந்தஸ்மிதாஸ்யச்ரியம்
ச்லிஷ்யம்ஸ்தாமத ருக்மிணீம் நதமுகீம்
க்ருஷ்ணஸ்ஸ புஷ்ணாது நः ॥ 2.104 ॥

2. 104. (வஸன-அஞ்சலே)—ருக்மிணியின்—புடவைத் தலைப்பு (ஆக்ருஷ்டே)--கிருஷ்ணனால்--இழுக்கப்படவே (குவலச்-யாமா த்ருஷ்டிः) கறு நெய்தல் பூப் போன்ற கண்களின் பார்வை (த்ரபா) வெட்கத்தால் (அதः க்ருதா) கீழே செலுத்தப்பட்டு (ஸ்வர்ணப்ரபே) தங்க நிறம் போன்று (ஶ்ரீமதி) அழகிய (குச-யுகே) இரு நகில்களில் (ருசா) காந்தியுடன் (ஸம்வலிதா) சேர்ந்த போது, (தாம்) அந்த (ப்ர-அந்தஸ்மித-) புன்சிரிப்பு வழிந்து வரும் (ஆஸ்ய-ச்ரியம்) வாயின் அழகையுடையவளும் (நதமுகீம்) கவிழ்ந்த முகமுடையவளுமான (ருக்மிணீம்) ருக்மிணியை (பாலः கச்சன சூதபல்லவः இதி) இது ஒரு மாந்துளிரோ என்று சொல்லி (ச்லிஷ்யன்) அணைத்துக் கொண்ட (ஸः க்ருஷ்ணः) அந்த கிருஷ்ணன் (நः) நம்மை (புஷ்ணாது) போஷிக்கட்டும்.

## 2.105. ருக்மிணியின் அந்தரங்கப் பேச்சு

उर्व्यां कोऽपि महीधरो लघुतरो दोर्भ्यां धृतो लीलया
तेन त्वं दिवि भूतले च सततं गोवर्धनोद्धारकः ।
त्वां त्रैलोक्यधरं वहामि कुचयोरग्रे न तद्गण्यते
किं वा केशव भाषणेन बहुना पुण्यै-र्यशो लभ्यते ॥ २.१०५॥

உர்வ்யாம் கோऽபி மஹீதரோ லகுதரோ
தோர்ப்யாம் த்ருதோ லீலயா

Koviloor Digital Library


தேன த்வம் திவி பூதலே ச ஸததம்
  கோவர்த்தனோத்தாரகஃ ।
த்வாம் த்ரைலோக்யதரம் வஹாமி குசயோ-
  ரக்ரே ந தத்கண்யதே
கிம் வா கேசவ பாஷணேன பஹுனா
  புண்யைர்-யசோ லப்யதே ॥ 2.105 ॥

2. 105. (கேசவ) கிருஷ்ணா! (உர்வ்யாம்) பூமியில் (லகுதரஃ) எளிதான (கஃ அபி) ஏதோ ஒரு (மஹீதரஃ) மலை (லீலயா) விளையாட்டாக (தோர்ப்யாம்) இரு கைகளாலும் (த்ருதஃ) தாங்கப்பட்டது. (தேன) அதனால் (த்வம்) நீர் (திவி) தேவலோகத்திலும் (புவி) பூலோகத்திலும் (ஸததம்) எப்போதும் (கோவர்த்தன-உத்தாரகஃ) கோவர்த்தனகிரியைத் தூக்கியவர்—என்ற புகழ் பெற்று விளங்குகிறீர். (த்ரைலோக்யதரம்) மூவுலகையும் உமக்குள் தரிக்கும் (த்வாம்) உம்மை (குசயோஃ அக்ரே) நகில்களின் நுனியில் (வஹாமி) நான் தாங்குகிறேன்; (தத்) அது (ந கண்யதே) ஒரு பொருட்டாக எண்ணப்படுவதில்லை. (பஹுனா பாஷணேன) வெகுவாய்ப் பேசுவதால் (கிம் வா) என்ன தான் பயன்? (புண்யைஃ) முன் செய்த புண்ணியச் செயல்களால் தான் (யசஃ) புகழானது (லப்யதே) அடையப்படுகிறது.

கோவர்த்தனோ கீபஸே —பா. ப.

## 2.106. கிருஷ்ணனை நினைத்திருப்பவனுக்கு மற்ற செயல்களால் ஆவதென்ன ?

सन्ध्यावन्दन भद्रमस्तु भवते भोः स्नान तुभ्यं नमो
  भो देवाः पितरश्च तर्पणविधौ नाहं क्षमः क्षम्यताम् ।
यत्र क्वापि निषीद्य यादव-कुलोत्तंसस्य कंसद्विषः
  स्मारं स्मार-मघं हरामि तदलं मन्ये किमन्येन मे ॥ २.१०६॥

Koviloor Digital Library


ஸந்த்யாவந்தன பத்ரமஸ்து பவதே
போ: ஸ்நான துப்யம் நமோ
போ தேவா: பிதரச்ச தர்ப்பணவிதௌ
நாஹம் க்ஷம: க்ஷம்யதாம் ।
யத்ர க்வாபி நிஷீத்ய யாதவ-குலோத்-
தம்ஸஸ்ய கம்ஸத்விஷ:
ஸ்மாரம் ஸ்மார-மகம் ஹராமி ததலம்
மன்யே கிமன்யேன மே ॥ 2.106 ॥

2. 106. (ஸந்த்யாவந்தன) ஸந்தியா வந்தனமே! (பவதே) உமக்கு (பத்ரம்) மங்களம் (அஸ்து) உண்டாகட்டும். (போ: ஸ்நான!) ஓ! ஸ்நானமே! (துப்யம்) உமக்கு (நம:) நமஸ்காரம். (போ: தேவா:) தேவர்களே! (பிதர: ச) பிதிருக்களே! (தர்ப்பண-விதௌ) தர்ப்பண விதிகளில் (அஹம்) நான் (ந க்ஷம:) ஸமர்த்தனல்லேன்; (க்ஷம்யதாம்) மன்னித்தருள வேண்டும். (யத்ர க்வ அபி) எங்கேயாவது ஓரிடத்தில் (நிஷீத்ய) உட்கார்ந்து கொண்டு (யாதவகுல-உத்தம்ஸஸ்ய) யது குலத்தின் சிரோ-பூஷணம் போன்றவனும் (கம்ஸத்விஷ:) கம்ஸனைப் பகைத்தவனுமான கிருஷ்ணனை (ஸ்மாரம் ஸ்மாரம்) மேன்மேலும் நினைத்து (அகம்) பாவத்தை (ஹராமி) போக்கிக் கொள்ளுகிறேன். (தத்) அதையே (அலம்) போதுமானதென்று (மன்யே) கருதுகிறேன். (மே) எனக்கு (அன்யேன) மற்ற செயல்களால் (கிம்) ஆவதென்ன?

ஒ. ஸர்வதர்மான் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ ।
அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மா சுச: ॥

எல்லா அறங்களையும் விட்டொழிந்திங் கென்றனையே
நல்லாய் சரண்புகுக நானுன்னை—அல்லல் தரு
பாவங்களின் முற்றும் பற்றறவே வீடுவிப்பேன்
மேவுதுயர் எல்லாம் விடு. —கீதை 18:66

Koviloor Digital Library

9. பற்றுகளை அறவே ஒழித்து அன்பினால் பணிசெய்து அவனிடம் அடைக்கலம் புகுவதொன்றே கடமை. நமக்கென்று தனியாக வேறு ஒரு காரியமும் கிடையாது.

—விவேகானந்தர்.

9. 'யேன த்யஜஸி தத் த்யஜ' (ம. பா.)

எதனால் தியாகம் செய்கின்றாயோ அதையும் தியாகம் செய். பலவகை தருமங்களால் பாப நிவ்ருத்திகளை நாசஞ் செய்தபின் அந்த தருமங்களின் எல்லையாயுள்ள பகவானையே சரணமடைதல் வேண்டும். அதுவே பரம தருமம். ஒரு ஆற்றைக் கடக்க உதவிய தெப்பக் கட்டையை அதைக் கடந்து சென்றபின் தூக்கிப் போக வேண்டிய அவசியம் இல்லாதவாறு.

## 2.107. கண்ணனே பரதத்துவம்

हे गोपालक हे कृपाजलनिधे हे सिन्धुकन्यापते
हे कंसान्तक हे गजेन्द्रकरुणापारीण हे माधव ।
हे रामानुज हे जगत्त्रयगुरो हे पुण्डरीकाक्ष मां
हे गोपीजननाथ पालय परं जानामि न त्वां विना ॥

ஹே கோபாலக ஹே க்ருபாஜலநிதே
ஹே ஸிந்து-கன்யாபதே
ஹே கம்ஸாந்தக ஹே கஜேந்த்ர-கருணா-
பாரீண ஹே மாதவ ।
ஹே ராமானுஜ ஹே ஜகத்-த்ரய-குரோ
ஹே புண்டரீகாக்ஷ மாம்
ஹே கோபீஜனநாத பாலய பரம்
ஜாநாமி ந த்வாம் விநா ॥ 2.107 ॥

2. 107. (ஹே கோபாலக) பசுக்களை மேய்த்துக் காப்பவனே! (ஹே க்ருபா-ஜலநிதே) கருணைக் கடலே! (ஹே ஸிந்து கன்யா-பதே) ஸமுத்திர ராஜன் பெண்ணான லக்ஷ்மியின் பதியே!

Koviloor Digital Library


(ஹே கம்ஸாந்தக) கம்ஸனுக்கு யமனாகியவனே! (ஹே கஜேந்த்ர கருணா பாரீண) கஜேந்திரனுக்குப் பரிபூர்ணமாய்க் கருணை செய்தவனே! (ஹே மாதவ) ரமா நாயகனே! (ஹே ராமானுஜ) பலராமனுடைய தம்பியே! (ஹே ஜகத்-த்ரய குரோ) மூவுலகிற்கும் குருவே! (ஹே புண்டரீகாக்ஷ) தாமரைக் கண்ணா! (ஹே கோபீஜன நாத) கோபியர்களின் ரக்ஷகனே! (மாம்) என்னையும் (பாலய) ரக்ஷித்தருள்வாய். (த்வாம் விநா) உன்னைத் தவிர (பரம்) உயர்ந்ததாக—வேறு எதையும்—(ந ஜாநாமி) நான் அறியவில்லை.

## 2.108. கஸ்தூரீ திலகத்துடன் விளங்கும் கண்ணன்

**कस्तूरीतिलकं ललाटफलके वक्षःस्थले कौस्तुभं**
**नासाग्रे नवमौक्तिकं करतले वेणुं करे कङ्कणम् ।**
**सर्वाङ्गे हरिचन्दनं च कलयन् कण्ठे च मुक्तावलिं**
**गोपस्त्री-परिवेष्टितो विजयते गोपालचूडामणिः ॥ २.१०८॥**

கஸ்தூரீ-திலகம் லலாடபலகே
 வக்ஷ:-ஸ்தலே கௌஸ்துபம்
நாஸாக்ரே நவமௌக்திகம் கரதலே
 வேணும் கரே கங்கணம் ।
ஸர்வாங்கே ஹரிசந்தனஞ் ச கலயன்
 கண்டே ச முக்தாவலிம்
கோபஸ்த்ரீ-பரிவேஷ்டிதோ விஜயதே
 கோபாலசூடாமணி: ॥ 2.108 ॥

2. 108. (லலாடபலகே) பரந்த நெற்றியில் (கஸ்தூரீ-திலகம்) கஸ்தூரி திலகமும் (வக்ஷஸ்தலே) மார்புப் பிரதேசத்தில் (கௌஸ்துபம்) கௌஸ்துபமென்னும் மரகதப் பச்சையும் (நாஸாக்ரே) மூக்கு நுனியில் (நவ மௌக்திகம்) புதிய முத்தும் (கரதலே) கைத்தலத்தில் (வேணும்) புல்லாங்குழலும் (கரே) முன் கையில் (கங்கணம்) வளையும் (ஸர்வாங்கே) திருமேனி

Koviloor Digital Library

முழுதும் (ஹரிசந்தனம்) சிறந்த சந்தனப் பூச்சும் (கண்டே) கழுத்தில் (முக்தாவலிம்) முத்து மாலையும் (கலயன்) அணிந்து கொண்டு (கோபஸ்த்ரீ-பரிவேஷ்டிதஃ) கோபஸ்திரீகளால் சூழப் பெற்று (கோபாலசூடாமணிஃ) ஆயர் தலைவனான கிருஷ்ணன் (விஜயதே) வெற்றியுடன் விளங்குகிறான்.

**2.109. உலகை மயக்கி உள்ளொளி காட்டும் குழலோசை**

लोकानुन्मदयन् श्रुतीर्मुखरयन् क्षोणीरुहान्हर्षयन्
शैलान्विद्रवयन् मृगान्विवशयन् गोवृन्दमानन्दयन्।
गोपान् संभ्रमयन् मुनीन्मुकुलयन् सप्तस्वरान् जृम्भयन्
ओंकारार्थ- मुदीरयन् विजयते वंशीनिनादः शिशोः

॥ इति श्रीकृष्णकर्णामृते द्वितीयाश्वासः
समाप्तः ॥

லோகா-னுன்மதயன் ச்ருதிர்-முகரயன்
க்ஷோணீருஹான் ஹர்ஷயன்
சைலான் வித்ரவயன் ம்ருகான் விவசயன்
கோப்ருந்த-மானந்தயன் ।
கோபான் ஸம்ப்ரமயன் முனீன்முகுலயன்
ஸப்தஸ்வரான் ஜ்ரும்பயன்
ஓங்காரார்த்த-முதீரயன் விஜயதே
வம்சீ-நினாதஃ சிசோஃ ॥ 2.109 ॥

॥ இதி ஸ்ரீ க்ருஷ்ணகர்ணாம்ருதே
த்விதீயாச்வாஸஃ ஸமாப்தஃ ॥

2. 109. (லோகான்) உலகங்களை (உன்மதயன்) மயக்கிக் கொண்டும் (ச்ருதிஃ) வேதங்களை (முகரயன்) முழக்கிக் கொண்டும் (க்ஷோணீருஹான்) மரங்களை (ஹர்ஷயன்) மகிழ்ச்சியால் சிலிர்க்கச்

Koviloor Digital Library



செய்து கொண்டும் (சைலான்) மலைகளை (வித்ரவயன்) உருக்கிக் கொண்டும் (ம்ருகான்) மான்களை (விவசயன்) பரவசமாக்கிக் கொண்டும் (கோப்ருந்தம்) பசுக் கூட்டங்களை (ஆனந்தயன்) மகிழ்வித்துக் கொண்டும் (கோபான்) இடையர்களை (ஸம்ப்ரமயன்) ஆச்சரியப்படச் செய்து கொண்டும் (முனீன்) முனிவர்களை (முகுலயன்) கண்மூடி தியானத்திலாழச் செய்து கொண்டும் (ஸப்தஸ்வரான்) ஏழுவகை ஸ்வரங்களையும் (ஜ்ரும்பயன்) மலரச் செய்து கொண்டும் (ஓங்கார அர்த்தம்) ஓங்காரத்தின் உட்பொருளை (உதீரயன்) ஓதிக் கொண்டும் (சிசோ:) குழந்தை கிருஷ்ணனுடைய (வம்சீ-நிநாத:) குழலோசை (விஜயதே) வெற்றியுடன் விளங்குகிறது.

ஒ. பசுக்கள் கிருஷ்ணனுடைய முகத்தினின்று பெருகிய வேணுகானமாகிய அமுதத்தைத் தூக்கிய செவிகளின் வழியே பருகிக் கொண்டு கோவிந்தனுடைய அழகைக் கண்களின் வழியே பருகி மனதால் தழுவி ஆனந்தக் கண்ணீரைப் பெருக்கின. பாலூட்டிக் கொண்டிருந்த கன்றுகள் பாலையும் புல்மேய்ந்து கொண்டிருந்தவை புல்லின் கவளத்தையும் நழுவவிட்டு மெய்மறந்து நின்றன.

இந்த பிருந்தாவனத்தில் கிருஷ்ணனைப் பாாப்பதற்காகவும் அவன் வாசிக்கும் வேணுகானத்தைக் கேட்பதற்காகவும் முனிவர்கள் பறவைகளாக உருவெடுத்து அழகான தளிர்களையுடைய மரங்களின் கிளைகளிலேறிக்கொண்டு கண்களை மூடிக்கொண்டு வேறு சப்தங்களைக் கேட்காமல் கேட்கிறார்கள் போலும்.　—பாகவதம்: 10·21—13-14.

ஒ. திரண்டெழுதழை மழை முகில் வண்ணன்
　　செங்கமல மலர்சூழ் வண்டினம் போலே
சுருண்டிருண்ட குழல் தாழ்ந்த
　　முகத்தானூதுகின்ற குழலோசைவழியே
மருண்டு மான்கணங்கள் மேய்கை மறந்து
　　மேய்ந்த புல்லும் கடைவாய்வழிசோர

Koviloor Digital Library


இருண்டு படும் துலுங் காப்புடைபெயரா
எழுதுசித்திரங்கள் போல் நின்றனவே.

மரங்கள் நின்று மது தாரைகள் பாயும்
மலர்கள் வீழும் வளர்கொப்புகள் தாழும்
இரங்கும் கூம்பும் திருமால் நின்ற பக்கம்
நோக்கியவை செய்யுங் குணமே. —பெரியாழ்வார்.

இங்ஙனம் ஸ்ரீகிருஷ்ணகர்ணாம்ருதத்தில்
இரண்டாவது ஆச்வாஸம் முற்றும்.

Koviloor Digital Library

## ॥ तृतीयाश्वासः ॥

### மூன்ருவது ஆச்வாஸம்

अस्ति स्वस्त्ययनं समस्तजगता-मभ्यस्त-लक्ष्मीस्तनं
वस्तु ध्वस्त-रजस्तमोभिरनिशं न्यस्तं पुरस्तादिव ।
हस्तोदस्त-गिरीन्द्र-मस्तक-तरुप्रस्तार-विस्तारित-
स्रस्त-स्वस्तरु-सून-संस्तरलसत्प्रस्तावि राधास्तुतम् ॥ ३.१ ॥

### த்ருதீயாச்வாஸ:

### 3.1. உலகனைத்திற்கும் உயர்நலமளிக்கும் ஒரு பொருள் உளது

அஸ்தி ஸ்வஸ்த்யயனம் ஸமஸ்த-ஜகதா-
மப்யஸ்த-லக்ஷ்மீஸ்தனம்
வஸ்து த்வஸ்த-ரஜஸ்-தமோபிரனிசம்
ந்யஸ்தம் புரஸ்தாதிவ ।
ஹஸ்தோதஸ்த-கிரீந்த்ர-மஸ்தக-தரு-
ப்ரஸ்தார-விஸ்தாரித-
ஸ்ரஸ்த-ஸ்வஸ்தரு-ஸூன-ஸம்ஸ்தரலஸத்-
ப்ரஸ்தாவி-ராதா-ஸ்துதம் ॥ 3.1. ॥

3. 1. (ஸமஸ்த-ஜகதாம்) உலகனைத்திற்கும் (ஸ்வஸ்தி அயனம்) எல்லா நன்மைகளுக்கும் இருப்பிடமான (வஸ்து) ஒரு பொருள் (அஸ்தி) உளது. (அப்பஸ்த-லக்ஷ்மீ-ஸ்தனம்) அது ஸ்ரீ தேவியின் நகில்களுடன் சேர்ந்து அடிக்கடி காணப்படுவது. (த்வஸ்த-ரஜஸ்-தமோபி:) தமோ குணமும் ரஜோ குணமும் நீங்கிய புண்ணியாத்மாக்களால் (அனிசம்) எக்காலமும் (புரஸ்தாத்) கண்ணெதிரில் (ந்யஸ்தம் இவ) வைக்கப்பட்டதுபோல் அனுபவிக்

Koviloor Digital Library


கப்படுவது. (ஹஸ்த-உதஸ்த) கையினுல் உயரத் தூக்கப்பட்ட (கிரீந்த்ர-) -சிறந்த கோவர்த்தன கிரியின் (மஸ்தக-)சிகரத்தி லுள்ள (தரு-) மரங்களின் (ப்ரஸ்தார-) தோப்புகளில் (விஸ்தாரித-) மலர்ந்து (ஸ்ரஸ்த-) நழுவி உதிர்ந்து (ஸ்வஸ்தரு) கற்பக மரத்தின் (ஸூந) புஷ்பங்களுடைய (ஸம்ஸ்தர–) குவியல்களால் (லஸத்) பிரகாசிப்பது. (ப்ரஸ்தாவி-) பெருமையை விளங்க வைக்கும் (ராதா) ராதையினுல் (ஸ்துதம்) துதிக்கப் பெற்றது.

## 3.2. ராதையினுல் போற்றப்பட்ட சிங்காரப் பேரொளி

राधाराधित-विभ्रमाद्भुतरसं लावण्यरत्नाकरं
साधारण्य-पदव्यतीत-सहज-स्मेराननाम्भोरुहम् ।
आलम्बे हरिनीलगर्व-गुरुता-सर्वस्व-निर्वापणं
बाल वैणविकं विमुग्धमधुरं मूर्द्धाभिषिक्तं महः ॥ ३.२ ॥

ராதாராதித-விப்ரமாத்புதரஸம்
லாவண்யரத்னுகரம்
ஸாதாரண்ய-பதவ்யதீத-ஸஹஜ-
ஸ்மேரானனும்போருஹம் ।
ஆலம்பே ஹரி-நீல-கர்வ-குருதா-
ஸர்வஸ்வ-நிர்வாபணம்
பாலம் வைணவிகம் விமுக்த-மதுரம்
மூர்த்தாபிஷிக்தம் மஹஃ ॥ 3.2. ॥

3. 2. (ராதா-) ராதையினுல் (ஆராதித) போற்றப்பட்ட (விப்ரம-அத்புத-ரஸம்) ஆச்சரியமான சிருங்கார ரஸத்தையுடையதும் (லாவண்ய-ரத்னுகரம்) அழகின் கடல் போன்றதும் (ஸாதாரண்ய- பத-வ்யதீத) ஸாதாரண நிலையைக் கடந்து, (ஸஹஜ-) இயற்கையாகவே (ஸ்மேர-) புன்முறுவல் பூத்த (ஆனன-அம்போருஹம்) முகமாகிற தாமரையை உடையதும், (ஹரிநீல-) இந்த்ர நீலமணியின் (கர்வ-குருதா–ஸர்வஸ்வ) கர்வத்

Koviloor Digital Library



தையும் பெருமையனைத்தையும் (நிர்வாபணம்)--தனது காந்தியால்-அழிப்பதும் (வைணவிகம்) குழலுடன் கூடியதும் (விமுக்த-மதுரம்) ஒப்புயர்வற்ற அழகினால் மனதிற்கினியதும் (மூர்த்தாபிஷிக்தம்) தலை சிறந்ததும் (பாலம்) குழந்தை வடிவானதும் ஆகிய (மஹஃ) பேரொளியை (ஆலம்பே) வழிபடுகின்றேன்.

## 3.3. யோகிகளின் மனதில் விளையாடுபவன்

करिणा-मलभ्यगतिवैभवं भजे
करुणावलम्बित-किशोर-विग्रहम् ।
यमिना-मनारतविहारि मानसे
यमुनावनान्तरसिकं परं महः ॥ ३.३ ॥

கரிணா-மலப்யகதிவைபவம் பஜே
கருணாவலம்பித-கிசோர-விக்ரஹம் ।
யமினா-மனாரதவிஹாரி மானஸே
யமுனா-வனாந்த-ரஸிகம் பரம் மஹஃ ॥ 3.3. ॥

3. 3. (கரிணாம்) யானைகளுக்கும் (அலப்ய-கதி-வைபவம்) அடைய முடியாத நடையழகு உடையவனும் (கருணா-) கருணையினால் (அவலம்பித-) அடைந்த (கிசோரவிக்ரஹம்) குழந்தை வடிவை உடையவனும் (யமினாம்) யோகிகளுடைய (மானஸே) மனதில் (அனாரத-) இடைவிடாது (விஹாரி) விளையாடுபவனும் (யமுனா-வன-அந்த-ரஸிகம்) யமுனைக் கரையிலுள்ள வனங்களில் களிப்பவனும் (பரம் மஹஃ) சிறந்த தேஜோ ரூபியுமான கிருஷ்ணனை (பஜே) வழிபடுகின்றேன்.

## 3.4. ஆயர்பாடிப் பெண்களுக்கு அடங்கிய பரஞ்ஜோதி

अतन्त्रित-त्रिजगदपि व्रजाङ्गना-
नियन्त्रितं विपुलविलोचनाज्ञया ।
निरन्तरं मम हृदये विजृम्भतां
समन्ततः सरसतरं परं महः ॥ ३.४ ॥

Koviloor Digital Library


அதந்த்ரித-த்ரிஜகதபி வ்ரஜாங்கனா-
நியந்த்ரிதம் விபுலவிலோசனாஜ்ஞயா।
நிரந்தரம் மம ஹ்ருதயே விஜ்ரும்பதாம்
ஸமந்ததஃ ஸரஸதரம் பரம் மஹஃ॥ 3.4.॥

3. 4. (அதந்த்ரித-த்ரிஜகத் அபி) முவ்வுலகையும் அவச மாய்ச் செய்வதாயினும் (விபுல-விலோசன-ஆஜ்ஞயா) பரந்த கண்களின் கட்டளையால் (வ்ரஜ-அங்கனா-நியந்த்ரிதம்) ஆயர் பாடிப் பெண்களால் (நியந்த்ரிதம்) அடக்கியாளப்பட்டதாயும் (ஸமந்ததஃ) எங்கும் (ஸரஸதரம்) மிகுந்த ஆனந்த ரஸத்தைப் பரப்புவதாயும் உள்ள (பரம் மஹஃ) பரஞ்ஜோதி (நிரந்தரம்) இடைவிடாது (மம) என்னுடைய (ஹ்ருதயே) இருதயத்தில் (விஜ்ரும்பதாம்) மலர்ந்து பிரகாசிக்கட்டும்.

நியந்த்ரி தத்ஸகல ஜகத்வ்ரஜாங்கனா। ஸமஸ்ததஸ்ஸரஸதரம்
—பா.பே.

## 35. யௌவனத்தில் புகும் கிருஷ்ணனுடைய பால்யப் பருவ அழகு

कन्दर्प-प्रतिमल्ल-कान्ति-विभवं कादम्बिनी-बान्धवं
वृन्दारण्य-विलासिनी-व्यसनिनं वेषेण भूषामयम्।
मन्दस्मेर-मुखांबुजं मधुरिम-व्यामृष्ट-बिम्बाधरं
वन्दे कन्दलितार्द्र-यौवन-वनं कैशोरकं शार्ङ्गिणः॥ ३.५॥

கந்தர்ப்ப-ப்ரதிமல்ல-காந்தி-விபவம்
காதம்பினீ-பாந்தவம்
ப்ருந்தாரண்ய-விலாஸினீ-வ்யஸனினம்
வேஷேண பூஷாமயம்।

Koviloor Digital Library



மந்தஸ்மேர-முகாம்புஜம் மதுரிம-
வ்யாம்ருஷ்ட-பிம்பாதரம்
வந்தே கந்தலிதார்த்ர-யௌவன-வனம்
கைசோரகம் சார்ங்கிணः ॥ 3.5 ॥

3. 5. (கந்தர்ப்ப-) மன்மதனை (ப்ரதிமல்ல-) வெல்லக் கூடிய (காந்தி-விபவம்) அழகின் பெருமையுடையதும், (காதம்பினீ-) மேகங்களின் (பாந்தவம்) சுற்றம் போன்றதும் (ப்ருந்தாரண்ய-) பிருந்தாவனத்திலுள்ள (விலாஸினீ-) பெண்களிடத்தில் (வ்யஸனினம்) பிரேமையுடையதும் (வேஷேண) வேஷத்தில் (பூஷாமயம்) ஆபரணங்களால் நிறைந்ததும் (மந்தஸ்மேர-) புன்னகை பூத்த (முக-அம்புஜம்) முக கமலத்தை யுடையதும் (மதுரிம-) இனிமை (வ்யாம்ருஷ்ட) நிறைந்த (பிம்ப-அதரம்) கோவைப் பழம் போன்ற உதட்டையுடையதும் (கந்தலித-) தளிர்த்து வரும் (ஆர்த்ர-) புதிதான (யௌவன வனம்) யௌவனப் பருவத்தின் எழிலையுடையதுமான (சார்ங்கிணः கைசோரம்) கிருஷ்ணனுடைய பால்யப் பருவத்தை (வந்தே) வணங்குகிறேன்.

## 3.6. என் உள்ளத்தில் ஒளிரும் பேரொளி

आमुक्त-मानुष-ममुक्तनिजानुभाव-
मारूढ-यौवन-मगूढ-विदग्धलीलम् ।
आमृष्ट-यौवन-मनष्टकिशोरभाव-
माद्यं महः किमपि माद्यति मानसे मे ॥ ३.६ ॥

ஆமுக்த-மானுஷ-மமுக்த நிஜானுபாவ-
மாரூட-யௌவன-மகூட-விதக்தலீலம் ।
ஆம்ருஷ்ட-யௌவன-மநஷ்ட-கிசோரபாவ-
மாத்யம் மஹः கிமபி மாத்யதி மானஸே மே ॥ 3.6 ॥

Koviloor Digital Library



3 6. (ஆமுக்த-மானுஷம்) மனிதத் தன்மையைக் கடந்து மேம்பட்டதும் (அமுக்த-நிஜ-அனுபாவம்) தன்னுடைய மகிமையிலிருந்து விலகாததும் (ஆரூட யௌவன) தானாக ஏற்றுக் கொண்ட மனித வடிவை உடையதும் (அகூட விதக்த-லீலம்) ரசிகர்களிடமிருந்து மறைக்கப்படாத லீலைகளை உடையதும் (ஆம்ருஷ்ட-யௌவனம்) யௌவனப் பருவத்தைத் தொடுவதும் (அநஷ்ட-கிசோர-பாவம்) குழந்தைப் பருவத்தைக் கடவாததும் (ஆத்யம்) முழு முதலாய் விளங்குவதுமான (கிம் அபி மஹ:) ஏதோ ஒரு பேரொளி வடிவம் (மே) எனது (மானஸே) மனதில் (மாத்யதி) களித்து விளையாடுகிறது.

## 3.7. கண்ணன் முகத்தினும் இனியது வேறொன்றை நான் அறியேன்

ते ते भावास्सकलजगती-लोभनीय-प्रभावाः
नानातृष्णा-सुहृदि हृदि मे काममाविर्भवन्तु ।
वीणा-वेणु-क्वणित-लसित-स्मेरवक्त्रारविन्दा-
न्नाहं जाने मधुरमपरं नन्दपुण्यांबुराशेः ॥ ३.७ ॥

தே தே பாவாஸ்ஸகல ஜகதீ-
லோபநீய-ப்ரபாவா:
நானாத்ருஷ்ணா-ஸுஹ்ருதி ஹ்ருதி மே
காமமாவிர்ப்பவந்து ।
வீணா-வேணு-க்வணித-லஸித-
ஸ்மேர-வக்த்ராரவிந்தாந்
நாஹம் ஜானே மதுரமபரம்
நந்த-புண்யாம்புராசே: ॥ 3.7 ॥

3 7. (ஸகல-ஜகதீ-) உலகனைத்தாலும் (லோபநீய-ப்ரபாவா:) பேரவாவுடன் விரும்பப்படும் பெருமைகளுடன் கூடிய (தே தே பாவா:) அந்த அந்த லீலைகள்—கிருஷ்ணனுடையவை —

Koviloor Digital Library



(நாஞ த்ருஷ்ண-ஸுஹ்ருதி) பலவிதமான அற்ப ஆசைகளுடன் உறவு கொண்ட (மே) என்னுடைய (ஹ்ருதி) இருதயத்தில் (காமம்) தாமாகவே இஷ்டப்படி (ஆவிர்ப்பவந்து) தோற்றமளிக் கட்டும். (நந்த-புண்ய-அம்புராசே:) நந்தகோபருடைய புண்ணியக் கடல் போன்றதும் (வீணா-வேணு-) வீணையோ டொத்த குழலின் (க்வணித-) ஒலியால் (லஸித-) மலர்ந்ததும் (ஸ்மேர-) புன்புறுவலுடன் கூடியதுமான (வக்த்ர-அரவிந்தாத்) தாமரை முகத்தைக் காட்டிலும் (மதுரம் அபரம்) இனியது வேறொன்றை (அஹம்) நான் (ந ஜானே) அறியமாட்டேன்.

## 3.8. என் உள்ளம் அவனிடம் எப்பொழுது லயிக்கும்?

सुकृतिभिराद्दते सरसवेणु-निनादसुधा-
रसलहरी-विहार-निरवग्रह-कर्णपुटे ।
व्रजवरसुन्दरी-मुखसरोरुह-सन्मधुपे
महसि कदा नु मज्जति मदीय-मिदं हृदयम् ॥ ३.८ ॥

ஸுக்ருதிபி-ராத்ருதே ஸரஸ-வேணு-நிநாதஸுதா-
ரஸலஹரீ-விஹார-நிரவக்ரஹ-கர்ணபுடே ।
வ்ரஜவரஸுந்தரீ-முகஸரோருஹ-ஸன்மதுபே
மஹஸி கதா நு மஜ்ஜதி மதீய-மிதம் ஹ்ருதயம் ॥ 3.8

3. 8. (ஸுக்ருதிபி:) புண்ணியவான்களால் (ஆத்ருதே)" கொண்டாடப்படுவதும், (ஸரஸ-) இனிய (வேணு- நிநாத-) குழலோசையாகிற (ஸுதாரஸ) அமிருத ரஸத்தினுடைய (லஹரீ) பெருக்கில் (விஹார) இன்புறுவதில் (நிரவக்ரஹ-) தடையேது மில்லாத (கர்ணபுடே) காதுகளைப் படைத்ததும், (வ்ரஜ-வர-ஸுந்தரீ-) ஆயர்பாடியிலுள்ள சிறந்த அழகிகளின் (முக-ஸரோருஹ-) முகமாகிற தாமரைப் பூவில் உள்ள (ஸத்-மதுபே) சிறந்த தேனை உண்ணும் வண்டு போன்றதுமான (மஹஸி) பேரொளியில் (இதம்) இந்த (மதீயம்) என்னுடைய (ஹ்ருதயம்)

Koviloor Digital Library


உள்ளம் (கதா நு) எப்பொழுதுதான் (மஜ்ஜதி) மூழ்கப் போகிறது?

முகஸரோருஹ-ஸாரஸிகே —பா.பே.

### 3.9. கருணை நிறைந்த கண்ணனுடைய கடைக்கண் பார்வை

तृष्णातुरे चेतसि जृम्भमाणं
मुष्णन्मुहु-र्मोह-महान्धकारम् ।
पुष्णातु नः पुण्यदयैक-सिन्धोः
कृष्णस्य कारुण्य-कटाक्षकेलिः ॥ ३.९ ॥

த்ருஷ்ணாதுரே சேதஸி ஜ்ரும்பமாணம்
முஷ்ணன்-முஹுர்-மோஹ-மஹாந்தகாரம் ।
புஷ்ணாது நஃ புண்யதயைக-ஸிந்தோஃ
க்ருஷ்ணஸ்ய காருண்ய- கடாக்ஷகேலிஃ ॥ 3.9 ॥

3. 9. (புண்ய-) புண்ணியச் செயல்களுக்கும் (தயா) கருணைக்கும் (ஏக ஸிந்தோஃ) ஒரே உறைவிடமான கடல் போன்று விளங்கும் (க்ருஷ்ணஸ்ய) ஸ்ரீ கிருஷ்ணனுடைய (காருண்ய-கடாக்ஷ-கேலிஃ) அன்பு நிறைந்த கடைக்கண் பார்வையின் விலாஸம் (த்ருஷ்ணா-) பேராசையால் (ஆதுரே) பீடிக்கப்பட்ட (சேதஸி) நமது மனதில் (முஹுஃ) மேன்மேலும் (ஜ்ரும்பமாணம்) வளர்ந்து கொண்டிருக்கும் (மோஹ-மஹாந்தகாரம்) மதிமயக்கமாகிற பேரிருளை (முஷ்ணன்) போக்கி (நஃ) நம்மை (புஷ்ணாது) காப்பாற்றியருளட்டும்.

### 3.10. மறைமுடி காணாத திருவடி மாட்டுத் தொழுவத்தில்

निखिलागम-मौलिलालितं
पदकमलं परमस्य तेजसः ।
व्रजभुवि बहुमन्महेतरां
सरसकरीष-विशेष-रूषितम् ॥ ३.१० ॥

Koviloor Digital Library



நிகிலாகம-மௌலி-லாலிதம்
பதகமலம் பரமஸ்ய தேஜஸ꞉।
வ்ரஜபுவி பஹுமன்மஹே தராம்
ஸரஸகரீஷ-விசேஷ-ரூஷிதம் ॥ 3.10 ॥

3. 10. (நிகில-ஆகம) வேதங்கள் அனைத்தின் (மௌலி-) சிரசிலும் (லாலிதம்) கொண்டாடப்படும் (பரமஸ்ய தேஜஸ꞉) பரஞ்ஜோதி வடிவமான பரம புருஷனின் (பதகமலம்) திருவடித் தாமரை (வ்ரஜபுவி) இடைச்சேரியில் (ஸரஸ-கரீஷ-) ஈரச் சாணியினால் (விசேஷ-ரூஷிதம்) வெகுவாய்ப் பூசப்பட்டுள்ளது. (பஹுமன்மஹே தராம்) அதை நான் பெரிதும் மதித்துப் போற்றுகிறேன்.

நிகில நிகம। பரம ரஹஸ்யஸ்ய। —பா.பே.

### 3.11. அவனை நான் எப்பொழுது பார்ப்பேன்?

उदार-मृदुलस्मित-व्यतिकराभिरामाननं
मुदा मुहुरुदीर्णया मुनिमनोम्बुजाम्रेडितम्।
मदालस-विलोचन-व्रजवधूमुखास्वादितं
कदा नु कमलेक्षणं कमपि बाल-मालोकये ॥ ३.११॥

உதார-ம்ருதுலஸ்மித-
வ்யதிகராபிராமாநநம்
முதா முஹு-ருதீர்ணயா
முனிமனோம்புஜாம்ரேடிதம் ।
மதாலஸ-விலோசன-
வ்ரஜவதூ-முகாஸ்வாதிதம்
கதா நு கமலேக்ஷணம்
கமபி பால-மாலோகயே ॥ 3.11. ॥

3. 11. (உதார-) கம்பீரமான (ம்ருதுலஸ்மித-) புன்னகையின் (வ்யதிகர-) தோற்றத்தால் (அபிராம-) அழகு மிக்க (ஆநநம்) முகத்தையுடையவனும், (முஹு꞉) மேன்மேலும் (உதீர்ணயா)

Koviloor Digital Library



உதிக்கும் (முதா) மகிழ்ச்சியுடன் (முனிமன-அம்புஜ-) முனிவர்கள் மனத் தாமரையில் (ஆம்ரேடிதம்) அடிக்கடி போற்றப்படுபவனும், (மத-அலஸ-) இளமையின் பூரிப்பால் மயங்கும் (விலோசன-) கண்களையுடைய (வ்ரஜ வதூ-) இடைப் பெண்களின் (முக-ஆஸ்வாதிதம்) முகங்களால் பருகப் பெற்றவனும் (கமலேக்ஷணம்) தாமரைக் கண்ணனுமான (கம் அபி பாலம்) விசித்திரப் பிள்ளையை (கதா நு) எப்பொழுது தான் (ஆலோகயே) நான் பார்க்கப் போகிறேன்.

முதாஸ்வாதிதம் —பா.பே.

## 3.12. இரு கண்களாலும் அவ்வழகை எப்பொழுது பருகுவோம்?

व्रजजन-मदयोषि-ल्लोचनो-च्छिष्ट-शेषी-
कृत-मतिचपलाभ्यां लोचनाभ्यामुभाभ्याम् ।
सकृदपि परिपातुं ते वयं पारयामः
कुवलयदलनीलं कान्तिपूरं कदा नु ॥ ३.१२ ॥

வ்ரஜஜன-மதயோஷில்-லோசனோச்சிஷ்ட-சேஷீ-
க்ருத-மதிசபலாப்யாம் லோசனாப்யா-முபாப்யாம் ।
ஸக்ருதபி பரிபாதும் தே வயம் பாரயாமஃ
குவலயதல-நீலம் காந்திபூரம் கதா நு ॥ 3.12 ॥

(வ்ரஜஜன-) இடையர்களின் (மத-யோஷித்) இளமைச் செருக்குள்ள பெண்களின் (லோசன-உச்சிஷ்ட-) கண்களால் பருகப்பட்டு எஞ்சியதும் (சேஷீக்ருதம்) அதனால் சேஷமானதும் (குவலயதல-நீலம்) நெய்தல் பூவிதழ் போல் நீலமானதும் ஆகிய (காந்திபூரம்) பேரொளிக் குவியலை (அதிசபலாப்யாம்) பேரவாக் கொண்ட (உபாப்யாம் லோசனாப்யாம்) இரு கண்களாலும் (தே) அப்படிப்பட்ட—அப்படி ஏங்கி நிற்கும்--(வயம்) நாங்கள் (கதா நு) எப்பொழுது தான் (பரிபாதும்) பருகுவதற்கு (பாரயாமஃ) தகுதியுடையவர்களாவோம்?

Koviloor Digital Library



## 3.13. பேரழகிற் குறைவிடம்

घोषयोषि-दनुगीत-यौवनं
कोमल-स्तनित-वेणु-निस्वनम् ।
सारभूत-मभिरामसंपदां
धाम तामरस-लोचनं भजे ॥ ३.१३ ॥

கோஷயோஷி-தனுகீத-யௌவனம்
கோமல-ஸ்தநித-வேணு-நிஸ்வனம் ।
ஸாரபூத-மபிராமஸம்பதாம்
தாம தாமரஸ-லோசனம் பஜே ॥ 8.13. ॥

3. 13. (கோஷ-) ஆயர்ப்பாடியிலுள்ள (யோஷித்) பெண்களால் (அனுகீத-) இடைவிடாது துதிக்கப் பெற்ற (யௌவனம்) இளமையையுடையதும் (கோமல-) இனிமையாக (ஸ்தநித) ஊதப்பட்ட (வேணு) குழலின் (நிஸ்வனம்) ஒலியையுடையதும் (அபிராம-ஸம்பதாம்) அழகுச் செல்வத்தின் (ஸாரபூதம்) ஸாரமாகியதும் (தாமரஸ-லோசனம்) செந்தாமரை போன்ற கண்களையுடையதுமான (தாம) பேரொளி வடிவை (பஜே) தியானிக்கின்றேன்.

## 3.14. உள்ளத்தைக் கவரும் பாலகிருஷ்ண வடிவம்

लीलया ललितयावलम्बितं
मूलगेहमिव मूर्तिसंपदाम् ।
नीलनीरद-विकास-विभ्रमं
बालमेव वयमाद्रियामहे ॥ ३.१४ ॥

லீலயா லலிதயாவலம்பிதம்
மூல கேஹமிவ மூர்த்திஸம்பதாம் ।
நீலநீரத-விகாஸ-விப்ரமம்
பால-மேவ வயமாத்ரியாமஹே ॥ 3.14. ॥

Koviloor Digital Library



3. 14. (லலிதயா) அழகிய (லீலயா) லீலைகளால் (அவலம்பிதம்) ஆசிரயிக்கப் பெற்றவனும் (மூர்த்தி-ஸம்பதாம்) ரூப ஸௌந்தர்யச் செல்வத்திற்கு (மூல கேஹம் இவ) மூலஸ்தானம் போன்றவனும் (நீலநீரத-) கார் மேகத்தின் (விகாஸ விப்ரமம்) காந்தியுடன் பிரகாசிப்பவனும் ஆகிய (பாலம் ஏவ) பாலகிருஷ்ண வடிவத்தையே (வயம்) நாங்கள் (ஆத்ரியாமஹே) ஆதரவுடன் போற்றுகின்றோம்.

## 3.15 இளமையின் எழில்

वन्दे मुरारेश्चरणारविन्द-
  द्वन्द्वं दयादर्शित-शैशवस्य ।
वन्दारु-वृन्दारक-वृन्द-मौलि-
  मन्दारमाला-विनिमर्द-भीरु ॥ ३.१५ ॥

வந்தே முராரேச்-சரணாரவிந்த-
  த்வந்த்வம் தயாதர்சித-சைசவஸ்ய ।
வந்தாரு-ப்ருந்தாரக-ப்ருந்த-மௌலி-
  மந்தாரமாலா-விநிமர்த்த-பீரு ॥ 3-15. ॥

3. 15. (வந்தாரு-) வந்தனம் செய்ய விரும்பி வந்த (ப்ருந்தாரக-) தேவர் (ப்ருந்த) குழாங்களின் (மௌலி-) முடிகளிலிருந்த (மந்தார-மாலா-) மந்தாரைப் பூ மாலைகளின் (விநிமர்த்த-) உரைசலினால் (பீரு) கூசுகின்றதும் (தயா-) கருணையினால் (தர்சித) காண்பிக்கப்பட்ட (சைசவஸ்ய) இளமை எழில் உடையதுமான (முராரேஃ) கண்ணனுடைய (சரண-அரவிந்த-த்வந்த்வம்) இரு திருவடித் தாமரைகளையும் (வந்தே) வணங்குகின்றேன்.

## 3.16. பிருந்தாவனத்தில் தேவர்களால் தொழப் பெற்ற கிருஷ்ணன்

यस्मिन् नृत्यति यस्य शेखरभरैः कौञ्चद्विषश्चन्द्रकी
  यस्मिन् हृष्यति यस्य घोषसुरभिं जिघ्रन् वृषो धूर्जटेः ।

Koviloor Digital Library



यस्मिन् सज्जति यस्य विभ्रमगतिं वाञ्छन् हरेस्सिन्धुर-
स्तद्बृन्दावन-कल्पकद्रुमवनं तं वा किशोरं भजे ॥ ३.१६ ॥

யஸ்மின் ந்ருத்யதி யஸ்ய சேகரபரைஃ
க்ரௌஞ்சத்விஷச்சந்த்ரகீ
யஸ்மின் த்ருப்யதி யஸ்ய கோஷஸுரபிம்
ஜிக்ரன் வ்ருஷோ தூர்ஜடேஃ।
யஸ்மின் ஸஜ்ஜதி யஸ்ய விப்ரமகதிம்
வாஞ்சன் ஹரேஸ்ஸிந்துர-
தத்ப்ருந்தாவன-கல்பகத்ருமவனம்
தம் வா கிசோரம் பஜே॥ 3.16.॥

3. 16. (யஸ்மின்) எந்த பிருந்தாவனத்தில் (யஸ்ய) எந்த க்ருஷ்ணனுடைய (சேகரபரைஃ) முடியிலுள்ள மயில் தோகையைக் கண்டு (க்ரௌஞ்சத்விஷஃ) முருகப் பெருமானுடைய (சந்த்ரகீ) மயில் (ந்ருத்யதி) நடனம் செய்கிறதோ, (யஸ்மின்) எவ்விடத்தில் (யஸ்ய) எவனுடைய (கோஷஸுரபிம்) ஆய்ப்பாடிப் பசுவை (ஜிக்ரன்) மோப்பம் பிடித்து (தூர்ஜடேஃ) பரமசிவனுடைய (வ்ருஷஃ) காளை மாடு (த்ருப்யதி) கொழுப்படைகிறதோ, (யஸ்மின்) எவ்விடத்தில் (யஸ்ய) எவனுடைய (விப்ரமகதிம்) அழகிய நடையை (வாஞ்சன்) அனுசரிக்க ஆசைப்பட்டு ஹரேஃ,) இந்திரனுடைய (ஸிந்துரஃ) யானை (ஸஜ்ஜதி) நடை பழகுகிறதோ (தத்) அந்த (ப்ருந்தாவன-) பிருந்தாவனத்திலுள்ள (கல்பகத்ரும வனம்) கற்பகத் தோப்பையும் (தம்) அந்த (கிசோரம் வா) குழந்தையாகிய கிருஷ்ணனையும் (பஜே) தொழுகின்றேன்.

யஸ்மின் த்ருப்யதி யஸ்ய சேகரபரைஃ। யஸ்மின் த்ருஷ்பதி ।
—பா. பே.

## 3.17. கருணைக்கு உறைவிடமாகிய கண்ணனே புகலிடம்

अरुणाधरामृत-विशेषित-स्मितं
वरुणालयानुगत-वर्णवैभवम् ।

Koviloor Digital Library


तरुणारविन्द-दल-दीर्घ-लोचनं
करुणामयं कमपि बालमाश्रये ॥ ३.१७ ॥

அருணாதராம்ருத-விசேஷித-ஸ்மிதம்
வருணாலயானுகத-வர்ண வைபவம் ।
தருணாரவிந்த-தல-தீர்க்க-லோசனம்
கருணாமயம் கமபி பாலமாச்ரயே ॥ 3 17 ॥

3. 17. (அருண-) சிவந்த (அதர-) கீழுதட்டின் (அம்ருத-) அமுதத்தால் (விசேஷித-) சிறந்து விளங்கும் (ஸ்மிதம்) புன் முறுவலையுடையவனும், (வருணாலய-) கடலுக்கு (அனுகத) ஒப்பான (வர்ண-வைபவம்) வர்ணத்தால் பெருமையுடையவனும் (தருண-) அப்போதலர்ந்த (அரவிந்த-தல-) தாமரையின் இதழ் போல் (தீர்க்க-லோசனம்) பரந்த கண்களை உடையவனும் (கருணா-ஆலயம்) கருணைக்கு உறைவிடமாகியவனும் (கம் அபி) ஒப்புயர்வற்றவனும் ஆகிய (பாலம்) பாலகிருஷ்ணனை (ஆச்ரயே) புகலா யடைகின்றேன்.

**3.18. ஆயர்குலத்தின் செல்வியெனப்படும் கண்ணன்**

लावण्यवीचीरचिताङ्गभूषां
भूषापदारोपित-पुण्यबर्हाम् ।
कारुण्यधाराल-कटाक्षमालां
बालां भजे वल्लववंशलक्ष्मीम् ॥ ३.१८ ॥

லாவண்ய-வீசீரசிதாங்க-பூஷாம்
பூஷாபதாரோபித-புண்யபர்ஹாம் ।
காருண்யதாரால-கடாக்ஷமாலாம்
பாலாம் பஜே வல்லவ-வம்ச-லக்ஷ்மீம் ॥ 3.18 ॥

3. 18. (லாவண்ய-வீசி) காந்தியின் பெருக்குடன் (ரசித-) அமைந்த (அங்க பூஷாம்) அவயவ பூஷங்களையுடையவளும்

Koviloor Digital Library



(பூஷா-பத) பூஷணஸ்தானத்தில் (ஆரோபித-) ஏற்றி வைக்கப்பட்ட (புண்ய-பர்ஹாம்) புண்ணியஞ் செய்த மயிலிறகை உடையவளும் (காருண்ய-தாரால-) கருணைப் பெருக்கால் நிறைந்த கடாக்ஷ மாலாம்) கடைக்கண் பார்வையின் தொடர்ச்சியை உடையவளும் (பாலாம்) குழந்தை வடிவில் வந்திருப்பவளுமான (வல்லவ-வம்ச-லக்ஷ்மீம்) ஆய்க் குலத்தின் செல்வியை (பஜே) போற்றுகிறேன்.

பாலகிருஷ்ணனே பாலாபரமேச்வரீ என்று இங்கு தொனிக்கிறது.

## 3.19. இனிமையே உருக்கொண்ட வடிவம்

मधुरैकरसं वपुर्विभो-
　　र्मथुरा-वीथिचरं भजामहे ।
नगरी-मृगशावलोचना
　　नयनेन्दीवर-वर्ष-वर्षितम् ॥ ३.१९ ॥

மதுரைகரஸம் வபுர்-விபோர்-
　　மதுராவீதிசரம் பஜாமஹே!
நகரீ-ம்ருகசாப-லோசனா
　　நயனேந்தீவர-வர்ஷ-வர்ஷிதம் ॥ 3.19 ॥

3. 19. (மதுர-ஏக-ரஸம்) இனிமையே உருக்கொண்டதும் (மதுராவிதி-சரம்) மதுராபுரியின் தெருக்களில் சஞ்சரிப்பதும் (நகரீ-) அந்நகரிலுள்ள (ம்ருகசாப-லோசனா-) மான் குட்டிகளின் கண்களைப் போன்ற விழிகளைப் படைத்த பெண்களின் (நயன-இந்தீவர-வர்ஷ) கண்களாகிற கறு நெய்தல் பூக்களின் பொழிவால் (வர்ஷிதம்) அர்ச்சிக்கப்பட்டதுமான (விபோ: வபு:) பிரபுவாகிய கிருஷ்ணனுடைய திருமேனியை (பஜாமஹே) தொழுகின்றோம்.

Koviloor Digital Library



### 3.20. உள்ளத்தைக் கவரும் கோபகுமாரன்

पर्याकुलेन नयनान्त-विजृम्भितेन
वक्त्रेण कोमल-दरस्मित-विभ्रमेण।
मन्द्रेण मञ्जुलतरेण च जल्पितेन
नन्दस्य हन्त तनयो हृदयं धुनोति॥ ३.२०॥

பர்யாகுலேன நயனாந்த-விஜ்ரும்பிதேன
வக்த்ரேண கோமல-தரஸ்மித-விப்ரமேண ।
மந்த்ரேண-மஞ்ஜுலதரேண ச ஜல்பிதேன
நந்தஸ்ய ஹந்த தனயோ ஹ்ருதயம் துனோதி ॥

3. 20. (பர்யாகுலேன) பரபரப்புடன் கூடிய (நயனாந்த-) கடைக்கண் பார்வையின் (விஜ்ரும்பிதேன) விலாஸத்தாலும், (கோமல) அழகாக (தர-) சிறிது (ஸ்மித) முறுவல் பூத்த (வக்த்ரேண) வாயின் (விப்ரமேண) கவர்ச்சியாலும் (மந்த்ரேண) கம்பீரமானதும் (மஞ்ஜுலதரேண ச) இனிமை மிக்கதுமான (ஜல்பிதேன) பேச்சினாலும், (நந்தஸ்ய) நந்தகோபனுடைய (தனய:) குமாரன் (ஹ்ருதயம்) உள்ளத்தை (துனோதி) கவர்கிறான்.

மந்தேன மஞ்ஜுலதரேண —பா.பே.

### 3.21. கோபியர்களின் கள்ளக் காதலன்

कन्दर्प-कण्डूल-कटाक्षबन्धी-
रिन्दीवराक्षी-रभिलाषमाणान्।
मन्दस्मिताधार-मुखारविन्दान्
वन्दामहे वल्लवधूर्त-पादान्॥ ३.२१॥

கந்தர்ப்ப-கண்டூல-கடாக்ஷபந்தீ-
ரிந்தீவராக்ஷீ-ரபிலாஷமாணான் ।
மந்தஸ்மிதாதார-முகாரவிந்தான்
வந்தாமஹே வல்லவதூர்த்த-பாதான் ॥ 3.21 ॥

Koviloor Digital Library



3. 21. (கந்தர்ப்ப-கண்டூல-) காம உணர்ச்சி ததும்பும் (கடாக்ஷ-பர்தீ:) கடைக்கண் பார்வையால் பிணிக்கும் (இந்தீவர-அக்ஷீ:) நீலோத்பலம் போன்ற கண்களையுடையவர்களால் (அபிலாஷமாணன்) விரும்பப்பட்டவரும் (மந்தஸ்மித-ஆதார) புன்முறுவலுக்கு உறைவிடமான (முகாரவிந்தான்) தாமரை போன்ற முகத்தை உடையவரும் (வல்லவ-தூர்த்த-பாதான்) கோபியர்களின் கள்ளக் காதலரும் ஆகிய கிருஷ்ணமூர்த்தியை வந்தனம் செய்வோம்.

அபிலக்ஷ்யமாணன் பா.பே.

## 3.22. கண்ணனுடைய முகமண்டலத்தில் மகிழ்ந்து அழுந்திய மனது

लीलाटोप-कटाक्षनिर्भर-परिष्वङ्ग-प्रसङ्गाधिक-
प्रीते गीतिविभङ्ग-सङ्गतलसद्वेणुप्रणादामृते ।
राधालोचन-लालितस्य ललितस्मेरे मुरारेर्मुदा
माधुर्यैकरसे मुखेन्दुकमले मग्नं मदीयं मनः ॥३.२२॥

லீலாடோப-கடாக்ஷநிர்ப்பர-
பரிஷ்வங்க-ப்ரஸங்காதிக-
ப்ரீதே கீதிவிபங்க-ஸங்கத-
லஸத்-வேணுப்ரணாதாம்ருதே ।
ராதாலோசன-லாலிதஸ்ய
லலிதஸ்மேரே முராரேர்-முதா
மாதுர்யைகரஸே முகேந்து-
கமலே மக்னம் மதீயம் மனஃ ॥ 3.22 ॥

3. 22. (லீலா-ஆடோப-) கூடிக் களிக்கும் ஸம்பிரமத்தில் (கடாக்ஷ-) கடைக்கண் பார்வையால் (நிர்ப்பர-) திடமாக (பரிஷ்வங்க-ப்ரஸங்க) தழுவிக் கொண்ட நிலையில் (அதிகப்ரீதே) பிரியம் மிகுந்து விளங்குவதும், (கீதி-விபங்க-) ஸங்கீதத்தின்

Koviloor Digital Library



சஞ்சாரத்துடன் (ஸங்கத-லஸத்) கூடி விளங்கும் (வேணு-ப்ரணத-அம்ருதே-) குழலோசையின் அமுதத்தைப் பெருக்குவதும் (ராதா-லோசன-) ராதையின் கண்களால் (லாலிதஸ்ய) கொண்டாடப் பட்டதும் (லலித-ஸ்மேரே) அழகிய புன்முறுவலையுடையதும் (மாதுர்ய-ஏகரஸே) இனிமை என்ற சுவை நிறைந்ததும் ஆகிய (முராரே:) கண்ணனுடைய (முக-இந்து-கமலே) தாமரைபோல் மலர்ந்து சந்திரன்போல் பிரகாசிக்கும் முகமண்டலத்தில் (மதீயம் மன:) என் மனது (முதா) மகிழ்ந்து (மக்னம்) அழுந்திப் போயிற்று.

### 3.23. சரணளிக்கக் கண்ணனிருக்க நமக்கு மற்றதால் ஆவதென்ன?

शरणागत-वज्रपञ्जरे शरणे शार्ङ्गधरस्य वैभवे ।
कृपया धृतगोपविग्रहे कियदन्यन्मृगयामहे वयम् । ३.२३॥

சரணகத-வஜ்ர-பஞ்ஜரே
சரணே சார்ங்கதரஸ்ய வைபவே ।
க்ருபயா த்ருதகோபவிக்ரஹே
கியதன்யன்ம்ருகயாமஹே வயம் ॥ 3.23 ॥

3. 23. (சரணகத-) சரண் புகுந்தவர்களுக்கு (வஜ்ர பஞ்ஜரே) வயிரத்தாலான கூடு போன்றதும் (சார்ங்கதரஸ்ய) மகாவிஷ்ணுவின் (விபவே) சிறந்த அவதாரமாகியதும் (க்ருபயா) கருணையால் (த்ருத) ஏற்றுக் கொண்ட (கோப விக்ரஹே) கோப வேஷத்தை உடையதும் ஆகிய கிருஷ்ணனுடைய ரூபம் (சரணே) புகலிடமாயிருக்கும்போது (வயம்) நாம் (கியத் அன்யத்) வேறு எதை (ம்ருகயாமஹே) தேட வேண்டும்?

### 3.24. முவுலகிற்கும் மனோரம்யமான திருவடி

जगत्त्रयैकान्त-मनोज्ञभूमि-
चेतस्यजस्रं मम सन्निधत्ताम् ।
रमा-समास्वादित-सौकुमार्यं
राधास्तनाभोग-रसज्ञमोजः ॥ ३.२४ ॥

Koviloor Digital Library



ஜகத்-த்ரயைகாந்த-மனோஜ்ஞபூமி-
சேதஸ்யஜஸ்ரம் மம ஸந்நிதத்தாம் ।
ரமா-ஸமாஸ்வாதித-ஸௌகுமார்யம்
ராதாஸ்தனாபோக-ரஸஜ்ஞமோஜஃ ॥ 3.24 ॥

3. 24. (ஜகத்-த்ரய) மூவுலகிற்கும் (ஏகாந்த-) ஒப்புயர்வற்ற (மனோஜ்ஞ-பூமி) மனோரம்யமான இடமும் (ரமா) மஹாலக்ஷ்மியால் (ஸமாஸ்வாதித-) நன்கு அனுபவிக்கப்பட்ட (ஸௌகுமார்யம்) மிருதுத் தன்மையுடையதும் (ராதா-ஸ்தன-ஆபோக-) ராதையின் நகில்களுடன் அணைக்கப் பெற்ற இன்பத்தை உணர்வதுமான (ஓஜஃ) பேரொளி பொருந்திய திருவடி (மம) என்னுடைய (சேதஸி) சித்தத்தில் (அஜஸ்ரம்) இடைவிடாது (ஸந்நிதத்தாம்) விளங்கட்டும்.

## 3.25. கருணாகர மூர்த்தி

वयमेते विश्वसिमः करुणाकरमूर्ति-किंवदन्त्याङ्गे ।
अपि च विभो तव ललिते चपलतरा मतिरियं बाल्ये ॥

வயமேதே விச்வஸிமஃ
கருணாகரமூர்த்தி- கிம்வதந்த்யாங்கே ।
அபி ச விபோ தவ
லலிதே சபலதரா மதிரியம் பால்யே ॥ 3.25 ॥

3. 25. (விபோ) எங்கும் நிறைந்த எம்பெருமானே! (ஏதே வயம்) இந்த நாங்கள் (கருணாகர-மூர்த்தி-) கருணையே உருவெடுத்தவன் நீ என்ற (கிம்வதந்த்யா) உலக மொழியினால் (அங்கே) உன்னுடைய திருமேனியில் (விச்வஸிமஃ) பக்தி செய்கிறோம். (அபி ச) மேலும் (தவ) உன்னுடைய (லலிதே) அழகிய (பால்யே) இளமை எழிலில் (இயம் மதிஃ) இந்த உள்ளம் (சபலதரா) மிகுந்த ஆசை கொண்டுள்ளது.

Koviloor Digital Library



### 3.26. கன்று மேய்க்கும் கண்ணன் என் கண்முன் எப்பொழுது வருவான்?

